உ
சிவமயம்

சுவாமியே சரணம் ஐயப்பா

# ஸ்ரீ ஐயப்பன்

# அருட்பாமாலை



இறைப்பணி

## குணரத்தினம் ஜெயநாதன்




மூஷிகவாகன மோதக ஹஸ்த
ஸாமரகர்ண விளம்பிக சூத்திர
வாமன ரூப மகேஸ்வர புத்ர
விக்ன விநாயக பாத நமஸ்தே

ச. பிரதாபன்
150

உ
சிவமயம்

சுவாமியே சரணம் ஐயப்பா

# சபரிமலை ஸ்ரீ ஐயப்பன்

# அருட்பாமாலை

ௐ

இறைப்பணி

**குணரத்தினம் ஜெயநாதன்**

அச்சிட்டோர்
**ஸ்ரீ சக்தி பிரிண்டிங் இண்டஸ்ரீஸ்**
61/1-F பீர்சாய்பு வீதி, கொழும்பு - 12.
☎ : 438967, 074-614497.



குனிந்த புருவமும் கொவ்வைச்
செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்தச்சடையும் பவளம்போல் மேனியில்
பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்தபொற்பாதமும்
காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே.

ஓம் சுவாமியே சரணம் ஐயப்பா

உலகெங்கும் குழப்பங்களும் அமைதி யின்மையும் இக்காலகட்டத்தில் காணக் கூடியதாக உள்ளது. இதற்கு முக்கிய காரணம் மனிதன் இறைவனை நம்புவதற்குப் பதிலாக இறைவனை மறந்து போனதே!

மனித மனத்தில் நிரந்தர அமைதியைத் தரக்கூடியது இறையுணர்வும்! இறை வழிபாடுமே! "நெஞ்சுக்கு நிம்மதி ஆண்டவன் சந்நிதி" என்பார்கள், இறைவனை வணங்க எல்லோருக்கும் முடியுமான ஒரு மார்க்கம் பக்தி மார்க்கமே ஆகும்!

இதற்கு நாயன்மார்களாலும் எம்முன்னோர் களாலும் அருளப்பட்ட தேவாரங்கள், பஜனைப்பாடல்கள் போன்றவை பேருதவி யாக இருக்கும் இவை அனைத்தும் ஒரே நூலில் வரவேண்டும் என்ற எனது நீண்ட நாள் கனவை பாரிஸ் நகரில் இருக்கும் எனது மகன் ஜெய்நாதன் மூலம் நனவாகத்தையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன்!

ஐயப்பன் விரதத்திற்கு நான் முதலில் மாலையிட்டபோது விரதமகிமையோ அல்லது ஐயப்பனைப் பற்றியோ எனக்குத் தெரியாது. இத்தீர்த்த யாத்திரைக் குழுவினருடன் சென்றால் பாரத நாட்டிலுள்ள ஏனைய முக்கியமான புனித ஸ்தலங்களை தரிசிக்கலாம் என்ற எண்ணமே இருந்தது! பூஜைகளில் தினந்தோறும் விதிமுறைப்படி கலந்து கொண்டாலும் ஐயப்பன்மேல் ஆரம்பத்தில் அவ்வாறான பக்தி இருக்கவில்லை! எனக்குமுன் மாலையணிந்து விரதமிருந்து யாத்திரை சென்று வந்தவர்கள் தங்களுக்கேற்பட்ட எத்தனையோ அனுபவங்களைக் கூறக்கேட்டபோது மற்றய தெய்வங்களைப்போல் ஐயப்பனும் ஒரு தெய்வம் என்ற உணர்வுதான் எனக்கு இருந்தது!

இருமுடிகட்டி திருச்செந்தூரில் நாம் இரவு தங்கியிருந்த வேளை, கடற்காற்று குளிராக வீசுகிறது போர்வையால் போர்தியிருந்தாலும் தலைவலியும் காய்ச்சலுமாக எனக்கு இருந்தது. ஏனையோர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தனர். யாரையம் எழுப்ப மனமில்லை அப்போதுதான் மனதிற்குள் பயமும் பிரமையும் ஏற்பட்டது. இந்த நிலையில் நான் எவ்வாறு மலை ஏறப்போகிறேன் என்று யாருமற்ற நிலையில் தவிக்க விட்டது போன்றதோர் உணர்வு! அன்று தான் நான் ஐயப்பனை முழு விருப்புடன் வணங்கினேன். ஐயப்பா நீ தான் துணை என்று கண்களை மூடி மனதில் அவன் `சரணக்கோஷங்களை சொல்லிக்கொண்டு இருந்தேன். அவ்வேளை ஒரு குளிர்ந்த கரம் என் நெற்றியில் இருப்பது போன்ற உணர்வு!

கண்விழித்துப் பார்த்தேன் அருகில் அனைவரும் ஆழ்ந்து உறக்கத்தில் இருக்கிறார்கள் அதன்பின்னர் எனது தலைவலி, காய்ச்சல் எல்லாம் நொடிப்பொழுதில் அகன்றுபோன உணர்வு!

பின் எந்த வித இடையூறுமின்றி மலையேறி ஐயப்ப தரிசனம் பெற்றேன். பக்தியுடன் கூப்பிட்ட குரலுக்கு ஓடி வருவான் ஐயப்பன்!

எனவே ஐயப்பன் பெருமைகளை விளக்க ஸ்ரீ ஐயப்பன் பாமாலை எனும் தலைப்பில் வெளிவரும் இந்நூல் அனைத்து மக்களுக்கும் வழிகாட்டியாக இருக்கும். என்று வணங்குகிறேன்!

சுவாமியே சரணம் ஐயப்பா

இல: 152/11A, கடற்கரை வீதி,
நீர்கொழும்பு,

**திருமதி. கு. பாக்கியவதி**

தேவி கருமாரி துணை

## நீர் கொழும்பு தலாதீவு அருள் மிகு ஸ்ரீதேவி கருமாரியம்மன் ஆலய பிரதம குரு குகதாசக் குருக்கள் ஐயா அவர்களின் ஆசியுரை.

மனித குலம் முன்னேற்றமடைந்து வருவதாகக் கருதப்படும் இக்கால கட்டத்திலே எமது வாழ்க்கை சலனமுற்றதாகவும், உள்ளீடற்ற வாழ்க்கையாகவும் காட்சி அளிக்கிறது. இது நிலையில்லாதது. அநித்தியமானது. இதன் பகட்டான வெளித்தோற்றத்தில் ஏங்கித் தவிக்கும் இன்றைய சமுதாயம் ஒரு புறத்தில் மன அமைதியைத் தேடி அலைகிறது. வாழ்க்கையின் உண்மை அர்த்தத்தைப் புரிந்து கொள்ளத் துடிக்கிறது.

இதற்கு எமக்குத் தேவையானது மன அமைதி, துன்பமில்லா வாழ்வு. இவைக்கு உறுதுணையாக இருக்க்கூடியது இறைவழிபாடு, கூட்டு வழிபாடு, பஜனை போன்றவையே.

அன்னதானம், இலவச ஆஸ்பத்திரி, தண்ணீர் பந்தல் வைத்தல் போன்ற தானங்கள் தற்காலிகமானதே. நிரந்தரமானது ஆத்மீக ஞானமே.

இவற்றை மனதில் கொண்டு திரு. ஜெயநாதன் அவர்கள் தனது அன்னை பாக்கியவதி அம்மாவின் பெயரால் ஸ்ரீ ஐயப்பன் அருட்பாமாலை என்னும் இப்பக்தி நூலை வெயிடுகிறார்கள்.

எனவே அன்பர்கள் யாவரும் இதனை வெறும் புத்தகமாக நினைக்காது ஒரு மந்திர புத்தகமாக பாவித்து இதில் இருக்கும் பாடல்களை வீட்டிலோ அல்லது கூட்டு பஜனைகளிலோ இவ்வாழ்வில் உள்ள கஷ்டங்களைப்போக்கியும் எல்லோரும் மோட்ச சாம்ராஜ்யத்தைதை அடைந்து ஜீவன் முக்தர்களாய் பேரானந்தத்தில் எப்பொழுதும் திளைத்திருப்பார்களாக.

சர்வம் சக்தி மயம்
169/4, கடற்கரை வீதி.
நீர் கொழும்பு.

**இ. குகதாசக் குருக்கள்**
ஸ்ரீதேவி கருமாரிஅம்மன்கோவில்
சிவசாரியார்.

சுவாமியே சரணம் ஐயப்பா

# அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கம்

## நீர்கொழும்புக் கிளை



திருமதி. கு. பாக்கியவதி அம்மாள் இருமுடியுடன்



சபரிமலை தீர்த்த யாத்திரை குழு 91 / 92

மாதா பிதா குரு தெய்வமே சரணம் ஐய்பா

# ஸ்ரீ ஐயப்பன் அருட்பாமாலை



என்னை இம்மண்ணுக்கு ஈன்று,இன்புடன் வாழச்செய்த என் தாய் தந்தையரை வணங்குகிறேன் கல்தோன்றி மண்தோன்றி காலத்தில் முன் தோன்றிய மூத்த தமிழ் தோன்றிய பாரத நாட்டில் தோன்றிய சைவ சமயம் மிகவும் தொன்மையானது

உலகின் ஏனைய மதங்களை தோற்றுவித்தவரையும் தோன்றிய விதங்களும் தெட்டத் தெளிவாக இருக்கும்போது ஆதியும் இன்றி அந்தமுமில்லாதது எமது சைவ சமயம் மட்டுமே என்னும் பொழுது இந்துக்களாக பிறந்திருப்பது பூர்வ ஜென்மப் பலனே! விஞ்ஞானம் இன்று புதிது புதிதாக கண்டுபிடித்திருப்பது எம் மெஞ்ஞானம் ஏற்கனவே கண்டுபிடித்தது தான்!

இறைபணியால் ஈடுபாட்டை எனக்குள் ஏற்படுத்தி ஐயப்பனின் மகத்துவத்தைப்பற்றி எனக்கு ஸ்ரீ ஐயப்பன்பாமாலை என்னும் இந்நூல் தொகுப்பினை வெளியிடுவதில் பெருமையடைகிறேன். இந்துப் பெருமக்களுக்கு ஒரே நூலில் அனைத்து சமய நிகழ்ச்சிகளுக்கான விடயங்கள் தொகுக்கப்பட்டிருப்பதனால் மிகவும் உபயோகமாக இருக்குமென நம்புகிறேன்.

இந்நூல் சிறப்புற அமைய உழைத்த அன்பு நெஞ்சங்கள் யாவற்றிற்கும் என் நன்றியறிவித்தலை தெரிவித்தக்கொள்கிறேன்.

அன்புடன்

**G. JEYANATHAN,**

*5, RUE JOSEPH DIJON,*
*PARIS 75018,*
*FRANCE..*

சாமியே சரணம் ஐயப்பா

**நீர்கொழும்பு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் சார்பாக ஐயப்ப குருசாமி கோபாலன் சர்மாவின் ஆசியுரை.**



கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக எங்கள் குருநாதர் சபரிமலை சாஸ்தா ஐயப்பனின் விரத காலத்தின்பொது இந்த நூல் வெளியிடும் பெரும் பணியை திரு. கு. ஜெகநாதன் அவர்கள் செய்வதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

தற்போதைய சூழ்நிலையில் எமக்குத் துணையாக நிற்பது கடவுள்துணையே ஆகும். இந்து சமயம் முற்காலத்தில் அழியும் நிலை ஏற்பட்டபோது நாயன்மார்கள் தோன்றி எமக்கு தேவாரம், திருவாசகம் மற்றும் அரிய நூல்களை எமக்கு கிடைக்குமாறு அருளி இந்து சமயத்தையும் காப்பாற்றினார்கள்

ஆனால் இப்போ அவர்கள் அருளிய தேவாரம் திருவாசகம் முதலியன அழிந்துவிடுமோ என நினைக்கத் தோன்றுகிறது. ஏனெனில் யாரும் இப்பொது ஓதுவது குறைவு. இந்த சமயத்தில் இப்படிப்பட்ட ஒரு புத்தகம் அவசியம் தேவைப்படுகிறது. வெளிநாட்டில் வாழும் இந்துக்களுக்கு ஒரே புத்தகத்தில் எல்லாம் கிடைக்குமாற செய்வது நமது கடமையாகும். வெளிநாட்டில் வாழும் இந்துக்களிற்கு இவ்வாறான புத்தகமொன்று கைவசம் இருப்பது மிகவும் பிரயோசனமாக இருக்கும். இந்நிலை கருதி திரு.கு. ஜெகநாதன் அவர்கள் ஐயப்பன் அருட்பாமாலை என்னும் நூலை வெளியிடுவது குறித்து மகிழ்ச்சியடைகிறோம். இக்காலத்தில் தேவாரம், திருவாசகம் பஜனைப் பாடல்களை நூல்வடிவில் மக்கள் முன் கொண்டு வந்து அதை பக்தியுடன் பாடி அதன்மூலம் இறையருளை எல்லோரும் அடையுமாறு செய்துள்ளார்.

மேலும் இவர் திருப்பணி மேன்மேலும் ஓங்கி வளர்க என எல்லாம் வல்ல என்குருநாதர் ஐயப்பன் அருள் புரிவாராக.

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

ஐயப்ப குருசாமி
**கோபாலன் சர்மா**
நீர்கொழும்பு.

சிவஸ்ரீ ஐ கைலாச நாதக்குரு பாதம் துணை

## இலங்கை நீர்கொழும்பு ஸ்ரீ சித்திவினாயர் ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ கு.குகேஸ்வர குருக்கள் அவர்களின் ஆசிச் செய்தி.



அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு
சித்திவினாயகரடியார்களே!

ஆதியும் அந்தமும் இல்லாத மதமாக எமது மதம் திகழ்கின்றது. மற்ற எல்லா மதங்களிற்கும் இல்லாத சிறப்பு என்னவென்று கேட்டால் எமது மதம் சனாதன மதமாக திகழ்வது தான். பல தெய்வக் கோட்பாடும் இந்து மதத்திலே இருக்கிறது. இறைவனை எந்தெந்த உருவாக் நாம் நினைத்து உருவகித்து வழிபடுகிறோமோ அந்த உருவத்தின் மூலமாக எமக்கு அருள் கிடைக்கின்றன எனும் நம்பிக்கை கொண்டவர்கள் இந்து மதத்தினர். எந்த தெய்வங்களை வழிபட்டாலும் வழிபாட்டு முறையில் எமது ஐம்பொறிகளும் இறை செய்கையில் ஈடுபட்டால் தான் இறையருளைப் பெறலாம் என்பது சித்தந்த மரபு அந்த வகையில் ஐயப்ப வழிபாடு மிகவும் சிறப்பு வாய்ந்ததாக இருக்கிறது. பக்திபரவசமூட்டும் பஜனைப் பாடல்களும் கரகோஷங்களும் நிச்சயம் ஒரு பக்தனின் மனதை புனிதப்படுத்தும் என்பதில் ஐயமில்லை. இவ்ஐயைப்ப விரதம் 48 நாட்கள் அதாவது ஒரு மண்டலமாகக் கூறப்படுகின்றது.

வைத்திய சாஸ்திரங்களில் கூட பெரியதொரு நோயைக் குணப்படுத்துவதற்கு 48 நாட்கள் தேவைப்படும் என்று கூறப்படுகின்றது. ஆகையால் தான் இவ்விரதம் 48 நாட்களோ அல்லது அரைப்பங்கு நாட்களோ விரத நாட்களாக கூறப்படுகின்றது. இந்த விரதத்தின் நோக்கங்களை கடைப்பிடிக்கும் முகமாக இப் புத்தக மலரினை நீர் கொழும்பு வாழ் திருமதி பாக்கியவதி அம்மையார் முன் வந்து வெளியிடுவதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். அடியார்களின் மனக்கவலைகள் நீங்க இவ்வாறான பத்தக மலர்களின் மூலமாகவே முடியும். எனவே இவ்வழிபாடு மேலும் மேலும் வளர்ச்சியுற இவ்வாறான பக்திப்பாடல்கள் நிறைந்த புத்தகங்கள் வெளியிட்டு ஐயப்பனின் பேருளைப் பெற வேண்டும் என சித்தி வினாயகப் பெருமானையும் சபரி மலை சாஸ்தாவையும் பிரார்த்தித்து மேலும் எனது ஆசீர்வாதத்தையம் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேத ஞான ஜோதி
ஆகம பிரவீணர் சிவாச்சாரிய மணி
சிவஸ்ரீ **கு.குகேஸ்வர குருக்கள்**

ஸ்ரீ சிங்கமாகாளி தேவஸ்தான பிரதம குரு
சிவஸ்ரீ நாராயண சண்முகநாதன் குருக்களின்
ஆசிச் செய்தி



பேரன்புடையீர்,

இப்புண்ணிய பூமியான இலங்காபுரியில் ஜாதிமத இன வேறுபாடின்றி போற்றப்பட்டு வரும் சமயங்களில் முக்கியத்துவம் வாய்ந்தது இந்து சமயம். இறைவன் என்ற சொல் இது என்று எல்லா உயிர்களில் இருந்தும் எல்லாப் பொருட்களில் இருந்தும் அறியக்கூடியதாக உள்ளது. இவ்வுண்மைப் பொருட்களை முன்னெடுத்துச் செல்வது நூல்கள். இவ்வகையான நூல்களை வெளியிடுவதன் மூலம் நம் இளம் சமூதாயத்தினர் முன்னேற்றமடைய வாய்ப்பளிக்கிறது.

மனித வாழ்வு, பரோபகாரச்சிந்தை முதலான நற்குணங்களில் தோய்ந்து நல்வாழ்வு வாழ இந்நூல் நல்லிதழாக விளங்கும். பாக்கியவதி அம்மையாரின் இவ்வரும்பணி மென்மேலும் ஓங்கி வளர ஆசிர்வதிக்கிறேன்.

சுபம்.

இங்ஙனம்,
**சிவஸ்ரீ நாராயண சண்முகநாத குருக்கள்**

ஸ்ரீ சிங்கமாகாளி அம்மன் கோவில்
நீர்கொழும்பு.

சுவாமியே சரணம் ஐயப்பா

## நீர்கொழும்புக் கிளை அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கம் சபரிமலை தீர்த்த யாத்திரை குழு



குருசுவாமி ஐயன் அருட் தொண்டர்
செ. ரவிச்சந்திரன் அவர்களின்
**வாழ்த்துரை**

மனிதனைவிடமேலான சக்தியுண்டென ஏற்றுக்கொள்ளும் இவ்வுலகம் இறைவனை பல்வேறு நாமங்களிலும் சொரூபங்களிலும் வைத்து வழிபடுகின்றது. அறிவுக்கெல்லாம் எட்டாப் பொருளான இறைவன் மனத்தாமரையிலேயே இருக்கின்றான். அதையுணர்ந்து வணங்கினால் அதர்மம் தழைத்து நிற்கும் இக்கலியுலகத்தில் கவலையின்றி மனஅமைதியுடனும் ஆன்மீக உணர்வுடனும் வாழ வழியேற்படுகின்றது.

இறைவன் திருவருள் கொண்டு எனது மதிப்பிற்குரிய பாக்கியவதி அம்மா அவர்கள் ஸ்ரீ ஐயப்பன் சுவாமியின் புகழைப் பரப்பிட அவர் மேற்கொண்டு வரும் முயற்சிகளில் ஒன்றாக ஸ்ரீ ஐயப்பன் புகழ்பாடும் ஒரு நூலினை தொகுத்து சபரிமலை ஐயப்பன் அருட்பாமாலை எனும் பெயர்சூட்டி இலவசமாக வெளியிட முன்வந்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

திருமதி. பாக்கியவதி அம்மாள் அவர்கள் அன்பும் பண்பும் அடக்கமான இறைபக்தியும் நிறைந்தவர் சேவை செய்வதில் மிகவும் நாட்டம் கொண்டவர் கடந்த இரண்டு வருடங்களாக எமது திரு யாத்திரை குழுவில் இணைந்து இப்புனித யாத்திரையை மேற்கொண்டார். இவர் ஸ்ரீ ஐயப்ப சுவாமியின்பால் வைத்திருக்கும் பக்தியும் நம்பிக்கையும் அவரின் இரண்டு வருடயாத்திரை வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்களும் அவர் கண்டறிந்த ஸ்ரீ ஐயப்பனின் அற்புதங்களையும் விபரிக்கமுடியாத ஒன்றாகும். யாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறவேண்டுமென்பதைக் குறிக்கோளாகக் கொண்டு இவரின் இறைபணிகள் வெற்றிகாண எம்பெருமான் சபரிமலையானை இறைஞ்சுகிறேன்.

84/2 பள்ளிவாசல் தெரு,
பெரியமுல்ல,
நீர்கொழும்பு.

**செ. ரவிச்சந்திரன் (குருசுவாமி)**
ஸ்ரீ சபரிமலை தீர்த்த யாத்திரை குழு
நீர்கொழும்பு.

ஐயப்பா சரணம்

# இலங்கை நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்றத் தலைவர் திரு. அ. மயில்வாகனன் அவர்களின் ஆசிச்செய்தி

ஐயப்பனை நினைத்தாலே அவரின் அழகிய தோற்றம் எம்மை மெய்மறக்கச் செய்கிறது. அவன் நாமத்தை உச்சரிக்கையிலே உள்ளம் உருகுகின்றது. அவன் புகழ்பாடும்போது ஐயப்ப பக்தி எம்மை பரவச நிலைக்கு இட்டுச்சென்று சகலதும் அவனாகவே தோன்ற வைக்கின்றது.

அழகுத் தெய்வங்களாக கருதப்படும் சிவன், திருமால் இவர்களின் தோற்றமென போற்றப்படும் ஐயப்பனை தங்கள் குலதெய்வமாக வணங்குபவர்களின் தொகை இன்று அனேக நாடுகளில் அதிகரித்துப் பரவி வருவதனால் அவனருளின் மகிமையை எம்மால் அறிய முடிகிறது.

ஐயப்பன் பாடல்களைப் பாடும்போது, கேட்கும் நாமும் அவர்களுடன் யாத்திரையில் சேர்ந்து சென்று அந்த பிரசித்தி பெற்ற சபரிமலையையும் பதினெட்டுப் படிகளையும் தலைதொட்டு வணங்கி வரும் பக்தகோடிகளுக்குக் காட்சி கொடுக்கும் அந்த புலிவாகனனின் திரு உருவையும் பார்த்து பக்தி வெள்ளம் பெருக அவன் பாதங்களில் வீழ்ந்து அருள் பெறும் உணர்வு எமக்குக் கிடைக்கிறது.

மேலும் சபரி மலை போய் வருவதற்கான பொருளாதார நிலை ஏற்றதாயிருக்கும் பலருக்கு பிரயாணத்திற்கான வழிகள் பற்றிய அறியாமையின் காரணத்தினாலோ அல்லது அறிந்திருந்தும் அவற்றை செயல்படுத்தும் சிரமங்களினாலோ அந்த ஜோதீஸ்வர ரூபனைத் தரிசிக்கும் பாக்கியம் எட்டாத்தூரத்தில் இருப்பதாக கருதுபவர்களையெல்லாம் தங்களுடன் இணைந்து ஒரே குடும்பமாக நினைத்து அக்கறையுடனும் ஆர்வத்துடனும் ஆண்டுதோறும் சென்றுவரும் குழுவிரதம் சேவையை பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகிறேன். பத்து வருடங்களுக்கு மேலாக தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கும் இந்த யாத்திரைக்கு இன்னும் பல்லாண்டுகள் விடாது சிறப்புடன் நடைபெற வாழ்த்துகிறேன். வணங்குகிறேன்.

சுவாமியே சரணம் ஐயப்பா!

**திரு. அ. மயில்வாகனன்**

சிவமயம்

சுவாமியே சரணம் ஐயப்பா

## வாழ்த்துரை



இறைவன் திருவருளால், எனது பெரும் மதிப்பிற்குரிய பாக்கியவதி அம்மாள் அவர்கள் யாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறவேண்டும் எல்லோரும் ஸ்ரீ ஐயப்பன் அருளையும் பெருமைகளையும் அறிந்து அவனை போற்றிப் பணிந்து பேரின்பம் அடைய வேண்டும் என்ற நன்நோக்குடன் சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் அருட்பாமாலை எனும் இந்த தெய்வீக பாமாலையைத் தொகுத்து ஐயப்பன் அருட்பணியாக இலவசமாக வெளியிடுவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இப்புனித மலருக்கு எனது வாழ்த்துரையை வழங்குவதை பெரும் பாக்கியமாக கருதுகிறேன்.

கலியுகத்தில் கண்கண்ட தெயவமாக விளங்கி உலக மக்களை தன்வசம் ஈர்த்து அருள்பாலித்து வரும் சபரி மலை ஸ்ரீ ஐய்யப்பன் சுவாமியினை தரிசிப்பதற்காக அன்னை அவர்கள் எமது நீர்கொழும்பு சபரிமலை திருயாத்திரை குழுவோடு இணைந்து இருமுடி சுமந்து சென்று, காந்த மலை ஜோதியை கண்டு களித்து இன்புற்றது மட்டுமல்லாமல் எமது வட இந்திய புனித ஸ்தல யாத்திரையிலும் இணைந்து காசி, காயா, புத்தகாயா, துவாரகா பிருந்தாவனம், மதுரா, ரிஷிகேஷ் போன்ற இன்னும் பல புனிதஸ்தலங்களையும் தனது 72வது வயதில் தரிசிக்கும் பாக்கியம் அவருக்கு கிடைத்ததென்றால் இவை அனைத்தும் நிச்சயமாக அவரின் பூர்வஜென்ம புண்ணியமென்றே கருதுகிறேன்.

அன்னை அவர்கள் தோகுத்துள்ள இத்தெய்வீக பாமாலை எமது இல்லம் தோறும் இருக்கவேண்டியதொன்றே. எனவே இம்மலரைப்பெற்றுக் கொள்ளும் அன்பர்கள் தங்கள் இஷ்ட தெய்வங்களை பாராயணம் செய்து சகல சித்திகளையும் பெற்று வாழ்வில் சகல சம்பத்துடனும் வாழ எல்லாம் வல்ல சபரி மலை ஐயப்பன் அருள் புரிவாராக.

அன்னை அவர்கள் தீர்க்க ஆயுளுடன் வாழ வேண்டும் அவரின் அருட்பணி மேலோங்க வேண்டும். மென்மேலும், பல அருட் தொண்டுகளை செய்து ஸ்ரீ ஐயப்பன் திருவருளை பரிபூரணமாக பெறவேண்டுமென இறைவனை வேண்டுகிறேன்.

பெற்ற தனது அன்னையின் நீண்டநாள் ஆசையான பக்த அன்பர்களுக்கு இலவசமாக ஓர் தெய்வீக பாமாலையை தொகுத்து வெளியிட வேண்டும் என்ற ஆவலை நிறைவேற்றி வைத்த அவரின் பிள்ளைச் செல்வங்களையும் வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

**வ. யோகேந்திரன்**

சபரிமலை தீர்த்த யாத்திரைக் குழு,
நீர் கொழும்பு கிளை,
உறுப்பினர்.

இல. 109 கடற்கரை வீதி,
நீர்கொழும்பு,
இலங்கை

உ
ஓம் சரணம் ஐயப்பா

## வாழ்த்துரை



பாரத நாட்டிலுள்ள கேரள மாநிலத்தில் குடி கொண்டிருக்கும் ஸ்ரீ சபரிமலை ஐயப்பனுக்காக இன்று இலங்கை, இந்தியா நாடுகளில் மட்டுமன்றி மேற்கத்தைய நாடுகளிலும் ஐயப்ப வழிபாடுகளும், பஜனைகளும் நடைபெறுகின்றதென்றால் அது எமக்கு பெருமையாக இருக்கின்றது. மேலும் ஐயப்பனின் புகழை இந்நாட்டில் எம் மக்களிடையே மணம் வீசுவதற்கு இம்மலரைத் தொகுத்து வெளியிடும் திருமதி பாக்கியவதி அம்மாவை எங்களால் பாராட்டாமல் இருக்க முடியாது. இவர் தன்னுடைய 72வது வயதில் 'இந்த அரும் பெரும் சேவையை செய்வது 'மேன்மையானது. இத்துடன் இவர் இருமுறை சபரிமலை யாத்திரையையும் மேற் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. யான் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம் என்ற நோக்கத்தில் செய்யும் இம்முயற்சி பாராட்டத்தக்கது.

இந்நூலில் ஐயப்பனின் அருள் சுரக்கும் கவசமும் பஜனைகளும் மட்டுமல்லாது தமிழிலே சுப்ரபாதம் முதலான இயற்றமிழ் செய்யுள்களும் நிறைந்துள்ளன. இப்பாடல்களை, யாம் படித்தும் பாடியும் பார்த்தபோது உள்ளம் நெகிழும் வகையினைக் கண்டோம். ஐயப்ப பக்தர்கட்கு மட்டுமன்றி அனைத்து இந்துக்களுக்கும் இந்நூல் ஒரு பொக்கிஷமாக அமையும் என்பது எனது தாழ்மையான கருத்தாகும்.

இவரது தொண்டு வாழ்க! வளர்க!

இப்படிக்கு,
ஸ்ரீ ஐயப்பன் அடிமை,
S. **கணநாதன்.**



சுவாமியே சரணம் ஐயப்பா

# அருள்மிகு ஸ்ரீ ஐயப்பன்

# புராண வரலாறு

## கேரளத் தோற்றம்

அழகு கொஞ்சும் கேரளத்தை உருவாக்கிய பரசுராமர் பல்வேறிடங்களிலிருந்தும் பிராமணர்களை அங்கு குடியேற்றினார். பின்னர் பதினெட்டு மலைகளில் தர்ம சாஸ்தாவின் திருக்கோயில்களையும், பதினெட்டு கடலோரப் பகுதிகளில் ஸ்ரீதேவியின் அருட் கோயில்களையும் அமைத்தார். அந்தப் பதினெட்டு மலைக் கோயில்களுள் சபரிமலை சாஸ்தா கோயில் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. எரிமேலி தர்ம சாஸ்தா கோயில், அச்சன்கோயில், ஆரியங்காவு, குளத்துப்புழை, சபரிமலை முதலியன அந்தப் பதினெட்டுள் சிலவாகும். ஏனையன எங்கு அமைக்கப் பெற்றன என்பது இதுவரை சரியாக அறியப்பெறவில்லை. நாம் அறியக்கிடைத்து, அருளைக் குவிக்கும் சபரிமலை சாஸ்தாவின் அருமை பெருமைகளைத் தெளிவாக இங்கு அறிந்து அருள் பெறுவோம்.

## புராண வரலாறு

துர்க்கையால் கொல்லப்பட்ட மகிஷாசுரனின் தங்கை மகிஷி என்னும் அரக்கி தன் அண்ணனின் மரணத்தால் கோபமுற்று, தேவர்களைப் பழிக்குப்பழி வாங்க எண்ணி, பிரம்மனைத் தவம் இயற்றி வரம் பெற்றாள். அரிகரசுதனைத் தவிர வேறு யாராலும் தனக்கு மரணம் ஏற்படக்கூடாது என்னும் வரம்பெற்று, மகிஷி தேவர்களைக் கொடுமைப்படுத்தினாள். இவளிடமிருந்து தப்பித்து நிலைத்து வாழ எண்ணி அமுதுண்ண விரும்பிய தேவர்களும், பிற அசுரர்களும் சேர்ந்து பாற்கடலைக் கடைந்து இறுதியாக அமுதுபெற்றனர். ஆனால், அமுதினைத் தேவர்களிடமிருந்து அசுரர்கள் பறித்துப் பெற்று உண்ணத் தொடங்கினர்.

தேவர்களின் வேண்டுதலுக்கிணங்கிய திருமால் அழகிய கன்னி (மோகினி அவதாரம்) உருக்கொண்டு அசுரர்களை மயக்கி, ஏமாற்றி அமுதினை வாங்கித் தேவர்களனைவருக்கும் பரிமாறினார். பின்னர், இந்தக் கன்னி உருக்கொண்ட திருமாலுக்கும் சிவனுக்கும் பிறந்த திருக்குழந்தைக்கு தர்மசாஸ்தா எனப் பிரம்மன் பெயர் சூட்டினார். தர்ம சாஸ்தாவின் தோற்றம் சிவ வைணவ ஐக்கியத்திற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

அருவ உருவமாய் காலத்திற்கும் குணத்திற்கும் அப்பாற்பட்ட பரம்பொருளின் நியதியின்படி, காரியகாரணங்களுக்காக அரிகரனார் ஐக்கியம் ஏற்பட்டது என்பது ஞானிகள் கூற்று.

## ஆராய்ச்சியின் முடிவு

நெடுங்காலமாகத் தமிழ்நாட்டிலும், கேரளத்திலும் வழிபட்டு வந்த திராவிடப் பரதேவதைகளான மாசாத்தான், கண்டன்சாத்தா, சாத்தப்பன் முதலியவை

சாஸ்தாவையே குறிப்பன. இந்தத்தேவதைகளின் வழிபாடு ஆரியப்பிராமணர்களின் சைவ வைணவக் கொள்கைகளாலும் கி.மு. 2ஆம் நூற்றாண்டு முதல் பரவிய புத்தமதக்கோட்பாடுகளாலும் தழுவப் பெற்று மாற்றியமைக்கப் பெற்றன. புத்தமதத்திற்கே உரியதான சரணம் போடும் முறையும் (புத்தம் சரணம் கச்சாமி) கூட்டம் கூட்டமாக யாத்திரை செல்லுதலும் பகவான் பகவதி சரணம் விளித்தலும் புத்த மதத்திலிருந்து தழுவிக்கொள்ளப்பெற்ற வழக்கங்களாகும்.

### சாஸ்தாவின் பல தோற்றங்கள்

குளத்துப்புழையில் கொஞ்சும் பாலகனாக, ஆரியங்காவில் இல்லறம் பூண்டு ஆண்டுதோறும் திருக்கல்யாணக் காட்சி தரும் சாஸ்தாவாக, அச்சன்கோவிலில் பூர்ணாவும், புஷ்க்லாவும் சேவைபுரிய தியானத்திலிருக்கும் வானப்பிரஸ்த சாஸ்தாவாக, எரிமேலியில் வில் அம்பு கொண்டு வேட்டைப் பிரியனாக, சபரிமலையில் துறக்கோலம் பூண்டு ஞான முத்திரை காட்டி பத்மாசனத்தில் அமர்ந்து யோக நிஷ்டையிலிருக்கும் ஐயனாக, காந்தமலையில் மகர நாளன்று மட்டும் ஜோதி சொரூபனாகவும் திருக்காட்சிதந்து அருள்பொழிகிறார். அரிகர சுதனான தர்மசாஸ்தா, சாஸ்தாவுக்கு பூர்ணை புஷ்கலை என்று இரு மனைவியர்களும் சத்யகன் என்ற ஒரு புத்திரனும் உண்டு எனப் புராணம் கூறுகிறது. சபரிக்கோயில் 1950ல் தீயோர் சிலரால் தீயிடப்பட்டது. மீண்டும் பக்தர்கள் பலரால் மிகப் பொலிவுடன் நிர்ணயிக்கப் பெற்றது.

## ஐயப்பன் பூவுலகில் அவதரித்த வரலாறு

### சாஸ்தாவின் அவதாரம் தோன்றிய காலம்

கேரளத்தின் சேரப் பேரரசு வீழ்ந்து, சிற்றரசர்கள் ஆட்சியில் பாண்டி தேசக் கொள்ளையர்கள் சபரிக் கோயிலைக் கொள்ளையடித்து, சாஸ்தாவின் மூல விக்கிரகத்தை நாசப்படுத்திப் பூசாரியைக் கொலை செய்தனர். கொள்ளையர் தலைவன் உதயன் என்பான். பந்தளம் அரண்மனையிலிருந்து அரசகுமாரியைக் கடத்திச் சென்று, தன் பாளையத்தில் சிறைவைத்தான். பூசாரியின் மகன் ஜயந்தன் (சேனன்) மீண்டும் சாஸ்தாவை நிர்மாணிக்க வேண்டி, பொன்னம்பல மேட்டில் தவம் செய்தான். அவன் கனவில் சாஸ்தா தோன்றி "நீ உதயன் பாளையத்திலிருந்து அரசகுமாரியை மீட்டு வந்து, அவளை மணம் புரிந்து கொள்வாயாக! உங்களிருவருக்கும் பிறக்கும் குழந்தை மீண்டும் சாஸ்தாவை நிர்மாணிக்கும்" எனக்கூறவே அதுபோல் அரசகுமாரியை ஜயந்தன் மீட்டு வந்து மணம் புரிந்தார். மார்கழித்திங்கள் சனிக்கிழமை உத்திர நட்சத்திரமும் பஞ்சமிதிதி விருட்சிக லக்கினம் கூடிய நன்னாளில் அழகுமிகு ஆண்மகவு பிறந்தது. "அக்குழந்தை சாஸ்தாவின் அவதாரமே" என அசரீரி ஒலித்தது. சபரியில் பரசுராமர் பிரதிஷ்டை செய்தது தர்மசாஸ்தா. சாஸ்தாவின் அவதாரம் ஐயப்பன் அவதாரம் தானே தவிர ஐயப்பன் சாஸ்தாவினின்றும் வேறுபட்டவர் அல்லர்.

## அவதாரத்தின் நோக்கம்

1. உதயன் முதலிய துஷ்டர்களை ஒழித்து அவனால் சீர்குலைக்கப் பெற்ற சபரிக் கோயிலைச் சீர்த்திருத்தி சாஸ்தாவை நிர்மாணித்தல்.

2. சாதிசமய வேறுபாடின்றி, ஏழைசெல்வர் பேதமின்றி, காமக்குரோதங்களை நீக்கி, பிரமதத்துவத்தைச் செயலாக்கி, சமயக் கொள்கைகளைப் பின்பற்றும் தீர்த்த யாத்திரையாக்கி சாஸ்தாவின் வழிபாட்டில் ஆர்வம் ஏற்படுத்தப் போதனையளித்தல்.

## பந்தளமன்னன், பாலகனை பம்பை நதிக்கரையில் கண்டெடுத்தல்.

ஐயந்தனிடம் சீரும் சிறப்புமான ஐயப்பன் வளர்ந்து வருங்கால், ஒரு நாள் ராஜசேகரன் எனும் பந்தளமன்னன், பம்பா நதியோரம் வேட்டையாட வந்தான். குழந்தைப் பேறிலாத மன்னன், வனத்தினிடையே குழந்தை அழும் ஒலிகேட்டுத் திடுக்கிட்டு, ஐயந்தனின் பர்ணசாலையை அடைந்து, தொட்டிலில் கிடந்த குழந்தையைத் தூக்கி, வாரித்தழுவிக் கொண்டான். குழந்தையும் மன்னனை மிகுந்த பாசத்துடன் கட்டித்தழுவிப் பிரிய மறுத்தது. ஐயந்தனும் அவதார நோக்கத்தை நிறைவேற்ற மன்னனிடம் வளர்வதே இறையருள் என்பதனை தன்யோக ஞானத்தால் உணர்ந்து, மன்னனிடம் குழந்தையைக் கொடுத்தருளினார். மன்னனும் மகிழ்ந்து ஏற்று நாடு திரும்பினார்.

## ஐயப்பன் புகழ் பரவுதலும் வனயாத்திரை செல்லலும்.

ஐயப்பன் கல்வி, வேதம், போர்முறை முதலிய சகல கலைகளையும் தெளிவாகக் கற்றார். குருதட்சணையாகக் குருநாதர் மகனின் குருடு, ஊமைத்தன்மைகளை நீக்கினார். இவ்வாறு ஐயப்பனின் புகழ் அதிகமாகி வரும்பொழுது, ராணிக்கு ஆண் மகவு ஒன்று பிறந்தது. மன்னன், ஐயப்பனுக்கு மூடிசூட்டு விழா நடத்த ஏற்பாடு செய்தான். மந்திரி நாட்டைத் தான் ஆளச் சதி செய்து மணிகண்டனை அழிக்கத் திட்டமிட்டான். "வேட்டுவன் நாடாள்வதா?" எனப்பிரசாரம் செய்தான். அது பயனற்றுப் போகவே, செய்வினைகளால் மணிகண்டன் உடம்பு புண்ணாகச் செய்தான். பரமசிவன் துறவியாக வந்து குணப்படுத்தினார். பின்னர் தன்மகன் பிறந்தநாள் விழாவிற்கு மணிகண்டனை அழைத்து அமைச்சர் விஷம் கொடுத்தான் அதனை மணிகண்டன் கருட பஞ்சாக்ஷரம் ஜபித்து வென்றார்.

பின்பு அமைச்சர் ராணியின் நல்ல உள்ளத்தைக் குழப்பி, அவள் மகன் ராஜேந்திரனுக்குத்தான் பட்டம் சூட்டவேண்டும் என வாதாடினான். அவன் சதிக்கு உடந்தையாக ராணியும் தீராத தலைவலி என நடித்தாள். அமைச்சனால் ஏவப்பட்ட வைத்தியர், புலிப்பாலினால் செய்யப்படும் மருந்தினாற்தான் ராணியின் தலைவலி தீரும் என்றார். தாயின் தலைவலியைத் தீர்க்கப் புலிப்பால் கொண்டுவர ஐயப்பன் புறப்பட்டார். மிகுந்த கவலைக்குப் பின், மன்னன் ஐயப்பனை வழியனுப்பி, உணவுகட்டி எடுத்துச் செல்லும்படியும் முக்கண்ணனாகிய சிவனை நினைத்துக்கொள்ள, முக்கண்ணுடைய தேங்காயை உடன் எடுத்துச் செல்லும்படியும் பணித்தார். மன்னன் தந்த பொருட்களை ஐயப்பன் "இருமுடிக்" கட்டாக அமைத்து, வில்லும் அம்பும் ஏந்திப் புறப்பட்டார். அமைச்சர் மகிழ்ந்தான். மன்னர் மனக்கவலையைப் பரமசிவன் பொறுப்பில் விட்டு நிம்மதியடைந்தார்.

## ஐயப்பன் புலிக்கூட்டத்துடன் பந்தள நாடு திரும்பியமை

ஐயப்பன், காட்டுவழியில் பொன்னம்பல மேட்டில் தவமியற்றி வந்த தாய் தந்தையரைக் கண்டு மகிழ்ந்தார். பின்னர் புலிக்கூட்டம் ஒன்றைத் திரட்டிக்கொண்டு, புலியின்மீது அமர்ந்து புலிப்பாலுக்காகத் தாய்ப் புலியுடன் மற்ற விலங்குகளும் பின்தொடர ஐயப்பன் பந்தள நாடு திரும்பினார். இது கண்ட மக்கள், ஐயப்பனை தெய்வமென வியந்து வழிபட்டுப் போற்றினர். ஐயப்பன், மன்னன் அடிகளில் வீழ்ந்து வணங்கினார். ஆனால் மன்னன் ஐயப்பனைத் தெய்வம் என உணர்ந்து வணங்கி, தந்தை மகன் என்ற உறவில் செய்த தவறுகளுக்கு மன்னிப்புக் கேட்டார். புலிக்கூட்டத்தைத் திருப்பி அனுப்பி, மக்கள் அச்சம் போக்க வேண்டினார். அதன்படி ஐயப்பன் ஆணையிட, விலங்குகள் வனம் திரும்பின. அமைச்சர் தன் தவறு உணர்ந்து ஐயப்பன் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டார். தாயும், தான் செய்த தவறுக்காக வருந்தினார். ஐயப்பன் ஆறுதல் கூறினார். ஐயப்பனிடம் அரசரும், குருவும் மக்களும் உபதேசம் கேட்டனர். இதனாலேயே குருவின் குரு என ஐயப்பன் அழைக்கப்படுகின்றார். சாஸ்தாவைப் பிரதிஷ்ட்டை செய்யும் நோக்கத்துடன் செல்வதாகவும், மீண்டும் சந்திப்பதாகவும் கூறி, ஐயப்பன் பந்தளத்திலிருந்து விடைபெற்றார்.

## பாத்திமாவின் மகனான வாபரை தன் தோழராக்கியமை

ஐயப்பன் முதலில் காயங்குளம் மன்னரைச் சந்தித்து ஆலோசனை நடத்தினார். பெருந் தொல்லை கொடுத்து வந்த வாபர் என்னும் கடற்கொள்ளைக்காரன் பற்றிக் கேட்டறிந்தார். வாபர், இஸ்மாயில் கோத்திரத்தில் பர்ஹவியா வகுப்பில், ஹலேப் எனும் ராஜ்யத்தில் பாத்திமாவின் மகனாக பிறந்த ஒரு அரேபிய முஸ்லீம் ஆவார். வாபர் இந்திர மந்திர ஜாலங்களால் பல பெரும் வீரர்களை வென்று அடிமைகளாகச் சேர்த்துக்கொண்டார். தொழில் கப்பல் ஓட்டுவதும், உப்பு வியாபாரமுமே ஆனால் கொள்ளையடிப்பதில் கிடைக்கும் பெரும் பொருளை, ஏழைகளுக்கு வாரி வழங்கினார். வாபரின் ஆற்றலையும் நல்லுள்ளத்தையும் அறிந்த ஐயப்பன் அவரை வென்று நண்பராக்கிக் கொள்ள முடிவு செய்தார். கருநாகப்பள்ளிக் கடற்கரையில் வாபரை எதிர்த்துப் பெரும் போர் நடத்தி ஐயப்பன் வென்றார். வாபர் ஐயப்பனின் திறமையும் பெருமையையும் உணர்ந்து அடிபணிந்தார். வாபரை இனிய சொல்பேசி, ஆறுதல் கூறி, நல்வழி காட்டி நண்பராக்கிக் கொண்டார் ஐயப்பன். தர்மசாஸ்தா சிலையை நிர்மாணிக்கும் பணியில் வாபரும், அவர் படைகளும் ஐயப்பனுடன் சேர்ந்து பணியாற்றமுடிவு செய்தனர். அதற்காக வாபர், முஸ்லீம் மதத்தைவிட்டு இந்து மதத்தில் சேர்ந்து விடுவதாக கூறினார். அதற்கு ஐயப்பன் "உலகிற்கு பணியாற்ற மதம் எதுவாயினும் கவலையில்லை மதம் மாற வேண்டாம்." என்று கூறித் தெளிவாக்கினார். பின்னர் ஒரு முறை, பநதளத்தைத் தாக்கிய உதயனை ஐயப்பனும், வாபரும் எதிர்த்துப் போரிட்டு, பின்வாங்கி ஓடச் செய்தனர். ஐயப்பனின் வீரத்தைப் புகழ்ந்து பந்தளமன்னன் ஐயனின் இருகைகளுக்கும் "வீரச்சீருங்கலை" எனும் பொற்சங்கிலி வழங்கிக் கௌரவித்தான். ஐயப்பன் வாபரை சேனநாயகராக்கி, படைகளுடன் எரிமேலியில் தங்கி, மேற்கு தேசங்களிலிருந்து சபரிமலைக்கு வரும் படைகளுக்குத் துணையாக இருக்கும்படி செய்தார்.

## ஈழவர் குடும்பத்தலைவனான சீரப்பன் மகளை முக்தி பெற வைத்தமை.

ஐயப்பன் அம்பலப்புழை, செம்பகேசரி, சேர்த்தலை, பெரும்பாவூர், பரப்பனாடு, சாலக்குடி முதலிய இடங்களுக்குச் சென்று சிறுசிறு உட்பூசல்கள் ஒழித்து, உதயனை எதிர்த்துப் போரிட பெரும்படை திரட்டி, போர்ப் பயிற்சிகள் அளித்துப் படைக்கு குழுக்களை ஏற்படுத்தினார். பந்தளம், அம்பலப்புழை, ஆலங்காடு ஆகிய மூவிடங்களிலும் தலைமைச் சங்கங்கள் அமைத்து, மற்ற இடங்களை இவற்றின் கிளைகளாக முறைப்படுத்தினார். சேர்த்தலை தண்ணீர் முகத்தில் ஈழவக் குடும்பத்தலைவனான சீரப்பன் சிறமூப்பனுடன் தங்கிப் படைகளுக்கு ஆயுதப்போர் கற்பிக்கும் காலத்தில் சீரப்பன்மகள் ஐயப்பன் பால் காதல் கொண்டாள். நித்தியப் பிரம்மச்சாரியான ஐயப்பன் அவளுக்கு ஞானோபதேசம் செய்து மனதை தெளிவித்தார். பந்தள மன்னனிடமிருந்து பெற்ற இரு பொற் சங்கிலிகளையும் அவளுக்குக் கொடுக்கவே, அவளுடைய உலகாசைகள் விட்டொழிந்தன. இறுதியாகச் சபரியில் சென்று முக்தி பெற்றாள். சில காலத்திற்குப் பின்னர், இந்தச் சங்கிலிகளின் மகிமையை அறிந்து பந்தள மனனன் ஒருவன், ஏராளமாகப் பொருள் கொடுத்துச் சீரப்பன் குடும்பத்திலிருந்து அவற்றை விலைக்கு வாங்கி விட்டான் என்று கூறப்படுகின்றது. இன்றும் சபரிமலை வழிபாட்டில் வெடிவைக்கும் உரிமை சீரப்பன் பரம்பரைக்கு கொடுக்கப்பட்டு வருகிறது.

## ஐயப்பன் பாண்டி நாட்டுக்கு விஜயம்

ஐயப்பன் பாண்டி நாட்டின் தலைநகரான மதுரைக்கு வந்து, மன்னனைக் கண்டு ஞானோபதேசம் செய்து ஒரு குறிப்பிட்ட நாளில் சபரிக்கு வரும்படி அழைத்தார். எரிமேலியில் வாபரைச் சந்தித்து அடுத்துவரும் மகர சங்கராந்தியன்று சாஸ்தா பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்றும் நாற்றிசைகளிலிருந்தும் வரும் படைகளும் எருமேலியில் சந்திக்க வேண்டும் என்றும் கூறித்திட்டங்களை விளக்கி முன்பே மலைக்கு அனுப்பிப் படைகள் தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்வித்தார். பின்னர் பொன்னம்பலமேட்டில் தவம் செய்து வந்த பெற்றோர்களைக் கண்டு சாஸ்தா பிரதிஷ்டையைத் தன் தந்தையாகிய ஐயந்தன் செய்ய வேண்டும் என்று வேண்டிக் கொண்டார். ஐயந்தனும் அதனைப் பெரும்பேறாகக் கருதிக் கொண்டான்.

## இருமுடிகட்டலும் பேட்டைத்துள்ளலும்

ஐயப்பன் புலிப்பாலுக்காகச் சென்றபோது கொண்டு சென்றதைப்போலப் படையினரும் பக்தர்களும் இருமுடிக்கட்டு ஏந்திச் சென்றனர். ஆன்மிக உணர்ச்சியில் பக்தர்களும் படைகளுடன் கிளம்பினர். மகர ஜோதிக்கு 41 நாள் முன்பிருந்தே பூரண பிரம்மச்சரிய விரதம் ஏற்றுப் பஜனைகள் செய்து புறப்பட்டனர். பயிற்சி பெற்ற பெரியோர்கள் குருமார்களாகப் பணியேற்றனர். சரணம் விளித்துப்படை கிளம்பினர். இன்றும் வேட்டையாடும் போது அம்பலப்புழை பக்தர்களுக்கு கருடதரிசனம் தவறாமல் கிடைக்கிறது. அம்பலப்புழை ஆலங்காட்டுச் சங்கங்களிருந்து புறப்பட்ட படையினரின் ஆர்வத்தை ஐயப்பன் பாராட்டினார். இந்த இடங்களிலிருந்து வரும் பக்தர்களுக்கு இன்றும் பம்பையில் விருந்தும், சன்னதியில் "விரி" (விடுதி) உரிமைகளும் தரப்படுவதே இதற்குச் சான்றாகும். பலமலைகளையும் வனங்களையும் கடந்து எல்லோரும் மகரசங்கிராந்திக்குப் பத்து நாட்கள் முன்னரே எரிமேலி வந்தடைந்தனர்.

பேட்டைத்துள்ளல் எனும் விழா நடத்தினர். முதலில் எரிமேலி கடை வீதிக்குச் சென்றனர். ஐயப்பன் ஆணைப்படி ஆயுதங்கள், காய்கறிகள் வாங்கினர். பெரிய ஆர்ப்பாட்டத்துடன் ஒரு கம்பளியில் கட்டித்தூக்கிச் சென்றனர். அரசனும் ஆண்டியும் வேற்றுமையில்லாமல் கறுப்பு வேட்டி இடுப்பில் கட்டி, தலையில் கம்பளி சுற்றி, கரி, குங்குமங்களை உடம்பில் பூசிக் காட்டு இனத்தார் போல வேஷமிட்டு "ஐயப்ப திந்தகத்தோம், சுவாமி திந்தகத்தோம்" எனக் கோஷம் போட்டு வாத்தியங்கள் முழங்க வாபர் வணங்கும் இஸ்லாம் மத ஆலயத்தை வலம் வந்து, பின் சாஸ்தா கோயிலை வலம் வந்து ஆனந்தக் கூத்தாடினர். பின்னர் சபரிமலை நோக்கிப் புறப்பட்டனர். எரிமேலியைத் தாண்டியதும் பெரிய காடு தொடர்ந்தது. இதனை சாஸ்தாவின் நந்தவனம் என ஐயப்பன் போதித்தார். இலை கிள்ளிப் போட்டு வனதேவதையையும் கானகத்தையும் வணங்குமாறும், வன விலங்குகளைத் துன்புறுத்தக்கூடாது என்றும் போதித்தார். எரிமேலிக்கு இரண்டு மைல் கிழக்கேயுள்ள சாந்தி தருகின்ற பேரூர்த்தோட்டில் ஓய்வு எடுத்தனர்.

## காளைகட்டியும் அழுதையாறும்

சபரிமலைக்கும் எரிமலைக்கும் இடையில் பல மலைகளின் உச்சியில் உதயன் தாவளங்கள் (இருப்பிடம்) நிறுவியிருந்தான். முதலில் இஞ்சிப்பாறைக் கோட்டையைக் கைப்பற்ற அதனைக் காத்துவந்த புதுச்சேரி முண்டன் எனும் கொள்ளைக்காரத் தலைவனுடன் போரிடமுடிவு செய்தனர். கோட்டையைச் சுற்றிருந்த அகழியைத் தாண்டிச் செங்குத்தான அழுதை மலை உச்சியில் அமைந்திருந்த கோட்டையினைத் தாக்கும் முறையினை ஐயப்பன் காளை கட்டி எனும் இடத்தில் படையினருக்குக் கற்பித்தார். தன் பயணத்திற்கு வைத்திருந்த காளையைக் கட்டியதால் இவ்விடம் "காளை கட்டி" என அழைக்கப்படுகிறது. இங்கு ஐயப்பன் ஓய்வெடுப்பதற்காக அமர்ந்த கல்லை இன்றும் தொட்டு வழிபட்டு வருகின்றனர்.

காளை கட்டியிலிருந்து கிழக்கே ஒன்றரை மைலில் அழுதையாறு ஓடுகிறது. இது பம்பையில் சேரும் சிற்றாறு. இதன் கரையில் படைகள் தங்கித் தாளமேளம் போட்டுப் பஜனை முடித்து இரவு தங்கினர். இஞ்சிப்பாறையில் போர் நடக்கும்போது உதயனின் தலைப்பாறைப் படைகள் உதவிக்கு வந்து விடாமலிருக்க ஒரே சமயத்தில் தலைப்பாறை கோட்டையையும் முறியடிக்க ஐயப்பன் திட்டமிட்டார். பந்தளம் படையைச் சேர்ந்த சின்னக் கடுத்தை (கொச்சுக் கடுத்தை) ராமன், கிருஷ்ணன் ஆகியோர் பொறுப்பில் ஒரு படையினைத் தலைப்பறையைத் தாக்க ஆணையிட்டார். ஐயப்பன் ஆணைப்படி அகழியைத் தாண்ட வீரர்கள் அழுதையாற்றில் குளித்துவிட்டு பெருங்கற்களையும் மரக்கிளைகளையும் அகழியில் போட்டு பாலம் போல் அமைத்துப் படையினர் சரணம் போட்டுக் கொண்டு கோட்டைக்குள் புகுந்தனர். பல வித்தைகள் காட்டியும் பயனில்லாமல் புதுச்சேரி முண்டன் கோட்டை வாசலை திறந்து ஓட்டம் பிடித்தான். அவன் தப்பியோடிக், கரிமலைக் கோட்டையை நோக்கி சென்றான். உதயனுக்கு உதவி புரிய விடக்கூடாது என ஐயப்பன் ஆனையிட்டிருந்ததால், வாபர் முண்டனை தொடர்ந்து சென்று கடும்போர் புரிந்தார். இறுதியில் கடும் போருக்குப் பின் வாபர் முண்டனை வெட்டி வீழ்த்தினார். இதனால் அந்த இடத்தில் ஓடுகின்ற நதிக்கு புதுச்சேரி ஆறு எனப்பெயர் வழங்கி வருகிறது. பின்னர் படை தொடர்ந்து கரியிலந்தோடு அடைந்து இரவு தங்கியது.

## கரியிலந்தோட்டிலும் கரிமலையிலும் கடும் போர்

தலைப்பாறைக் கோட்டையின் மேலிருந்து பந்தள வீரர்களை தாக்கும் எதிரிகளை வில்லாளி வீரனாகிய ராமன் அம்புமாரி பொழிந்து அழித்தான். சிறந்த மல்யுத்த வீரனாகிய கிருஷ்ணன் எதிரிகளைப் பிடித்து அப்பளமாக நொறுக்கி தவிடு பொடியாக்கினான். "ஆனைச் சடக்கம்" எனும் மல்யுத்த முறையால் கோட்டையின் கோபுர வாசலை அழித்தான். எதிர்க்க இயலாத கொள்ளைக்காரர்கள் தப்பியோடினர். கிருஷ்ணனுக்கு "தலைப்பாறை மல்லன்" என்று பெயர்கள் வழங்கப்பட்டன. போர் நடந்த இரு இடங்களிலும் ஒரே சமயத்தில் ஐயப்பன் காட்சியளித்து உபதேசம் கூறி உற்சாகம் ஊட்டியதாகக் கூறப்படுகின்றது. சில சமயம் குதிரை மீதும், சிலசமயம் யானை மீதும், பல இடங்களில் பல விதங்களில் ஐயப்பனைப் பார்த்ததாக வீரர்கள் கூறினர். சாரதியைப் போல் ஐயப்பன் போர் நடத்தினாரே தவிர போர் புரிந்தார் இல்லை.

பொழுது விடிந்ததும் படைகள் கரிமலையைச் சுற்றி வளைத்தன. உதயன் திகைத்தான். எனினும் மனம் தளராமல் போர் புரிந்தான். ஐயப்பன் படைகள் "சரணம் ஐயப்பா, சரணம் ஐயப்பா" என்று குரல் எழுப்பிக் கொண்டு கரிமலைக் கோட்டைக்கு வெளியில் நின்ற மரங்களை வெட்டிக்கோட்டை மீது சாய்த்தனர். மரங்கள் மீது ஏறிக்கோட்டை வாயிலைத் திறந்து படை நுழைந்தது. சின்னக் கடுத்தை உதயனை எதிர்த்து போரிட்டு வாளால் வெட்டி வீழ்த்தினார். மாலைப் பொழுதிற்கு முன் மலை உச்சியில் ஐயப்பன் கொடி பறந்தது. அமைதி நிலவியது.

## இராம பிரான் பாததூளி ஏற்ற, புண்ணியம் பெற்ற புனித பம்பைநதிக் கரையில் படையினர்.

மாலை வேளையில் கரிமலை இறங்கிப் பம்பா நதிக்கரை வந்தனர். இரவில் ஓய்வுக்கு முன் ஐயப்பன் எல்லோருக்கும் நன்றி செலுத்தினார். வெற்றிச் செருக்குறாமல் இருக்கும் படி வேண்டினார். பம்பைக்கரையில் இருந்த மாதங்க முனிவருக்கும் அவர் சீடர்களுக்கும் தொண்டாற்றி இறுதியில் இராமபிரான் அருள் பெற்றுச் சபரியில் முக்தியடைந்த வேடுவப் பெண்ணான "சபரி" வாழ்ந்ததும் இந்நதிக்கரையில்தான் மறுநாள் காலை பம்பையில் நீராடி பித்ருகளுக்கும் சிரார்த்தம் ஊட்டிய பின் உணவருந்தினார். மதியச் சாப்பாடு சிறந்த விருந்தாக அமைந்தது. சிலர் விறகு பொறுக்கி வரச் சென்றனர். சிலர் தீபக்காட்சி ஏற்பாடு செய்தனர். ரதம் போல் சப்பரங்கள் செய்து அதனுள் தீபம் ஏற்றினர். ஐயப்பன் எல்லோருடனும் எல்லா வேளைகளிலும் கலந்து கொண்டார். அப்பளமும் பழங்களும் கட்டி உயரமான மரக்கிளைகளில் தொங்கவிட்டு வன தேவதைகளுக்கு நைவேத்தியம் படைக்க செய்தார். பெரும் விருந்து மிகச் சிறப்பாக நடந்தது. வன தேவதைகளும், சித்தர்களும் மாறுவேடம் பூண்டு வருவர் என ஏழைகளுக்கும் உணவளிக்கச் செய்தார். இதுபோல் இன்றும் இதைப் பக்தர்கள் "சக்தி பூஜை" எனக் கொண்டாடி நடத்துகின்றனர். பம்பையின் மணல்திட்டில் நெருப்பை மூட்டி வலம் வந்தனர் பம்பையின் தீப ஒளி இன்றும் கண் கொள்ளாக் காட்சியாக மனதைக் கவருகின்றது.

இரவு பம்பையில் தங்கினர். மறுநாள் காலை சபரி நோக்கிப் புறப்பட்டனர். நீலிமலை ஏற்றம் தொடங்கியது. புஷ்ப அர்ச்சனை செய்து மலையை வழிப மலையேறினர். இன்றும் பச்சிலை கிள்ளிப்போட்டு நீலிமலை ஏறுவது வழக்கட இருந்து வருகின்றது. நீலிமலை ஏற்றம் மற்றமலைகளை விடக் கடினமாக இருந்தது.

என்றாலும் தர்மசாஸ்தாவின் அருள் சன்னதி நெருங்கி விட்டதால், பரவச மிகுந்த ஆர்வத்துடன் தொடர்ந்தனர். வழியில் இராம பக்தையான "சபரி" முக்திபெற்ற சபரி பீடத்தை ஐயப்பன் ஆணைப்படி வழிபட்டனர். ஐயப்பன் படைகளுக்கு இனி ஆயுதங்கள் தேவையில்லாததால் அவற்றை ஆலமரத்தடியில் போடும்படி ஐயப்பன் ஆணையிடவே, அவ்வாறு செய்தனர். அதுதான் இன்றும் அந்த இடம் "சரங்குத்தி ஆல் என்று அழைக்கப்படுகிறது. இந்த ஆலமரத்தின் அடியில் ஐயப்பன் சில உபதேசங்கள் அருளினார்.

## அவர் உபதேச மொழிகளாவன

பற்றற்ற கருமம் செய்வோமானால் மனம் மாசு பெறாது: தூய மனத்தில் ஞானம் ஒளிரும், ஞானம் வாழ்வில் லட்சியம்: நற்கருமத்தில் இடையூறாவன காமம், வெகுளி பேராசை முதலியவற்றை அழிக்கக் கடவுள் தியானம் அவசியம். தியானத்தில் மனம் நிலைபெறும்போது, சாந்தியும் பேரின்பமும் உண்டாகும். கடவுளிடம் சரணாகதியடைதலே பக்தியின் இறுதிமொழி "சரணம் ஐயப்பா" என்ற சரணாகதி மந்திரத்தைத், தூயமனதுடன் ஓதுகிறவன் முக்தி பெறுவான். பதினெட்டுப்படி ஏறி தருமசாஸ்தாவின் சன்னதி எட்டியதும் கடவுள் தரிசனம் கிடைக்கிறது. இந்தப் பதினெட்டுப்படிகளும் பதினெட்டு தத்துவங்களாகும். இவையானவை: புலன் ஐந்து, பொறி ஐந்து, பிராணன் ஐந்து, மனம், புத்தி, அகங்காரம், இவைகளைக் கடந்தவனே கடவுளைக் காண இயலும்.

## சாஸ்தா விக்கிரகத்தில் ஐயப்பன் ஐக்கியமாதல்

பாண்டிய மன்னரும் சாஸ்தா பிரதிஷ்டைக்காக ஏற்கனவே ஐயப்பனால் அழைக்கப் பெற்றதனால் அவரும் படைகளுடன் வருகை தந்திருந்தார். பிரதிஷ்டை ஐயப்பனின் தகப்பனார் ஜயந்தன் செய்து வைக்க ஏற்பாடாகி இருந்தது. பொழுது புலர்ந்தது "உரல்குழி" தீர்த்தமாடி பக்தர்கள் தேங்காய் உடைத்து "சரணம் ஐயப்பா" என்று கூவிக்கொண்டே பதினெட்டுப்படிகளையும் ஏறிக்கடந்தனர். எல்லோரும் உச்சிக்கு எட்டியதும் பெற்றோரின் திருவடிகளில் ஐயப்பன் விழுந்து வணங்கினார். பாண்டிய மன்னனும் தந்தையாக இருந்த பந்தள மன்னனுக்கு நமஸ்காரம் செய்தார்.

முகூர்த்தம் நெருங்க நெருங்க பக்தர்கள் திரள்திரளாக கோயிலை நெருங்கினர். மிகுந்த அமைதி நிலவியது. ஒவ்வொரு கணமும் ஐயப்பனின் பொலிவு பெருகி ஐயப்பனைச் சுற்றி ஒளிவட்டம் அதிக பிரகாசமாயிற்று. எங்கிருந்தோ ஒற்றைக் கருடன் "கிருஷ்ணா" என்று கத்திக் கொண்டு வட்டமிட்டுப் பறந்தது. பிறகு ஐயப்பன் மதுரை ஸ்ரீ மீனாஷி அம்மனைப் பிரதிஷ்டை செய்து அம்மனின் அருள் என்றென்றும் இங்கு நிலைத்திருக்கும். என்றும், இந்தக் கோயிலுக்கும், சாஸ்தா கோவிலைப் போலவே பெருமையுண்டு என்றும் கூறினார். பின்பு எல்லோருக்கும் அருள் காட்டிப் பின்வரும் அறிவுரைகளை வழங்கினார். இனிமேல் சபரிமலை மிகச் சீரும் சிறப்புமாக விளங்கும் இன்னும் ஏராளமான பக்தர்கள் ஆண்டுதோறும் தவறாமல் சபரியாத்திரைக்கு வருவார்கள் நாம் கைக் கொண்ட முறைகளைப் பின்பற்றி ஒரு மண்டலம் (41நாடகள்) விரதமிருந்து புறப்பட்டு எரிமேலி, காளைகட்டி, இஞ்சிப் பாறைக்கோட்டை, கரிமலை சபரிபீடம், சரங்குத்திஆல், பதினெட்டாம்படி இவைகளைக் கடந்து, முக்கியமான இடங்களில் நாம் செய்த சடங்குகளைத் தவறாமல் செய்து சாஸ்தாவின் அருள் பெறுவார்கள் பம்பா தீர்த்தமாடி, பித்ருதர்ப்பணம், குருதட்சணை, தீபக்காட்சி, நதி பூஜை முதலியன செய்து புண்ணியம் பெறுவர்.

சங்க நாதமும் வாத்தியங்களும் முழங்க சாஸ்தாவின் விக்கிரகத்தை திருக்கோவிலுக்குள் எடுத்துச் சென்று ஐயப்பனின் தந்தையான ஐயந்தன் பீடத்தின் மேல் ஏற்றி வைத்தார். உடனே திடீரென ஒரு மினனல் ஒளி பளிச்சிட்டது. ஐயப்பன் நின்ற இடத்திலிருந்து ஒரு திவ்விய பிரமை கிளம்பி விக்கிரகத்தில் அடங்கிவிட்டதை மக்கள் உணர்ந்தனர். ஐயப்பன் மாயாமாய் மறைந்துவிட்டார். சாஸ்தா விக்கிரகத்தில் ஐயப்பன் ஐக்கியமாகி விட்டார். எல்லோரும் தம்மை மறந்து "சரணம் ஐயப்பா" சரணம் ஐயப்பா எனக் கூவிக் கைகூப்பித் தொழுதனர். சாஸ்தாவின் கோவிலை வலம் வந்தனர். படைவீரர்களும் பக்திப் பெருக்கினால் கண்ணீர் சிந்திப்பரவசமடைந்தனர் சற்று நேரத்தில் சபரிமலை முழுவதும் சாந்தி நிலவியது.

ஐயப்பனின் பெற்றோர் பொன்னம்பல மேட்டுக்குத் திரும்பி மீண்டும் தவமேற்றனர். பாண்டிய மன்னருக்குப் பந்தள மன்னர் விடை கொடுத்தார். சபரி மலைக் கோயிலின் நிர்வாகத்தை பந்தள மன்னன் ஏற்றார். கோவிலின் பாதுகாப்புக்கு வாபர், சின்னகருத்தை இராமர், கிருஷ்ணர் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். ஒரு உத்தம பிராமணனை கொண்டு பிரஜைகளை நடத்திய பின் கோயிலைப் பூட்டிச் சாவியைப் பெற்றுக்கொண்டு பந்தள மன்னன் நாடு திரும்பினான். மக்களும் ஊர் திருமபினர்.

இந்த சிறப்புமிக்க ஐயப்பனின் வரலாற்றினை அறிந்து உண்மையுணர்ந்து ஐயப்பனின் புகழ்பாடும் பக்தர்களும் அன்பர்களும் ஐயப்பனின் பேரருளைப் பெற்று நல்வாழ்வு பெறுவார்களாக.

## சபரிமலை யாத்திரையினால் ஏற்படும் பலாபலன்கள்

சபரிமலை யாத்திரையின் போது ஐயப்பனடிமைகள் கறுப்புடைதரித்து சாதி, மதம், ஏழை, செல்வந்தர் பேதமின்றி சரணம் சொல்லும் போது எல்லோரும் "ஓர்குலம் ஓர்நிறை" என்ற உயர்ந்த உணர்வு உண்டாகிறது. இந்துக்கள்மட்டுமன்றி முஸ்லீம்களும் இருமுடிகட்டி யாத்திரை செய்து ஐயப்பனை வழிபட்டு அருள் பெறும் போது இந்து - முஸ்லீம்களிடையே நல்லுறவு உண்டாவதோடு ஒருமைப்பாடு என்ற உணர்வு ஏற்படுவதையும் கண்கூடாக காணக்கூடியதாகவுள்ளது.

யாத்திரையின் போது மாலையணிந்து மனதை ஒருவழிப்படுத்தி கடும் விரதமிருந்து ஐயப்பனை மெய்யன்போடு வழிபடும் போது மனதினிலே திருப்தியும் குதூகலமும் தூய்மையும் ஏற்படுகிறது. உள்ளத்திலே சாந்தமான எண்ண அலைகள் தோன்றுகிறது. யாத்திரை செல்லும்போது பல ஆறுகளிலும் அருவிகளிலும் மலைகளிலிருந்து வரும் நீரூற்றுகளிலும் நீராட சந்தர்ப்பம் கிடைப்பதால் பலவித நோய்கள் குணமாகின்றன. மலைவழியிற் செல்லும்போது வீசும் தென்றல் காற்றும் தெளிந்த நீரோடையாக ஓடிவரும் சுனைநீர் ஏராளமான மூலிகை மருந்துகளை தொட்டு தழுவிப் பாய்ந்து வருவதால் அந்நீரை அருந்துவதால் சில தீராத நோய் நீங்கப் பெறுகிறது. பல உயர்ந்த மலைகளில் ஏற சந்தர்ப்பம் கிடைப்பதால் இருதயமும் நரம்புகளும் தசைகளும் உறுதிபெறுகின்றன. உடல் தைரியமடைகிறது. பிறவி ஊமைகளும் பேச வாய்ப்பு உண்டாகிறது. கெட்டவுணர்வுகள் அற்றுப்போகிறது.

மெய்யன்புடன் பதினெட்டு வருடங்கள் முறையாக பதினெட்டு படிகளையும் கடந்து ஐயப்பன் தரிசனம் பெறுபவர்களுக்கு மறுபிறப்பு ஏற்படுவதில்லை. அவர்களுக்கு முக்தி கிடைக்கிறது. ஆகவே ஐயப்பனை உள்ளன்புடன் தூய்மையுடனும் வழிபட்டு மனதை ஒருவழிப் படுத்தி விரதம் அனுஷ்டித்துச் சபரிமலை யாத்திரை செய்து நல்ல உடலாரோக்கியத்தையும் உள ஆரோக்கியத்தையும் பெற்றுப் பேரின்பப் பெருவாழ்வு வாழ்வோமாக.

## மாலை அணிய மந்திரம்

ஞான முத்ராம் சாஸ்த்ரு முத்ராம்
குரு முத்ராம் நாமாம்யஹம்
வனமுத்ராம் நமாம்யஹம்
வனமுத்ராம் சுத்த முத்ராம் ருத்ர
முத்ராம் நமாம்யஹம்
சாந்த முத்ராம் சத்திய முத்ராம்
வ்ருத முத்ராம் நமாம்யஹம்
சபரியாஸ்ரம சத்யனே முத்ராம்
பாது சதாபிமே

குருதஷிணயா பூர்வம் தஸ்யாது
அநுக்ரஹ காரிணே
சரணாகத முத்ராக்யாம் த்வன் முத்ராம்
பக்த முத்ராம் நமாம் யஹம்
சின்முத்ராம் கேசரிமுத்ராம் பத்ர
முத்ராம் நாமம் யஹம்
சபரியாசல முத்ராயை நமஸ்துப்யம்
நமோ நம
தீபா நந்த்ரம் ஆசமநீயம் ஸமர்ப்பயாமி

## மாலை கழற்றுவதற்கான மந்திரம்

அபூர்வ மசலா ரோஹி - திவ்யதர்சன காரண

ராஸ்த்ரு முத்ராத் யாஹாதேவ - தேஹோ மேவிரத மோசனம்.

## மந்த்ர புஷ்பம்

யோபாம் புஷ்பம் வேத: புஷ்பவாந் ப்ரஜாவாந்

பகமாந் பவதி சந்த்ரமாவா அபாம் புஷ்பம்:

புஷ்பவாந் ப்ரஜாவாந் பசுமாந் பவதி

பூர்ண பஷ்கலாம்பா ஸமேத ஹரி ஹர

புத்ர சுவாமிநேநம் : வேதோக்த மந்த்ர புஷ்பம் - ஸமர்ப்பயாமி



# சபரிமலை செல்வோர் கடைப்பிடிக்க வேண்டிய விரத விதிமுறைகள்.

1. சபரிமலைக்கு யாத்திரை செல்ல விரும்பும் பக்தர்கள் கார்த்திகை முதல் நாள் மாலை அணிவது மிகவும் சிறந்தது. அன்று சபரிமலை சந்நிதானம் திறப்பதால் நாள், கிழமை பார்க்க வேண்டியது தேவையில்லை. அன்று இயலாவிட்டால் அதற்கு அடுத்த ஒரு நல்ல நாளில் சங்கராந்திக்கு 41 நாட்களுக்கு முன் மாலை அணிய வேண்டும்.
2. குறைந்தது ஆறு அல்லது எழு முறை சபரிமலை யாத்திரை மேற்கொண்ட வராகவும், பக்தி வழியைப் பின்பறறுபவராகவும். ஐயப்பனது அவதார தத்துவங்களை அறிந்தவராகவும், பொறுமைக்குணமும், பொறுப்புணர்ச்சியும் உடையவராகவும் உள்ள ஒருவரை குருசுவாமியாக ஏற்றுக்கொள்ள வேண்டும். திருக்கோவிலிலோ அல்லது திருவிளக்கின் முன்பாகவோ குருசாமியை வணங்கி அவர் கையால் மாலையணிய வேண்டும். மாலையணிந்த பிறகு குருசாமிக்கு இயன்றளவு காணிக்கை செலுத்தி ஆசி பெறவேண்டும்.
3. உருத்திராட்சம் அல்லது துளசி மாலை 54 அல்லது 108 மணிகள் உடையதாக வாங்கி, அதில் ஐயப்பன் திருவுருவம் பதித்த பதக்கத்தை இணைத்து அணிதல் வேண்டும். துணைமாலை ஒன்றைச் சேர்த்து அணிவது நல்லது.
4. விரத காலத்தில் பச்சை, காவி, கறுப்பு, மஞ்சல், நீலம் ஆகிய ஏதாவது ஒரு வர்ணத்தில் ஆடை அணிதல் வேண்டும். தமது அலுவல் காரணமாக வேறு ஆடை அணிய வேண்டிய கட்டாயத்தில் இருப்பவர்கள், பூஜைகள் மற்றும் யாத்திரையின் போது அவசியம் வர்ண ஆடை அணிய வேண்டும்.
5. நாள் தோறும் விடியற்காலையில் குளிர்ந்த நீரில் குளிக்க வேண்டும். தனியாகவோ கூட்டாகவோ பூஜைகள் நடத்தலாம். இது இயலாவிட்டால் ஆலயங்களுக்குச் செல்வதோடு பிறர் நடத்தும் பூஜைகளிலும் கலந்து கொள்ள வேண்டும். மாலையில் சூரியன் மறைந்த பின் குளிர்ந்த நீரில் குளிக்க வேண்டும். காலை, மாலை இரு வேளைகளிலும் நீராடிய பின் 108 சரணங்கள் சொல்லி, துளசி, கற்கண்டு, சர்க்ரை பால் ஆகியவற்றில் ஒன்றை ஐயப்பனுக்கு நிவேதனம் செய்து வணங்க வேண்டும்.
6. விரத காலத்தில் பிரம்மச்சரிய விரதத்தைத் தவறாமல் கடைப்படிக்க வேண்டும் மனம், மொழி, செயல், மூன்றிலும் காம வேட்கை தோன்றாமல் காக்க வேண்டும்.
7. விரத காலத்தில் முடிவெட்டிக் கொள்ளுதல், முகச்சவரம் செய்து கொள்ளுதல் கூடாது. குடை, காலணிகளைப் பயன்படுத்தக் கூடாது மது அருந்துதல், புகைப்பிடித்தல், பொய் பேசுதல், பிறர்க்கு துன்பம் தருதல் கடுஞ்சொற்களைக் கூறுதல் சினம் கொள்ளல், புலால் உண்ணுதல் ஆகியவற்றை அடியோடு விலக்க வேண்டும்.
8. விரத காலத்தில் எவருடன் பேச நேர்ந்தாலும் "சுவாமி சரணம்" என்ற சொற்களுடன் பேசத் தொடங்க வேண்டும். பேச்சை முடித்து விடைபெறும் போது "சுவாமியே சரணம்" என்று கூற வெண்டும்.
9. அன்றாடம் மதியம் ஒரு வேளைதான் உணவு உண்ண வேண்டும். மாலையில் ஐயப்பனை வழிப்பட்ட பிறகு பலகாரங்களை அல்லது பால், பழம் மட்டுமே உண்ண வேண்டும்.
10. மாலையணிந்து கொண்ட பின் எக்காரணத்தைக் கொண்டும் அதனைக் கழற்றக் கூடாது. மாலை விதிலம் அடைந்தாலோ. அறுந்து போகும் போல் தெரிந்தாலோ வேறுமாலையைப் போட்டுக் கொண்டு பழையதைக் கழற்றவேண்டும்.

11. நெருங்கிய உறவினர்களின் இறப்பால் தீட்டு நேர்ந்தால், குல தெய்வத்தை பிரார்த்தித்துக் கொண்டு, குருசாமி மூலமாக மாலையைக் கழற்றி ஐயப்பன் படத்தில் மாட்டிவிட வேண்டும். பிறகு மறு வருடம் தான் மலைக்கு செல்லலாம்.

12. விரதகாலத்தில் பகலில் தூங்குவதைக் தவிர்க்க வேண்டும். இரவில் பாய், படுக்கை தலையணை முதலியவற்றைப் பயன்படுத்தாமல் ஒரு வஸ்த்திரத்தை விரித்து அதில் படுத்துறங்க வேண்டும்.

13. மாலையணிந்தபின் சந்திக்கும் ஆண்களை "ஐயப்பா" என்றும், பெண்களை "மாளிகைப்புறம்" என்றும் சிறுவர்களை "மணிகண்டன்" என்றும் சிறுமிகளை "கொச்சி" என்றும் அழைக்க வேண்டும்.

14. மாதவிலக்கான பெண்களைப் பார்ப்பதும், அவர்கள் தயாரிக்கும் உணவை உட்கொள்ளுவதும் கூடாது. மாதவிலக்கான பெண்களை அறியாமல் பார்க்க நேரிட்டால் நீராடி ஐயப்பனை வணங்க வேண்டும்.

15. மலைக்கு யாத்திரை புறப்படுவதற்குச் சில நாட்களுக்கு முன் விரிவான முறையில் பஜனை, கூட்டுவழிபாடு, பூஜை முதலியன நடத்தி ஐயப்ப பக்தர்களுக்கும் மற்றவர்களுக்கும் பிரசாதம் வழங்கி உணவு அளிக்க வேண்டும்.

16. இருமுடிக்கட்டு பூஜையைத் தன் வீட்டிலோ, குருசாமி வீட்டிலோ கோவிலிலோ நடத்த வேண்டும். முதலில் கணபதி பூஜை நடத்தி, ஐயப்பன் பூஜை செய்து பெற்றோர்களை வணங்கி குருசாமியை வணங்கி ஐயப்பன் நாமங்களைச் சொல்லிக்கொண்டே கட்டு நிறைக்க வேண்டும்.

17. யாத்திரை புறப்படும் போது ஐயப்பன்மார்கள் போய் வருகின்றேன் என்றோ, தன்னுடன் வரும் ஐயப்பன்மார்கள் வசதியாக அழைத்துச் செல்வதாகவோ, தன்னுடன் தைரியமாக வரலாம் என்றோ கூறக்கூடாது.

18. யாத்திரை புறப்படும் போது இருமுடியைத் தலையில் தாங்கி, வீட்டு வாயிலில் வந்து பகவானைப் பிரார்த்தித்துத் தேங்காய் உடைத்துச் சரணம் சொல்லிக் கொண்டு திரும்பிப் பாராமல் நடந்து செல்ல வேண்டும்.

19. கன்னி ஐயப்பன்மார்கள், யாத்திரை புறப்பட்டதில் இருந்து சந்நிதானம் அடையும் வரை ஒரு போதும் இருமுடியைத் தாமே தலையில் இருந்து இறக்கிக் கொள்ளவோ, ஏற்றிக் கொள்ளவோ கூடாது. குருசுவாமி அல்லது மூத்த ஐயப்பன்மார்களைக் கொண்டுதான் அதனைச் செய்வித்தல் வேண்டும்.

20. ஐயப்பன்மார்கள் பம்பையில் நீராடி, மறைந்த தங்கள் முன்னோர்களுக்கு பித்ருதர்ப்பணம் செய்தல் நல்லது.

21. பதினெட்டாம், படியில் ஏறும் போது கன்னி ஐயப்பன்மார்கள் முதல் படியிலும் மற்றவர்கள் அவரவர் மலையைக் கணக்கிட்டு, அந்தந்தப் படியிலும் தேங்காய் உடைக்க வேண்டும். மலையை விட்டுக் கீழே இறங்கும் போது, பதினெட்டாம் படியில் இருந்து கீழ் பக்கமாக அவரவர்கள் மலையைக் கணக்கிட்டு தேங்காய் உடைத்து இறங்க வேண்டும்.

22. யாத்திரை முடிந்து வீடு திரும்பியதும் ஐயப்பனின் பிரசாதங்களை தலையில் ஏந்தியவாறு வந்து, வீட்டு வாயில் படியில் தேங்காய் உடைத்து வீட்டிற்குள் செல்ல வேண்டும். பூஜை அறையில் பூஜை செய்து கற்பூர ஆராத்தி காட்டி பிரசாதங்களை எல்லோருக்கும் வழங்க வேண்டும்.

23. ஐயப்பன்மார்கள் பம்பையில் சமைக்கும் அடுப்பில் உள்ள சாம்பலும், சந்நிதி ஆழியில் இருந்து கிடைக்கும் சாம்பலும் சேர்த்துக் கிடைப்பதுதான் சபரிமலை பஸ்மம். இது மிகவும் சக்தி வாய்ந்தது.

24. 12 வயதுக்குக் கீழ் பட்ட சிறுமிகளும், ருதுகாலம் நின்ற வயதான பெண்களும் மட்டுமே சபரி யாத்திரையில் கலந்து கொள்ளலாம்.

25. விரத காலத்தில் அசைவ உணவு அருந்துவது மாபெரும் தவறாகும். எனவே இயன்றவரை வீட்டிலேயே தூய்மையாகத் தயாரித்த சைவ உணவே. உண்ண வேண்டும். மாலை தரித்த ஐயப்பன்மார்கள் வீட்டை தவிர மற்றவர்கள் வீட்டில் எக்காரணத்தினாலும் உணவு அருந்தக் கூடாது.

26. மாலையணிந்த ஐயப்பன்மார்கள் தங்களது கடமைக்கு இடையூறு இல்லாமல் சுறுசுறுப்புடன் தங்கள் பணிகளைச் செவ்வனே செய்தல் வேண்டும்.

27. யாத்திரை வழியில் அடர்ந்த வனங்களில் காட்டு யானை, புலி, கரடி, முதலான விலங்குகள் இருக்குமாதலால் பக்தர்கள் கூட்டமாகச் சரணம் விளித்துக் கொண்டே செல்ல வேண்டும். இரவு நேரங்களில் காட்டிற்குள் மல சலத்திற்காக தனியே அதிக தூரம் செல்லக்கூடாது. சரணம் விளித்தல், சங்கு ஒலித்தல், வெடி வைத்தல் பாதகாப்பிற்கு சிறந்த வழிகளாகும்.

28. ஐயப்பனுக்கு காணிக்கையாக சுற்றத்தார்களும், மற்றவர்களும் கொடுத்தனுப்பும் காணிக்கை சன்னிதானத்தில் செலுத்தி, அவர்களுக்கு ஐயப்பன் திருவருள் கிடைக்க வேண்டிக் கொள்ள வேண்டும்.

29 குருசாமிக்கு தட்சணை கொடுக்க வேண்டிய சமயங்களிலெல்லாம் ஐயப்பன் அடியார்கள் தாங்கள் விரும்பியதைத் தங்கள் வசதிக்கேற்றவாறு கொடுத்து குருவின் அருளைப் பெறலாம். இதில் எந்த வித நிபந்தனையும் கிடையாது ஐயப்பன்மார்கள் கொடுக்கும் காணிக்கை எவ்வளவாக இருந்தாலும் அதை மனமகிழ்ச்சியுடன் பெரும் பொருளாக ஏற்றுக் குருவின் குருவான ஐயப்பனுக்கே செலுத்தி பேரருள் பெற்றுய்வது குருமார்களுக்குச் சாலச் சிறந்ததாகும்.

30. ஐயப்பன் எல்லோரும், குறிப்பாக கன்னி ஐயப்பமார்கள் பெரியபாதையில் (அழுதை வழி) சென்று வருவது, மிகுந்த பலன் விளைவிக்கும். ஆனால் சிலர் தங்கள் தொழில் கடமை சூழ்நிலை கருதி எரிமேலியிருந்து சாலைக்காயம் வழியாகவும், சிலர் வண்டிப் பெரியாறு வழியாகவும் சபரிமலை செல்கிறார்கள். என்றாலும் மேற்குறிப்பிட்ட பெரிய பாதையில் செல்லும் போது மலைகளில் விளையும் பல மூலிகைகளின் சக்தி கலந்த காற்றினைப் பெறுவதாலும் பல மூலிகைகள் கலந்த ஆற்று நீரில் குளிப்பதாலும் உடல் நலம் ஏற்படுவதாலும் எழில்மிக்க இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிப்பதாலும் உள்ளம் பூரிப்பாதலும் பேரின்பமும் நெருநலமும் அடைகின்றோம். நீண்ட வழிப் பயணத்தில் ஐயப்பன் சரணமொழி அதிகம் விளிப்பதால் பகவானின் திருநாமம் உச்சரிப்பு மிகுந்த பக்தியுணர்வை வளர்க்கிறது.

31. யாத்திரை முடிந்து வீடு திரும்பியதும், ஐயப்பனின் திருவருள் பிரசாதக் கட்டினைத் தலையில் ஏந்தியபடி வாயிற்படியில் விடலைத் தேங்காய் அடித்து வீட்டிற்குள் நுழைய வேண்டும். வழிபாட்டு அறையில் கற்பூர ஆராத்தியோடு கட்டினை அவிழ்த்துப் பூஜை செய்து, பிரசாதங்களை எல்லோருக்கும் வழங்க வேண்டும்.

32. பஜனையில் பதினெட்டாம் படி பாட்டுப்பாடி கடைசியில் மங்களம் பாட வேண்டும்.

33. யாத்திரை இனிது நிறைவேறியதும் குருநாதர் மூலம் மாலையை கழற்றி ஐயப்பன் திருவுருவப் படத்திற்கு அணிவித்து விட்டு விரதத்தை பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். ஐயப்பன் திருவருளால் எல்லா நன்மைகளும் வாய்க்கப் பெற்று பல்லாண்டு இனிது பகவான் நாமம் பாடித் துதிப்போமாக.

# புனிதமும் பக்திமயமுமான ஐயப்ப வழிபாட்டின் தத்துவம்

மகர ஜோதியில் வருடாவருடம் அருள் காட்சி தரும் ஐயப்பனின் தரிசனம் பெற பல லட்சக்கணக்கான மக்கள் சபரிமலை நோக்கி யாத்திரை மேற்கொள்கிறார்கள். புனிதமும் பக்திமயமுமான இவ்வழிபாடு மிகுந்த கட்டுப்கோப்புக்களையுடையது. ஐயப்ப பக்தர்கள் மிகக் கடுமையான பிரமச்சரிய விரதமிருந்து மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் ஐயப்பனை மெய்யன்போடு வழிபட்டு இறுதியில் சபரிமலை அடைந்து புனித பதினெட்டுப்படி ஏறி ஐயப்பன் அருள் பெற்று வருகிறார்கள். இவ் ஐயப்ப அனுஷ்டித்தல் இருமுடிக்கட்டுடன் மலைக்குப் புறப்படுதல் பதினெட்டுபடி ஏறுதல், நெய் தேங்காய் அபிஷேகம் இவையனைத்தும் ஒவ்வொரு தத்துவ விளக்கத்தை சுட்டிநிற்கின்றன.

## மாலையணிதல்

பலமுறை விரதமிருந்து சபரிமலை சென்று வந்து பக்குவமடைந்த சபரிமலை ஐயப்பன்மார் ஒருவரைக் குருவாக ஏற்று திருவிளக்கு முன்பாகவோ திருக் கோவில்களிலோ குருநாதரை வணங்கி அவர் திருக்கரங்களால் மாலை அணிந்து கொள்கிறார்கள். அல்லது தாய் தந்தையர் மூலமாக இறைவன் திருவடிகளில் வைத்து எடுக்கப் பெற்ற மாலையினை அணிகிறார்கள்.

ஐயப்பன் தரிசனம் பெறவேண்டும் என்ற எண்ணம் மனதினிலே தோன்றுவதற்கும் கட்டுப்பாட்டுகளுடன் விரதம் அனுஷ்டிக்க வேண்டும் என்ற உணர்வு உள்ளத்தில் நிலை பெற வேண்டுமென்பதற்காகவும் மாலையணிந்து கொள்கிறார்கள். சந்தனம் அல்லது துளசி மாலையணிந்து கொள்வதால் தூய்மையும், எதிர்ப்புக்களை போக்கும் வல்லமையும் ஏற்படுகிறது. மாலையணிந்த ஒவ்வொருவருக்கும் ஐயப்பன்மார் என்ற உணர்வு இங்கு உண்டாகிறது. அறிமுகமில்லாத புதியவர்கள் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொண்டால் இருவரும் ஒருவரை ஒருவர் வணங்கி "சாமியே சரணம் ஐயப்பா" என்ற சமரச நோக்கை வளர்த்துக்கொள்வதை இந்த வழிபாட்டில் காணமுடிகிறது. இருவேளையும் நீராடி திருக்கோயில் தரிசனம் செய்வது தத்துவ குணங்களை வளர்ப்பதற்கு உதவிபுரிகிறது. சத்துவ குணம் நிறைந்திருப்பது இறையருளைப் பெற வழிவகுக்கிறது.

## விரதம் அனுஷ்டித்தல்

ஐயப்பனின் சந்நிதானத்திற்கு யாத்திரை செல்லும் ஐயப்ப அடியார்கள் ஒரு மண்டலம் (41 நாட்கள்) விரதமிருக்கிறார்கள். இவர்கள் மேற்கொள்ளும் விரதங்களில் மிகவும் ஒழுங்குடன் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டியது பிரம்மச்சரிய விரதமாகும். மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினால் மனதை ஒரு வழிப்படுத்தி, காம இச்சையை நீக்கி ஐயப்பனை மெய்யன்பொடு வழிபட்டு விரதம் அனுஷ்டித்தல் வேண்டும்.

சங்கராந்தியன்று பிரகாசிக்கும் ஜோதியில் நம் மனமாசுகள் அகன்று, புனித ஆத்மாவாக, புதுப்பிறவி எடுத்த தத்துவ மனிதராக திரும்ப வேண்டுமென்ற குறிக்கோளுடனேயே விரதம் காத்து லட்சக்கணக்கானோர் புறப்படுகிறார்கள்.

# இருமுடி கட்டுதல்

மாலையணிந்து, விரதம் அனுஷ்டித்து சபரிமலை செல்லும் ஒவ்வொரு ஐயப்ப அடியார்களும் இருமுடி ஏந்திச் செல்லுதல் வேண்டும். ஒவ்வொரு ஐயப்பனடியார்களும் தங்களது இருமுடியைத் தாமே ஏந்திச் செல்லுதல் வேண்டும். ஏழை, செல்வந்தர், உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பாகுபாடின்றி, இறைவன் சந்நிதியில் எல்லோரும் ஓர் குலம் என்ற உயர்ந்த தத்துவத்தை ஒவ்வொருவரும் தம் முடியை தாமே சுமந்து செல்லும்போது காணக்கூடியதாகவுள்ளது.

இருமுடியில் புனிதமான முன்முடியில் அரிசி, நெய்த்தேங்காய், பழம், வெல்லம், சந்தனம், குங்குமம், தேங்காய், நெய் போன்ற பகவானுக்குரிய பூஜைப் பொருட்கள் நிரப்பப்படுகின்றன. மிளகு, சாம்பார்ப்பொடி, சர்க்கரை மற்றும் தேவைப்படும் பொருட்களை பின்முடியில் வைத்து நிரப்புகிறார்கள். முன்முடி இறைவனுக்கும் பின்முடி பக்தனுக்குமென்பதை இருமுடித்தத்துவம் உணர்த்துகிறது. இதில் முக்கியத்துவம் வாய்ந்தது பகவானுக்கு நெய் நிரப்பிய தேங்காய்தான். தேங்காய் என்பது மனித உடலைக்குறிக்கும், அதில் நிரப்பப் பெற்ற நெய் உடலில் நிறைந்துள்ள உயிரைக்குறிக்கும். இருமுடியின் முன்முடி மனிதனையும், பின்முடி அவன் ஆசாபாசங்களையும் குறிக்கும். தேங்காயினுள் நெய் நிரப்பும்போது தேங்காயிலுள்ள கண்களில் துவாரமிட்டு நீரை வெளியில் எடுத்து விட்டு அதனுள் நெய்யை நிரப்பி அடைத்து விடுகிறார்கள். பதினெட்டாம்படி ஏறிய பின்பே நெய்த்தேங்காய் உடைக்கப்பட்டு இறைவனுக்கு அபிஷேகம் ஆகிறது. முக்கண் உள்ள தேங்காய் சிவனின் அம்சம், பாலும் தயிரும் இறைவனின் அபிஷேகப் பொருட்களாகும். நெய் இறைவனது ஜோதி வடிவத்துக்கு உறுதுணையாகிறது. இதனால்தான் நெய் விளக்கிடுதலை உயர்வாகப் போற்றுகிறார்கள்.

தேங்காயிலிருந்து நீரை வெளியில் எடுத்து நெய்யை உள்ளே நிரப்புவதால் எமது ஆத்மாவையே தேங்காயில் ஆவணம் செய்கிறோம் என்று அர்த்தம் கொள்ளப்படுகிறது. பின் பந்தபாசங்களில் பொருட்களில் நமது மனம் எவ்வாறு கவரப்படாமலிருக்க வேண்டுமென்று தற்காத்துக் கொள்கிறோமோ அவ்வாறே ஆன்ம சைதன்யம் நிறைந்த நெய் வெளியேறிவிடாமல் கண்துவாரத்தை நன்றாக மூடிவிடுகிறோம்.

"இந்த உயிர், ஜீவன் பரமாத்மாவான உனது திருப்பாதத்தில் சங்கமிக்க புறப்பட்டுக் கொண்டிருக்கிறது. வழியில் இந்த ஜீவாத்மாவுக்குத் தடங்கல் ஏதும் நிகழாதவாறு தக்க பாதுகாப்புடன் புறப்படுகிறது" என்ற தத்துவம் தேங்காயினுள் நெய் நிரப்பும் செயலில் அடங்கியுள்ளது. ஆன்ம சைதன்யம் நிறைந்த நெய்யை இறைவனுக்கு அபிஷேகம் செய்கிறோம். ஜீவாத்மா பரமாத்மாவுடன் இரண்டறக்கலந்து புதுப்பிறவி எடுத்து வருகிறது. திரும்பும் போது அபிஷேக நெய் சிறிது கொண்டு வருவது இதே கருத்திலேயாகும்.

# நெய் அபிஷேகமும் பதினெட்டுபடிகளும்

ஐயப்ப தரிசனம் செய்யும் முன்னர் பம்பை நதியில் நீராடி பிதுர்க்கடன்கள் தீர்த்து இயன்றளவு அன்னதானம், வஸ்திரதானம், பிறதானங்களைச் செய்து மனம், மொழி, மெய் சுத்தமாகி பதினெட்டுப் படிகள் கடந்தால்தான் ஐயப்பனை தரிசித்ததற்கு பொருளாகும். சபரிமலை யாத்திரையின் பலனையும் உரிய முறையில் அடைய

முடியும். வேறு எந்த முறையிற் சென்றாலும் அதைச் சபரிமலை யாத்திரை என்று கருத முடியாது. தேங்காயினுள் அடைக்கப்பட்ட நெய்யை அபிஷேகம் செய்து விட்டு திரும்புகையில் பரமாத்மாவுடன் ஐக்கியம் பெற்று ஜீவாத்மா புனிதமடைகிறது. என்றால் அதற்கு உறுதுணையாக பதினெட்டுப்படிகளும் அமைந்துள்ளன என்பதே கருத்தாகும். காம, குரோத லோபங்கள், எட்டு இந்திரியங்கள், ஐந்து சாத்வீகம் தாமஸம், ராஜஸம் என்ற குணங்கள் மூன்று, வித்தை அவித்தை என்ற தோஷங்களையும் பதினெட்டுப்படிகளை ஏறி பிரார்த்திக்கும் போது போக்கிக் கொள்கிறோம்.

புனிதமும் பக்திமயமுமான ஐயப்ப வழிபாட்டின் மகிமையுணர்ந்து ஐயப்பனருள் பெற்று பேரின்ப பெருவாழ்வு அடைவோமாக

# அருளுக்கு ஓர் ஐயப்பன்

ஐயப்பா! சொல்லத் தித்திக்கும் திருநாமம். பந்தளராஜன் பாதம் பணிந்தால் பாவமனைத்தும் பதறியோடும். சபரி கிரீசனைச் சிந்தையிற் கொண்டால் ஜென்ம துன்பங்கள் சாம்பலாகும். பிணி போக்கும் மருந்துவனாய், அருள் சுரக்கும் அன்னையாய், பிறவி அறுக்கும் பேரின்பக் கருணையாய் சபரிமலையில் எழுந்தருளியுள்ள சோதி சொரூபன், எம் உள்ளத்தில் குடிகொண்ட சாஸ்தா ஐயப்பன்.

எப்படிப்பட்டவர்! ஹரியும் ஹரனும் இணைந்த அரிய ஹரனின் அழிக்கும் வல்லமை யும், ஹரியின் - காக்கும் கருணையும் இணைந்த ஹரிஹர புத்திரன். மக்கள் வாழ்விலுள்ள கொடிய பகை, பொறாமை முதலிய வேண்டாத குணங்கள் அழித்து, அன்பும் பண்பும் நிறைந்த வாழ்வை அளித்து, அருள் பொழியும் அருளாளன். அந்த வேம்புலி வாகனனை நினைத்துக் காதலாகிக் கசிந்து, கண்ணீர் மல்கி பூசை செய்யும் போது கண்ணீரில் உள்ளக்கள்ளமெல்லாம் கரைந்து விடுகிறது. அப்படிப்பட்ட இறைவனை அவன் கோவிலான சபரிமலை சென்று காணும் போது பிறவியின் பெருமையே பூரணமடைந்து விடாதா? "இறைவன் எங்கும் உள்ளான்" என்றாலும் தேவாலயம் கண்டு காணும்போது அவன் அருள் பொங்கிப் பொழிவது திண்ணம் அதனாலேதான் ஐயப்பனைக்காண பக்தர்கள் சபரிமலைக்கு ஓடோடி வருகிறார்கள்.

எந்த ஒரு இலட்சியத்தையும் அடைய முதலில் தீவிர பயிற்சி வேண்டும். அதேபோல ஐயப்பன்மலை செல்லவும் மண்டலபூஜை விரதமேற்று இறைவன் பெயர் சொல்லி மாலை போட்டுக் கொள்கிறார்கள். கல்லிலும் முள்ளிலும் பல காலம் நடக்க உடலைச் செம்மைப் படுத்த மிதமான உணவை உண்ணப் பழக்குகிறார்கள். அப்போது பயணத்தின்போது பழகிய உடல் பதறாது. விரதமெடுக்க அணிந்த உடை கறுப்பாக இருந்தால், காட்டின் இருட்டில் கொடிய மிருகங்களிருந்து காக்கும்.

இருமுடி ஏன்? காட்டின் வழிநடைக்கு உணவுப் பொருள் எடுத்துச் செல்லப் பின்முடி தேவை. ஆனால் அதை மட்டும் எடுத்துச் சென்றால் பயணியின் கவனம் முழுவதும் அதிலேயே சென்றுவிடலாம். அந்த மனித இயல்பை உணர்ந்துதான் முன்முடி வைத்தார்களோ? இறைவனுக்கு நைவேத்தியம் என முன்முடி ஏற்றிச் செல்லும் போது இறைவனின் முன்பாரத்தின் நினைவில் பின்முடி பற்றிய சிந்தனை மறைந்து விடுமல்லவா?

மாலை அணிந்தவர்கள் எல்லோரையும் "ஐயப்பா சரணம்" என சரணம் விளிக்கிறார்கள். இறைவன் எங்கும் நிறைந்தவன். பார்க்கும் இடமெல்லாம் பரமனைக் காணும் பக்குவம் ஏற்பட்டால் பக்தனைத்தேடி பரமனே ஓடி வந்து விடமாட்டானா! "காக்கைச் சிறகினிலே நந்தலாலா உந்தன் கரியநிறம் தோன்றுதடா நந்தலாலா" என்று பரவசப்பட்டார் பாரதியார். "ஆழிமழைக்கண்ணா" என்று கரிய மேகத்திலிருந்து கசிந்து வரும் மழைத்துளியிலும் மாதவனைக் கண்டு மருண்டாள் ஆண்டாள். அப்படி இறைவனை எதிலும் காணும் பக்குவம் எல்லோருக்கும் வந்துவிடுமா? அதனால் தானோ என்னவோ பார்க்கிறவர்களை எல்லாம் பந்தளராஜனாகக் கருதவேண்டும் என்பதற்காக சரணம் ஐயப்பா என்கிறார்கள். அப்படி அழைக்கும் போது எதிரிலிருப்பவர் மறைந்து ஐயப்னின் எண்ணம் உள்ளத்தில் எழுகிறது. உள்ளமெல்லாம் இறைவன் எண்ணம் நிறைந்து, வேண்டாத எண்ணங்களை விலக்கி, இனிமையை இளமையை, அருமையைப் பரப்புகிறது. ஒரு ஊதுபத்தி ஏற்றி வைத்தவுடன் அதுவேறு மணங்களை அழித்து அதன் நறுமணம் அறைமுழுவதும் பரவுகிறது. ஊதுபத்தி எரிந்து முடிந்த பின்பும் அதன் நறுமணம் மேலும் சிறிது நேரம் தவழ்ந்து நிற்கும். அத போலத்தான் ஐயப்பன் நாமமும் மீண்டும் மீண்டும் ஊதுபத்தியை ஏற்றி வைப்பது போல மனத்தில் இறைவன் எண்ணத்தை மீண்டும் மீண்டும் புதுப்பித்து எப்போதும் நிலவும்படி செய்யத்தான் "சரணம் ஐயப்பா" என்று வந்தனம் சொல்லும் முறை ஏற்பட்டதோ? சொல்லச் சொல்லச் தித்திக்கும் திருநாமம் அல்லவா! சொல்லிச் சொல்லி மனம் இளகி, உணர்வு இளகி இறைவனைச் சரணடையும் போது இறைவனும் மகிழ்கிறான். அவனை உருகி உணரும் போது அவன் உள்ளம் மகிழ்கிறான். அந்த மகிழ்வில் பக்தனின் வாழ்வு மலர்போல ஐயப்பன் அகமகிழ்வில் அகிலமே மலர்கிறது. அதுமட்டுமா! அழைப்பதுடன் நிற்காமல் குனிந்து எதிர்நிற்பவரை கால் தொட்டு வணங்குறார்கள் ஐயப்பன்மார், ஆண் பெண், ஏழை, பணக்காரன், இந்து, முஸ்லீம் எல்லாம் மறந்து ஐயப்பனாகவே நிற்கிறார்கள். ஆகா! என்ன அரிய காட்சி! எத்தனை அருமையான தத்துவம்! நான், எனது பெரியவன், சிறியவன், என்பதை எல்லாம் மறந்து ஒருவரை ஒருவர் "ஐயப்பா" என விளித்து தலைமுடி நிலம் சேர வணங்கி மெய்மறந்து நிற்கும் காட்சி கண்டால் கண்கலங்கி மெய் சிலிர்க்காதவர்கள் இருக்க முடியுமா என்ன?

இப்படி மாலை போட்டு, விரதமிருந்து, இருமுடி ஏந்தி ஐயன்வாழ் மலைநோக்கி கடும் பயணம் செய்து கோயிலை அடைகிறார்கள் ஐயப்பன்மார். மலை சேர்ந்த பின் பதினெட்டு படி ஏறி பந்தளராஜனை பாதத்தில் பணிகிறார்கள். ஏன் பதினெட்டுப்படிகள்? புலனைந்தும், பொறி ஐந்தும், பிராணன் ஐந்தும், மனம், புத்தி, அகங்காரம் ஆகியவற்றையும் ஆளக்கற்றுவிட்டால் இறைவனை காணலாம் என்கிற உண்மை எல்லோருக்கும் தெரியும். அதனில் மற்றொரு கருத்தும் உண்டு. எட்டு என்பது மாயையைக் குறிக்கும். எட்டை எந்த எண்ணால் பெருக்கினாலும் வரும் விடையில் உள்ள எண்களின் கூட்டுத்தொகை குறைந்துக் கொண்டே போகும். எட்டை இரண்டால் பெருக்கினால் 16 வரும். 8x2=16; 1+6=7. எட்டை மூன்றால் பெருக்கினால் 24; 2+4=6. 8x4=32;3+2=5. இப்படி மாயையின் வடிவமான' எட்டுபோகப்போக குறைந்துக் கொண்டே போகும். ஆக மாயையான வாழ்வை இறைவான ஏகத்துடன் இணைக்கும் போது இடையில் ஒன்றுமில்லை. அதையே ஏகமான ஒன்றுடன் (1) மாயையான (8) எட்டை இணைத்து 18படி என்று வைக்கிறார்கள். அதையுணர்த்தவே, எட்டுடன் ஏகம் இணைந்தால் ஒன்றுமில்லை என்று காட்டவே 108 முறை இறைவன் நாமத்தை ஜெபிப்பதும் ஏற்பட்டது. அந்த மாயையான உடலுடன் 18 படி ஏறி, இறைவனான ஒன்றாய் நிற்கும் ஐயப்பனுடன் கருணை வடிவான எரிமேலி சாஸ்தா அன்பர்களை ஆட்கொண்டு அருள்பாலிப்பான்.

அறிந்தும் அறியாமலும் தெரிந்தும் தெரியாமலும் செய்த சகல குற்றங்களையும் பொறுத்துக் காத்து ரட்சிக்க வேண்டும். ஸ்ரீ அரிஹர சுதன் ஆனந்த சித்தன் ஐயன் ஐயப்ப சுவாமியே சரணம்! சரணம்! சரணமய்யா.

– அலமேலு மணி

# புனித பதினெட்டு படிகளின் தத்துவம்

ஐயப்பன் பூலோகத்தில் மணிகண்டனாக அவதரித்துப் புலிப்பால் கொண்டுவரும் வழியில், சபரி என்ற வித்யாதர ஸ்திரீ தவம் செய்து அவரை உபசரித்துப் பெருமிதம் அடைந்தாள். ஐயப்பனும் அவளுக்குத் தேவலோகம் செல்ல வரமளித்துச் சாபம் தவிர்த்து, அவள் கேட்டபடி சபரிதவம் செய்து முத்தி பெற்ற மலை என்ற பொருள்படச் சபரிமலை என்று விளங்கும் என்று வரமளித்தார்.

சபரி பதினெட்டு நமஸ்காரங்கள் செய்ததால். பதினெட்டு சித்திகளையும் பதினெட்டு புராணங்களையும் பதினெட்டுபடிகளாக அமைத்துக் கோவில் கொள்வதாகவும் ஒவ்வொரு வருடமும் தன்னைத் தரிசிக்க வந்து ஒவ்வொரு சித்தியையும் அடைந்து பதினெட்டு வருடங்கள் தரிசித்தவர்கள் சித்த புருஷர்களாகவும் முமுக்ஷுக்களாகவும் ஆவார்கள் என்றும் வாக்களித்து சபரிமலையில் தவமிருக்கிறார் மணிகண்டன்.

அணிமா, மஹிமா, கரிமா, லஹிமா, பிராப்தி, ப்ராகாம்யம், ஈசித்தவம், வசித்தவம், புத்தி, இச்சா, சர்வாகம், சர்வசம்பத்ப்ரதம், சர்வம்ருத்யுப்ரஸமனம், சர்வமங்கள காரணம், சர்வதுக்க விமோசனம், சர்வ விக்ர நிவாரணம், சர்வாங்க அந்தரம், சர்வ சௌபாக்கிய தயாகம் ஆகியவற்றையே பதினெட்டு சித்திகள் என்பவர்.

கிருஷ்ண பரமாத்மாவால் அருளப்பட்ட பகவத்கீதையிலுள்ள பதினெட்டுக் காண்டங்களில் உணர்த்தப்படும் உயர்ந்த கருத்துக்களும் அறநெறிகளும், சிவன் - கிருஷ்ணனின் புத்திரனான ஐயப்பன் எழுந்தருளியுள்ள சபரிமலையில் புனிதமும் சத்திய சாந்தமுமான 18 படிகளையும் ஏறி முடித்தவுடன் மனதினிலே எழுகின்றன. வாழ்க்கையில் இன்பமும் சிறப்பும் ஏற்படுகின்றது. உள்ளத்திலே தூய்மையும் ஒழுக்க நெறியும் பரம்பொருள் சக்தி என்ற உணர்வும் எழுகின்றது.

வில், வாள், பரிசை, குந்தம், ஈட்டி, கைவாள், படிகம், முள்தடி, முசலம், கதை, அங்குசம், பரசு, பிண்டி, பாலம், வேல், பாசம், சக்கரம், மழு, சுரிகை ஆகிய 18 ஆயுதங்களை தர்மத்தை நிலைநிறுத்துவதற்காக ஐயப்பன் பயன்படுத்திப் பின் அவற்றை 18 படிகளில் வைத்து மேலே தாம் பூரணத்துவமாய் இருப்பதைக் காட்டும் என்றும் கேரளத்தில் உள்ள ஏனைய 18 ஐயப்பன் கோவில்களில் வழிபட்ட பலன் சபரிமலையில் வழிபடுவதால் கிடைக்கும் என்பதை உணர்த்தவே 18 படிகள் என்றும் தத்துவ விளக்கம் கூறுவதுண்டு. பதினெட்டுப்படியேறியதும் தாம்மசாஸ்தாவின் தரிசனம் கிடைக்கிறது. புலன் ஐந்து, பொறி ஐந்து, பிராணன் ஐந்து, மனம், புத்தி, அகங்காரம் இவை பதினெட்டும் பதினெட்டு படிகளாக அமைத்து இவைகளைக் கடந்தவனாலேயே கடவுளைக் காண இயலும் என்பது இன்னொரு விளக்கமாகும்.



# விநாயகர் வழிபாடு

## விக்னேஸ்வர பூஜை

மஞ்சள் பொடியால் பிள்ளையார் செய்து வைத்துவிட்டு ஆசமனம் செய்யவும், கையில் புஷ்பம், அட்சதை எடுத்துக் கொண்டு இரண்டு கைகளையும் மூடி வைத்துக் கொண்டு கீழ்க்கண்ட மந்திரத்தைச் சொல்லித் தலையில் குட்டிக் கொள்ளவும்.

சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்ப்புஜம்
பிரஸன்ன வதனம் த்யோயேத் ஸர்வ விக்நோப சாந்தயே

பின்னர் வலதுகை கட்டைவிரலால் வலது நாசித் துவாரத்தை சிறிய விரல் மோதிர விரல்களால் இடது நாசித் துவாரத்தையும் மூடிக் கொண்டு கீழ்கண்ட பிராணாயாம மந்திரத்தைச் சொல்லவும்.

ஓம்பூ: ஓம்புவ: ஓம் ஸுவ: ஓம் மஹ: ஓம் ஜந:
ஓம் தப: ஓம் ஸ்தயம் ஓம் தத்ஸ விதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீ மஹி தியோயோந: ப்சோதயாத்
ஓமாப: ஜயோதீரஸ: அம்ருதம் ப்ரஹ்ம பூர்புவஸ்ஸுவ

பிராணாயாமம் முடிந்தவுடன் ஓம் என்று மூன்று முறை சொல்லி வலது காதைத் தொடவும். இடது உள்ளங்கையை வலது உள்ளங்கையால் மூடி வலது தொடைமேல் வைத்துக் கொண்டு கீழ்காணும் மந்திரத்தை சொல்லவும்.

மமோ பாத்த ஸமஸ்த துரித க்ஷயத்வாரா ஸ்ரீ
பரமேச்வர ப்ரீத்யர்த்தம் ததேவ லக்னம் சுதினம்
தேவா தாரா பலம், சந்த்ர பலம் ததேவ வித்யாபலம்
தெய்வ பலம் ததேவ லக்ஷ்மி பதேதே அங்கிரிகம்
ஸ்மராமி கரிஷ்ய மாணஸ்யகர்மண: நிர்விக்னேன
பிரிஸமமாப்த்யர்த்தம் ஆதௌ மஹா கணபதி பூஜாம் கரிஷ்யே

கையிலுள்ள அட்சதையை வடக்குப் பக்கத்தில் போட்டுவிட்டு "அப உப பர்ஸ்ய" என்று கூறி உத்திரணியில் நிர் எடுத்து உள்ளங் கொண்டு கைகளைத் துடைத்துக் கொள்ளவும். கையில் புஷ்பம், அட்சதை எடுத்துக் கொண்டு இரு கைகளையும் கூப்பிக் கொண:ட கீழ்கண்ட மந்திரத்தைச் சொல்லி பிள்ளையாரைத் தியானிக்கவும்.

கணா நாம் த்வா கணபதிகும் ஹவாமஹே
கவிம் கவி நாம் உபமச்ர வஸ்தமம்
ஜ்யேஷ்டராஜயம் ப்ரஹ்மணாம் ப்ரஹ்மணஸ்பதே
ஆந: சிருண்வந் ஊதிபி: ஸீதஸாதநம்.

கையில் உள்ள புஷ்பம், அட்சைதையை கீழ்கண்ட மந்திரம் சொல்லி மஞ்சல் பிள்ளையாரின் மீது போடவும்

பின்னர் கீழ்க்கண்ட மந்திரம் சொல்லி கைகூப்பிப் பிராத்திக்கவும்

கஜானனம் பூதகணாதி ஸேவிதம்
சபித்த ஜம்பூ பரஸார பக்ஷிதம்
உமா சுதம் சோக விநாச காரணம்
நமாமி விக்நேஸ்வர பாத பங்கஜம்.

# விநாயகர் பஜனை பாடல்

மூஷிக வாகன மோதக ஹஸ்த
சாமரகர்ண விளம்பித ஸுத்ர
வாமனரூபமஹேஸ்வரபுத்ர
விக்ன விநாயக பாத நமேஸ்தே
ஓம் கன்னிமூல கணபதி பகவானே
சரணம் ஐயப்பா

## வெள்ளிக் கொம்பன் விநாயகனே

வெள்ளிக் கொம்பன் விநாயகனே
வினைகள் தீர்க்கும் ஐங்கரனே
அன்னை பராசக்தி அருந்தவப்புதல்வா
ஆனைமுகத்து விநாயகனே (வெள்ளிக்)
அகமும் புறமும் இருப்பவனே
அடியார் துயர்தனை துடைப்பவரே
ஆற்றோரத்திலும் குளக்கரை தனிலும்
அமர்ந்து அரசாட்சி புரிபவனே (வெள்ளிக்)
அகந்தை அழித்திடும் ஐங்கரனே
அன்பில் உறைந்திடும் குணநிதியே
அன்னை தந்தையையும் வலமாக வந்து
அருள் மாங்கனியைப் பெற்றவனே. (வெள்ளிக்)

## கௌரீ நந்தன கஜானனா

கௌரீ நந்தன கஜானனா //
கிரிஜா நந்தன நிரஞ்சனா //
பார்வதி நந்தன சுபானனா //
பாஹிப்ர போமாம் பாஹிபிரசன்னா // (கௌரீ)

ஜெய் ஜெய் ஜெய் ஜெய் கணபதி தேவா //
மாதா பார்வதி பிதா மஹா தேவா் //
கஜானனா கஜானனா //
கஜானனா ஜெய் கணபதி தேவா //

## கலை நிறை கணபதி

கலை நிறை கணபதி சரணம் சரணம்
கஜமுக குணபதி சரணம் சரணம்
தலைவநின் இணையடி சரணம் சரணம்
சரவணபவகுக சரணம் சரணம்
சிலைமலை யுடையவ சரணம் சரணம்
சிவசிவ சிவசிவ சரணம் சரணம்
உலைவறு மொருவரை சரணம் சரணம்
உமைசிவை அம்பிகை சரணம் சரணம்

அரஹர சிவசிவ சுத கணபதி சரணம்
அடியவர் வினைகெட அருள்பவ சரணம்
நினைபவர் பவமற நினைபவ சரணம்
நெடியவன் விழி தரு நெடியவ சரணம்
வலவையை மருவிய புயதர சரணம்
வடிவினில் உயரிய பெரியவ சரணம்
முறைதெரி மறையவ நிறையவ சரணம்
முடியடி தெரிவரு முதியவ சரணம்

## பிள்ளையார் பிள்ளையார்

பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார் (பிள்ளையார்)
ஆற்றங்கரை ஓரத்திலே அரசமர நிழலிலே
வீற்றிருக்கும் பிள்ளையார் வினைகள் தீர்க்கும் பிள்ளையார் (பிள்ளையார்)
ஆறுமுக வேலவனின் அண்ணனான பிள்ளையார்
நேரும் துன்பம் யாவையும் தீர்த்துவைக்கும் பிள்ளையார் (பிள்ளையார்)
மஞ்சளிலே செய்திடினும் மண்ணினாலே செய்திடினும்
ஐந்தெழுத்து மந்திரத்தை நெஞ்சில் நாட்டும் பிள்ளையார் (பிள்ளையார்)
அவல் பொறி கடலையும் அரிசி கொழுக்கட்டையும்
கவலையின்றி தின்னுவார் கண்ணை மூடி தூங்குவார் (பிள்ளையார்)
கலியுகத்தின் விந்தைகளை காணவேண்டி அனுதினம்
எலியின் மீது ஏறியே இஷ்டம் போல் சுற்றுவார். (பிள்ளையார்)

## கணபதியே சாமி கணபதியே

கணபதியே சாமி கணபதியே
கணபதியே சாமி கணபதியே
மூலமுதற் பொருளே கணபதியே
முக்கண்ணன் தன் மகனே கணபதியே
கந்தனுக்கு முன் பிறந்த கணபதியே
காத்தருள வேண்டுமையா கணபதியே (கணபதி)
வேல் முருகன் சோதரனே கணபதியே
வினை தீர்த்த வித்தகனே கணபதியே
பார்வதியின் புத்திரனே கணபதியே
பண்பு மனம் கொண்டவனே கணபதியே (கணபதி)
தொந்தி வயிற்றோனே கணபதியே
தொழுதிடவே வந்தோம் ஐயா கணபதியே
தும்பி முகம் கொண்டவரே கணபதியே
துணையாக வரவேண்டும் கணபதியே (கணபதி)
மூஷிக வாகனனே கணபதியே
முன்னின்று காக்க வேண்டும் கணபதியே
பாசமுடன் ஓடிவந்து கணபதியே
பாதுகாக்க வேண்டுமய்யா கணபதியே (கணபதி)

கணபதி துணை

ஔவையார் அருளிச் செய்த

# விநாயகரகவல்

சீதக் களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழகு எறிப்பப்
பேழை வயிறும் பெரும் பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
ஐந்து கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடி கொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மலச் சுவடும்
இரண்டும் செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாயெ னக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தல மொரு நான்கும் தந்தெனக்கு அருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந் திரத்தால்
ஐம்புலக் கதவை யடைப்பதுங் காட்டி

ஆறாதாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் மூட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி அதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனி தெனக்கு அருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே எந்தன் சிந்தை தெளிவித்து
இருள் வெளி இரண்டிற்கு ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்தி யென் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்
கணு முற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

# ஸ்ரீ விநாயகாஷ்டோத்தரசத நாமாவளி

| | |
|---|---|
| ஓம் விநாயகாய | நம |
| ஓம் விக்நராஜாய | நம |
| ஓம் கௌரீபுத்ராய | நம |
| ஓம் கணேஸ்வராய | நம |
| ஓம் ஸ்கந்தாக்ரஜாய | நம |
| ஓம் அவ்யயாய | நம |
| ஓம் பூதாய | நம |
| ஓம் தக்ஷாய | நம |
| ஓம் அத்யக்ஷாய | நம |
| ஓம் த்விஜப்ரியாய | நம |
| ஓம் அக்நிகர்பச்சிதே | நம |
| ஓம் இந்த்ரஸ்ரீப்ரதாய | நம |
| ஓம் வாணீப் ரதாய | நம |
| ஓம் அவ்யயாய | நம |
| ஓம் ஸர்வஸித்திப்ரதாய | நம |
| ஓம் ஸர்வதநயாய | நம |
| ஓம் ஸர்வரீப்ரியாய | நம |
| ஓம் ஸர்வாத்மகாய | நம |
| ஓம் ஸ்ருஷ்டி கர்த்ரே | நம |
| ஓம் தேவாய | நம |
| ஓம் அநேகார்ச்சிதாய | நம |
| ஓம் ஸிவாய | நம |
| ஓம் ஸுத்தாய | நம |
| ஓம் புத்திப்ரியாய | நம |
| ஓம் ஸாந்தாய | நம |
| ஓம் ப்ரஹ்மசாரிணே | நம |
| ஓம் கஜாநநாய | நம |
| ஓம் த்வைமாத்ரேயாய | நம |
| ஓம் முநிஸ் துத்யாய | நம |
| ஓம் பக்தவிக்ந விநாஸநாய | நம |
| ஓம் ஏகதந்தாய | நம |
| ஓம் சதுர்பாஹவே | நம |
| ஓம் சதுராய | நம |
| ஓம் ஸக்திஸம்யுதாய | நம |
| ஓம் லம்போதராய | நம |
| ஓம் ஸுர்ப்பகர்ணாய | நம |
| ஓம் ஹரயே | நம |
| ஓம் ப்ரஹ்மவித்தமாய | நம |
| ஓம் காலாய | நம |
| ஓம் க்ரஹபதயே | நம |
| ஓம் காமிநே | நம |
| ஓம் ஸோமஸுர்யாக்நி லோசநாய | நம |
| ஓம் பாஸாங்குஸதராய | நம |
| ஓம் சண்டாய | நம |
| ஓம் குணாதீதாய | நம |
| ஓம் நிரஞ்ஜநாய | நம |
| ஓம் அகல்மஷாய | நம |
| ஓம் ஸ்வயம்ஸித்தாய | நம |
| ஓம் ஸித்தார்சித பதாம்புஜாய | நம |
| ஓம் பீஜபூரபலாஸக்தாய | நம |
| ஓம் வரதாய | நம |
| ஓம் ஸாஸ்வதாய | நம |
| ஓம் க்ருதிநே | நம |
| ஓம் த்விஜப்ரியாய | நம |
| ஓம் வீதபயாய | நம |
| ஓம் கதிநே | நம |
| ஓம் சக்ரிணே | நம |
| ஓம் இக்ஷுசாபத்ருதே | நம |
| ஓம் ஸ்ரீ தாய | நம |
| ஓம் அஜாய | நம |
| ஓம் உத்பலகராய | நம |
| ஓம் ஸ்ரீபதயே | நம |
| ஓம் ஸ்துதிஹர்ஷிதாய | நம |
| ஓம் குலாத்ரி பேத்த்ரே | நம |
| ஓம் ஜடிலாய | நம |
| ஓம் கலிகல்மஷநாஸநாய | நம |
| ஓம் சந்த்ர சூடாமணயே | நம |
| ஓம் காந்தாய | நம |
| ஓம் பாபஹாரிணே | நம |
| ஓம் ஸமாஹிதாய | நம |
| ஓம் ஆஸ்ரிதாய | நம |
| ஓம் ஸ்ரீகராய | நம |

ஓம் ஸௌம்யாய நம
ஓம் பக்தவாஞ்சித தாயகாய நம
ஓம் ஸாந்தாய நம
ஓம் கைவல்யஸுகதாய நம
ஓம் ஸச்சிதானந்த விக்ரஹாய நம
ஓம் ஜ்ஞானினே நம
ஓம் தயாயுதாய நம
ஓம் தாந்தாய நம
ஓம் ப்ரஹ்மத்வேஷவிவர்ஜிதாய நம
ஓம் ப்ரமத்த தைத்ய பயதாய நம
ஓம் ஸ்ரீகண்டாய நம
ஓம் விபுதேஸ்வராய நம
ஓம் ரமார்ச்சிதாய நம
ஓம் விதயே நம
ஓம் நாகராஜயஜ்நோப வீதவதே நம
ஓம் ஸ்த்தூலகண்டாய நம
ஓம் ஸ்த்தூலகண்ட்டாய நம
ஓம் ஸ்வயம் கர்த்ரே நம
ஓம் ஸாம கோஸப்ரியாய நம
ஓம் பரஸ்மை நம
ஓம் ஸ்தூலதுண்டாய நம
ஓம் அக்ரண்யே நம
ஓம் தீராய நம
ஓம் வாகீஸாய நம
ஓம் ஸித்திதாயகாய நம
ஓம் தூர்வாபில்வப்ரியாய நம
ஓம் அவ்யக்த மூர்த்தயே நம
ஓம் அத்புதமூர்த்திமதே நம
ஓம் ஸைலேந்த்ர தநுஜோத் ஸங்க
கேல நோத்ஸுக மாநஸாய நம
ஓம் ஸ்வலாவண்யஸுதாஸார
ஜிதமந்மத விக்ரஹாய நம
ஓம் ஸமஸ்த ஜகதாதாராய நம
ஓம் மாயிநே நம
ஓம் மூஷிகவாஹநாய நம
ஓம் ஹ்ருஷ்டாய நம
ஓம் துஷ்டாய நம
ஓம் ப்ரஸந்நாத்மதே நம
ஓம் ஸர்வஸித்திப்ரதாய காய
ஸித்திவிநாயகாய நம
நாநாவித பரிமள பத்ர
புஷ்பாணி ஸமர்ப்பயாமி நம

## கணபதி

ஏகதந்தாய வித்மஹே
வக்ர துண்டாய தீமஹி
தன்னோ தந்தி ப்ரசோதயாத்!

# முருகன் பஜனை பாடல்

அஞ்சு முகந்தோன்றில் ஆறுமுகந் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும் - நெஞ்சில்
ஒரு கால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
முருகா வென்றோதுவார் முன்.

உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிறேன்
பின்னை ஒருவரையான் பின் செல்லேன் - பன்னிருகை
கோலப்பா வானோர் கொடிய வினை தீர்த்து அருளும்
வேலப்பா செந்தில் வாழ்வே.

## பச்சை மயில் வாகனனே வா வா

பச்சை மயில் வாகனனே - சிவ
பாலசுப்ரமணியனே வா - முருகா
இச்சையெல்லாம் உன்மேல் வைத்தேன்
இனி எள்ளளவும் பயமில்லையே (பச்சை)

கொச்சை மொழியானாலும் - உன்னை
கொஞ்சி கொஞ்சிபாடிடுவேன் - முருகா
மெல்ல மெல்ல புகுந்து விட்டாய் எந்தன்
கள்ள மெல்லாம் கரைந்த தப்பா (பச்சை)

நெஞ்சமதில் கோவிலமைத்து - இங்கு
நேர்மையெனும் தீபம் வைத்து முருகா
செஞ்சிலம்பு கொஞ்சிடவே - வா
சேவல் கொடி மயில் வீரா (பச்சை)

அலைகடல் ஓரத்திலே - என்
அன்பான ஷண்முகனே - முருகா
அலையா மனம் தந்தாய் - உந்தன்
இஷ்டம் எந்தம் கஷ்டம் தீரப்பா (பச்சை)

## முருகன் தனிவேல் முனி நம் குருவென்று

முருகன் தனிவேல் முனி நம் குருவென்று
அருள் கொண்டறியார் அறியும் தரமோ
உருவன் றருவன் றுள தன் றிலதன்று
இருளன் றொளியன் றென நின் றதுவே.

முருகன் குமரன் குகனென்று மொழிந்து
உருகும் செயல்தந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவும்
குருபுங் கவ என குணபஞ்சரனே


யாமிருக்கபயம் ஏன்
திருப்பரங்குன்றம்
திருவேரகம்
திருச்சீரலைவாய்
பழமுதிர்சோலை
திருவாவினன்குடி
திருத்தணிகை

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே

## வேல் வேல் வேலவனே வேலாயுதா

வேல் வேல் வேலவனே வேலாயுதா - எங்கள்
வினைகள் எல்லாம் தீர்த்திடுவாய் வேலாயுதா (வேல் வேல்)
கந்தா கடம்பா வேலாயுதா - எங்கள்
கதிர்காம வேலவனே வேலாயுதா (வேல் வேல்)
திருசெந்தூர் வேலவனே வேலாயுதா - எங்கள்
திருபரங்கித்தீரனே வேலாயுதா (வேல் வேல்)
சோலமலை கிழவனே வேலாயுதா - எங்கள்
சொகுசுகார குமரனே வேலாயுதா (வேல் வேல்)
பழநிமலை முருகனே வேலாயுதா - எங்கள்
பலவினையை நீக்கிடுவாய் வேலாயுதா (வேல் வேல்)
சுவாமிமலை நாதனே வேலாயுதா - எங்கள்
சுப்பிரமண்ய சுவாமியே வேலாயுதா (வேல் வேல்)
திருத்தணிகை முருகனே வேலாயுதா - எங்கள்
திருமுருக வேலவனே வேலாயுதா (வேல் வேல்)

## காவடியாம் காவடி

காவடியாம் காவடி கந்த வேலன் காவடி//
காவடியாம் காவடி காண வேண்டும் கண் கோடி//

வேல்முருகன் நாமத்திலே வித விதமாய் காவடி//
வெற்றி வேலன் காவடி வீரவேலன் காவடி//
சிங்கார வேலனுக்கு சின்ன சின்ன காவடி//
சுவாமிமலை நாதனுக்கு சந்தனத்தில் காவடி//
பழனிமலை பாலனுக்கு பால் குடத்தால் காவடி//

தென் பழநி வேலனுக்கு தேன் குடத்தால் காவடி//
ஆறுமுக வேலனுக்கு அழகு மயில் காவடி//
வண்ண வண்ண காவடி கந்த வேலன் காவடி//

(காவடியாம்)

## சரவணா சிவகுமாரா

சரவணா சிவகுமாரா சண்முகநாதா ஜெய் ஜெய் சண்முகநாதா //
சுப்பிரமண்யா கார்த்திகேயா கதிர்வேலா //
சண்முகநாதா ஜெய் ஜெய் சண்முகநாதா //
சரணம் சரணம் சண்முகநாதா - ஓம்
சரணம் சரணம் சண்முகநாதா

## வள்ளி மோஹனா

வள்ளி மோஹனா புள்ளி மயில் வாகனா //
ஆறுமுகக் கந்தனே சுந்தர வதனா //
குமர குரு பரசண்முக வடிவேலவா //
முருகா ஹரி மருகா சிவசக்தி பாலகா // (வள்ளி மோஹனா)

## அன்பருக்கு அன்பனே

அன்பருக்கு அன்பனே நீ வா வா முருகா
ஆறுபடை வீடுபடை நீ வா வா முருகா
இன்பமய ஜோதியே நீ வா வா முருகா
ஈசனுமை பாலகனே நீ வா வா முருகா
உலகநாதன் மருகனே நீ வா வா முருகா
ஊமைக்கருள் புரிந்தவனே நீ வா வா முருகா
எட்டுக்குடி வேலவனே நீ வா வா முருகா
ஏறுமயில் ஏறியே நீ வா வா முருகா
ஐங்கரனுக் கிளையவனே நீ வா வா முருகா
ஒய்யாரி வள்ளி லோலா நீ வா வா முருகா
ஓங்கார தத்துவமே நீ வா வா முருகா.
ஔவைக் குபதே சித்தவா நீ வா வா முருகா
அகில லோக நாயகனே நீ வா வா முருகா
ஹரகரோகரா சாமி ஹரகரோகரா
ஹரகரோகரா சாமி ஹரகரோகரா

## திருப்பரங்குன்றுறை திருமகன்

(தேவராய சுவாமிகள்)

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம் போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித்(து) ஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும், நிமலர் அருள்கந்தர்
சஷ்டி கவசந் தனை

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி

நூல்

திருப்பரங் குன்றுறை தீரனே குகனே
மருப்பிலாப் பொருளே வள்ளி மனோகரா
குருக்குத் துறையுறை குமரனே அரனே
இருக்குள் குருபரா ஏரகப் பொருளே

வையா புரியில் மகிழ்ந்துவாழ் பவனே
ஒய்யார மயில்மேல் உகந்தாய் நமோ நமோ
ஐயா குமார அருளே நமோ நமோ
மெய்யாய் விளங்கும் வேலா நமோ நமோ
பழநியங் கிரிவாழ் பகவா நமோ நமோ
மழுவுடை முதல்வன் மதலாய் நமோ நமோ
விராலி மலையுறை விமலா நமோ நமோ
மராமரம் துளைத்தோன் மருகா நமோ நமோ
சூரசம் கார துரையே நமோ நமோ
வீரவே லேந்தும் வேளே நமோ நமோ
பன்னிரு கரமுடைய் பரமா நமோ நமோ
கண்களீ ராறுடை கந்தா நமோ நமோ
கோழிக் கொடியுடைக் கோவே நமோ நமோ
ஆழிசூழ் செந்தில் அமர்ந்தாய் நமோநமோ
சசச சசச ஓம் ரீம் ரரர ரரர ரீம் ரீம்
வவவ வவவ ஆம் ஹோம்
ணணண ணணணவாம் ஹோம்
பபப பபப சாம் சூம் வவவ வவவ
ளம் ஓம் லல லிலி லுலு
நாட்டிய அட்சரம் கக கக கக
கந்தனே வருக இக இக இக ஈசனே வருக
தக தக தக சற்குரு வருக
பக பக பக பரந்தாமா வருக
வருக வருகவென் வள்ளலே வருக
வருக வருக நிஷ்களங்கனே வருக
தாயென நின்னிரு தாள்பணிந் தேன்எனைச்
சேயெனக் காத்தருள் திவ்யமா முகனே
அல்லும் பகலும் அனுதினம் என்னை
எல்லிலும் இருட்டிலும் எரிபகல் படுக்கை
வல்ல விடங்கள் வாராமல் தடுத்து
நல்ல மனத்துடன் ஞான குருஉனை
வணங்கித் துதிக்க மகிழ்ந்து நீ வரங்கள்
இணங்கியே அருள்வாய் இறைவா எப்போதும்
கந்தா கடம்பா கார்த்தி கேயா
நந்தன் கருகா நாரணி சேயே
எண்ணிலாக் கிரியில் இருந்து வளர்ந்தனை
தண்ணிளி அளிக்கும் சாமி நாதா
சிவகிரி கயிலை திருப்பதி வேளூர்
தவக்கதிர் காமம் சார்திரு வேரகம்
கண்ணுள் மணிபோல் கருதிடும் வயலூர்
விண்ணவர் ஏத்தும் விராலி மலைமுதல்
தன்னிக ரில்லாத் தலங்களைக் கொண்டு
சன்னதி யாய்வளர் சரவண பவனே
அகத்திய முனிவனுக்(கு) அன்புடன் தமிழைச்
செகத்தோர் அறியச் செப்பிய கோவே
சித்துகள் ஆம் சிதம்பர சக்கரம்
நர்த்தனம் புரியும் நாற்பத்தெண் கோணம்

வித்தாய் நின்ற மெய்ப்பொருளோனே
உத்தம குணத்தாய் உம்பர்கள் ஏறே
வெற்றிக் கொடியுடை வேளே போற்றி
பத்திசெய் தேவர் பயனே போற்றி
சித்தம் மகிழ்ந்திடச் செய்தவா போற்றி
அத்தன் அரியன் அம்பிகை லட்சுமி
வாணி யுடனே வரையுமாக் கலைகளும்
தானே நானென்று சண்முக மாகத்
தாரணி யுள்ளோர் சகலரும் போற்றப்
பூரண கிருபை புரிபவா போற்றி
பூதலத் துள்ள புண்ணிய தீர்த்தங்கள்
ஓதமார் கடல்சூழ் ஒளிர்புவி கிரிகளில்
எண்ணிலாத் தலங்கள் இனிதெழுந் தருள்வாய்
பண்ணும் நிட்டைகள் பலபல வெல்லாம்
கள்ளம் அபசாரம் கர்த்தனே எல்லாம் எள்ளினுள்
எண்ணெய்போல் எழிலுடை உன்னை
அல்லும் பகலும் ஆசா ரத்துடன்
சல்லாபமாய் உனைத் தானுறச் செய்தால்
எல்லாம் வல்லமை இமைப்பினில் அருளி
பல்லாயிர நூல் பகர்ந்தருள் வாயே
செந்தில் நகர்உறை தெய்வானை வள்ளி
சந்ததம் மகிழும் தயாபர குகனே
சரணம் சரணம் சரவண பவஓம்
அரன்மகிழ் புதல்வா ஆறுமுகா சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

## செந்தில் மேவும் சரவணன

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி

வணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணபவ வருக வருக
அசுரர்குடி கெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசஅங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும்தரித்து
நவமணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகன
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும்வர மகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா வினோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க

பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமி ரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவேல் காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் ப்ருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல

வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு

குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீஎனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன் திருநாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே!
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரக்ஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்

பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயலது அருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரை பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்துஅடி
அறிந்து எனதுள்ளம்
அட்டலட்சுமிகளில் வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்.

கவசம் இரண்டு முற்றிற்று

# பழநிப் பதிவாழ் அப்பன்

திருவா வினன்குடி சிறக்கும் முருகா
குருபரா குமரா குழந்தைவேலா யுதா
சரவணை சண்முகா சதாசிவன் பாலா
இரவலர் தயாபரா எழைபங் காளா
பரேமஸ்வரிக்குப் பாலா தயாபரா
வரமெனக்(கு) அருள்வாய் வாமனன் மருகா
இரண்டாயிரம் வெள்ளம் யோகம் படைத்தவா
திரண்டா ருகமனம் தீர்க்கம் படைத்தவா
இலட்சத் திருநான்கு நற்றம்பி மாருடன்
பட்சத் துடனே பராசக்தி வேலதாய்
வீர வாகுமிகுதள கர்த்தனாய்
சூரசம் காரா துஷ்டநிஷ் டூரா
கயிலாய மேவும் கனகசிம் மாசனா
மயிலேறும் சேவகா வள்ளி மனோகரா
அகத்திய மாமுனிக்(கு) அருந்தமிழ் உரைத்தவா
சுகத்திரு முருகாற் றுப்படை சொல்லிய
நக்கீரன் நற்றமிழ் நலமென வினவிக்
கைக்கீழ் வைக்கும் கனமிசைக் குதவா
திருவரு ணகிரி திருப்புகழ் பாட
இரும்புகழ் நாவில் எழுதிப் புகழ்ந்தவா
ஆயிரத் தெட்டாம் அருள்சிவ தலத்தில்
பாயிரம் தோத்திரம் பாடப் புகழ்ந்தவா
எண்ணா யிரம்சமண் எதிர்கழு வேற்றி
விண்ணோர் குமாரன் வியாதியைத் தீர்க்கவா
குருவாம் பிரமனைக் கொடுஞ்சிறை வைத்து
உருப்பொருள் வேதம் உரைத்தாய் சிவனுடன்
கருதிமெய் யோகம் சொல்லிய(து) ஒருமுகம்
அருள்பெறு மயில்மீது அமர்ந்(து) ஒருமுகம்
வள்ளிதெய் வானையை மருவிய(து) ஒருமுகம்
தெள்ளுநான் முகன்போல் சிருட்டிப்ப(து) ஒருமுகம்
சூரனை வேலால் துணித்த(து) ஒருமுகம்
ஆரணம் ஓதும் அருமறை யடியார்
தானவர் வேண்டுவ தருவ(து) ஒருமுகம்
ஞான முதல்வருக்கு நற்பிள்ளை பழநி
திருப்பரங் கிரிவாழ் தேவா நமோ நம
பொருட்செந்தி லம்பதி புரப்பாய் நமோ நம
ஏரகம் தனில்வாழ் இறைவா நமோ நம
கூரகம் ஆவினன் குடியாய் நமோ நம
சர்வ சங்கரிக்குத் தனயா நமோநம
உறுசோலை மலைமேல் உகந்தாய் நமோ நம
எல்லா கிரிக்கும் இறைவா நமோ நம
சல்லாப மகா சண்முகத் துடனே

எல்லா தவமும் இனிதெழுந் தருளி
உல்லா சத்துறும் ஓங்கார வடிவே
மூல வட்டத்தில் முளைத்தெழும் ஜோதியை
சால முக்கோணத் தந்தமுச் சக்தியை
வேலா யுதமுடன் விளங்கிடும் குகனைச்
சீலமார் வயலூர்ச் சேந்தனைத் தேவனை
கைலாச மேருவா காசத்தில் கண்டு
பைலாம் பூமியும் பங்கய பார்வதி
மேலும் பகலும் விண்ணிரு வேந்தி
நாற்கோ ணத்தில் நளினமாய் அர்ச்சனை
கங்கை யீசன் கருகிய நீர்புரை
செங்கண்மால் திருவும் சேர்ந்துசெய் அர்ச்சனை
அக்கினி நடுவே அமர்ந்த ருத்திரன்
முக்கோண வட்டம் முதல்வாயு ருத்திரி
வாய்அறு கோணம் மகேசுவரன் மகேசுவரி
ஐயும் கருநெல்லி வெண்சாரை தன்மேல்
ஆகாச வட்டத்து அமர்ந்த சதாசிவன்
பாகமாம் வெண்மைப் பராசக்தி கங்கை
தந்திர அர்ச்சனை தலைமேல் கொண்டு
மந்திர மூலத்தில் வாசியைக் கட்டி
அக்கினிக் குதிரை ஆகாசத் தேவி
மிக்கமாய்க் கருநெல்லி வெண்சாரை உண்பவர்
பாகமாய் ரதமும் பகல்வழி யாரைச்
சாகா வகையும் தன்னை அறிந்து
ஐந்து ஜீவனுடன் ஐயஞ்சு கல்பமும்
விந்தை உமைசிவன் மேன்மையும் காட்டி
சந்திர சூரியர் தம்முடன் அக்கினி
அந்திரனைக் கண்டு அறிந்தே யிடமாய்ச்
சிந்தையுள் ஏற்றுச் சிவசம்பு தன்னை
மந்திர அர்ச்சனை வாசிவா என்று
தேறுமுகம் சென்னி சிவகிரி மீதில்
ஆறு முகமாய் அகத்துளே நின்று
வாசல் ஒன்பதையும் வளமுடன் வைத்து
யோசனை ஐங்கரன் உடன்விளை யாடி
மேலைக் கருநெல்லி வெண்சாரை உண்டு
வாலைக் குழந்தை வடிவையும் காட்டி
நரைதிரை மாற்றி நாளையும் காட்டி
உரைசிவ யோகம் உபதேசம் செப்பி
மனத்தில் பிரியா வங்கண மாக
நினைத்த படிஎன் நெஞ்சத் திருந்து
அதிசயம் என்றுன் அடியார்க்கு இரங்கி
மதியருள் வேலும் மயிலுடன் வந்து
நானே நீயெனும் லட்சணத் துடனே
தேனே என்னுளம் சிவகிரி எனவே
ஆறா தாரத்து ஆறு முகமும்

மாறா திருக்கும் வடிவையும் காட்டிக்
கனவிலும் நனவிலும் கண்டுனைத் துதிக்க
தனதென வந்து தயவுடன் இரங்கிச்
சங்கொடு சக்கரம் சண்முக தரிசனம்
எங்கு நினைத்தாலும் என்முன்னே வந்து
அஷ்டாவ தானம் அறிந்தவுடன் சொல்லைத்
தட்டாத வாக்கம் சர்வா பரணமும்
இலக்கணம் இலக்கியம் இசையறிந் துரைக்கத்
துலக்கிய காவியம் சொற்பிர பந்தம்
எழுத்துச் சொற்பொருள் யாப்பலங் காரம்
வழுத்தும் என்நாவில் வந்தினி திருந்தே
அமுத வாக்குடன் அடியார்க்கும் வாக்கும்
சமுசார சாரமும் தானே நிசமென
வச்சிர சரீரம் மந்திர வசீகரம்
அட்சரம் யாவும் அடியேனுக் குதவி
வல்லமை யோகம் வசீகர சக்தி
நல்ல உன்பாதமும் நாடிய பொருளும்
சகலகலை ஞானமும் தானெனக் கருளி
செகதல வசீகரம் திருவருள் செய்து
வந்த கலிபிணி வல்வினை மாற்றி
இந்திரன் தோகை எழில் மயில்ஏறிக்
கிட்டவே வந்து கிருபை பாலிக்க
அட்ட துட்டமுடன் அநேக மூர்க்கமாய்
துட்ட தேவதையும் துட்டப் பிசாசும்
வெட்டுண்ட பேயும் விரிசடைப் பூதமும்
வேதாளம் கூளி விடும்பில்லி வஞ்சனை
பேதாளம் துன்பப் பிசாசுகள் நடுநடுங்க
பதைபதைத் தஞ்சிடப் பாசத்தால் கட்டி
உதைத்து மிதித்தங்(கு) உருட்டி நொருக்கிச்
சூலத்தாற் குத்தித் தூளு தூளுருவி
வேலா யுதத்தால் வீசிப் பருகி
மழுவிட் டேவி வடவாக் கினிபோல்
தழுவி அக்கினியாய்த் தானே எரித்துச்
சிதம்பர சக்கரம் தேவி சக்கரம்
மதம்பெறும் காளி வல்ல சக்கரம்
மதியணி சம்பு சதாசிவ சக்கரம்
பதிகர்ம வீர பத்திரன் சக்கரம்
திருவை குண்டம் திருமால் சக்கரம்
அருள்பெருந் திகிரி அக்கினிச் சக்கரம்
சண்முக சக்கரம் தண்டாயு தத்தால்
விம்ம அடிக்கும் எல்லாச் சக்கரமும்
ஏக ரூபமாய் என்முன்னே நின்று
வாகனத் துடன்என் மனத்துள் இருந்து
தம்பனம் மோகனம் தயவாம் வசீகரம்
இம்பமா கருடணம் மேவுமுச் சாடனம்

வம்பதாம் பேதனம் வலிதரும் ஆரணம்
உம்பர்கள் ஏத்தும் உயிர்வித் வேடணம்
தந்திர மந்திரம் தருமணி அட்சரம்
உந்தன் விபூதி உடனே சபித்து
கந்தனின் தோத்திரம் கவசமாய்க் காக்க
எந்தன் மனத்துள் ஏதுவேண்டினும்
தந்து ரட்சித்தருள் தயாபரா சரணம்
சந்தம் எனக்கருள் சண்முகா சரணம்
சரணம் சரணம் சட்கோண இறைவா
சரணம் சரணம் சத்குரு சம்காரா
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்!

## திருவேரகம்வாழ் தேவன்

ஓமெனும் பிரணவம் உரைத்திடச் சிவனார்
காமுற உதித்த கனமறைப் பொருளே
ஓங்கார மாக உதயத் தெழுந்தே
ஆங்கார மான அரக்கர் குலத்தை வேரறக் களைந்த
வேலவா போற்றி தேராச் சூரரைத்
துண்டதுண் டங்களாய் வேலா யுதத்தால்
வீசி அறுத்த பாலா போற்றி
பழநியின் கோவே நான்கு மறைகள்
நாடியே தேடும் மான்மரு கோனே வள்ளி மணாளனே
நானெனும் ஆணவம் நண்ணிடா(து) என்னைக்
காணநீ வந்து காப்பதுன் கடனே
கூளி கூளி கங்காளி ஓங்காரி
சூலி கபாலி துர்க்கை யேமாளி
போற்றும் முதல்வா புனித குமாரா
சித்தர்கள் போற்றும் தேசிகர் போற்றி
"ஏகாட் சரமாய்" எங்கும் தானாகி
வாகாய் நின்ற மறைமுதற் பொருளே
துதியட் சரத்தால் தொல்லுலகு எல்லாம்
அதிசய மாக அமைத்தவா போற்றி
"திரியரட் சரத்தால்" சிவனயன் மாலும்
விரிபா ருலகில் மேன்மையுற் றவனே
"சதுரட்" சரத்தால் சாற்றுதல் யோகம்
மதுரமாய் அளிக்கும் மயில்வா கனனே
"பஞ்சாட் சரத்தால்" பரமன் உருவத்தால்
தஞ்சமென் றோரைத் தழைத்திடச் செய்தென்
நெஞ்சகத்(து) இருக்கும் நித்தனே சரணம்
அஞ்சலி செய்த அமரரைக் காக்கும்
ஆறு கோணமாய் ஆறெழுத் தாகி
ஆறு சிரமும் அழகிய முகமும்

ஆறிரு செவியும் அமர்ந்த மார்பும்
ஆறிரு கண்ணும் அற்புத வடிவும்
சரவணை வந்த சடாட்சரப் பொருளே
அரனயன் வாழ்த்தும் அப்பனே கந்தா
கரங்கள் பன்னிரண்டில் கதிரும் ஆயுதத்தால்
தரங்குலைந்(து) ஓடத் தாரகாசுரன் முதல்
வேரறச் சூர்க்குலம் முடித்து மகிழ்ந்தோய்
சீர்திருச் செந்தூர் தேவசே னாபதி
அஷ்ட குலாசலம் யாவையும் ஆகி
இஷ்ட சித்திகள் அருள் ஈசன் புதல்வா
துட்டசங் காரா சுப்பிர மணியா
மட்டிலா வடிவே வையாபுரித் துரையே
எண்கோ ணத்துள் இயங்கிய நாரணன்
கண்கொளாக் காட்சி காட்டிய சடாட்சர
சைவம் வைணவம் சமரச மாக
தெய்வமாய் விளங்கும் சரவண பவனே
சரியை கிரியை சார்ந்தநல் யோகம்
இரவலர்க்(கு) அருளும் ஈசா போற்றி
ஏதுசெய் திடினும் என்பால் இரங்கிக்
கோதுகள் இல்லாக் குணமெனக் கருளித்
தரிசனம் கண்ட சாதுவோ(டு) உடன்யான்
அருச்சனை செய்ய அனுக்ரகம் அருள்வாய்
பில்லிவல் வினையும் பீனிச மேகம்
வல்ல பூதங்கள் மாயமாய்ப் பறக்க
அல்லலைப் போக்கிநின் அன்பரோ(டு) என்னைச்
சல்லாப மாகச் சகலரும் போற்ற
கண்டு களிப்புறக் கருணை அருள்வாய்
அண்டர் நாயகனே அருமறைப் பொருளே
குட்டிச் சாத்தான் குணமிலா மாடன்
தட்டிலா இருளன் சண்டிவே தாளம்
சண்டா முனியும் தக்கராக் கதரும்
மண்டை வலியோடு வாதமும் குன்மமும்
சூலைகா மாலை சொக்கலும் சயமும்
மூலரோ கங்கள் முடக்குள் வலிப்பு
திட்டு முறைகள் தெய்வச் சாபம்
குட்டம் சோம்பல் கொடிய வாந்தியும்
கட்டிலாக் கண்ணோய் கண்ணேறு முதலா
வெட்டுக் காயம் வெவ்விடம் அனைத்தும்
உன்னுடைய நாமம் ஓதியே நீறிடக்
கன்னலொன் றதனில் களைந்திடக் கருணை
செய்வதுன் கடனே செந்தில் நாயகனே
தெய்வநா யகனே தீரனே சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

## குன்றுதோறாடும் குமரன்

கணபதி துணைவா கங்காதரன் புதல்வா
குணவதி உமையாள் குமரா குருபரா
வள்ளி தெய்வானை மருவிய நாயகா
துள்ளிமயி லேறும் சுப்பிர மணியா
அழகொளிப் பிரபை அருள்வடி வேலா
பழநி நகரில் பதியநு கூலா
திருவா வினன்குடி சிறக்கும் முருகா
அருள்சேர் சிவகிரி ஆறு முகவா
சண்முக நதியும் சார்பன்றி மலையும்
பன்முகம் நிறைந்த பழநிக்கு இறைவா
ஆராறு நூற்று அட்டமங் களமும்
வீர வையாபுரி விளங்கும் தயாபார
ஈராறு பழநி எங்கும் தழைக்கப்
பாராறு சண்முகம் பகரும் முதல்வா
ஆறு சிரமும் ஆறு முகமும்
ஆறிரு புயமும் ஆறிரு காதும்
வடிவம் சிறந்த மகரகுண் டலமும்
தடித்த பிரபைபோல் சார்ந்த சிந்தூரமும்
திருவெண் ணீறணி திருநுதல் அழகும்
கருணை பொழியும் கண்ணான்கு மூன்றும்
குனித்த புருவமும் கூரிய மூக்கும்
கனித்த மதுரித்த கனிவாய் இதழும்
வெண்ணிலாப் பிரபைபோல் விளங்கிய நகையும்
எண்ணிலா அழகாய் இலங்குபல் வரிசையும்
காரிகை உமையாள் களித்தே இனிதெனச்
சீர்தரும் வள்ளி தெய்வ நாயகியாள்
பார்த்தழ கென்னப் பரிந்த கபாலமும்
வார்த்த கனகம்போல் வடிவேல் ஒளியும்
முறுக்குமேல் மீசையும் மூர்க்கம் சிறக்க
மறுக்கும் சூரர்மேல் வாதுகள் ஆட
ஈஸ்வரன் பார்வதி எடுத்துமுத் தாடி
ஈஸ்வரன் வடிவை மிகக்கண் டனுதினம்
கையால் எடுத்துக் கனமார்(பு) அணைத்தே
ஐயா! குமரா! அப்பனே! என்று
மார்பினும் தோளினும் மடியினும் வைத்துக்
கார்த்திகே யாஎனக் கருணையால் கொஞ்சி
முன்னே கொட்டி முருகா! வருகவென்(று)
அந்நேரம் வட்டமிட் டாடி விளையாடித்
தேவியும் சிவனும் திருக்கண் களிகூரக்
கூவிய மயிலேறும் குருபரா வருக
தாவிய தகரேறும் சண்முகா வருக
ஏவிய வேலேந்தும் இறைவா வருக
கூவிய சேவற் கொடியோய் வருக
பாவலர்க் கருள்சிவ பாலனே வருக
அன்பர்க் கருள்புரி ஆறுமுகா வருக
பொன்போல் சரவணப் புண்ணியா வருக
அழகிற் சிவனொளி அய்யனே வருக

களபம் அணியுமென் கந்தனே வருக
மருமலர்க் கடம்பணி மார்பா வருக
மருவுவோர் மலரணி மணியே வருக
திரிபுர பவனெனும் தேவே வருக
பரிபுர பவனெனும் பவனே வருக
சிவகிரி வாழ்தெய்வ சிகாமணி வருக
காலில் தண்டை கலீர் கலீரென
சேலிற் சதங்கை சிலம்பு கலீரென
இடும்பனை மிதித்ததோர் இலங்கிய பாதமும்
அடும்பல வினைகளை அகற்றிய பாதமும்
சிவகிரி மீதினில் திருநிறை கொலுவும்
நவகிரி அரைமேல் இரத்தினப் பிரபையும்
தங்கரை ஞாணும் சாதிரை மாமணி
பொங்குமாந் தளிர்சேர் பொற்பீதாம் பரமும்
சந்திர காந்தச் சரிகைத் தொங்கலும்
மந்திர வாளும் வாங்கிச் சுரிகையும்
அருணோ தயம்போல் அவிர்வன் கச்சையும்
ஒருகோடி சூரியன் உதித்த பிரபைபோல்
கருணையால் அன்பரைக் காத்திடும் அழகும்
இருகோடி சந்திரன் எழிலொட்டி யாணமும்
ஆயிரம் பணாமணி அணியுமா பரணமும்
வாயில்நன் மொழியாய் வழங்கிய சொல்லும்
நாபிக் கமலமும் நவரோம பந்தியும்
மார்பில் சவ்வாது வாடை குபீரென
புனுகு பரிமளம் பொருந்திய புயமும்
ஒழுகிய சந்தனம் உயர் கஸ்தூரியும்
வலம்புரிச் சங்கொலி மணியணி மிடறும்
நலம்சேர் உருத்திர அக்க மாலையும்
மாணிக்கம் முத்து மரகதம் நீலம்
ஆணிவை டூரியம் அணிவைரம் பச்சை
பவளகோ மேதகம் பதித்தவச் ராங்கியும்
நவமணி பிரபைபோல் நாற்கோடி சூரியன்
அருணோ தயமெனச் சிவந்த மேனியும்
கருணை பொழியும் காடாட்சவீட் சணமும்
கவசம் தரித்தருள் காரண வடிவும்
நவவீரர் தம்முடன் நற்காட்சி யான
ஒருகை வேலாயுதம் ஒருகை சூலாயுதம்
ஒருகை நிறைசங்கு ஒருகை சக்ராயுதம்
ஒருகை நிறைவில்லு ஒருகை நிறையம்பு
ஒருகை மந்திரவாள் ஒருகை மாமழு
ஒருகை மேற்குடை ஒருகை தண்டாயுதம்
ஒருகை சந்திராயுதம் ஒருகை வல்லாயுதம்
அங்கையில் பிடித்த ஆயுதம் அளவிலாப்
பங்கயக் கமலப் பன்னிரு தோளும்
முருக்கம் சிறக்கும் முருகா சரவணை
இருக்கும் குருபரா ஏழை பங்காளா
வானவர் முனிவர் மகிழ்ந்து கொண்டாடத்
தானவர் அடியவர் சகலரும் பணியப்
பத்திர காளி பரிவது செய்யச்

சக்திகள் எல்லாம் தாண்டவ மாட
அஷ்ட வைரவர் ஆனந்த மாட
துஷ்டமிகுஞ் சூளிகள் சூழ்திசை காக்க
சத்த ரிஷிகள் சாந்தக மென்னச்
சித்தர்கள் நின்று சிவசிவா என்னத்
தும்புரு நாரதர் சூரிய சந்திரர்
கும்பமா முனியும் குளிர்ந்த தாரகையும்
அயன்மால் உருத்திரன் அஷ்ட கணங்கள்
நயமுடன் நின்று நாவால் துதிக்க
அஷ்ட் லக்ஷுமி அம்பிகை பார்வதி
கட்டழகன் என்று கண்டுனை வாழ்த்த
இடும்பா யுதன்நின் இணையடி பணிய
ஆடும் தேவகன்னி ஆரத்தி யெடுக்க
தேவ கணங்கள் ஜெயஜெய என்ன
ஏவற் கணங்கள் இந்திரர் போற்ற
கந்தருவர் பாடிக் கவரிகள் வீசிச்
சார்ந்தனம் என்னச் சார்வரும் அநேக
பூதம் அடிபணிந் தேத்த வேதாளம்
பாதத்தில் வீழ்ந்து பணிந்து கொண்டாட
அரகர என்றடியார் ஆலவட்டம் பிடிக்க
குருபரன் என்றன்பர் கொண்டாடி நிற்க
குடையும் சேவலின் கொடியும் சூழ
இடைவி டாமல்உன் ஏவலர் போற்றச்
சிவனடி யார்கள் திருப்பாத மேத்த
நவமெனும் நால்வரை ஏற்ற சரமண்டலம்
உருத்திர வீணை நாதசுர மேளம்
தித்திமி என்று தேவர்கள் ஆடச்
சங்கீத மேளம் தாளம் துலங்க
மங்கள மாக வைபவம் இலங்க
தேவ முரசடிக்கத் தினமேள வாத்தியம்
சேவல் கொடியும் சிறப்புடன் இலங்க
நந்திகே சுவரன் மீது ஏறிய நயமும்
வந்தனம் செய்ய வானவர் முனிவர்
எங்கள் பார்வதியும் ஈசனும் முன்வர
ஐங்கரன் முன்வர ஆறுமா முகவன்
வீர மயிலேறு வெற்றிவேல் எடுத்து
சூரன்மேல் ஏவத் துடித்தவன் மடியச்
சிங்கமுகா சுரன் சிரமது உருளத்
துங்கக் கயமுகன் சூரனும் மாள
அடலற்ற குழந்தை அறுத்துச் சயித்து
விட்டவே லாயுதம் வீசிக் கொக்கரித்துத்
தம்ப மெனும்சயத் தம்பம் நாட்டி
அன்பர்கள் தம்மை அனுதினம் காத்துத்
திருப்பரங் குன்றம் சீர்ப்பதி செந்தூர்
திருவாவி னன்குடிருவே ரகமும்
துய்ய பழநி சுப்பிர மண்யன்
மெய்யாய் விளங்கும் விராலி மலைமுதல்
அண்ணா மலையும் அருள்மேவும் கயிலை
கண்ணிய மாவூற்றுக் கழுகுமா மலையும்

முன்னிமை யோர்கள் முனிவர் மனத்திலும்
நன்னய மாய்ப்பணி நண்பர் மனத்திலும்
கதிர்காமம் செங்கோடு கதிர்வேங் கடமும்
பதினா லுலகத்திலும் பக்தர் மனதிலும்
எங்கும் தானவ னாயிருந்(து) அடியார்தம்
பங்கி லிருந்து பாங்குடன் வாழ்க
கேட்ட வரமும் கிருபைப் படியே
தேட்ட முடன்அருள் சிவகிரி முருகா
நாட்டு சிவயோகம் நாடிய பொருளும்
தாட்டிக மாய்எனக்(கு) அருள்சண் முகனே
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

## பழமுதிர்சோலை பண்டிதன்

சங்கரன் மகனே சரவண பவனே
ஐங்கரன் துணைவனே அமரர்தம் கோனே
செங்கண்மால் மருகனே தெய்வானை கேள்வனே
பங்கயம் போன்ற பன்னிரு கண்ணனே
பழநிமா மலையுறும் பன்னிரு கரத்தனே
அழகுவேல் ஏந்தும் ஐயனே சரணம்
சரவண பவனே சட்கோணத் துள்ளுறை
அரனருள் சுதனே அய்யனே சரணம்
சயிலொளி பவனே சடாட்சரத் தோனே
மயில்வா கனனே வள்ளலே சரணம்
திரிபுர பவனே தேவசே னாபதி
குறமகள் மகிழும் குமரனே சரணம்
திகழொளி பவனே சேவற் கொடியாய்
நகமா யுதமுடை நாதனே சரணம்
பரிபுர பவனே பன்னிரு கையனே
தருணமிவ் வேளை தற்காத் தருளே
சவ்வும் ரவ்வுமாய்த் தானே யாகி
வவ்வும் ணவ்வுமாய் விளங்கிய குகனே
பவ்வும் வவ்வுமாய் பழமுதிர் சோலையில்
தவ்வியே ஆடும் சரவண பவனே
குஞ்சரி வள்ளியைக் குலாவி மகிழ்வோய்
தஞ்சமென் றுன்னைச் சரணம் அடைந்தேன்
கொஞ்சிய உமையுடன் குழவியாய்ச் சென்றங்கு
அஞ்சலி செய்தவள் அமுதமும் உண்டு
கார்த்திகை மாதர் கனமார்(பு) அமுதமும்
பூர்த்தியாய் உண்ட புனிதனே குகனே
நவமைந்தர் சிவனால் நலமுடன் உதிக்கத்
தவமுடை வீர வாகுவோ(டு) ஒன்பான்
தம்பிமா ராகத் தானையைக் கொண்ட சம்பிர தாயா சண்முகா வேலா
நவவீரர் தம்முடன் நவகோடி வீரரும்
கவனமாய் உருத்திரன் அளித்தே களித்துப்
பேதம் இல்லாமல் பிரமனைக் குருவாய்
ஓதிடச் செய்ய உடன்அவ் வேதனை
ஓமெனும் பிரணவத் துண்மைநீ கேட்கத்

தாமே யோசித்த சதுர்முகன் தன்னை
அமரர்கள் எல்லாம் அதிசயப் படவே
மமதைசேர் அயனை வன்சிறை யிட்டாய்
விமலனும் கேட்டு வேகம தாக
உமையுடன் வந்தினி துவந்து புரிந்து
அயனைச் சிறைவிடென்று அன்பாய் உரைக்க
நயமுடன் விடுத்த ஞானபண் டிதனே
"திருமால் அயன்சிவன்" சேர்ந்து மூவரும்
கௌரி லட்சுமி கலைமக ளுடனே
அறுவரோர் அம்சமாய் அரக்கரை வெல்ல
ஆறு முகத்துடன் அவதரித் தோனே
சிங்க முகாசுரன் சேர்ந்த கயமுகன்
பங்கமே செய்யும் பானு கோபனும்
சூரனோ டொத்த துட்டர்க ளோடு
கோரமே செய்யும் கொர்டியராக் கதரை
வேருடன் கொல்லி விண்ணவர் துன்பம்
ஆறிடச் செய்தவ் வமரர்கள் தமக்குச்
சேனா பதியாய் தெய்வீகப் பட்டமும்
தானாய்ப் பெற்ற தாட்டிகப் பெருமானே
திருப்பரங் குன்றம் செந்தூர் முதலாயச்
சிறப்புறு பழநி திருவே ரகமுதல்
எண்ணிலாத் தலங்களில் இருந்தாடும் குகனே
விண்ணவர் ஏத்தும் விநோத பாதனே
அன்பர்கள் துன்பம் அகற்றியாள் பவனே
தஞ்சமென்(று) ஓதினர் சமயம் அறிந்தங்(கு)
இன்பம் கொடுக்கும் ஏழைபங் காளா
கும்பமா முனிக்குக் குருதே சிகனே
தேன்பொழில் பழநித் தேவ குமாரா
கண்பார்த்(து) எனையாள் கார்த்திகே யாஎன்
கஷ்டநிஷ் டூரம் கவலைகள் மாற்றி
அஷ்ட லட்சுமிவாழ் அருளெனக்(கு) உதவி
இட்டமாய் என்முன் னிருந்து விளையாடத்
திட்டமாய் எனக்கருள் செய்வாய் குகனே
அருணகிரி தனக்(கு) அருளிய தமிழ்போல்
கருணையால் எனக்குக் கடாட்சித் தருள்வாய்
தேவ ராயன் செப்பிய கவசம்
பூவல யத்தோர் புகழ்ந்து கொண்டாட
சஷ்டி கவசம் தான்செபிப் போரைச்
சிஷ்டராய்க் காத்தருள் சிவகிரி வேலா
வந்தென் நாவில் மகிழ்வுடன் இருந்து
சந்தத் தமிழ்த்திறம் தந்தருள் வோனே
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் தமிழ்தரும் அரனே
சரணம் சரணம் சங்கரன் சுதனே
சரணம் சரணம் சண்முகா சரணம்.

**ஆறு கவசங்களும்**
**முற்றிற்று**

# ஸ்ரீ ஐயப்பன் வழிபாடு

## ஐயப்பன் பூஜை

சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்ப்புஜம்
ப்ரஸந்த வதனம் த்யா யேத் ஸர்வ விக்நோப
சாந்தயே

**பின் பிராணாயாமம் செய்து பின்வரும் ஸங்கல்பம் கூறவும்**

மமோபாத்த ஸமஸ்த்த துரிதக்ஷயத்வாரா ஸ்ரீ பரமேச்வரப்ரீத்யர்த்தம் சுபே சோபநே முகூர்த்தே, ஆத்யப்ரஹ்மண: த்விதீய பரார்த்தே, ச்வேத வராஹகல்பே, கலியுகே, ப்ரதமே பாதே ஜம்பூ த்வீபே, பாரத வர்ஷே, பரத கண்டே, மேரோ: தக்ஷிணே பார்ச்வே, சகாப்தே, அஸ்மிந் வர்த்தமாநே வ்யாவஹாரிகே ப்ரபவாதீ நாம் ஷிஷ்ட்யா: ஸம்வதிஸராணாம்மத்யே - நாம ஸம்வத் ஸரே. தக்ஷிணாயநே (அல்லது உத்திராயணே) - வாஸரயுக் தாயம் - நட்சத்திர யுக்தாயாம், சுபயோக சுபகரண ஏவங்குண விசேக்ஷிண விசிக்ஷ்டாயாம் அஸ்யாம் சுபதி தெள, மமஜந்மாப்யாஸாத் ஜந்மப்ரப்ருதி ஏகத் ஷிண பர்யந்தம்

அஸ்மித் ஹரித்ராபிம்பே மஹா
கணபதிம் த்யாயாமி மஹா
கணபதிம் ஆவா ஹயாமி
மஹாகணாதிபதியே ஆசனம் ஸமர்ப்பயாமி
மஹாகணாதிபதியே அர்க்யம் ஸமர்ப்பயாமி
மஹாகணாதிபதியே பாத்யம் ஸமர்ப்பயாமி
மஹாகணாதிபதியே ஆசமநீயம் ஸமர்ப்பயாமி
மஹாகணாதிபதியே ஔபசாரிகஸ்நாநம் ஸமர்ப்பயாமி
மஹாகணாதிபதியே ஸ்நாநந்தரம் ஆசமநீயம் ஸமர்ப்பயாமி
மஹாகணாதிபதியே வஸ்த்ரார்த்தம் அட்சதாம் ஸமர்ப்பயாமி
மஹாகணாதிபதியே யக்நோப வீதார்த்தம் அட்சதாம் ஸமர்ப்பயாமி
மஹாகணாதிபதியே கந்தாந்தாரயாமி ஸமர்ப்பயாமி
மஹாகணாதிபதியே கந்தஸ்யோபரி அட்சதாம் ஸமர்ப்பயாமி
மஹாகணாதிபதியே அலங்கரணார்த்தம் அட்சதாம் ஸமர்ப்பயாமி
மஹாகணாதிபதியே அலங்கரணார்த்தம் அட்சதாம் ஸமர்ப்பயாமி
மஹாகணாதிபதியே ஹரித்ரா குங்குமம் ஸமர்ப்பயாமி
புஷ்பை: பூஜையாமி

கீழ்கண்ட மந்திரங்களைச் சொல்லி புஷ்பம், அட்சதையால் மஞ்சள் பிள்ளையருக்கு அர்ச்சனை செய்யவும்.

| | |
|---|---|
| ஓம் சுமுகாய நம: ஓம் தூம கேதுவே | நம |
| ஓம் ஏகதந்தாய நம: ஓம் கணாத்யத ஷாய | நம |
| ஓம் கபிலாய நம ஓம் பாலசந்த்ராய | நம: |
| ஓம் கஜகர்ணகாய நம: ஓம் கஜா நநாயய | நம: |
| ஓம் விகடாய நம: ஓம் சூர்ப்பகர்ணாய | நம: |
| ஓம் கணாதிபாய நம: ஓம் ஸ்கந்த பூர்வஜாய | நம |
| ஓம் மஹா கணாதிபதியே நம: ஓம் ஹேரம்பாய | நம |
| ஓம் விக்நராஜாய | நம |

நாநாவித பரிமள பத்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி தூபார்த்தம், தீ பார்த்தம் அட்சதாந் ஸ்மர்ப்பயாமி

கீழ்கண்ட மந்திரம் சொல்லி வெற்றிலை, பாக்கு பழம் வெல்லக் கட்டியை நிவேதனம் செய்யவும்.

ஓம் பூர்புஸ்ஸுவ: தத்ஸவிதுர் வரேண்யம் பர்கோதேவஸ்ய தீ மஹிதியோயோ ந: ப்ரசோதயாத்தேவ ஸவித ப்ரஸீவ, ஸத்யம் த்வர்த்தேந பரிஷந்சாம், அம்ருதேபஸ் தரணமஸி

ஓம் பராணாய ஸ்வாஹா ஓம் அபாநாய ஸ்வாஹா ஓம் வ்யாநாய ஸ்வாஸா ஓம் உதாநாய ஸ்வாஹா ஓம் ஸ்மாநாய ஸ்வாஹா ஓம் ப்ரஹ் மனெ ஸ்வாஹ

ப்ரஹ்மணிம ஆத்மாம் ருதத்வாய. மஹாகணுதி பதயே குடகண்ட கதளீ பல நிவேதநம் ஸமர்ப்பயாமி

மத்யே பாநீயம் ஸமர்ப்பயாமி அம்ருதாபிதா நமஸி. உத்தரா போஜநம் ஸமர்ப் பயாமி தாம் பூலம் ஸமர்ப்பயாமி.

நீராஜநம் ஸமர்ப்பயாமி (கற்பூரம் காண்பிக்கவும்) நீராஜ நாநந்தரம் ஆசம நீயம் ஸமர்ப்பயாமி

ஏகத்க்ஷிண பர்ணந்தம் மத்யே ஸம்பாவிதா நாம் ஸர்வேஷாம் பாபா நாம் ஸத்ய: அபநோத நார்த்தம் அஸ்மாகம் ஸஹகுடும்பா ஐச்வர்யாணாம் அபிவ்ருத்யர்த்தம், ஸமஸ்தமங்களா வாப்த்யர்த்தம், ஸமஸ்ததுரிதோப சாந்த்யர்த்தம், தர்மர்த்ம், காம் மோக்ஷ சதிர்வித பல புருஷார்த்த ஸித்யார்த்தம், துர்தேவதாபீடித ஸமஸ்த தாபஜ்வராதீனாம் நிவிருத்யர்த்தம், ஸ்ரீ தர்ம சாஸ்து: சரணார விந்தையோ நிரந்தர அசஞ்சலா பக்தி ஸித்யாத்தம் ஆரோ திடகாத்ர தீர்க்காயுஷ்யு ஸித்யர்த்ம். ஸ்ரீ பூர்ண புஷ்களாம் பிகா சக்தி த்யான, ஆவாஹனாதி சோட சோபசார பூஜாம், அஷ்டோத்ர அர்ச்சனாம் கரிஷ்யே, ததங்கம கலசம் பூஜாம் கரிஷ்யே

கையிலுள்ள புஷ்பம் அட்சதை வடக்குப் பக்கம் போட்டு விட்டு, மஞ்சள் பிள்ளையாரை வடக்குப் பக்கமாக நகாத்தி வைக்கவும்.

# ஸ்ரீ தர்மசாஹத்தா அஷ்டோத்திர

## ஸதநாமங்கள்

ஓம் மஹா சாஸ்த்ரே நம:
ஓம் மஹா தேவாய நம:
ஓம் மஹா தேவஸுதாய நம:
ஓம் அவ்யயாய நம:
ஓம் லோக கர்த்ரே நம:
ஓம் லோக பர்த்ரே நம:
ஓம் லோக ஹர்த்ரே நம:
ஓம் பராத் பராய நம:
ஓம் த்ரிலோக ரக்ஷகாய நம:
ஓம் தன்வினே நம:
ஓம் தபஸ்வினே நம:
ஓம் பூத ஸைனிகாய நம:
ஓம் மந்தரவேதினே நம:
ஓம் மஹோவேதினே நம:
ஓம் மாருதாய நம:
ஓம் ஜகதீச்வராய நம:
ஓம் லோலாகாத்யக்ஷாய நம:
ஓம் அக்ரண்யே நம:
ஓம் ஸ்ரீமதே நம:
ஓம் அப்ரமேய பராக்ரமாய நம:
ஓம் ஸிம்ஹாரூடாய நம:
ஓம் கஜாரூடாய நம:
ஓம் ஹயாரூடாய நம:
ஓம் மஹாச்வராய நம:
ஓம் நாநாசஸ்த்ரதாய நம:
ஓம் அநர்க்காய நம
ஓம் நா நா வித்யா விசாரதாய நம:
ஓம் நா நா ரூப தராய நம:
ஓம் வீராய நம:
ஓம் நாநாப்ராணி நிஷேவகாய நம:
ஓம் பூஜேசாய நம:
ஓம் பூஜிஜதாய நம:
ஓம் ப்ருத்யாய நம:
ஓம் புஜங்கரபரணோத்தமாய நம:
ஓம் இக்ஷீதன்வினே நம:
ஓம் புஷ்ப பாணாய நம:
ஓம் மஹா ரூபாய நம:
ஓம் மஹாப்ரபுவே நம:
ஓம் மாயாதேவீஸுதாய நம:
ஓம் மான்யாய நம:
ஓம் மஹாநீதாயே நம:
ஓம் மஹா குணாய நம:
ஓம் மஹா சைவாய நம:

ஓம் மஹா ருத்ராய நம:
ஓம் வைஷ்ண வாய நம:
ஓம் விஷ்ணு பூஜகாய நம:
ஓம் விக்னேசாய நம:
ஓம் வீரபத்ரே சாய நம:
ஓம் பைரவாய நம:
ஓம் ஷ்ணமுகத்ரு வாய நம:
ஓம் மேருச்ருங்க ஸமாஸீனாய நம:
ஓம் முனிஸஹ்கநிஷேவிதாய நம:
ஓம் தேவாய நம:
ஓம் பத்ராய நம:
ஓம் ஜகந்நாதாய நம:
ஓம் கணநாதாய நம:
ஓம் கணேச்வராய நம:
ஓம் மஹா யோகினே நம:
ஓம் மஹா மாயினே நம:
ஓம் மஹா ஞானினே நம:
ஓம் மஹா ஸ்திராய நம:
ஓம் தேவ சாஸ்த்ரே நம:
ஓம் பூத சாஸ்த்ரே நம
ஓம் பீமஹாஸ பராக்ரமாய நம:
ஓம் நாக ஹாராய நம:
ஓம் நாக கேசாய நம:
ஓம் வ்யோம் கேசாயு நம:
ஓம் ஸநாதனாய நம:
ஓம் ஸுகுணாய நம:
ஓம் நிர்குணாய நம:
ஓம் நித்யாய நம:
ஓம் நித்ய த்ருப்தாய நம:
ஓம் நிராச் ரயாய நம:
ஓம் லோகாச் ரயாய நம:
ஓம் கணாதீசாய நம:
ஓம் சது: ஷ்ஷஷ்டிகலாமயாய நம:
ஓம் ரிக்யஜுஸ்ஸாமாதர்வண ரூபிணே நம:
ஓம் மல்லகா ஸுரபஞ்ஜணாய நம:
ஓம் த்ரிமூர்த்தயே நம:
ஓம் தைத்ய மதனாய் நம:
ஓம் ப்ரகருதயே நம:
ஓம் புருஷோத்தமாய நம:
ஓம் கால ஞானினே நம:
ஓம் மஹா ஞானினே நம:
ஓம் காமதாள நம
ஓம் கமலேக்ஷணாய் நம:

| | | | |
|---|---|---|---|
| ஓம் கல்பவ்ருஷாய | நம: | ஓம் பரமா த்மனே | நம: |
| ஓம் மஹாவ்ருக்ஷாய் | நம: | ஓம் ஸதாங்க தயே | நம: |
| ஓம் வித்யா வ்ருக்ஷாய | நம: | ஓம் அனந்தாதித்ய ஸம்காசாய | நம: |
| ஓம் விபூதி தாய | நம: | ஓம் ஸீப்ரஹ்மண்யானு ஜாய | நம: |
| ஓம் ஸம்ஹார தாபவிச்சேத்ரே | நம: | ஓம் பலினே | நம: |
| ஓம் பசுலோக பயங்கராய | நம: | ஓம் பக்தானு கம்பினே | நம: |
| ஓம் ரோக ஹந்தரே | நம: | ஓம் தேவே சாய | நம: |
| ஓம் ப்ராண தாத்ரே | நம: | ஓம் பகவதே | நம: |
| ஓம் பரகர்வ விபஞ்ஜனாய | நம | ஓம் பக்த வத்ஸலாய | நம: |
| ஓம் ஸ்ர்வ சாஸ்த்ராத்த தத்வக்ஞாய | நம: | | |
| ஓம் நீதி மதே | நம: | "ஓம் நானாவித பரிமள பத்ர (மந்திர) | |
| ஓம் பாப பஞ்ஜ்னாய | நம: | புஷ்பாணி ஸமர்ப்யாமி" | |
| ஓம் புஷ்கலா பூர்ணா ஸம்யுக்தாய | நம: | | |

# அருள்மிகு ஸ்ரீ ஐயப்பன்

# நூற்றெட்டு சரணக் கோவை

| | | |
|---|---|---|
| ஓம் | கன்னிமூல கணபதி பகவானே | சரணம் ஐயப்பா |
| ஓம் | காந்தமலை ஜோதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஹரிஹர சுதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அன்னதான பிரபுவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆறுமுகன் சோதரனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆபத்தில் காப்போனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இன்தமிழ்ச் சுவையே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இச்சை தவிர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஈசனின் திருமகனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஈடில்லாத் தெய்வமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உண்மைப் பரம் பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உலகாளும் காவலனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஊமைக்கருள் புரிந்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஊழ்வினை அழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | எளியோர்க்கு அருள்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | எங்கள் குலதெய்வமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஏழை பங்காளனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஏகாந்த மூர்த்தியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஐங்கரன் தம்பியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஐயமெல்லாம் தீர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஒப்பில்லாத் திருமணியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஒளிரும் திருவிளக்கே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஓங்காரப் பரம்பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஓதும் மறைபொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஔடதங்கள் அருள்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சௌபாக்கியம் அளிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கலியுக வரதனே | சரணம் ஐயப்பா |

| | | |
|---|---|---|
| ஓம் | சபரிமலை சாஸ்தாவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சிவன்மால் திருமகனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சிவவைணவ ஐக்கியமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அச்சங்கோவில் அரசே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆரியங்காவு ஐயாவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | குளத்துப் புழைப் பாலனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பொன்னம்பல வாசனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | வில்லாளி வீரனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | வீரமணி கண்டனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உத்திரத்தில் உதித்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உத்தமனே சத்தியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பம்பையிலே பிறந்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பந்தள மாமணியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சகலகலை வல்லோனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சாந்தம் நிறை மெய்ப்பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | குருமகனின் குறைதீர்த்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | குருதட்சணை அளித்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | புலிப்பாலைக் கொணர்ந்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | வன்புலியின் வாகனனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | தாயின் நோய் தீர்த்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | குருவின் குருவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | வாபரின் தோழனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | துளசிமணி மார்பனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | தூயவுள்ளம் அளிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இருமுடிப் பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | எருமேலி சாஸ்தாவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | நித்திய பிரம்மச்சாரியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | நீலவஸ்திர தாரியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பேட்டை துள்ளும் பேரருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பெரும் ஆணவத்தை அழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சாஸ்தாவின் நந்தவனமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சாந்திதரும் பேரழகே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பேரூத்தோடு தரிசனமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பேதமையை ஒழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | காளை கட்டி நிலையமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அதிர்வேட்டுப் பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அழுதமலை ஏற்றமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆனந்தமிகு பஜனைப் பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கல்லிடும் குன்றே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உடும்பாறைக் கோட்டையே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இஞ்சிப் பாறைக் கோட்டையே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கரியிலந் தோடே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கரிமலை ஏற்றமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கரிமலை இறக்கமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பெரியானை வட்டமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சிறியானை வட்டமே | சரணம் ஐயப்பா |

| | | |
|---|---|---|
| ஓம் | பம்பா நதி தீர்த்தமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பாவமெல்லாம் அழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | திருவேணி சங்கமமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஸ்ரீ இராமர் பாதமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சக்தி பூஜை கொண்டவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சபரிக்கு அருள் செய்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | தீப ஜோதித் திரு ஒளியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | தீராத நோய் தீர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பம்பா விளக்கே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பழவினைகள் ஒழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | தென்புலத்தார் வழிபாடே | சரணம் ஐயப்பா |
| ஓம் | திருபம்பையின் புண்ணியமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | நீலிமலை ஏற்றமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | நிறைவுள்ளம் தருபவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அப்பாச்சி மேடே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இப்பாச்சிக் குழியே | சரணம் ஐயப்ப |
| ஓம் | சபரி பீடமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சரங்குத்தி ஆலே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உரல்குழி தீர்த்தமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கருப்பண்ண சாமியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கடுத்த சாமியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பதினெட்டாம் படியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பகவானின் சந்நிதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பரவசப் பேருணர்வே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பசுவின் நெய் அபிஷேகமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கற்பூரப் பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | நாகராசப் பிரபுவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | மாளிகைப் புறத்தம்மனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | மஞ்சமாதா திருவருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அக்கினிக் குண்டமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அலங்காரப் பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பஸ்மக் குளமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சற்குரு நாதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | மகர ஜோதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | மங்கள மூர்த்தியே | சரணம் ஐயப்பா |

ஓம் அறிந்தும் அறியாமலும் தெரிந்தும் தெரியாமலும் செய்த சகல குற்றங்களையும் பொறுத்துக் காத்து ரட்சிக்க வேண்டும். ஓம் ஸ்ரீ சத்தியமான பொண்ணு பதினெட்டாம் படி மேல் வாழும். ஓம் ஸ்ரீ அரிஹர சுதன் ஆனந்த சித்தன் ஐயன் ஐயப்ப சுவாமியே சரணம் ஐயப்பா. காசி, ராமேஸ் வரம், பாண்டி, மலையாளம், அடக்கி ஆளும் ஓம் ஸ்ரீ அரிஹர சுதன் ஆனந்த சித்தன் ஐயன் ஐயப்ப சுவாமியே சரணம் ஐயப்பா.

தினமும் ஐயன் 108 சரண கோவையை காலை மாலை பாராயணம் செய்து இஷ்ட சித்திகளை அடையுங்கள்.

# ஸ்ரீ ஐயப்பன் பஜனை பாடல்

கற்பகத்தருவே கற்பூர நாதா
(கும்மி மெட்டில் பாடவும்)

பந்தளம் தந்திட்ட நேசனையா - என்றும்
பக்தர்கள் உள்ளத்தில் வாசனய்யா
விந்தைகள் செய்திடும் பிள்ளையப்பா - அவன்
செந்திலதிபனின் தம்பியப்பா -

(பந்தளம்)

தேவாதி தேவரும் கூடி வந்து - எங்கள்
தேவன் ஐயப்பனை நாடி வந்து
தேவர்கள் யாவரும் பாடி வந்து - எங்கள்
தேவராம் ஐயனை வாழ்த்துகின்றார்

(பந்தளம்)

முத்தொழில் நாதரும் நாடி வந்து - எங்கள்
முத்தான பிள்ளையைக் காணவந்து
தத்துவங்கள் பதினெட்டுப் படிகளில்
சத்தியபாலனைக் கண்டு சென்றார்

(பந்தளம்)

எட்டு திசைகளும் கூடி வந்து ஐயன்
கூட்டம் இருமுடி தாங்கி வந்து
திட்டமிட்டபடி பம்பை நதி வந்து
கூட்டமாக பூஜை செய்திடுவார்

(பந்தளம்)

கற்பகத்தருவும் நாடி வந்து எங்கள்
கற்பூர நாதனைக் காண வந்து
அற்புதங்கள் பல செய்தவராம் அவன்
பொற்பாதம் கண்டு பணிவோமையா

(பந்தளம்)

ஜாதியும் பேதமும் இல்லையப்பா - எங்கள்
ஜோதி வடிவான பிள்ளையிடம்
பாதி பிறை தொழும் வாபர் சாமியின்
பள்ளியும் பக்கத்தில் பாருங்கய்யா

(பந்தளம்)

வையகம் போற்றிடும் ஐயனைக் கண்டதும்
ஐயங்கள் யாவும் மறையுதய்யா
நெய்யில் குளித்திடும் ஐயனைக் கண்டதும்
நெஞ்சங்கள் யாவும் மகிழுதய்யா

(பந்தளம)

## கன்னிமூல கணபதியை வேண்டிக்கிட்டு

கன்னிமூல கணபதியை வேண்டிக்கிட்டு - நாங்க
கார்த்திகை மொததேதி மாலை இட்டோம் - நாங்க
அய்யப்பா அய்யப்பா என்றே சொல்லி - நாங்க
ஆறுவாரம் தானே நோம்பிருந்தோம் - நாங்க (கன்னி)

எங்க குருசாமி துணைகொண்டு அவர்பாதம் நம்பிக்கிட்டு
இருமுடியை சொமந்துகிட்டு வந்தோமய்யா
ஆறுபடை வீடு சென்று கந்தனையே வேண்டிக்கிட்டு
யாத்திரையாய் நடந்து வந்தோமய்யா (கன்னி)

குருவாயூர் கோயில் முதல் கன்னியாகுமரிவரை
தரிசனமே செய்துவிட்டு வந்தோமய்யா
எருமேலிபேட்டைதுள்ளி வாவரையே வேண்டிக்கிட்டு
பேரூர்தோட்டில் பொரிபோட்டு வந்தோமய்யா (கன்னி)

காளைகட்டி அஞ்சல் வந்து அழுதாமலை ஏறிகிட்டு
கரிமலையின் உச்சியிலே வந்தோமய்யா
பம்பையிலே குளிச்சிப்புட்டு பாவங்களைத் தொலைச்சுப்புட்டு
நீலிமலை ஏறிகிட்டு வந்தோமய்யா (கன்னி)

பதினெட்டாம் படிதாண்டி பகவானே உனைவேண்டி
கற்பூரஜோதிதனைக் கண்டோமய்யா
மகரஜோதியைக் கண்டு மனமாரச் சரணம் போட்டு
மணிகண்டா உன்மகிமை அறிந்தோமய்யா (கன்னி)

## சரணம் சரணம் என்றால் சபரிமலை கிடுகிடுக்கும்

சரணம் சரணம் என்றால் சபரிமலை கிடுகிடுங்க
மூல முதற்பொருள் விநாயகனை வணங்கிடுவோம்
ஜெயந்திநகர் முருகனுக்கு மேளதாளம் முழங்கிடுவோம்
ஆத்தாள் ஈஸ்வரியை அன்புடனே அழைத்திடுவோம்
ஐயப்ப சுவாமிக்கு சரணகோஷம் முழங்கிடுவோம் (சரணம்)

கார்த்திகை மாலையிட்டு கடும்விரம் இருந்துவந்தோம்
மார்கழியிலே கட்டும்கட்டி மகரஜோதி காண வந்தோம்
எருமேலி பேட்டைதுள்ளி இன்பமுடன் ஆடிவந்தோம்
பேரூர்த்தோட்டில் பொரிபோட்டு பேரின்பம் அடைந்து வந்தோம் (சரணம்)

அழுதமலை ஏற்றத்திலே ஆனந்தமாய் ஏறி வந்தோம்
கரிமலையின் உச்சியிலே பகவதியை வேண்டி வந்தோம்
பம்பா நதிக்கரையில் சக்திபூஜை நடத்தி வந்தோம்
நீலிமலை ஏற்றத்திலே நின்பாதம் சரணடைந்தோம் (சரணம்)

சபரிபீடம் சரங்குத்தியில் சரத்தைப்போட்டு வணங்கி வந்தோம்
பதினெட்டாம் படியடைந்து பக்தியுடன் ஏறி வந்தோம்
நெய் அபிஷேகம் செய்து நாங்க நெஞ்சுருக வேண்டி வந்தோம் (சரணம்)

## ஸ்ரீ சபரிவாசா பாஹிமாம்

ஸ்ரீ சபரிவாசா பாஹிமாம்
ஸ்ரீ ஆனந்த ரூபனே பாஹிமாம்
ஸ்ரீ மோகன ரூபனே பாஹிமாம்
ஸ்ரீ ஜோதீஸ்வ ரூபனே பாஹிமாம் (ஸ்ரீ சபரிவாசா)
நானிருக்க பயமேன் என்றே சொல்வார்
நாடிவந்தோரைக் காத்திடுவார்
உன்னை எண்ணியெண்ணி நெஞ்சுருகினேன்
உன்னை எங்கெங்கோ தேடி நான் ஓடினேன்
பண்ணிசைத்து உன்புகழ் பாடினேன்
பிரபோ பாராமுகம் இது நியாயமா (ஸ்ரீ சபரிவாசா)

## சந்தனமுனா சந்தனம்

சந்தனமுனா சந்தனம் சபரிமலை சந்தனம் - அந்த
சந்தனத்த பூசிகிட்டு சரணம் கோஷம் போடுங்க
அத்தருனா அத்தரு அழுதமலை அத்தரு - அந்த
அத்தரத்தான் பூசிக்கிட்டு ஆனந்தமா ஆடுங்க
பன்னீருனா பன்னீரு பம்பா நதி பன்னீரு - அந்த
பன்னீரதான் தெளிச்சுகிட்டு பாவங்களை போக்கிடுங்க
குங்கும்னா குங்குமம் குழத்துபுழை குங்குமம்
குங்குமத்தை வைச்சுகிட்டு கூட்டமாக ஆடுங்க
சத்தியமான படியுங்க ஐயன் பதினெட்டாம் படியுங்க
படியில் தேங்கா உடையுங்க பகவான வேண்டுங்க
நெய்யபிஷேகம் செய்திடுங்க நெஞ்சுருக வேண்டுங்க
நெனச்சதெல்லாம் தருவார் நம்ம நீலிமலை வாசனுங்க

## ஆயிரம் தீபங்கள் ஆயிரம் தீபங்கள்

ஆயிரம் தீபங்கள் ஆயிரம் தீபங்கள் கண்ணில் தெரியுது பம்மையாற்றில்
மணிகண்டன் பிறந்தது பம்பையாற்றில் (கோஷ்டி)
சரணம் சரணம் ஐயப்பா சரனாகரனே ஐயப்பா
சரணம் சரணம் சரணாகரனே ஸ்ரீ மணிகண்டா ஐயப்பா (கோஷ்டி)
எரிமேலிதானே சென்றிடுவோம் பேட்டைதானே துள்ளிடுவோம்
பேட்டைதுள்ளி வாவரை வணங்கி வனத்தின் நடுவே சென்றிடுவோம்
(ஆயிரம் தீபங்கள்)
அழுதா நதியை அடைந்திடுவோம் அளவில்லா இன்பம் கொண்டிடுவோம்
அழுதையில் மூழ்கி கல்லினை எடுத்து கல்லிடும் குன்றில் இட்டிடுவோம்
(ஆயிரம் தீபங்கள்)
கரிமலை ஏற்றம் ஏறிடுவோம் கரிமலை அம்மனை வணங்கிடுவோம்
கரிமலை அம்மனை வணங்கி கொண்டு வனத்தின் நடுவே சென்றிடுவோம்
(ஆயிரம் தீபங்கள்)
கரிமலை இறக்கம் இறங்கிடுவோம்
பம்பா நதியை அடைந்திடுவோம் பம்பா சக்தி நடத்திடுவோம்
பம்பா சக்தி நடத்தி சென்று பம்பா வாசனை வேண்டிடுவோம்
(ஆயிரம் தீபங்கள்)
பதினெட்டுப் படியை அடைந்திடுவோம் படியில் தேங்காய் உடைத்திடுவோம்
படியில் தேங்காய் உடைத்து சென்று நெய்யபிஷேகம் செய்திடுவோம்
(ஆயிரம் தீபங்கள்)

## மாமலை வாசா மணிகண்டா

மணிகண்டா மணிகண்டா
மாமலை வாசா மணிகண்டா
வில்லாளி வீரனே மணிகண்டா
வீரமணி கண்டா மணிகண்டா (மணி)

அரிகர சுதனே மணிகண்டா
அருளைத் தருவாய் மணிகண்டா
ஆனந்த ரூபனே மணிகண்டா
இருமுடி பிரியனே மணிகண்டா
இன்பமே தருவாய் மணிகண்டா
ஈடில்லாத் தெய்வமே மணிகண்டா
நீ வருவாயே மணிகண்டா (மணி)

உத்தமனே சத்தியனே மணிகண்டா
உண்மை உணர்த்திய மணிகண்டா
ஊமைக்கு அருளிய மணிகண்டா
ஊழ்வினை அழிப்பாய் மணிகண்டா
எங்கும் நிறைந்தவனே மணிகண்டா
எங்கள் குறை தீர்ப்பாய் மணிகண்டா
ஏகாந்த மானவனே மணிகண்டா

ஏற்றமே தருவாய் மணிகண்டா
ஐயப்பா தெய்வமே மணிகண்டா
ஐயமெல்லாம் தீர்ப்பாய் மணிகண்டா
ஒப்பற்ற தெய்வமே மணிகண்டா
உலகம் தழைக்கச் செய் மணிகண்டா
காந்தமலை ஜோதியே மணிகண்டா
காக்க வேணும் அய்யனே மணிகண்டா
தலைவலி தீர்த்தவனே மணிகண்டா
தன் குணமே தருவாய் மணிகண்டா (மணி)

## ஐயன் பவனி

பவனிவாரார் இங்கே சுவாமி சரணம் ஐயப்பா
வாபர் சுவாமி கூடவாரார் சரணம் ஐயப்பா
காவலர்கள் கூட வாரார் சரணம் ஐயப்பா
ஆவலோடு கூப்பிடுவோம் சரணம் ஐயப்பா (பவனி)

அம்பும் வில்லும் கையில் ஏந்தி சுவாமி வருகிறார்
எம்பெருமான் துள்ளித் துள்ளி ஆடி வருகிறார்
துன்பம் எல்லாம் தீர்ந்திடவே பவனி வருகிறார்
இன்பமோடு கும்பிடுவோம் சரணம் ஐயப்பா (பவனி)

தந்தை தாயும் ஆன சுவாமி பவனி வருகிறார்
வேதியர்கள் சபை நடுவே சுவாமி வருகிறார்
பூதப் படைப்புகளுடன் ஐயன் வருகிறார்
இத்தருணம் காத்திடுவார் சரணம் ஐயப்பா (பவனி)

கடகடவெனபேரி முழங்க சுவாமி வருகிறார்
கொட்டு வாத்தியம் முழங்கிட ஐயன் வருகிறார்
மாடன் சடையன் பொருளன் இருளன் சரணம் ஐயப்பா
ஓடி வரவே பவனி வாரார் சரணம் ஐயப்பா (பவனி)

மின்னல் போல ஒளி விளங்க சரணம் ஐயப்பா
பொன்னுமேனி கண்டிடவே சரணம் ஐயப்பா
தனிச்சிலம்பு சல்லடையும் சரணம் ஐயப்பா
கண கணவென சலங்கை குலுங்க பவனி வருகிறார் (பவனி)

பிள்ளைக் குறையால் உள்ளம் நொந்து வருந்தும் பக்தன்
உள்ளம் இறங்கிக் கருணை காட்டிப் பாரும் ஐயப்பா
வள்ளல் என்று பெயர் விளங்கும் எங்கள் ஐயப்பா
அள்ளி அள்ளி ஏவி விடுவாய் செல்வக் குவியலை (பவனி)

கடும் பிணியின் கொடுமையினால் வருந்தும் அன்பரை
நொடிப் பொழுதில் பிணி அகற்றிக் காத்து அருளய்யா
சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா
சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா (பவனி)

## கருப்பன் வாரான்

கருப்பன் வாரான் கருப்பன் வாரான் கறுப்பசாமி
அவன் கார்மேகம் போல வாரான் கறுப்பசாமி
முக்கொண்டைகாரன் வாரான் கறுப்பசாமி
அவன் முன்கோபக்காரன் வாரான் கறுப்பசாமி
பம்பா நதி காவல்காரன் கறுப்பசாமி
பதினெட்டுப் படிக்காவல் கறுப்பசாமி
சந்தனப் பொட்டுக்காரன் கறுப்பசாமி
அந்த சபரிமலை காவல்காரன் கறுப்பசாமி
கச்சையை கட்டிவாரான் கறுப்பசாமி
அவன் கை அருவாள் கொண்டுவாரான் கறுப்பசாமி
வில்லுபாட்டு பாடி வாரான் கறுப்பசாமி
அவன் விதவிதமாய் ஆடிவாரான் கறுப்பசாமி
மீசையை முறுக்கி வாரான் கறுப்பசாமி
அவன் முச்சந்தியில் ஆடி வாரான் கறுப்பசாமி
பந்தம் கையில் பிடித்துவாரான் கறுப்பசாமி
அவன் பரிவேட்டை யாடிவாரான் கறுப்பசாமி
முந்தியில் உருமாறும் கறுப்பசாமி
அவன் முகத்தழகை காட்டிவாரான் கறுப்பசாமி
சந்தனத்தை பூசிவாரான் கறுப்பசாமி
அவன் சரண கோஷம் போட்டுவாரான் கறுப்பசாமி

திம் தகத்தோம் திம் தகத்தோம் ஐயப்பா
தெய்வத்தில் நீ ஒருவன் மெய்யப்பா
தேடினோம் கூடினோம் கருணை செய்யப்பா
தினம் உனை நாடினோம் சாமி ஐயப்பா (திம்)
மார்கழியில் நாங்களெல்லாம் பேட்டைதுள்ளிடுவோம்
மலைமீது ஏறி வந்து உன்னைப்பாடுவோம்
வரிசையுடன் பம்பை நதி நீரில் ஆடுவோம்
வாவரெனும் துணைவனையும் வணங்கக் கூடுவோம்
மனதில் எமக்கு இடம் கொடுத்து உதவி செய்யப்பா
மகர விளக்கைக் காண வேண்டும் சாமி ஐயப்பா
சாமி திம் தகத்தோம் - தோம்
ஐயப்பா திம் தகத்தோம் (சாமி)
சாமியே ஐயப்பா ஐயப்பா சாமியே
கடலும் வானும் உன்னாலே காற்றும் மழையும் உன்னாலே
உடலின் உறுதி உன்னாலே உள்ளம் செழிப்பதும் உன்னாலே
கன்னிபுரத்து மாதேவி காவலிருப்பதும் உன்னாலே
கார்த்திகை மாதம் வந்தாலே ஐயப்பன்மார்களும் உன்னோடு
வாக்கும் வலிமையும் நீயப்பா வாழ்வைத் தருவாய் ஐயப்பா
வீரமும் செல்வமும் நீயப்பா வெற்றியைத் தருவாய் ஐயப்பா
சாமி திம் தகத்தோம் - தோம்
ஐயப்ப திம் தகத்தோம் (சாமி)
சாமி சரணம் ஐயப்பா

## எங்க சாமி

எங்க சாமி தங்க சாமி ஐயப்பசாமி - அந்த
சபரிமலை மீதிருக்கும் மெய்யப்பசாமி
சஞ்சலங்கள் தீர்த்து வைக்கும் ஐயப்பசாமி - எங்க
சரணகோஷம் கேட்டு வரும் மெய்யப்பசாமி

குழு: (எங்க சாமி)

பம்பா நதிக்கரையில் ஐயப்பசாமி - எங்க
பாவங்களை தீர்த்துவைக்கும் மெய்யப்பசாமி
காந்தமலை மீதினிலே ஐயப்பசாமி - எங்க
மனங்குளிர காட்சி தரும் மெய்யப்பசாமி

குழு: (எங்க சாமி)

நெய்யாலே குளிச்சிடுவான் ஐயப்பசாமி - எங்க
நெஞ்சினிலே நிறைந்திடுவான் மெய்யப்பசாமி
கனிவோடு காத்தருளும் ஐயப்பசாமி - எங்க
கண்கண்ட தெய்வம் நீயே மெய்யப்பசாமி

குழு: (எங்க சாமி)

## வந்தோமையா சபரி வந்தோமையா

வந்தோமையா சபரி வந்தோமையா
கட்டேந்தி சபரிக்கு வந்தோமையா
கார்த்திகை நல்ல நாளில் மாலையிட்டு
மார்கழி நல்ல நாளில் கட்டும் கட்டி
(வந்தோ)

குங்குமபொட்டு சந்தன பொட்டு வைச்சுகிட்டு
கூட்டமாக சபரிமலை ஏறிகிட்டு
சாமி சரணம் நாமம் அதை சொல்லிக்கிட்டு
சாமியே திந்தமிக்க ஐயப்பா திந்தமிக்க
ஜிகுதாளம் போட்டுகிட்டு பேட்டைதுள்ளி ஆடிகிட்டு
(வந்தோ)

காட்டானை கூட்டத்த பார்த்துவிட்டு
கடுவாய் புலிகளையும் நோக்கிகிட்டு
சாமி சரணம் நாமம் அதை சொல்லிகிட்டு
சாமியே திந்தமிக்க ஐயப்பா திந்தமிக்க
ஜிகுதாளம் போட்டுகிட்டு பேட்டைதுள்ளி ஆடிகிட்டு
(வந்தோ)

## சரணம் ஐயப்பா

சரணம் சரணம் ஐயப்பா
சபரிமலை சாஸ்தாவே ஜோதி நீயப்பா (சரணம்)
தந்தனத்தான் பாடும் மலை
சரண கோஷம் முழங்கும் மலை
சஞ்சலங்கள் தீர்க்கும் மலை
சாமி வாழும் சபரிமலை (சரணம்)
பம்பை நதி ஓடும் மலை
பம்பா வாசன் வாழும் மலை
பாவங்கள் போக்கும் மலை
சாமி வாழும் சபரிமலை (சரணம்)

## நிலாவின் ஒளிவீசும்

நிலாவில் ஒளிவீசும் நின்னுடைய நீலவானம் ஐயா - இந்த
உலகில் அனைவரையும் ஒன்றாக்கும் உந்தன் நாமம் ஐயா (நிலா)
மலைகள் கடந்து வந்தோம் - ஐயப்பா மனமிரங்கி வருவாய்
அலையும் மனதினிலே ஐயப்பா அமைதி தாராயோ (நிலா)
வனங்கள் கடந்து வந்தோம் எமக்கொரு மார்க்கம் அருளாயோ
இருளை அகற்றிடவே என் வாழ்வில் இன்பம் தாராயோ (நிலா)
நியமம் ஒன்றறியேன் நின்னடியார் நிழலில் நின்றறியேன்
கயவன் நானறியேன் ஐயப்பா கருணை புரியாயோ (நிலா)
மதுராபுரி வதனா ஐயப்பா மதன மோகனனே - வணங்கும்
குருமுனிவன் நன்மொழியால மகிழும் சிவமணியே (நிலா)

## ஐயப்ப நாமம் சொல்லு

கருப்பனும் முன்னே வர கடுத்தசாமி பின்னே வர
வாபரும் கூடவர வந்தோமய்யா சபரிமலை
ஐயப்ப நாமம் சொல்லு நல்ல சரண கோஷம் போடு
சந்தனக் காட்டினிலே புலிகள் எல்லாம் வழி கொடுக்க
கரிமுகன் துணைக்கு வர வந்தோம் ஐயா சபரிமலை

## ஆடுராஜா எங்கள் நாகராஜா

ஆடுராஜா பிரபு நாகராஜா - எங்கள்
ஐயப்பன் பேரை சொல்லி ஆடுராஜா
பாடுராஜா பிரபு நாகராஜா - எங்கள்
ஐயப்பன் பேரை சொல்லி பாடுராஜா

குழு: (ஆடுராஜா)

சரண கோஷம் போட்டுவரும் பக்தர பாரு
சன்னிதியை நாடிவரும் கூட்டத்த பாரு
ஐயனைப் பாடும் கன்னி சாமியப் பாரு
காட்டில் கருணையுடன் வழி நமக்கு கொடுத்திடு பாரு

## பள்ளிக்கூடம் சபரிமலை

பள்ளிக்கூடம் சபரிமலையிங்க
படிக்கும் பாடமெல்லாம் சரணகோஷங்க
சொல்லித் தந்தார் குருசாமிங்க
நாமும் சொல்லச் சொல்லச் கோடி நன்மைங்க (பள்ளிகூடம்)

கார்த்திகையிலே மாலை போடுங்க
மார்கழி கடைசியிலே புறப்பட்டு வாங்க
ஊர்வலம் போல் ஏறும் கூட்டமுங்க
அன்பால் ஒன்றுபட்ட ஐயப்பன் மாருங்க (பள்ளிகூடம்)

பம்பை கரையில் வந்த தெய்வங்க
அந்த பந்தளத்தில் வளர்ந்த சாமிங்க
நம்பி வந்தால் இன்பம் தானுங்க
இதுவே நல்லோர்கள் சொன்னச் சொல்லுங்க (பள்ளிகூடம்)

நீண்டு வரும் காடு மலையிங்க
எங்கும் நிறைந்து வரும் சாமிமாருங்க
பொன்னான ஜோதி பாருங்க
நாம கண் படைச்ச பயன் அதுதாங்க (பள்ளிகூடம்)

## எல்லாம் மணக்குது ஐயப்பன் மலையிலே

என்ன மணக்குது எங்கே மணக்குது
எல்லாம் மணக்குது ஐயப்பன் மலையிலே
அல்லிமலர் வாசமது எங்கே மணக்குது
ஹரிஹர புத்திரனின் மேலே மணக்குது
மல்லிகைப்பூ மரிக்கொழுந்து எங்கே மனக்குது
மணிகண்ட சாமியின் மேலே மணக்குது
சந்தனமும் ஜவ்வாது எங்கே மணக்குது
சபரிகிரி வாசனின் மேலே மணக்குது
மஞ்சள் மகிமையது எங்கே மணக்குது
மஞ்சமாதா தேவியவள் மேலே மணக்குது
முல்லைமலர் வாசமிது எங்கே மணக்குது
மோகினி பாலகனின் மேலே மணக்குது
காட்டுமல்லி நாட்டுமல்லி எங்கே மணக்குது
கருணாகர மூர்த்தியின் மேலே மணக்குது
கற்பூர வாசமது எங்கே மணக்குது
காந்தமலை வாசனவன் மேலே மணக்குது
குங்குமப்பூ ஜவ்வாது எங்கே மணக்குது
குளத்துப்புழை பாலகனின் மேலே மணக்குது

## ஓடிவா ஐயப்பா

ஓடிவா ஐயப்பா ஓடிவா சுவாமி
நீ ஓடிவா ராஜா நீ ஓடிவா தேவா
நீ ஓடிவா கண்ணா - இந்த
பக்தர்கள் பஜனைக்கு ஓடிவா சுவாமி - அந்த
பம்பா நதி கடந்து ஓடிவா சுவாமி (ஓடிவா)

# சாஸ்தா பஞ்ச ரத்னம்

லோகவீரம் மஹா பூஜ்யம்
ஸர்வ ரஷ்கரம் விபும்
பார்வதீ ஹ்ருதயானந்தம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா

விப்ர பூஜ்யம் விஸ்வ வந்த்யம்
விஷ்ணு சம்போ ப்ரியம்ஸுதம்
க்ஷிப்ர ப்ரசாஷத நிரதம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா
மத்த மாதங்க கமணம்
காருண்யாம்ருத பூரிதம்
ஸர்வ விக்ன ஹரம்தேவம்

சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா
அஸ்மத் குலேச்வரம் தேவம்
அஸ்மத் சத்ரு விநாசனம்
அஸ்மத் இஷ்ட ப்ரதா தாரம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா

பாண்யேச வம்ச திலகம்
கேரளே கேளி விக்ரஹம்
ஆர்த்த த்ராண பரம்தேவம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா

ஸ்ரீ பூத நாதா சதானந்தா
ஸர்வ பூத தயாபரா
ரட்ச ரட்ச மஹா பாகு
சாஸ்த்தேதுப்யம் நமோ நமஹ
சுவாமியே சரணம் ஐயப்பா

# ஸ்ரீ ஐயப்பன் கவசம்

கவசம் என்றால் காப்பு என்று பொருள். போருக்கு போகிறவன் கவசம் அணிந்து செல்கிறான். தன்னை காத்துக்கொள்வதற்காக இந்த உலகத்தில் மனித வாழ்க்கையே ஒரு போராட்டமாக இருக்கிறது. அதிலிருந்து நம்மை காத்துக்கொள்ள இந்தக் கவசம் பெரிதும் பயன்படும். நம்பிக்கைதான் அடிப்படை! தெய்வ அருளும் வெற்றியும் கிட்டுவது உறுதி.

இக்கவசத்தை வழிமுறை தவறாது பாராயணம் செய்யுங்கள்.

## காப்பு

அரிஹர புத்திரனை ஆனந்த ரூபனை
இருமூர்த்தி மைந்தனை ஆறுமுகன் தம்பியை
சபரிகிரீசனை சாந்த சொரூபனை
தினம் தினம் போற்றி பணிந்திடு வோமே

ஐயப்ப தேவன் கவசமிதனை
அனுதினம் சொல்ல அல்லல்கள் ஒழியும்
தினம் தினம் துதிக்கத் தீரும் வினையெல்லாம்
நாடிய பொருளும் நலமும் வருமே

## நூல்

மண்ணுலகெல்லாம் காத்தருள் செய்ய
மணிகண்ட தேவா வருக வருக
மாயோன் மைந்தா வருக வருக
ஐங்கரன் சோதரா ஐயப்பா வருக

புலிவாகனனே வருக வருக
புவியெல்லாம்காத்திட வருக வருக
பூரணை நாதனே வருக வருக
புண்ணிய மூர்த்தியே வருக வருக

பூத நாயகா வருக வருக
புஷ்களைபதியே வருக வருக
பொன்னம்பலத்துறை ஈசா வருக
அடியாரைக் காக்க அன்புடன் வருக

வருக வருக வாசவன் மைந்தா
வருக வருக வீரமணிகண்டா
வஞ்சனை நீக்கிட வருக வருக
வல்வினை போக்கிட வருக வருக

ஐயம் தவிர்த்திட ஐயப்பா வருக
அச்சம் அகற்றிட அன்பனே வருக
இருவினை களைந்தே எனை யாட்கொள்ள
இருமூர்த்தி மைந்தா வருக வருக
பதினெண்படியை மனதில் நினைக்க

பண்ணிய பாவம் பொடிப் பொடியாகும்
ஐயப்பா சரணம் என்றே கூறிட
ஐம்பூதங்களும் அடிபணிந்திடுமே

சபரிகிரீசனை நினைத்தே நீறிட
துன்பங்கள் எல்லாம் தூள் தூளாகும்
சரணம் சரணம் என்றே சொல்லிட
சித்திகள் யாவும் வந்தடைந்திடுமே

பம்பையின் பாலன் பெயர் சொல்லிடவும்
பகைவர் களெல்லாம் பணிந்தே வணங்குவார்
ஐயப்பன் பாதம் அனுதினம் நினைக்க
அவனியிலுள்ளோர் அடிபணிந்தேத்துவர்

சரணம் சரணம் ஐயப்பா சரணம்
சரணம் சரணம் சபரி கிரீசா
சரணம் சரணம் சத்குரு நாதா
சரணம் சரணம் ஸ்வாமியே சரணம்

## வேண்டுதல்

சிவனார் மகன் என் சிரசினைக் காக்க
நெடுமால் மைந்தன் நெற்றியைக் காக்க
கஜமுகன் தம்பி என் கண்ணினைக் காக்க
நாரணன் பாலன் நாசியைக் காக்க

இருமூர்த்தி மைந்தன் என் இருசெவி காக்க
வாபரின் தோழன் வாயினைக்காக்க
பம்பையின் பாலன் பற்களை காக்க
நான்முக பூஜ்யன் நாவினை காக்க

கலியுக வரதன் என் கழுத்தினை காக்க
குமரன் தம்பி என் குரல்வளை காக்க
புஷ்களை நாதன் புஜங்களை காக்க
முக்கண்ணன் பாலன் முழங்கையை காக்க

வீரமணிகண்டன் விரல்களைக் காக்க
மணிகண்டதேவன் மார்பினைக் காக்க
கயிலை மைந்தன் கைகளை காக்க
வன்புலி வாகனன் வயிற்றினைக் காக்க

முழுமுதற் கடவுள் என் முதுகினை காக்க
இருமுடிப்பிரியன் என் இடுப்பினைக் காக்க
பிரம்பாயுதன் என் பிட்டங்கள் காக்க
தர்ம சாஸ்தா துடைதனைக் காக்க

முருகன் சோதரன் முழங்கால் காக்க
கற்பூர ஜோதி என் கணைக்கால் காக்க
பந்தள பாலன் பாதத்தினை காக்க

விஜய குமாரன் விரல்களைக் காக்க
அன்னதானப் பிரபு அங்கமெல்லாம் காக்க
ஆரியங்கா ஜோதி அன்புடன் காக்க
காட்டாளரூபி காலையில் காக்க
நவக்ரஹநாதன் நடுப்பகல் காக்க

மாலின் மகனார் மாலையில் காக்க
அரிஹர சுதனார் அந்தியில் காக்க
இன்பமய ஜோதி இரவினில் காக்க
எரிமேலி சாஸ்தா என்றுமே காக்க

அரியின் மகனார் அனுதினம் காக்க
நடராஜன் பாலன் நாள்தோறும் காக்க
வாசவன் செல்வன் வலப்புறம் காக்க
இருமுடிஈசன் இடப்புறம் காக்க

காக்க காக்க கருணையால் காக்க
பார்க்க பார்க்க என் பாவம் பொடிபட
இம்மையும் மறுமையும் இல்லாதொழிந்திட
ஈசன் மகன் எனை என்றுமே காக்க

கொடிய விலங்குகளும் கொள்ளை நோய்களும்
குருதியை குடிக்கும் துஷ்டப் பேய்களும்
காந்தமலை தனைக் கருத்தில் கொண்டிட
கலங்கி மறைந்திட கருணை புரிவாய்

பில்லி சூனியம் பலவித வஞ்சனை
பம்பையின் பாலன் பெயர் சொல்லிடவும்
பஞ்சாய் பறக்க வரமெனக் கருள்வாய்
பயங்களைப் போக்கி அபயம் அளிப்பாய்

வாதம் பித்தம் சிலேட்சுமத்துடனே
வாந்தியும் பேதியும் வலிப்பும் சுளுக்கும்
எவ்வித நோயும் எனையணு காமல்
என்றுமே காப்பாய் எரிமேலி தேவா

கல்வியும் செல்வமும் கள்ளமில்லா மனமும்
நல்லோர் உறவும் நாளும் அருள்வாய்
நல்ல மனதுடன் உனை நான் துதிக்க
நித்தமும் அருள்வாய் சபரிகிரீசா

காமம் குரோதம் லோபம் மோஹம்
மதமாச் சர்யமெனும் ஐம்பெரும் பேய்களும்
என்றுமே என்னை அணுகி விடாமல்
ஐயப்ப தேவா வரமெனக் கருள்வாய்

சூது, பொறாமை, பொய், கோபமில்லாமல்
சோரம், லோமம் துன்மார்க்கம் கல்லாமல்

வேத நெறிதனை விலகி நில்லாமல்
வீரமணிகண்டா வரமெனக் கருள்வாய்
மூப்பும் பிணியும் வறுமையும் பசியும்
வந்தெனை வாட்டி வதைசெய் யாமல்
உள்ளன் புடனே உன் திரு நாமம்
அனுதினமும் சொல்ல அருள் தருவாயே

**நமஸ்காரம்**

அரிஹர புத்ரா அன்பா நமோ நமோ
சபரிகிரீசா சாஸ்தா நமோ நமோ
பதினெண் படிவாழ் பரமா நமோ நமோ
ஐங்கரன் சோதரா ஐயப்பா நமோ நமோ

பொன்னம் பலத்துறை புண்யா நமோ நமோ
புலிப்பால் ஈந்த புண்யா நமோ நமோ
சுரிகா யுதமுடைச் சுந்தரா நமோ நமோ
மஹிஷி மர்த்தனா மணிகண்டா நமோ நமோ

சரணம் சரணம் சபரிகிரீசா
சரணம் சரணம் சத்ய ஸ்வரூபா
சரணம் சரணம் சர்வ தயாளா
சரணம் சரணம் ஸ்வாமியே சரணம்

(பிரம்மாண்ட புராணத்தில் கேரளீய மஹா த்மியத்தில் ஸ்ரீ பரசு ராமரால் ஐயப்பனைத் துதிக்கப்பட்ட கவசம்)

# சபரிமலையில் இரவுநடை சாத்தும் போது பாடும் சாஸ்தா அஷ்டகம்

சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா
சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா

ஹரிவரசனம் சுவாமி விச்வ மோஹனம்
ஹரிததீஸ்வரா சுவாமி ஆராத்ய பாதுகம்
அரிவிமர்த்தனம் சுவாமி நித்யநர்த்தனம்
ஹரிஹராத்மஜம் சுவாமி தேவமாச்ரயே (சரணம் ஐயப்பா)

சரண கீர்த்தனம் சுவாமி சக்தமானஸம்
பரண லோலுபம் சுவாமி நர்த்தநாலஸம்
அருணபாஸுரம் சுவாமி பூதநாலயஸம்
ஹரிஹராத்மஜம் சுவாமி தேவமாச்ரயே (சரணம் ஐயப்பா)

பிரணய சத்யகா சுவாமி பிராண நாயகம்
பிரணத கல்பகம் சுவாமி சுப்ரபாஞ்சிதம்
பிரணவ மந்திர சுவாமி கீர்த்தனப்ரியம்
ஹரிஹராத்மஜம் சுவாமி தேவமாச்ரயே (சரணம் ஐயப்பா)

துரக வாகனம் சுவாமி சுந்தரானனம்
வரகதாயுதம் சுவாமி வேதவர்ணிதம்

குரு குருபாகரம் சுவாமி கீர்த்தனப்ரியம்
ஹரிஹராத்மஜம் சுவாமி தேவமாச்ரயே (சரணம் ஐயப்பா)

திரிபுவனார்ச்சித்தம் சுவாமி தேவதாத்மகம்
திரிணயனப் பிரபும் சுவாமி திவ்யதேசிகம்
திரிச பூஜிதம் சுவாமி சிந்திதப்ரம்
ஹரிஹரத்மஜம் சுவாமி தேவமாச்ரயே (சரணம் ஐயப்பா)

பவபயாபஹம் சுவாமி பாவுகாவஹம்
புவன மோஹனம் சுவாமி பூதிபூஷணம்
தவள வாகனம் சுவாமி திவ்ய வாஹனம்
ஹரிஹராத்மஜம் சுவாமி தேவமாச்ரயே (சரணம் ஐயப்பா)

கலமிருதுஸ்மிதம் சுவாமி சுந்தரானனம்
கலப கோமளம் சுவாமி காத்ரமோஹனம்
கலப கேஸரி சுவாமி வாஜிவாஹனம்
ஹரிஹராத்மஜம் சுவாமி தேவமாச்ரயே (சரணம் ஐயப்பா)

ச்ரிதஜனப்ரியம் சுவாமி சிந்திதப்ரிதம்
சருதிவிபூஷணம் சுவாமி ஸாதுஜீவனம்
சுருதி மனோஹரம் சுவாமி கீதலாலஸம்
ஹரிஹராத்மஜம் சுவாமி தேவமாச்ரயே (சரணம் ஐயப்பா)

## சாஸ்திரங்களின் சாரம்

ஏ, மனமே! ஏன் சஞ்சலப்படுகிறாய்? எல்லாம் ஈசன் செயல்! நம் சித்தத்திற்கு இங்கு எதுவும் நடைபெறுவதில்லை.

நல்லது கெட்டது இரண்டும் கலந்ததுதான் உலகம். இன்பம் துன்பம் இரண்டும் கலந்ததுதான் வாழ்க்கை.

பிறக்கும் பொழுது எதுவும் கொண்டு வந்ததில்லை. இறக்கும் பொழுது கொண்டு போவதில்லை.

உலகமே மாயை; நடக்கும் நிகழ்ச்சிகள் நாடகம்; சூத்திரதாரி அவன்! நாம் பின்னிப் பிணைக்கப்பட்டிருக்கிறோம்.

நம் இஷ்டத்திற்கு இந்த உடம்பை எடுத்தோமில்லை. முதல் இறுதி முடிவும் நம் வசமில்லை. நாம் செய்யத்தக்கதெல்லாம் ஒன்றுதான். உயிர்களிடத்தில் அன்பு வேண்டும். தெய்வம் உண்மை என்று தானறிதல் வேண்டும்!

சத்தியவழி நின்று தெய்வ பக்தி செய்வதே நமது கடமை.

பகவானை அடையப் பல வழிகள் உண்டு. எனினும் பக்தி வழியே எளிமையானது.

இதுவே சாத்திரங்களின் சாரம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி


श्री रामेश्वर
श्री मल्लिकार्जुन
श्री विश्वनाथ
श्री भिमाशंकर
श्री त्र्यम्बकेश्वर
श्री वैद्यनाथ
श्री केदारनाथ
श्री ओंमकारेश्वर
श्री घृष्णेश्वर
श्री महाकालेश्वर
ॐ
नमः शिवाय
श्री सोमनाथ

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை கரையிலாக் கருணை மா கடலை
மற்றவரறியா மாணிக்க மலையை மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற வெஞ்சிவனை திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டு கண்டுள்ளங் குளிர வென் கண் குளிர்ந்தவே

ஒளிவளர் விளக்கேயுலப் பிலா வொண்றே உணர்வு சூழ் கடந்த தோருணர்வே
தெளிவளர் பளிங்கின்றிரண் மணிக் குன்றே சித்தத் துள்தித் திக்குந்தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே அம்பல மாடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத் தொண்டனேன் விளம்புமா விளம்பே

ஏகநாயகனை இமையவர்க் கரசை என்னுயிர்க் கமுதினை எதிரில்
போக நாய யகனைப் புயல்வணற் கருளிப் பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேக நாயகனை மிகுதிரு வீழி மிழலை விண்ணிழி செழுங்கோயில்
யோக நா யகனை யன்றி மற்றொன்றும் உண்டென உணர்கிலேன் யானே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப் பாற் கடலீந்த பிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற தில்லைசிற்றம் பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே

மன்னுகதில்லை வளர்கநம் பக்தர்கள் வஞ்சகர் போய கலப்
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து புவனியெல் லாம்விளங்க
வன்னருடை மடவாளுமை கோணடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறி தந்த பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே

மிண்டு மனத்தினர் போமின்கள் மெய்யடியார்கள் விரைந்துவம்மின்
கொண்டுங் கொடுத்தும் குடிகுடி ஈசற் காட் செய்மின் குழாம் புகுந்து
அண்டங் கடந்த பொருள் அள ஜில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றுமென்றும் உள்ள பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே

# பஞ்ச புராணம்

(ஆலயங்களில் ஓதப்படும் ஒழுங்கில்)

## தேவாரம்

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
யோதுவார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப் பொருளாவது
நாதநாம நமச்சிவாயவே

மாதர்ப்பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும் பாடிப்
போதோடு நீர் சுமந்தேந்திப் புகுவாரவர் பின் புகுவேன்
யாதும் சுவடுபடா மலையாறடைகின்ற போது
காதன் மடப் பிடியோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதங் கண்டறியாதன கண்டேன்

பொன்னார் மேனியனே புலித்தோலையரைக் கசைத்து
மின்னார் செஞ்சடை மேன் மிளிர் கொன்றையணிந்தவனே
மன்னே மாமணியே மழ பாடியுண் மாணிக்கமே
அன்னேயுன்னை யல்லாலினியாரை நினைக்கேனே

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும் புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னை சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவதினியே

பால் நினைந்து ஊட்டும் தாயினுஞ் சாலப் பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே

மெய்தானரும்பி விதிர்விதிர்ந் துன் விரை யார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சய சய போற்றியென்னுங்
கை தான் நெகிழவிடேனுடை யா யென்னைக் கண்டு கொள்ளே

## திருப்புராணம்

கற்பனை கடந்த சோதி கருணையே யுருவமாகி
அற்புதக் கோலநீடி அருமறை சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி

திருவும் கல்வியுஞ் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவுந் தீமையை காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையை பேணுவாம்

ஆதியாய் நடுவுமாகி அளவிலா வளவுமாகிச்
சோதியா யுணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகி,
பேதியா வேகமாகிப், பெண்ணுமாய் ஆணுமாகிப்,
போதியா நிற்கும்தில்லைப்பொதுநடம் போற்றி! போற்றி!
உலகெலாமுணர்ந்து ஓதுதற்கரியவன்
நிலவுலாவிய நீர்மணி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்திலாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

## திருப்புகழ்

ஏறுமயிலேறி விளையாடுமுக மொன்றே
ஈசருடன் ஞான மொழி பேசுமுக மொன்றே
கூறு மடியார்கள் வினை தீர்க்கு முகமொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகமொன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம்புணர வந்த முகமொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருள வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்த பெருமாளே

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனாய் வாழ்வினைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற்கு அருள்வாயே
உத்தமா ஞான சற்குண நேயா
ஒப்பிலா மாமணிக் கிரி வாசா
வித்தக ஞான சந்திநி பாதா
வெற்றி வேலாயுதப் பெருமானே

# சிவ வழிபாடு

## சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுது மென்னெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவ னடி வாழக

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க

ஈசனடி போற்றி எந்தை அடிபோற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி

ஆராத இன்பம் அருளு மலைபோற்றி
சிவனவன் என் சிந்தையுள் நின்ற வதனால்
அவனருளாலே அவன்றாள் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பனியான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய்விளங் கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகி
பல்விருக மாகிப் பறவையாயப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தி னேரியாய்ச் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்களேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய விருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தானிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள் கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் கிடைந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கு மாரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கு மொளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தைனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ வென்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளின் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையிற் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

## திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்
மாதேவளருதியோ வன்செவியோ நினசெவிதான்?
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின் மேல் நின்றும் புரண்டிங்ஙன்
எதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே!
ஈதே எம்தோழி பரிசேலோர் எம்பாவாய்! 1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய்? நேரிழையிர்!
சீசி இவையும் சிலவோ? விளையாடி
ஏசு மிடம்ஈதோ? - விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய்? 2

முத்தன்ன வெண்நகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர்! ஈசன் பழ அடியீர் ! பாங்குடையீர்!
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்! 3

ஒள்நித் திலநகையாய் இன்னும் புலர்ந்தின்றோ?
வண்ணக் கிளிமொழியார் எல்லோரும் வந்தாரோ?
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக்கொரு மருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்! 4

மாலறியா நான்முகனும் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்! 5

மானே நீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ?
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலை அளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்கும் தம்கோனைப் பாடேலோர் எம்பாவாய்! 6

அன்னே இவையும் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவன் என்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என் அரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோம்கேள் வெவ்வேறாய் இன்னம் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர் போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்! 7

கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழி ஈதென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ

ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய்! 8

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே!
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே!
உன்னைப் பிரானாகப் பெற்றஉன்சீரடியோம்
உன்அடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எம்கணவர் ஆவார் அவர் உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்னவகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோர் எம்பாவாய்! 9

பாதாளம் ஏழினும்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
போதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓதஉலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயில் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர்? ஏதவன்பேர்? ஆருற்றார்? ஆரயலார்?
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்? 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேர்என்னக்
கையால் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயாவழியடியோம் வாழந்தோம்காண் ஆரழல்போல்
செய்யாவெண் நீறாடிச் செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீ ஆட்கொண்டு அருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகைஎல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாள்! 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நல் தில்லைச் சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தனிவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கழல்கள்
ஆர்ப்பரவம் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூர்த்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீர் ஆடேலோர் எம்பாவாய்! 12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கம் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலம்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்! 13

காதார் குழை ஆடப் பைம்பூண் கலன் ஆடக்
கோதை குழல் ஆட வண்டின் குழாம் ஆடச்
சீதப் புனல் ஆடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்! 14

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றேநம் பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தம் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்தா[illegible]ணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆம்ஆறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்[illegible]தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்! 15

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையான்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையான் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பின் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையான்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்! 16

செங்கண் அவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குன் கருங்குழலி நம்நம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்! 17

அண்ணா மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப்பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்! 18

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்கப் பழஞ்சொல் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம்கேள்
எம்கொங்கை நின் அன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல் எம் கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய்! 19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய்! 20

திருச்சிற்றம்பலம்

## திருப்பள்ளியெழுச்சி

போற்றிஎன் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாய்எனை யுடையாய்
எம்பெருமான்பள்ளி எழுந்தருளாயே

அருணன்இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையில் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர்மலரமற் றண்ணல் அங் கண்ணாம்
திரள்நிரை அறுபதம் முரல்வன இவையோர்
திரப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே.

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளியொளி உதயத்
தொருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளினை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந்துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் என்நினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரி யாய்எங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றார்அணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

அதுபழச் சுவையென அமுதென அறிதற்
கரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவன் அவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

முந்திய முதல்நடு இறுதியு மானாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலும் காட்டி
அந்தண னாவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேயுன் தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்

கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்உல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேஇந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே

திருச்சிற்றம்பலம்.

# சிவன் பஜனை பாடல்

## தில்லை அம்பல நடராஜா

தில்லை அம்பல நடராஜா - உன்
திருவருள் வேண்டும் சிவராஜா
திருநீல கண்டா ஜெகதீசா
தினமும் தொழுவேன் மகாதேவா (தில்லை)

கங்கை கொண்டாய் நடராஜா
திங்கள் கொண்டாய் சதாசிவா
மங்கை கொண்டாய் மகேஸ்வரா - என்
மனதினில் நிறைந்திரு மகராஜா (தில்லை)

அன்பே சிவமென்று உணர்ந்தேனே
அறிவே நீயென்று அறிந்தேனே
இன்பம் தருவது உன் நினைவே
இனியவனே எங்கள் இறையோனே (தில்லை)

## சிவாய பரமேஸ்வராய

சிவாய பரமஸ்வராய சசி சேகராய நம ஓம் //
பவாய குணசம்பவாய சிவதாண்டவாய நம ஓம்//

## ஓம் சிவாய நமசிவாய

ஓம் சிவாய நமசிவாய ஓம் சிவாய சங்கரா
சசிகரனே சுந்தரனே ஓம் சிவாய சங்கரா
ஆடும் பாம்பை அணிந்தவனே ஓம் சிவாய சங்கரா
கங்கையை தரித்தவனே ஓம் சிவாய சங்கரா

## சிவன் காயத்திரீ மந்தரம்

சிவன் காயத்திரீ
தந் மஹேசாய வித்ம ஹே
வாக்கு விசுத்தாய தீமஹீ
தந்தச் சிவப்ர ஜோ தயாத்

# ஸ்ரீ ஓம் சிவாஷ்டோத்தர சத நாமாவளி

ஓம் சிவாய நம
ஓம் மஹேஸ்வராய நம
ஓம் சம்பவே நம
ஓம் பிநாலினே நம
ஓம் சசிசேகராய நம
ஓம் வாம தேவாய நம
ஓம் விருபாஷாய நம
ஓம் கபர்த்தினே நம
ஓம் நீலலோஹிதாய நம
ஓம் சங்கராய நம
ஓம் சூலபாணயே நம
ஓம் கட்வாங்கினே நம
ஓம் விஷ்ணு வல்லபாய நம
ஓம் சிபி விஷ்டாய நம
ஓம் அம்பிகை சாதாய நம
ஓம் ஸ்ரீ கண்டாய நம
ஓம் பக்தவத்ஸலாய நம
ஓம் பவாய நம
ஓம் சர்வாய நம
ஓம் த்ரிலோகேசாய நம
ஓம் சிதி கண்ட்டாய நம
ஓம் சிவாப்ரியாய நம
ஓம் உக்ராய நம
ஓம் கபர்தினே நம
ஓம் காமாரயே நம
ஓம் அந்தகாஸூதநாய நம
ஓம் கங்காதராய நம
ஓம் லலாடாக்ஷாய நம
ஓம் காலகாலாய நம
ஓம் கிருபாநிதயே நம
ஓம் பீமாய நம
ஓம் பரசுஹஸ்தாய நம
ஓம் ம்ருக பாணயே நம
ஓம் ஜடாதராய நம
ஓம் கைலாசவாஸினே நம
ஓம் கவசினே நம
ஓம் கடோராய நம
ஓம் த்ரி புராந்தகாய நம
ஓம் வ்ருஷாகாய நம
ஓம் வ்ருஷபாருடாய நம
ஓம் பஸ்மோத்தூளித விக்ராஹாய நம
ஓம் ஸாமப்ரியாய நம
ஓம் ஸ்வரமயாய நம
ஓம் த்ரயீமூர்த்தயே நம
ஓம் அநீச்வராய நம
ஓம் ஸர்வஜ்ஞாய நம
ஓம் பரமாத்மனே நம
ஓம் ஸோமஸீர்யாக்னி லோசனாய நம
ஓம் ஹவிஷே நம
ஓம் யஜ்ஞமயாய நம
ஓம் ஸோமாய நம
ஓம் பஞ்சவக்த்ராய நம
ஓம் ஸதாசிவாய நம
ஓம் விஸ்வேஸ்வராய நம
ஓம் வீரபத்ராய நம
ஓம் கணநாதாய நம
ஓம் ப்ராஜாபதயே நம
ஓம் ஹிரண்யரேதஸே நம
ஓம் துர்த்தர்ஷாய நம
ஓம் கிரீசாய நம
ஓம் கிரிசாய நம
ஓம் அநகாய நம
ஓம் புஜங்கபூஷணாய நம
ஓம் பர்காய நம
ஓம் கிரிதன்வனே நம
ஓம் கிரிப்ரியாய நம
ஓம் க்ருத்திவாஸஸே நம
ஓம் புராராதயே நம
ஓம் பகவதே நம
ஓம் ப்ரமதாதியாய நம
ஓம் ம்ருத்யுஞ்ஜயாய் நம
ஓம் ஸீக்ஷ்மதனவே நம
ஓம் ஜகத்வ்யாபினே நம
ஓம் வ்யோமகேசாய நம
ஓம் மஹாஸேன ஜனகாய நம
ஓம் சாருவிக்ரமாய நம
ஓம் ருத்ராய நம
ஓம் பூதபதயே நம
ஓம் ஸ்த்தாணவே நம
ஓம் அஹிர் புத்ந்யாய நம
ஓம் திகம் பராய நம
ஓம் அஷ்டமூர்தயே நம
ஓம் ஸாத்விகாய நம
ஓம் சுத்தவிக்ரஹாய நம
ஓம் சாஸ்வதாய நம
ஓம் கண்டபரஸவே நம

| | | | |
|---|---|---|---|
| ஓம் அஜாய | நம | ஓம் அபவர்கப்ரதாய | நம |
| ஓம் பாசவிமோசகாய | நம | ஓம் அனந்தாய | நம |
| ஓம் ம்ருடாய | நம | ஓம் தாரகாய | நம |
| ஓம் பசுபதயே | நம | ஓம் பரமேச்வராய | நம |
| ஓம் தேவாய | நம | | |
| ஓம் மஹாதேவாய | நம | நினைத்தது அனைத்தும் நிறைவேற | |
| ஓம் அவ்யாய | நம | | |
| ஓம் ஹரயே | நம | ஸிம்ஹஸார் தூல ரூபஸ்ச வ்யாக்ர | |
| ஓம் பூஷதந்தபிதே | நம | சர்மாம்பராவ்ருத! | |
| ஓம் அவ்யக்ராய | நம | காலயோகீ மஹாநாத: ஸர்வகாம | |
| ஓம் தக்ஷாத்வர ஹராய | நம | சதுஷ்பத: // | |
| ஓம் ஹராய | நம | | |
| ஓம் பக நேத்ரபிதே | நம | என்னும் சுலோகத்தை தினந்தோறும் | |
| ஓம் அவ்யக்தாய | நம | காலை, மாலைகளில் 10 தரம் | |
| ஓம் ஸஹஸ்ராஷாய | நம | பாராயணம் செய்து வந்தால் தாம் | |
| ஓம் ஸஹஸ்ரபதே | நம | நினைத்த காரியங்கள் நிறைவேறும். | |

# பிரதோஷ வழிபாடு

பிரதோஷ மகிமை: இறைவனின் பேரருளைப் பெற்று இனிதே வாழப் பலவகையான பூஜைகள் நடத்தப் பெறுகின்றன. அவற்றுள் மிகச் சிறப்பாகக் கருதப்படுவது **பிரதோஷ நாள்** வழிபாடாகும். உணவை எப்பொழுது உண்டாலும் பயனுண்டு. ஆனால், அதற்கென்று குறிப்பிடப் பட்டுள்ள நேரத்தில் உண்கின்ற போதுதான் முழுப்பயனையும் அடைய முடியும். அதுபோல் இறைவனை எப்பொழுது பூஜித்தாலும் பலன் உண்டு என்றாலும், சில குறிப்பிட்ட நாட்களில் குறிப்பிட்ட நேரத்தில் பூஜித்தால் முழுப்பலனை அடைய முடியும் என்பது உண்மையாகும். இது அனுபவத்தால் தெளிவாக அறிந்த ஒன்றாகும்.

பலர் பிரதோஷ வழிபாட்டின் மூலம் பலவகைத் தடைகள் விலகப் பெற்று, பெறுதற்கரிய செல்வங்களைப் பெற்று மகிழ்ந்திருக்கிறார்கள். இவ்வுண்மையைப் புராணவரலாறு நமக்கு விளக்குகிறது.

**பிரதோஷ காலம்:** பொதுவாகப் பிரதோஷ காலம் என்றால், பகல் முடியும் நேரம் தொடங்கி இரவுக்கு அடையாளமாக வானில் சந்திரனும் நடசத்திரங்களும் தோன்றும் நேரம் வரை என்று கூறுவர். இதை மிகவும் துல்லியமாகக் கணக்கிட்டு மாலை 5. 45 மணிக்கு மேல் 6. 30 மணிக்குள் என்று பிரதோஷ காலத்தைச் சாஸ்திர அறிஞர் குறிப்பிட்டுள்ளனர்.

ஒவ்வொரு மாதமும் அமாவாசையில் இருந்து 13-ஆம் நாளும், பௌர்ணமியில் இருந்து 13-ஆம் நாளும் திரயோதசி திதியாகும். அன்றுதான் பிரதோஷ நாள். ஆக, மாதத்திற்கு இரண்டு பிரதோஷ நாட்கள் வருகின்றன.

**வழிபடும் முறை**: பிரதோஷ நாளன்று அதிகாலை எழுந்திருத்தல் வேண்டும். காலைக்கடன்களை முடித்து, சிறப்பாக இறைவன் நாமாவளிகளைக்கூறி பூசித்தல் வேண்டும். எதுவும் உண்ணுதல் கூடாது.

ஆலயம் சென்று லிங்கமூர்த்திக்கும் அம்பாளுக்கும் சிறப்பு அபிஷேகம் ஆராதனை செய்யலாம். எப்போதும் இறைவனையே சிந்தை செய்யவேண்டும். சிவபுராணத்தைச் சொல்லிக் கொண்டிருத்தல் மிகவும் நல்லது.

சிறப்பாக நேர்த்திக்கடன் செய்ய விரும்புவோர் ஆலயம் சென்று மாலையில் சிவபிரானுக்கும் ரிஷபதேவருக்கும் அபிஷேகம் செய்தல் வேண்டும். ரிஷபதேவருக்கு அறுகம்புல் மாலை அணிவிக்க வேண்டும். மாவினால் அகல் செய்து, தூய்மையான பசு நெய்விட்டு விளக்கு எரித்தல் வேண்டும். காரசியில் வெல்லம் கலந்து ரிஷப தேவருக்குப் படைத்தல் வேண்டும். ரிஷபதேவரின் கொம்புகளுக்கு இடையே பார்த்துச் சிவபிரானைத் தரிசித்தல் வேண்டும்.

பிரதோஷ காலத்தில் மட்டும், வழக்கமாக வருவதுபோல் ஆலயப்பிரதட்சணம் வருதல் கூடாது. அப்ரதட்சணம் வருதல் வேண்டும். இதைச் சோமசூத்ரபிரதட்சணம் என்பர்.

ரி - ரிஷபம் ச - சண்டிகேசுவரர் கோ - கோமுகை

ரி ச ரி கோ ரி ச கோ ரி ச ரி

மேலேயுள்ள குறியெழுத்துக்கள் ஒரு முறைவரும் அப்ரதட்சணத்தைக் குறிப் பிடுகிறது. அதாவது, இடப தேவரைத் தரிசித்து, அங்கு நின்றும் இடமாகச் சென்று சண்டேசுரரைத் தரிசித்து சென்ற வழியே திரும்பி வந்து மீண்டும் இடப தேவரைத் தரிசித்து, அங்கு நின்றும் வலமாகச் சென்று வடதிசையைச் சேர்ந்து, கோமுகியைக் கடவாது, முன் சென்ற வழியே திரும்பி வந்து இடப தேவரைத் தரிசித்து, அங்கு நின்றும் இடமாகச் சென்று சண்டேசுரரைத் தரிசித்து, அங்கு நின்று திரும்பி, இடபதேவரைத் தரிசியாது வலமாகச் சென்று கோமுகியைச் சேர்ந்து அங்கு நின்றும் திரும்பி வந்து இடபதேவரை தரிசித்து இடமாகச் சென்று சண்டேசுவரரை தரிசித்து திரும்பிவந்து இடப தேவரை தரிசித்து அவருடைய இரண்டு கொம்பினடுவே பிரணவத்தோடு கூட ஹரஹர என்று சொல்லி சிவபெருமானைத் தரிசித்து வணங்குதல் வேண்டும். இது ஒரு பிரதஷணம் ஆகும். இதுபோல் மூன்று முறை பிரதஷணம் செய்தல் வேண்டும்.

பின்னர், சிவபிரான் உமாதேவியாருடன் ரிஷபாரூடராய், பிரதோஷநாயகராய் பிரதோஷகாலத்தில் (மணி 5-45 முதல் 6.30 வரை) ஆலயவலம் வரும்போது கண்டு தரிசித்தல் மிகப்பெரிய புண்ணியமாகும்.

வேதபாராயணத்துடன் முதலிலும், திருமுறை பாராயணத்துடன் இரண்டாவது, நாதசுர மங்கல இசையுடன் மூன்றாவதுமாக மூன்று முறை ஆலயவலம் நடைபெறும். இரண்டாவது வலம் வரும்போழுது இறைவனையும் ,இறைவியையும் ஈசானா திக்கில இருந்தருளச் செயவார்கள். அப்பொழுது காட்டும் கற்பூர ஆரத்தியைக் கண்டு தரிசிப்போர்க்கு மிகுந்த பலனுண்டு தரிசனம் செய்த பின்னர் வீடு சென்று, ஒருவர் இருவருக்கு அன்னமிட்டு, பிறகு தாமும் உண்டு அதை மகாபிரதோஷம் என்பர்

சனிப்பிரதோஷத் தரிசனத்தில் தனிச்சிறப்பும் பலனும் உண்டு. அதை மகாப்பிரதோஷம் என்பர்.

**பிரதோஷ தரிசப்பலன்**: பிதோஷகாலம் எனறாலே பாவங்களைப் போக்கி நல்ல பலன்களைத்தரும் புண்ணிய காலமாகும். அக்காலத்தில் சந்திர மௌலீஸ்சுரரை தரிசிப்பதால் தோஷங்கள் எதுவாக இருந்தாலும் உடனே விலகும். பயஉணர்வு, அச்சம், குழப்பம், தீராப்பிணிகள் மறையும். மனநலம், உடல் நலம், வாக்கு நலம் வளம்பெறும். வருகின்ற செய்தி எல்லாம் நல்லதாகவே வரும். மங்களச் செயல்கள் தொடரும். சாதனைகள் புரிய வாய்ப்பும் வல்லமையும் உண்டாகும். கீழே, பிரதோஷ தரிசனத்தால் உண்டாகும் பலன்களுக்கு எடுத்துக்காட்டாகச் சாண்டில்ய முனிவர் கூறியிருக்கும் ஒரு வரலாறு கூறப்பட்டிருக்கிறது.

## வரலாறு

முன்னொரு காலத்தில் விதர்ப நாட்டில், ஒரு கைக் குழந்தைக்குத் தாயாக மிகவும் வறுமை நிலையில் ஓர் அந்தணப் பெண்மணி வாழ்ந்து வந்தாள். சிவபக்தி உடையவள். கணவனை இழந்த அவள் ஒரு நாள், கைக்குழந்தையுடன் காட்டு வழியே சென்று கொண்டிருந்தாள்.

ஒரு குழந்தை அனாதையாக அழுது கொண்டிருப்பதைக் கண்டு அப் பெண் உள்ளம் உருகினாள். அப்போது வானில் அசரீரி மொழி எழுந்நது. அக்குழந்தை அரச குமாரன் என்றும், பெயர் தர்மகுப்தன் என்றும், அதைத் தூக்கிச் செனறு வளர்க்கும்படியும் அதனால் அவளுடைய துன்பமெல்லாம் நீங்குமெனவும் அசரீரி வாக்குக் கூறியது. எல்லாம் இறைவன் செயல் என்று நம்பியே அவள் அக்குழந்தையை தூக்கிச் சென்றாள்

குழந்தை வளர வளர பெண்மணியின் வறுமை மெல்ல மெல்ல குறையத் தொடங்கியது. உரிய பருவத்தில் இருவரும் உபநனமும் செய்து வைத்தாள்.

ஒரு முறை இரு குழந்தைகளுடன் சாண்டிய முனிவரின் தரிசனத்திற்காக அந்தணத்தாய் சென்றாள். முனிவரை மனமுருகி தரிசித்தாள். குழந்தைகள் பற்றியும் தன்னிலை பற்றியும் முனிவரிடம் கூறினாள். அவர் சிவ மூர்த்திக்கு மிகவும் உகந்ததாகிய பிரதோஷ தரிசனம் தொடர்ந்து செய்து வந்தால் விரைவில் துன்பங்கள் மறைந்து நல்வாழ்வு மலரும் என்று ஆசி வழங்கினார்

பெண்மணி முனிவர் கூறியபடி பிரதோஷப் பூஜை சிறப்பாகச்செய்து தரிசனமும் செய்து வந்தாள்.

ஒரு முறை அத்தாயின் இரு பிள்ளைகளும் வெளியே சென்றிருந்தார்கள். அபடபொழுது அந்தணச் சிறுவன் தங்கம், நவரத்தினம், பொற்காசுகள் நிரம்பிய குடத்தைப் புதையலாகக் கண்டெடுத்தான். இருவரும் கொண்டு வந்து அன்னையிடம் கொடுத்து நடந்ததைச் சொன்னார்கள். அவள் இருவரையும் பங்கு போட்டு எடுதடதுக்கொள்ளும்படி சொன்னாள். தர்ம குப்தனோ அதை அண்ணன் தான் கண்டெடுத்தான். அண்ணனுக்கே அது உரியது' எனக்கு வேண்டாம் என்று சொன்னான். இதனால், தர்மகுப்தன் தங்களை விட்டு போய்விடுவானோ என்று அஞ்சினாள் அத்தாய். மகனோ என்றும் தாயைப் பிரியேன் என்று பரிவுடன் கூறினான்.

ஒரு முறை காட்டுப் பகுதியில் தன் தோயழிருடன் களத்தில் நீராடிவிட்டு வெளிவந்த ஓர் அழகிய மங்கையைக் கண்டு தர்மகுப்தன் உள்ளத்தைப் பறிகொடுத்தான். அவளும் அவனை விரும்பினாள். அவள் ஒரு கந்தர்வ மன்னின் மகள். பெயர் அஸ்ருமதி.

பூலோக வாசிகளைத் தேவ குலத்தைச் சார்ந்த கந்தர்வப் பெண்கள் திருமணம் செய்து கொண்டு வாழும் முறை கிடையாது . அதனால் அதிர்ச்சியுற்ற கந்தர்வ மன்னன். கயிலாயம் சென்று பரமனைத் தரிசித்துத் தன் மகளின் காதல் செயதியைக் கூறி முறையிட்டான். அதைக்கேட்டருளிய பரமன், தாமகுப்தன் த்திரியன் என்றும், அவனுக்கு அஸ்ருமதியைத் திருமணம் செய்து வைத்து இழந்த நாட்டை மீட்க படையுதவியும் செய்யும்படி கூறினார்.

கந்தர்வ மன்னன் சிவபெருமான் கூறியபடியே செய்தான். இழந்த நாட்டை மீண்டும் பெற்று தர்மகுப்தனும் அஸ்ருமதியும் அரசன் அரசி ஆனார்கள். தன்னை அன்புடன் வளர்த்த தாயையும் சகோதரனையும் முன்னிலும் அதிகமாக நேசித்து அவர்களுக்கு அரச வாழ்க்கை கொடுத்தான்.

சாண்டில்ய முனிவர் தர்மகுப்தன் அரன்மனைக்கு எழுந்தருளினார். அவரை

பயபக்தியுடன் வரவேற்று உபசரித்தான் தர்மகுப்தன். பிறகு தான் த்திரியகுலத்தில் பிறந்தும். கொடிய துன்பத்திற்கு ஆளானதேன்? என்று முனிவரிடம் கேட்டான். அதற்குத் தந்தை செய்த பாவமே காரணம் என்றும், அந்தணத் தாயுடன் தர்மகுப்தனும் பிரதோஷ பூஜை, தரிசனம் செய்து வந்தால் பாவம் நீங்கி, புண்ணியம் மலர்ந்து இழந்த அரசும் கிடைத்தது என்றும் கூறினார்.

சனிப்பிரதோஷமாகிய மகாபிரதோஷ மகிமை கூறும் வரலாறு(வரதுங்க பாண்டியர் அருளியது)

ஒரு காலத்தில் சந்திர சேனன் என்னும் அரசன் உஜ்ஜியினியை ஆண்டு வந்தான். ஸ்ரீ மகாளேசுரரை வணங்கும் விரதம் பூண்டவன். ஒருமுறை மாணிபத்திரன் என்னும் கணநாதன் உருவன் வந்து அவனுடன் நட்பு பூண்டான். அவன் பிரியும் போது நட்புக்கு அடையாளமாகச் சிந்தாமணி என்னும் ரத்தினத்தை அளித்துச் சென்றான்.

சந்திர சேனனின் பகைவர்கள் ஒன்று சேர்ந்து அந்த இரத்தினத்தைக் கைப்பற்ற எல்லையில் வந்து முற்றுகை இட்டனர். சிவபிரானையே பெரும் பலமாகக் கருதும் சந்திரசேனன் ஆலயம் சென்று ஸ்ரீகாளேசுரரை எண்ணித் தியானம் செய்தான் அன்று சனிப்பிரதோஷம்.

ஒரு பெண்மணி அப்பொழுது தான் இளம் மகனுடன் வந்து ஸ்ரீகபளேசுரரை வணங்கிச்சென்றாள்.

தாயுடன் இல்லம் செனற சிறுவன் மன்னன் ஆலயத்தில் செய்த வியானத்தைப் போல் தானும் கற்பனையாகச் செய்ய எண்ணி, ஏதோ ஒரு கல்லைத் தன் முன லிங்கமாக வைத்துக் கண்களை மூடிக்கொண்டு இருந்தான் அப்பொழுது அன்னை உணவுண்ண அழைத்தாள். அவன் டீபாகவில்லை. அதனால் அங்கு வந்த தாய் கடுங்கோபத்துடன் சிறுவன் லிங்க மூர்த்தியாகப் பாவனை செய்த கல்லை தூக்கி எறிந்துவிட்டுச் சென்றாள். அதைக் கண்ட சிறுவன் மூர்ச்சித்து விழுந்தான்.

சிறிது நேரத்தில் கண்விழித்த சிறுவன் தனக்கு முன் நவரத்தின லிங்க மூர்த்தி ஜொலிப்பதையும் வீடெல்லாம் செல்வ வழம் செழித்திருப்பதையும் கண்டு அதிசயித்தான். தாய் மகிழ்ந்து அன்று சனிபிரதோஷ நாளாகையால் தன் மகன் செய்த பிரதோஷ நாளாகையால் தன் மகன் செய்த பிரதோஷ நாள் பூஜைபலனே செல்வ வளத்திற்குக் காரணம் என்று தன் செயலுக்கு வருந்தினாள்

சிறுவன் இல்லத்தில் நடந்த நிகழ்ச்சியைக் கேய்வியுற்று மன்னன் சந்திர சேனன் வந்து சிறுவன் முன்னிருந்த லிங்க மூர்த்தியை வணங்கினான். இதையெல்லாம் ஒற்றர் மூலம் அறிந்த மன்னனின் பகைவர்கள் எல்லவற்றிற்கும் சந்திர சேனன் செய்த சளிப்பிரதோஷ மகிமையே காரணம் என்று நம்பி பகமையை விட்டு நட்புப் பூண்டனர்.

இது வரை பிரதோஷவிளக்கம், மகிமை, பலன், பயனடைந்தோர் வரலாறுகள் ஆகியவற்றை முறையாக அறிந்தீர்கள்.

## இப்போழுது பிரதோஷ பூஜை தோன்றிய வரலாறு

தேவாகளும் அரசர்களும் இடையே அடிக்கடி போர் நிகழும் அசுரர்களினால் தங்கள் குலம் அழிந்து விடுமோ என்ற அச்சம் , பயம், குழப்பம் தேவர்களின் உள்ளத்தை வாட்டியது. முதுமை, மரணம் தங்களை அணுகாமல் என்றும் இளமையோடு நித்திய ஜீவிகளாக வாழ ஏதாவது வழி கண்டு பிடிக்க வேண்டுமென்று திட்டமிட்டனர்.

தேவர்கள் அனைவரும் சென்று பிரும்மாவிடம் தங்கள் திட்டத்தைத் தெரிவித்தனர். பிரும்மா அனைவரையும் அழைத்துக்கொண்டு திருமாலிடம் சென்று தேவர்களின் கருத்தை வெளியிடார்.

பாற்கடலை கடைந்து, அதிலிருந்து வரும் அமிர்தத்தை உண்டால் முதுமை, மரணம் இன்றி உன்றும் இளமையோடு வாழலாம் என்று விருமால் கூறினார்.

திருமால் குறிப்பிட்டபடி அமிர்தம் பெற முடிவு செய்யப்பட்டது. மந்திர மலையை மத்தாகவும், வாசுகி என்னும் பாம்பை கயிறாகவும் கொண்டு பாற்கடலை கடைய பிஜம்மாவும் தேவர்களும் ஏற்பாடு செய்தனர். அசுரர்கள் சும்மா இருப்பார்களா? அவர்களும் கலந்து கொள்ள வந்தனர்.

திருமால் தந்திரமாக, தேவர்கள் வால் பக்கமும் அசுரர்கள் தலை பக்கமும் நின்று பாற்கடலை கடைய ஏற்பாடு செய்தார். திருமால் ஆமை வடிவெடுத்து கடலுக்கடியில் சென்று மந்தர மலையை தாங்கினார்.

தேவரும் அசுரரும் திருப்பாற்கடலைக் கடையத்தொடங்கியது தசமிதிதி காலையாகும்.

தொடர்ந்து கடைந்துகொண்டே இருந்தனர். இரவு கழிந்து, அடுத்த நாள் ஏகாதசி காலையில் வாசுகி வலி பொறுக்க முடியாமல் விஷத்தைக் கக்கியது. கடலிலிருந்தும் விஷம் தோன்றியது. ஆலம் என்றால் அது விஷம். வாசுகியின் ஆலமும் கடலில் தோன்றிய ஆலமும் சேர்ந்து ஆலாலமாகி புகை மண்டலம் போல் வடிவெடுத்தது. அதன் அனல் கொடுமை தாங்கமுடியாமல் தேவர்களும் மற்றவர்களும் சிதறி ஓடினர். ஆமை வடிவம் விடுத்து மேலே வந்த திருமாலின் பளிங்கு நிறமும் விஷ புகையால் கரு நிறமாக மாறியது. சிவபிரானிடம் புகலிடம் மடைய திருமால் பிரும்மா தேவர்கள் ஆகியோர் கயிலை நேக்கி ஓடி வலமாகச் செல்ல முயன்றனர்.

பிறகு தேவர்கள் ரிஷப தேவரின் உதவியுடன் பரமனை தரிசனம் செய்தனர். தங்கள் செயலையும், ஆலாலத்தின் கெபடுமையும் கூறித் தங்களை காக்கும்படி வேண்டிக்கொண்டனர். கருணையே வடிவான எம்பெருமான் தேவர்களைக் காக்கத் திருவுளம் கொண்டார்.

அருகே அணுக்கத்தொண்டராக நின்ற சுந்தரதிடம் ஆலதாலத்தைத் தாங்கிவரும்படி பணித்தருளினார். அவர் சென்று விடத்தை நாவற்பழம் வடிவில் திரட்டிப் பரமனிடம் கொண்டு வந்து தந்தார்.

பரமன் அவ்விடத்தைத் திருவாயில் இட்டு விழுங்கத் தேவர்கள் அனைவரும் அஞ்சி நடுங்கினர். அவிவஷம் உள்ளே சென்றால் அங்கிருக்கும் ஜீவகோடிகள் அழிந்துவிடும். உமிழ்ந்தாலும் புறவுலகிலுள்ள ஜீவகோடிகள் அழிந்துவிடும். இந்த நிலையில் பக்கம் இருந்த எமாதேவியார், தம் இழந்தளிரன்ன கரத்தினால் கண்டத்தில் மெல்ல அழுத்தித் தடவ, விஷம் மேலும் செல்லாமல் தங்கி அம்பிகையின் மகிமையால் அமிர்தத் தன்மை பெற்றது அன்று முதல் சிவபிரான் என்றும் "திரு நீலகண்டன்" என்றும் அழைக்கப்பெற்றான். தேவர்கள் அச்சம் நீங்கினர். பின்னர் மீண்டும் சென்று பாற்கடலை கடையுமாறு சிவபிரான் திருவாய் மலரத் தேவர்கள் அங்கிருந்து சென்றனர்.

ஏகாதசி திதியில் மீண்டும் தேவர்களும் அசுரர்களும் பாற்கடலை கடயத் தொடங்கினர். அரவு முழுவதும் கடைந்துகொண்டே இருந்தனர்.

முதலில் பாற்கடலில் இருந்து வெளிப்பட்ட இலக்குமியைத் திருமால் ஏற்றுக்கொண்டார். தொடர்ந்து வெளிப்பட்ட ஐராவதம், காமதேனு, கற்பகதரு, சிந்தாமணி, கௌஸ்துபமணி, சூடாமணி, உச்சைச்வரம் என்ற குதிரை முதலியவற்றை இந்திராதி தேவர்கள் ஏற்றுக்கொண்டனர்.

ஏகாதசி இரவு கழிந்து மறுநாள் துவாதசி அன்று அதிகாலையில் கடலில் இருந்து அமிர்தம் தோன்றியது. அதனை தேவர்கள் பகிர்ந்து உண்டனர். அமிடதம் உண்ட மகிழ்ச்சியில் அன்று முழுவதும் தேவர்கள் ஆடியும் பாடியும் பொழுது போக்கினர்.

மறுநாள் திரயோதசி (13-ஆம் நாள்) அன்று தேவர்கள், முதலில் சிவபிரானை வணங்காமல் ஆடியும் பாடியும் பொழுது போக்கியதற்காக வருந்தினர். அனைவரும் சென்று பரமனிடம் தங்கள் குற்றத்திற்காக மன்னித்துவிடுமாறு வேண்டினர். பரமன் தயாநிதி அல்லவா?

தேவர்களை மகிழ்விக்கத் திருவுளங்கொண்ட பரமன் அம்பிகை காணும்படி ரிஷப தேவரின் கொம்புகளிற்கிடையே நின்று ஆனந்தத தாண்டவம் ஆடியருளினார். அதனால்தான் பிரதோஷ, நாளன்று, ரிஷபதேவரின் கொம்புகளிற்கிடையே பார்த்து லிங்க மூர்த்தியை தரிசிக்கும் முறை பின்பற்றப் படுகின்றது. அவர் ஆடியநேரமே பிரதோஷ வேளை.

ஆண்டவரின் திரு நடனம் கண்ட தேவர்கள் தங்கள் அச்சம், பயம், குழப்பம் , தோஷம் யாவும் அறவே நீங்கித் தெளிவும் மகிழ்ச்சியும் பெற்றனர். அன்று தேவர்கள் பெற்ற பலனை இன்று பிரதோஷ தரிசனத்தின் முலம் அருளன்பர்கள் பெறுகிறார்கள்.

பரமன் இவ்வாறு தேவர்களுக்காகத் திருநடனம் ஆடியது சனிக்கிழமை ஆகும். ஆகையினால்தான் சனிப்பிரதோஷம் என்றும் போற்றப்படுகின்றது.

பிரதோஷ நாளன்று திருமால் கயிலாயத்தில் இருந்ததை நினைவூட்டும் வகையில், இன்றும் ஒவ்வொரு பிரதோஷ நாள் மாலையிலும் பெருமான் கோவிலில் திரையிட்டு மறைத்து வைக்கப்பட்டிருக்கும் ஐதிகம் பின்பற்றப்படுகின்றது.

## பிரதோஷ வழிபாட்டின் மகிமை

சிவபெருமான் பிரதோ' காலத்தில் இடப தேவரின் இரு கொம்புகளுக்கிடையே உயிர்கள் உய்யும் பொருட்டு திருநடனம் புரிந்தார். அப்பொழுது சரஸ்வதி வீணை வாசித்தாள். இந்திரன் புல்லாங் குழல் ஊதினார். பிரம தேவர் தாளம் போட்டார். இலட்சுமி தேவி பாடினாள். திருமால் மிருதங்கம் வாசித்தார். தேவர்கள், முனிவர்கள், சித்தர்கள் , ய்ஷர்கள், கின்னரர்கள் திசைபாலர்கள் முதலிய அனைவரும் வந்து பிரதோ'காலத்தில் இறைவனை வழிபடுகின்றார்கள்.

இயக்கர் கின்னரர் யமனொடு வருணர்
இயங்கு தீவளி ஞாயிறு திங்கள்
மயக்கமில் புலி வானரா நாகம்
வசுக்கள் வானவர் தானவரெல்லாம்
அயர்ப் பொன்றின்றி நின் திருவடியினை
யர்ச்சித் தாற் பெறு மாரருள் கண்டு
திகைப் பொன்றின்றி நின் திருவடியடைந்தேன்
செழும் பொழில் ...ப புன் கூருளானே.

- சுந்தரர்

தேவர்கள் பிரதோஷ வழிபாடு செய்வதோடன்றி அவ்வழிபாட்டிற்கு தாங்கள் முன் வந்து உதவுகிறார்கள் என்பதை பிரமோத்தர காண்டம் தெரிவிக்கிறது.

"வாக்தேவீ த்ருதவல்லகீ, சதமகோ
வேணும் தகத் மத்மஜ
தாலோன் னித்ரகரோ, ரமா பகவதீ
கேயப்யோ காஞ்சி தா
விஷ்ணுஸ் ஸாநதா மருதங்க வாதனபடுர்
தேவதாஸட ஸமந்தாத் ஸ்திதா
ஸேவந்தே தமனுப் பிரதோஷ ஸமயே
தேவம் ம்ருடானி பதிம்

சரஸவதி தேவி, இந்திரன், பிரம்ம தேவன் திருமால், இலக்குமி இவர்கள் அல்லோரும் இதில் கலந்து கொள்கிறார்கள் என இச்சுலோகம் தெரிவிக்கின்றது.

1. வாக் தேவீ - சரஸ்வதி
த்ருத - (தனது கையில்) வைத்துக்கோண்டு
வல்லகி - வீணை வாசிக்க

2. சதமகோ - இந்திரன்
வேணும் - புல்லாங் குழலை
ததத - தன்னிடம் வைத்துக்கொண்டு ஊத

3. பத்மஜ - பிரம தேவன்
தால - தாளத்தை
உன் நித்ரகா - கையால் அடித்துக்கொண்டிருக்க

4. ராம பகவதீ - இலக்குமி தேவி
கேயம் பாடல்களை
ப்ரயோக அஞ்சிதா - தீவிரமாகப் பாடிக்கொண்டிருக்க

5. விஷ்ணு - திருமாலானவர்
ஸாந்தர மிருதங்க - சிறந்ததோரு மிருதங்கத்தை
வாதன படு - சிறந்த வகையில் கொட்டிக்கொண்டிருக்க
மிருடானி - பார்வதி தேவியாரின்
பதிம் - பதியாகிய
தம்தேவம் - அத்தகைய சிவபெருமானை
அனுப்பிரதோஷ ஸமய - ஒவ்வொரு பிரதோஷ சமயத்திலும்

6. தேவ - தேவர்கள்
ஸமந்தாத் - எல்லாப் புறங்களிலும்
ஸ்திதா - நின்று கொண்டு
ஸேவந்தே - பக்தி பூர்வமாக வழிபடுகிறார்கள்

இவ்வாறு சிவபெருமான செய்த திரு நடனத்தின் போது திருமால் மத்தளம் வாசித்தனர். பிரமதேவர் தாளம் இட்டனர். இதனை அடியில் வரும் பாடலால் அறிக.

'வரத்தின் அருள் பெற்ற மத்தளமாயோன் தன்
கரத்தினனி பொத்திக் களிப்ப - நரைத்தலையோன் தாளம் பிடிக்க'

-கச்சி ஆனந்த ருத்ரேசர் வண்டுவிடு தூது

பிரதோஷ வழிபாடு செய்தால் வறுமை பயம், பாவம், மரண வேதனை இவையெல்லாம் ஒழிந்துவிடும் நலம் பல விளையும்.

'இரண நல்குர விரும்பவ மிரும்பசி யுரோகம்
அரணுறும் பயங் கிலேசங் கேதமவ மிருத்து
மரண வேதனை யிவையெலா மகற்றென வணங்கி
புரணநாதனைப் பிரதோடத்திற் போற்றிடத்தகுமால்

-கடம்பவன புராணம்

பிரதோஷ காலத்தில் அடியிற் கண்ட தேவாரங்களை ஓதுக.

"நாகந்தான் கயிறாக நளிர்வரையதற்கும் மத்தாகப்
பாகந்தேவ ரொடசுடர் படுகடலின் யெமக் கடைய
வேகநஞ்செழவாங்கே வெருவொடுமிரீந்தெங்குமோட
ஆகந்தன்னில் வைத்தமிர்தமாக்0கு வித்தான் மறைக்காடே"

-திருஞானசம்பந்தர்

பருவரை ஒன்று சுற்றி அரங்கைவிட்ட
இமையோ ரிரிந்து பயமாய்த்
திருநெடுமால் நிறத்தை அடுவான் விசும்பு
சுடுவா னெழுநது விசை போயப
பெருகிட மற்றிதற்கொர் பிதிகாரமொன்றை
அருளாய் பிரானே எனலும்
அருள் கொடு மாவிடத்தை எரியாமலுண்ட
அவனண்ட ரண்டர் அரசே

-திருணாவுக்கரசு நாயனார்

கோல் வரை மத்தென நாட்டிக்
கோரளவு சுற்றிக் கடைந்தெழுந்த
ஆல நஞ்சு கண்டவர் மிக விரிய
அமரர்கட்கருள் புரிவது கருதி
நீலமார் கடல் விடந்தனை யுண்டு
கண்டந்தே வைத்தே பித்த நீ செய்த
சிலங் கண்டு நின் திருவடி அடைந்தேன்
செழும்பொழில் திருப்புன் கூருளானே

-சுந்தர்

கோலால மாகிக் குரைகடல் வாயன் றெழுந்த
ஆலால முண்டா வைன் சதுர்தா னென்னேடி
ஆலால முண்டிலனேல் அயன்மா லுள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடவகாண் சாழலோ

-மாணிக்கவாசகர்

இனியோ நாமுய்ந்தோம் இறைவன் தாள்சேர்ந்தோம்
இனியோ ரிடரில்லோம் நெஞ்சே - இனியோர்
வினைக்கடலை யாக்குவிக்கு மீளாப்பிறவிக்
கனைக் கடலை நீந்தினோம் காண்.

-காரைக்கால் அம்மையார்

அடியவரும் இமையவர்தம் கூட்ட முய்ய
அலைகடல் வாய் நஞ்சுண்ட அமுதே, செங்கண்
நெடியானும் நான்முகனும் காணாக்கோல
நீலவிட அரவணிந்த நிமலா! வெந்து
பொடியா காமனுயிர் இரதி வேண்டப்
புரிந்தளிர்ந்த புண்ணியனே! பொங்கர்வாசக்
கடியாரும் மலர்சோலை மருங்கு சூழும்
கவின் மருகற் பெருமானே! காவாய் என்றும்

-பெரிய புராணம்

உலகில் செல்வமுடையோர் சிலர். வறியவர் பலர். இதற்கு என்ன காரணம்.

இலர் பலர் ஆகிய காரணம் நோற்பார்
சிலர் பலர் நோலாதவர். - திருக்குறள்

இறைவனை நினைத்து உணர்ந்து நோற்போர் மறுபிறப்பில் தனவந்தராக இனிது வாழ்வார்கள் அல்லாதவர் வறுமையில் வாடுவார்கள் ஆதலால் விரதத்தின் அவசியம் விளங்குகின்றது. சனிக்கிழமை தவிர மற்ற கிழமைகளில் வரும் பிரதோஷ தினத்தன்று பிரதோஷ வேளையாகிய மாலை 4 மணி முதல் 6 மணிவரை சிவாலயத்தில் ஆலயவழிபாடு செய்தால் ஒருவருடம் ஆலயம் சென்று இறைவழிபாடு செய்த பலனும் சனிப்பிரதோஷத்தன்று பிரதோஷ வேளையில் சிவாலயத்தில் இந்த புஸ்தகத்தில் உள்ளவாறு இறைவழிபாடு செய்தால் ஐந்து வருடம் தினம் தவறாமல் ஆலய வழிபாடு செய்த பலனும் கிடைக்கும். ஆதலால் எல்லோரும் பிரதோஷ விரதம் இருந்து பெரும்பேறு பெறுவார்களாக.

## ஈஸ்வர தியானம்:

ஓம் நம: ஸிவாய பரமேசவராய
சசி சேகராய நம ஓம்
பவாய குண ஸம்பவாய
சிவ தாண்டவாய நம, ஓம்

# ஸ்ரீ மஹா லிங்காஷ்டகம்

| | | | |
|---|---|---|---|
| 1. | ப்ரஹ்மமுராரி | ஸுரார்சித | லிங்கம் |
| | நிர்மலபாஸித | ஸோபித | லிங்கம் |
| | ஜந்மஜதுக்க | விநாசக | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| 2. | தேவமுநி ப்ரவ | ரார்ச்சித | லிங்கம் |
| | காமதஹம் | கருணாகரா | லிங்கம் |
| | ராவண தர்ப்ப | விநாசந | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| 3. | ஸர்வஸுகந்தி | ஸுலேபித | லிங்கம் |
| | புத்திவிவிர்த்தன | காரண | லிங்கம் |
| | ஸித்தஸுராஸுரே | வந்தித | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| 4. | கநக மஹாமணி | பூஷித | லிங்கம் |
| | பணிபதிவேஷ்டித | ஸோபித | லிங்கம் |
| | ஸஞ்சிதபாப | விநாசக | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| 5. | குங்கும சந்தன | லேபித | லிங்கம் |
| | பங்கஜ ஹாரஸு | ஸோபித | லிங்கம் |
| | ஸஞ்சிதபாப | விநாசக | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| 6. | தேவகணார்ச்சித | ஸேவித | லிங்கம் |
| | பாவைர்பக்திபிர் | ஏவச | லிங்கம் |
| | திநகரகோடி | ப்ரபாகர | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| 7. | அஷ்டதளோபரி | வேஷ்டித | லிங்கம் |
| | ஸர்வ ஸமுத்பவ | காரண | லிங்கம் |
| | அஷ்டதரித்ர | விநாசித | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| 8. | ஸுரகுரு ஸுரவர | பூஜித | லிங்கம் |
| | ஸுரவநபுஷ்ப | ஸதார்சித | லிங்கம் |
| | பராத்பரம் | பரமாத்மக | லிங்கம் |
| | தத்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |

# நந்தீஸ்வரர் பெருமை

நந்திஎம் பெருமான் தன்னை
நாடொறும் வணங்கு வோர்க்குப்
புந்தியில் ஞானம் சேரும்
பொலிவுறு செல்வம் கூடும்
சிந்தையில் அமைதி தோன்றும்!
சிறப்புறு மக்கள் சேர்வர்!
இந்திர போகம் கிட்டும்
இணையிலா வாழ்வு தானே

## நலம் தரும் நந்தி

கந்தனின் தந்தையைத் தான் சுமந்து செல்வாய்
நந்தனார் வணங்குவதற்கு நடையினில் விலகி நின்றாய்
அந்தமாய் ஆதியாகி அகிலத்தைக் காக்க வந்தாய்
நந்தியே உன்னை துதிர்தேன் நாடி வந்தெம்மைக் காப்பாயத்
ஒன்பது கோள்களுக்கும் உயரியபலன் கொடுப்பாய்
பொன் பொருள் குவிய வைப்பாய் புகழையும் வளர்த்து வைப்பாய்
சிந்தனை வளம் கொடுப்பாய் சிகரத்தில் தூக்கி வைப்பாய்
நந்தியே உனைத்துதித்தேன் நாடிவந்தெம்மை காப்பாய்
மாலைகள் ஏற்க வைப்பாய் மழலைகள் பிறக்க வைப்பாய்
வேலைகள் கிடைக்க வைப்பாய் விதியையும் மாற்றி வைப்பாய்
சோலையின் வண்ணப் பூவைச் சூடிடும் நந்தி தேவா!
நாளும் நான் உனை துதித்தேன் நாடி வந்தெம்மை காப்பாய்
தஞ்சையில் பெரிய நந்தி தளிருடல்வெண்ணெய் சாத்தி
அஞ்சாத வேந்தன் நந்தி அழகிய நெகமம் நந்தி
குஞ்சர முகத்தான் தந்தை குந்திரும் ரிஷப நந்தி
தஞ்சமாய் உனையடைந்தேன் தயங்காது எமைக் காப்பாய்

## நலம் சேர்க்கும் நந்தீஸ்வரர்

சிவனாரை என்றைக்கும் சுமக்கும் நந்தி
சேவித்த பக்தர்களைக் காக்கும் நந்தி
கவலைகளை எந்நாளும் போக்கும் நந்தி
கயிலையிலே நடம்புரியும் கனிந்த நந்தி

பள்ளியறைப் பக்கத்தில் இருக்கும் நந்தி
பார்வதியின் சொல்கேட்டுச் சிரிக்கும் நந்தி
நல்லதொரு ரகசியத்தைக் காக்கும் நந்தி
நாள்தோறும் தண்ணீரில் குளிக்கும் நந்தி

செங்கரும்பு உணவு மாலை அணியும் நந்தி
சிவனுக்கே உறுதுணையாய் விளங்கும் நந்தி
மங்களங்கள் அனைத்தையும் கொடுக்கும் நந்தி
மனிதர்களின் துயர் போக்க வந்த நந்தி

அருகம்புல் மாலையையும் அணியும் நந்தி
அரிய வில்வமே ஏற்ற நந்தி
வரும் காலம் நலமாக வைக்கும் நந்தி
வணங்குகிறோம் எமைக்காக்க வருக நந்தி

பிரதோஷ காலத்தில் பேசும் நந்தி
பேரருளை மாந்தருக்கு வழங்கும் நந்தி
வரலாறு படைத்து வரும் வல்ல நந்தி
வறுமையினை எந்நாளும் அகற்றும் நந்தி

கெட்டவனா அத்தனையும் மாற்றும் நந்தி
கீர்த்தியுடன் குலம் காக்கும் இனிய நந்தி
வெற்றிவரும் வாய்ப்பளிக்க உதவும் நந்தி
விதியினைத்தான் மாற்றி விட விளையும் நந்தி

வேந்தன் நகர் நெய்யினிலே குளிக்கும் நந்தி
வியக்க வைக்கும் தஞ்சாவூர்ப் பெரிய நந்தி
சேர்ந்த திருபுன் கூரிலே சாய்ந்த நந்தி
செவி சாய்த்து அருள் கொடுக்கும் செல்வ நந்தி

கும்பிட்ட பக்தர் துயர்நீக்கும் நந்தி
குடம்குடமாய் அபிஷேகம் பார்த்த நந்தி
பொன் பொருளை வழங்கிடவே வந்த நந்தி
புகழ்குவிக்க எம் இல்லம் வருக! நந்தி!

## சிவன்

தன்மஹே ஸாய வித்மஹே
வாக்கிசுத்தாய தீமஹி
தன்னோ சிவ ப்ரசோதயாத்

# ஸ்ரீ துர்க்கா அஷ்டகம்

இன்பநலன் அளிப்பவளை இனியனவே தருபவளை
அன்புடைய அன்னையவளை அருஞ்சிவனை மணந்தவளை
என்னுடைய இதயத்தே பொன்னுயிராய் இருப்பவளை
நன்மலரால் பூசித்தே நமோதுர்க்கா யென்றிடுவேன் 1

துங்கவெழிற் கரிமுகனைத் துர்க்கைநீ யீன்றெடுத்தாய்
சங்கரனார் தாண்டவத்தில் சக்தியேநீ பங்கெடுத்தாய்
கொங்கிசினப் பேரரியில் பொருந்தநீ யிருந்திட்டாய்
தங்கிடுவாய் எங்குலத்தில் தவஒளியே துர்க்கையளே 2

இசை தந்து இல்வாழ்வின் இடர்நீக்கிக் காப்பவளே
விசையுடனே மணமாலை விருப்பமொடு அளிப்பவளே,
திசையெல்லாம் திருவிளங்கத் திருவடியால் நடந்தவளே,
அசைவற்ற பொருளதையும் ஆட்சிசெய்வாய் துர்க்கையளே! 3

வேண்டியன விரும்பியன வேண்டியவாறளித்திடுவாள்
காண்டிபத்தைக் கதையதனைக் காந்திமிகு சூலமதை
ஆண்டருளும் அன்னையவள் ஆட்சிசெய்ய ஏந்திட்டாள்
தூண்டாநல் மணிவிளக்கைத் தூயதுர்க்கைத் தாயென்போம் 4

உலகையிவள் ஈன்றெடுத்தாள் உடமைமிகத் தானளித்தாள்
கலகமிடும் கள்ளாக்கக் கலிமாய்த்துக் கவியிசைத்தாள்
திலகஒளி நுதலுடையாள் திருநிறைந்த வடிவுடையாள்
அலகில்நலம் அளிப்பவளை அன்னைஸ்ரீதுர்க் கையென்போம் 5

சுந்தரத்துக் கந்தனையே சுடர்கூட்டி ஈன்றவளார்?
விந்தைமிகப் பொங்கிடவே விளங்குநலம் தருபவளார்?
அந்தமொடு ஆதியின்றி அன்னையென வளர்ந்தவளார்?
சந்தமிகப் பொலிகின்ற சக்திஸ்ரீதுர்க் கையென்போம் 6

செல்வமொடு செல்வாக்கைச் செயம்பெறவே தந்தவளை,
நல்லறிவும் நல்லொளியும் நல்லனவும் நிறைந்தவளை,
வெல்லுகின்ற வழியாளை செஞ்சுடரின் விழியாளைச்
சொல்மலரால் பூசித்துச் சொர்ணஒளி பெற்றிடுவோம்! 7

குமரிமுனை நிற்கின்ற குலவிளக்கே துர்க்கையளே!
சமயமதில் வழிகாட்டும் சண்டிகையே துர்க்கையளே!
சமரிட்டு சங்கடத்தைச் சங்கரித்த துர்க்கையளே
இமயமுகில் துர்க்கையளே இணையடிகள் வாழியவே! 8

# துக்க நிவாரண அஷ்டகம்

மங்கள ரூபிணி மதியணி சூலினி மன்மத பாணியளே:
சங்கடம் நீக்கிடச் சடுதியில் வந்திடும் சங்கரி சௌந்தரியே
கங்கண பாணியன் கனிமுகங் கண்டநல் கற்பகக் காமினியே
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாட்சி

கானுறு மலரெனக் கதிர்ஒளி காட்டிக் காத்திட வந்திடுவாள்
தானுறு தவஒளி தாரொளி மதியொளி தாங்கியே வீசிடுவாள்
மானுறு விழியாள் மாதவர் மொழியாள் மாலைகள் சூடிடுவாள்
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாட்சி

சங்கரி சௌந்தரி சதுர்முகன் போற்றிடச் சபையினில் வந்தவளே
பொங்கரி மாவினில் பொன்னடி வைத்துப் பொருந்திட வந்த
எங்குலந் தழைத்திட எழில்வடிவுடனே எழுந்தநல் துர்க்கை
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாட்சி

தணதண தந்தண தவிலொலி முழங்கிடத் தண்மணி நீ வருவாய்
கணகண கங்கண கதிர்ஒளிவீசிடக் கண்மணி நீ வருவாய்
பணபண பம்பண பறையொலி கூவிடப் பண்மணி நீ வருவாய்
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாட்சி

பஞ்சமி பைரவி பர்வத புத்திரி பஞ்சநல்பாணியளே
கொஞ்சிடும் குமரனைக் குணமிகு வேழனைக் கொடுத்த நல் குமரியளே
சங்கடந் தீர்த்திடச் சமரது செய்தநற்சக்தியெனும் மாயே
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாட்சி

எண்ணிய படிநீ யருளிட வருவாய் எங்குல தேவியளே
பண்ணிய செயலின் பலனது நலமாய்ப் பல்கிட அருளிடுவாய்
கண்ணொளி யதனால் கருணையே காட்டிக் கவலைகள் தீர்ப்பவளே
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாட்சி

இடர்தரு தொல்லை இனிமேல் இல்லை யென்று நீ சொல்லிடுவாய்
சுடர்தரு அமுதே சுருதிகள் கூறிச் சுகமது தந்திடுவாய்
படர்தரு இருளில் பரிதியாய் வந்து பழவினை ஓட்டிடுவாய்
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாட்சி

ஜெயஜெய பாலா சாமுண்டேஸ்வரி ஜெயஜெய ஸ்ரீதேவி
ஜெயஜெய துர்கா ஸ்ரீ பரமேஸ்வரி ஜெயஜெய ஸ்ரீதேவி
ஜெயஜெய ஜெயந்தி மங்கள காளி ஜெயஜெய ஸ்ரீதேவி
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாட்சி!

## துர்க்கா தேவி துதி

ஸர்வமங்கல மாங்கல்யே சிவே ஸர்வார்த்த ஸாதிகே
சரண்யே த்ரியம்பகே கௌரி நாராயணி நமோஸ்துதே
சரணாகதே தீ னார்த்த பரித்ராண பராயணே
ஸர்வஸ்யார்த்தி ஹரே தேவி நாராயணி நமோஸ்துதே
ஸர்வஸ்வரூபே ஸர்வேச ஸர்வசக்தி ஸமன்விதே
பயேப்யஸ் த்ராஹிநோ தேவிதுர்க்கே தேவி நமோஸ்துதே

# ராகு கால துர்க்கா அஷ்டகம்

வாழ்வு ஆனவள் துர்க்கா வாக்குமானவள்
வானில் நின்றவள் இந்த மண்ணில் வந்தவள்
தாழ்வு அற்றவள் துர்க்கா தாயும் ஆனவள்
தாபம் நீக்கியே என்னைத் தாக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே

உலகையீன்றவள் துர்க்கா உமையுமானவள்
உண்மையானவள் எந்தன் உயிரைக் காப்பவள்
நிலவில் நின்றவள் துர்க்கா நிந்தையானவள்
நிலவி நின்றவள் எந்தன் நினைவும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே

செம்மையானவள் துர்க்கா செபமுமானவள்
அம்மையானவள் அன்பு தந்தையானவள்
இன்மையானவள் துர்க்கா இன்பமானவள்
மும்மையானவள் என்றும் முழுமை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே

உயிருமானவள் துர்க்கா உடலுமானவள்
உலகமானவள் எந்தன் உடமையானவள்
பயிருமானவள் துர்க்கா படரும் கொம்பவள்
பண்பு பொங்கிட என்னுள் பழுத்த துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே

துன்பமற்றவள் துர்க்கா துரிய வாழ்பவள்
துறையுமானவள் இன்பத் தோணியானவள்
அன்பு உற்றவள் துர்க்கா அபய வீடவள்
நன்மை தங்கிட என்னுள் நடக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே

குருவுமானவள் துர்க்கா குழந்தையானவள்
குலமுமானவள் எங்கள் குடும்ப தீபமே
திருவுமானவள் துர்க்கா திருசூலியானவள்
திருநீற்றில் என்னிடம் திகழும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே

ராகு தேவனின் பெரும் பூஜை ஏற்றவள்
ராகு நேரத்தில் அன்னை தேடி வருபவள்
ராகு காலத்தில் எந்தன் தாயை வேண்டினேன்
ராகு துர்க்கையே என்னை காக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே

கன்னி துர்க்கையே இதயக்கமல துர்க்கையே
கருணை துர்க்கையே வீரக் கனக துர்க்கையே
அன்னை துர்க்கையே என்றும் அருளும் துர்க்கையே
அன்பு துர்க்கையே ஜெய துர்க்கை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே

## ரோக நிவாரண அஷ்டகம்

பகவதி தேவி பர்வத தேவி பலமிகு தேவி துர்க் கையளே
ஜெகமது யாவும் ஜெயஜெய வெனவே சங்கரியுன்னைப் பாடி டுமே
ஹுநஹுந தகதக பசபச வெனவே தளிர்த் திடுஜோதி யான வளே
ரோகநி வாரணி சோகநி வாரணி தாபநி வாரணி ஜெய துர்க்கா!

தண்டினி தேவி தக்ஷிணி தேவி கட்கினி தேவி துர்க் கையளே
தந்தன தான தனதன தான தாண்டவ நடன ஈஸ்வ ரியே
முண்டினி தேவி முனையொளி சூலி முனிவர்கள் தேவி மணித் தீவி
ரோகநி வாரணி சோகநி வாரணி தாபநி வாரணி ஜெய துர்க்கா!

காளினி நீயே காமினி நீயே கார்த்திகை நீயே துர்க் கையளே
நீலினி நீயே நீதினி நீயே நீர்நிதி நீயே நீர் ஒளியே
மாலினி நீயே மாதினி நீயே மாதவி நீயே மான் விழியே
ரோகநி வாரணி சோகநி வாரணி தாபநி வாரணி ஜெய துர்க்கா!

நாரணி மாயே நான்முகன் தாயே நாகினி யாயே துர்க்கைக் கையளே
ஊரணி மாயே ஊற்று தாயே ஊர்த்துவ யாயே ஊர் ஒளியே
காரணி மாயே காருணி தாயே கானக யாயே காசி னியே
ரோகநி வாரணி சோகநி வாரணி தாபநி வாரணி ஜெய துர்க்கா!

திருமக ளானாய் கலைமக ளானாய் மலைமக ளானாய் துர்க் கையளே
பெருநிதி யானாய் பேரறி வானாய் பெருவலி யானாய் பெண் மையவளே
நறுமல ரானாய் நல்லவ ளானாய் நந்தினி யானாய் நங்கை யளே
ரோகநி வாரணி சோகநி வாரணி தாபநி வாரணி ஜெய துர்க்கா!

வேதமும் நீயே வேதியள் நீயே வேகமும் நீயே துர்க் கையளே
நாதமும் நீயே நாற்றிசை நீயே! நாணமும் நீயே நாய கியே
மாதமும் நீயே மாதவம் நீயே மானமும் நீயே மாய வளே
ரோகநி வாரணி சோகநி வாரணி தாபநி வாரணி ஜெய துர்க்கா!

கோவுறை ஜோதி கோமள ஜோதி கோமதி ஜோதி துர்க் கையளே
நாவுறை ஜோதி நாற்றிசை ஜோதி நாட்டிய ஜோதி நாச்சியளே
பூவுறை ஜோதி பூரண ஜோதி பூதநற் ஜோதி பூரணையே
ரோகநி வாரணி சோகநி வாரணி தாபநி வாரணி ஜெய துர்க்கா!

ஜெயஜெய சைல புத்திரி ப்ரஹ்ம் சாரிணி சந்த்ர கண்டி னியே
ஜெயஜெய கூஷ் மாண்டினி ஸ்கந்த மாதினி காத்யா யன்ய யளே
ஜெயஜெய கால ராத்திரி கௌரி ஸித்திதா ஸ்ரீநவ துர்க் கையளே
ரோகநி வாரணி சோகநி வாரணி தாபநி வாரணி ஜெய துர்க்கா!

# அபிராமி அந்தாதி

## காப்பு

தாரமர் கொன்றையும் சண்பக
        மாலையும் சாத்தும் தில்லை
ஊரர்தம் பாகத்(து) உமைமைந்த
        னே உலகே ழும் பெற்ற
சீரபி ராமி அந்தாதிஎப்
        போதும்என் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதி
        யேநிற்கக் கட்டுரையே.

## நூல்

உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே. 1

துணையுந் தொழுந்தெய்வ மும்பெற்ற தாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையும் கருப்புச் சிலையுமென் பாசாங்குசமும் கையில்
அணையும் திரிபுர சுந்தரி யாவ(து) அறிந்தனமே. 2


அறிந்தேன் எவரும் அறியா மறையை அறிந்துகொண்டு
செறிந்தேன் உனது திருவடிக் கேதிரு வேவெருவிப்
பிறிந்தேன் நின்அன்பர் பெருமைஎண் ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழும்நர குக்குற வாய மனிதரையே. 3

மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே கொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரும் நீயும்என் புந்திஎந் நாளும் பொருந்துகவே. 4

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர்முலையாள்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி வார்சடையோன்
அருந்திய நஞ்(சு) அமு தாக்கிய அம்பிகை அம்புயமேல்
திருந்திய சுந்தரி அந்தரி பாதம்என் சென்னியதே. 5

சென்னிய(து) உன்பொன் திருவடித் தாமரை சிந்தையுள்ளே
மன்னிய(து) உன்திரு மந்திரம் சிந்துர வண்ணப்பெண்ணே
முன்னிய நின்அடி யாருடன் கூடி முறைமுறையே
பன்னிய(து) என்றும்உன் றன்பர மாகம பத்ததியே. 6

ததியுறு மத்திற் சுழலும்என் ஆவி தளர்விலதோர்
கதியுறு வண்ணம் கருதுகண் டாய்கம லாயனும்
மதியுறு வேணி மகிழ்நனும் மாலும் வணங்கிஎன்றும்
துதியுறு சேவடியாய் சிந்து ராளனை சுந்தரியே. 7



சுந்தரி எந்தை துணைவிஎன் பாசத் தொடரைஎல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தி னாள்மகி டன்தலைமேல்
அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத்தோன்
சுந்தரி கைத்தலத் தாள்மலர் தாள்என் கருத்தனவே. 8

கருத்தன எந்தைதன் கண்ணன் வண்ணக் கனகவெற்பிற்
பெருத்தன பால்அழும் பிள்ளைக்கு நல்கின பேரருள்கூர்
திருத்தன பாரமும் ஆரமும் செங்கைச் சிலையும்அம்பும்
முருத்தன மூரலும் நீயும்அம் மேவந்தென் முன்நிற்கவே. 9

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்ப(து) உன்னை
என்றும் வணங்குவ(து) உன்மலர்த் தாள்எழு தாமறையின்
ஒன்றும் அரும்பொரு ளேஅரு ளேஉமை யேஇமயத்(து)
அன்றும் பிறந்தவ ளேஅழி யாமுத்தி ஆனந்தமே. 10

ஆனந்த மாய்என் அறிவாய் நிறைந்த அமுதமுமாய்
வானந்த மான வடி(வு)உடை யாள்மறை நான்கினுக்கும்
தானந்த மான சரணார விந்தம் தவளநிறக்
கானந்தம் ஆடரங் காம்எம்பி ரான்முடிக் கண்ணியதே. 11

கண்ணிய(து) உன்புகழ் கற்ப(து) உன் நாமம் கசிந்துபத்தி
பண்ணிய(து) உன்இரு பாதம் புயத்தில் பகல் இரவா
நண்ணிய(து) உன்னை நயந்தோர் அவையத்து நான்முன் செய்த
புண்ணியம் ஏ(து)என்அம் மேபுவி ஏழையும் பூத்தவளே. 12

பூத்த வளேபுவ னம்பதி னான்கையும் பூத்தவண்ணம்
காத்தவ ளேபின் கரந்தவ ளேகறைக் கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்(கு) இளையவளே
மாத்தவ ளேஉன்னை அன்றிமற் றோர்தெய்வம் வந்திப்பதே. 13

வந்திப்பவர் உன்னை வானவர் தானவர் ஆனவர்கள்
சிந்திப் பவர்நல் திசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப் பவர்அழி யாப்பர மானந்தர் பாரில்உன்னைச்
சந்திப் பவர்க்(கு) எளிதாம் எம்பிராட்டி நின்தண்ணளியே. 14

தண்ணளிக் கென்றுமுன் னேபல கோடி தவங்கள் செய்வார்
மண்ணளிக் கும்செல்வ மோபெறு வார்மதி வானவர்தம்
விண்ணளிக் கும்செல் வமும்அழி யாமுத்தி வீடுமன்றோ
பண்ணளிக் கும்சொல் பரிமள யாமளைப் பைங்கிளியே. 15

கிளியே கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தொளிரும்
ஒளியே ஒளிரும் ஒளிக்கிட மேஎண்ணில் ஒன்றுமில்லா
வெளியேன் வெளிமுதல் பூதங்க ளாகி விரிந்த அம்மே
அளியேன் அறிவள விற்(கு)அள வான(து) அதிசயமே. 16

அதிசய மானவடி(வு)உடை யாள்அர விந்தமெல்லாம்
துதிசய ஆனன சுந்தர வல்லி துணைஇரதி
பதிசய மான(து) அபசய மாகமுன் பார்த்தவர்தம்
மதிசய மாகவன் றோவாம பாகத்தை வவ்வியதே. 17

வவ்விய பாகத்(து) இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும் உங்கள் திருமணக் கோலமும் சிந்தையுள்ளே

அவ்வியம் தீர்த்தென்னை ஆண்டபொற் பாதமும் ஆகிவந்து
வெவ்வியும் காலன்என் மேல்வரும் போது வெளிநிற்கவே. 18

வெளிநின்ற நின்திரு மேனியைப் பார்த்தென் விழியும்நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரைகண்ட தில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம் திகழ்கின்ற தென்ன திருவுளமோ
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே. 19

உறைகின்ற நின்திருக் கோயில்நின் கேள்வர் ஒருபக்கமோ
அறைகின்ற நான்மறை யின்அடி யோமுடி யோஅமுதம்
நிறைநின்ற வெண்திங்க ளோகஞ்ச மோ என்றன் நெஞ்சகமோ
மறைகின்ற வாரிதி யோபூர ணாசல மங்கலையே. 20

மங்கலை செங்கல சம்முலை யாள்மலை யாள் வருணச்
சங்கலை செங்கைச் சகல கலாமயில் தாவுகங்கை
பொங்கலை தங்கும் புரிசடை யோன்புடை யாளஉடையாள்
பிங்கலை நீலிசெய் யாள்வெளி யாள் பசும் பெண்கொடியே. 21

கொடியே இளவஞ்சிக் கொம்பே எனக்குவம் பேபழுத்த
படியே மறையின் பரிமள மேபனி மால்இமயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்றஅம்மே
அடியேன் இறந்(து) இங்(கு) இனிப்பிற வாமல்வந்(து) ஆண்டுகொள்ளே. 22

கொள்ளேன் மனத்தில்நின் கோலம்அல் லா(து)அன்பர் கூட்டந்தன்னை
விள்ளேன் பரசம யம்விரும் பேன்வியன் மூவுலகுக்(கு)
உள்ளே அனைத்தினுக் கும்புறம் பேஉள்ளத் தேவிளைந்த
கள்ளே களிக்கும் களியே அளியஎன் கண்மணியே. 23

மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணிபுனைந்த
அணியே அணியும் அணிக்கழ கேஅணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்த பின்னே. 24

பின்னே திரிந்துஉன் அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்றுகொண் டேன்முதல் மூவருக்கும்
அன்னே உலகுக்(கு) அபிராமி என்னும் அருமருந்தே
என்னே இனிஉன்னை யான்மற வாமல்நின்(று) ஏத்துவனே. 25

ஏத்தும் அடியவர் ஈரே ழுலகினை யும்படைத்தும்
காத்தும் அழித்தும் திரிபவ ராம்கமழ் பூங்கடம்பு
சாத்தும் குழல் அணங் கேமணம் நாறும்நின்தாள் இணைக்(கு)என்
நாத்தங்கு புன்மொழி ஏறிய வாறு நகையுடைத்தே. 26

உடைத்தனை வஞ்சப் பிறவியை உள்ளம் உருகும்அன்பு
படைத்தனை பத்ம பதயுகம் சூடும் பணிஎனக்கே
அடைத்தனை நெஞ்சத்(து) அழுக்கைஎல் லாம்நின் அருட்புனலால்
துடைத்தனை சுந்தரி நின்னருள் ஏதென்று சொல்லுவதே. 27

சொல்லும் பொருளும் எனநட மாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும்அவர்க் கேகழி யாஅரசும்
செல்லும் தவநெறி யும்சிவ லோகமும் சித்திக்குமே. 28

சித்தியும் சித்திதரு ந்தெய்வ மாகித் திகழும்பரா
சத்தியும் சத்தி தழைக்கும் சிவமும் தவம்முயல்வார்
முத்தியும் முத்திக்கு வித்தும்வித் தாகி முளைத் தெழுந்த
புத்தியும் புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தையன்றே. 29

அன்றே தடுத்(து) என்னை ஆண்டு கொண் டாய்கொண்ட(து) அல்லவென்கை
நன்றே உனக்(கு)இனி நான்என் செயினும் நடுக்கடுளுள்
சென்றே விழினும் கரையேற் றுகைநின் திருவுளமே
ஒன்றே பலவுரு வேயரு வேஎன் உமையவளே. 30

உமையும் உமையொரு பாகனும் ஏக உருவில் வந்திங்(கு)
எமையும் தமக்கன்பு செய்யவைத் தார்இனி எண்ணுதற்குச்
சமயங் களுமில்லை ஈன்றெடுப் பாள்ஒரு தாயும் இல்லை
அமையும் அமையுறு தோளியர் மேல்வைத்த ஆசையுமே. 31

ஆசைக் கடலில் அகப்பட்(டு) அருளற்ற அந்தகன்கைப்
பாசத்தில் அல்லல் படஇருந் தேனைநின் பாதம் என்னும்
வாசக் கமலம் தலைமேல் வலியவைத்(து) ஆண்டுகொண்ட
நேசத்தை என்சொல்லு வேன்ஈசர் பாகத்து நேரிழையே. 32

இழைக்கும் வினைவழி யேஅடும் காலன் எனைநடுங்க
அழைக்கும் பொழுது வந்(து)அஞ்சல்என் பாய்அத்தர் சித்தம்எல்லாம்
குழைக்கும் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே
உழைக்கும் பொழு(து)உ(ன்)னை யேஅன்னை யேஎன்பவன் ஓடிவந்தே. 33

வந்தே சரணம் புகும்அடி யாருக்கு வான்உலகம்
தந்தே பரிவொடு தான்போய் இருக்கும் சதுர்முகமும்
பைந்தேன் அலங்கல் கருமணி ஆகமும் பாகமும்பொன்
செந்தேன் மலரும் அலர்கதிர் ஞாயிறும் திங்களுமே. 34

திங்கட் பசுவின் மணம்நாறும் சீறடி சென்னிவைக்க
எங்கட்(கு) ஒருதவம் எய்திய வான்எண் ணிறந்தவிண்ணோர்
தங்கட் கும்இந்தத் தவமெய்து மோதரங் கக்கடலுள்
வெங்கட் பணியணை மேல்துயில் கூரும் விழுப்பொருளே. 35

பொருளே பொருள்முடிக் கும்போக மேஅரும் போகம்செய்யும்
மருளே மருளில் வந்தெரு ளேஎன் மனத்துவஞ்சத்(து)
இருளே தும்இன்றி ஒளிவெளி யாகி இருக்குமுன்றன்
அருளே(து) அறிகின் றிலேன் அம்பு யாதனத்(து) அம்பிகையே. 36

கைக்கே அணிவது கன்னலும் பூவும் கமலம் அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து மாலை; விடஅரவின்
பைக்கே அணிவது பன்மணிக் கோவையும் பட்டும்;எட்டுத்
திக்கே அணியும் திருவுடை யான் இடம்சேர்பவளே. 37

பவளக் கொடியில் பழுத்த செவ்வாயும் பனிமுறுவல்
தவளத் திருநகை யும்துணை யாஎங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்கும் துணைமுலையாள்
அவளைப் பணிமின் கண்டீர்அம ராவதி ஆளுகைக்கே. 38

ஆளுகைக்(கு) உற்றன் அடித்தா மரைகள்உண்(டு); அந்தகன்பால்
மீளுகைக்(கு) உன்றன் வழியின் கடையுண்டு. மேல்இவற்றின்
மூளுகைக்(கு) என்குறை நின்குறை யேஅன்று, முப்புரங்கள்
மாளுகைக்(கு) அம்பு தொடுத்தவில் லான்பங்கில் வாண்நுதலே. 39

வாணுதல் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற்(கு) எண்ணிய எம்பெரு மாட்டியைப் பேதைநெஞ்சில்
காணுதற்(கு) அண்ணியள் அல்லாத கன்னியைக் காணும்அன்பு
பூணுதற்(கு) எண்ணிய எண்ணம் அன்றோ? முன்செய் புண்ணியமே. 40

புண்ணியம் செய்தன மேமன மேபுதுப் பூங்குவளைக்
கண்ணியும் செய்ய கணவரும் கூடிநம் காரணத்தால்
நண்ணிஇங் கேவந்து; தம்மடி யார்கள் நடுவிருக்கப்
பண்ணிநம் சென்னியின் மேல்பத்ம பாதம் பதித்திடவே. 41

இடங்கொண்டு விம்மி இணைகொண்(டு) இறுகி இளகிமுத்து
வடங் கொண்ட கொங்கை மலைகொண்(டு) இறைவர் வலியநெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்வரவின்
படங்கொண்ட அல்குல் பனிமொழி வேதப் பரிபுரையே. 42

பரிபுரச் சீறடி பாசாங் குசைபஞ்ச பாணிஇன்சொல்
திரிபுர சுந்தரி சிந்துர மேனியள் தீமைநெஞ்சில்
புரிபுர வஞ்சரை அஞ்சக் குனிபொருப் புச்சிலைக்கை
எரிபுரை மேனி இறைவர்செம் பாகத்(து) இருந்தவளே. 43

தவளே இவள் எங்கள் சங்கர னார்மனை மங்கலமாம்
அவளே அவர்தமக்(கு) அன்னையும் ஆயினள் ஆகையினால்
இவளே கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியும்ஆம்
துவளேன் இனியொரு தெய்வமுண் டாகமெய்த் தொண்டுசெய்தே. 44

தொண்டுசெய் யாதுநின் பாதம் தொழாது துணிந்திச்சையே
பண்டுசெய் தார்உள ரோஇல ரோஅப் பரிசடியேன்
கண்டுசெய் தால்அது கைதவ மோஅன்றிச் செய்தவமோ
மிண்டுசெய் தாலும் பொறுக்கைநன் றேபின் வெறுக்கையன்றே. 45

வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம்மடி யாரைமிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியதன் றேபுது நஞ்சைஉண்டு
கறுக்கும் திருமிடற் றான்இடப் பாகம் கலந்தபொன்னே
மறுக்கும் தகைமைகள் செய்யினும் யான்உன்னை வாழ்த்துவனே. 46

வாழும் படியொன்று கண்டுகொண் டேன்மனத் தேயொருவர்
வீழும் படியன்று விள்ளும் படியன்று வேளைநிலம்
ஏழும் பருவரை எட்டும்எட் டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே. 47

சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில் ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்துநெஞ்சில்
இடரும் தவிர்த்திமைப் போதிருப் பார்பின்னும் எய்துவரோ
குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே 48
நரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவிவெங் கூற்றுக்கிட்ட

வரம்பை அடுத்து மறுகும்அப் போதுவளைக்கை அமைத்(து)
அரம்பை அடுத்து அரிவையர் சூழவந்(து) அஞ்சல்என்பாய்
நரம்பை அடுத்த இசைவடி வாய்நின்ற நாயகியே. 49

நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வராகி சூலினி மாதங்கிஎன்
றாயகி யாதி உடையாள் சரணம் அரண்நமக்கே. 50

அரணம் பொருள்என்று அருள்ஒன் றிலாத அசுரர்தங்கள்
முரண்அன் (று) அழிய முனிந்தபெம் மானும் முகுந்தனுமே
சரணம் சரணம் எனநின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி இரண்டும் எய் தார் இந்த வையகத்தே. 51

வையம் துரகம் மதகரி மாமகு டம்சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலை ஆரம் பிறைமுடித்த
ஐயம் திரமனை யாள்அடித் தாமரை(க்) அன்புமுன்பு
செய்யும் தவம்உடை யார்க்குள வாகிய சின்னங்களே. 52

சின்னஞ் சிறு மருங்கினில் சாத்திய செய்யபட்டும்
பென்னம் பெரிய முலையும்முத் தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங் கரிய குழலும்கண் மூன்றும் கருத்தில்வைத்துத்
தன்னந் தனியிருப் பார்க்கிது போலும் தவமில்லையே. 53

இல்லாமை சொல்லி ஒருவர்தம் பால்சென்(று) இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவி ரேல்நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம் பால்ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே. 54

மின்னா யிரம்ஒரு மெய்வடி வாகி விளங்குகின்ற
தன்னாள்அகமகிழ் ஆனந்த வல்லி அருமறைக்கு
முன்னாய் நடுவெங்கு மாய்முடி வாய முதல்விதன்னை
உன்னா(து) ஒழியினும் உன்னிலும் வேண்டுவது(து) ஒன்றிலையே 55

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்(து)இவ் வுலகெங்குமாய்
நின்றாள் அனைத்தையும் நீங்கிநிற் பாள்என்றன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்ற வாஇப் பொருள்அறிவார்
அன்றா லிலையில் துயின்றபெம் மானும்என் ஐயனுமே. 56

ஐயன் அளந்த படியிரு நாழிகொண்(டு) அண்டம்எல்லாம்
உய்ய அறம்செயும் உன்னையும் போற்றி ஒருவர்தம்பால்
செய்யபசுந்தமிழ்ப் பாமாலை யுங்கொண்டு சென்று பொய்யும்
மெய்யும் இயம்பவைத் தாய்இது வோஉன்றன் மெய்யருளே. 57

அருணாம் புயத்தும் என்சித்தாம் புயத்தும் அமர்ந்திருக்கும்
தருணாம் புயமுலைத் தையல்நல் லாள்தகை சேர்நயனக்
கருணாம் புயமும வதனாம் புயமும் காரம்புயமும்
சரணாம் புயமும்அல் லாற்கண்டி லேன்ஒரு தஞ்சமுமே 58

தஞ்சம் பிறதில்லை ஈதல்ல தென்றுன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றி லேன்ஒற்றை நீள்சிலையும்
அஞ்சம்பும் இக்(கு) அலர் ஆகநின் றாய்அறி யார்எனினும்
பஞ்சஞ்சும் மெல்லடி யார்அடி யார்பெற்ற பாலரையே. 59

பாலினும் சொல்இனி யாய்பனி மாமலர்ப் பாதம்வைக்க
மாலினும் தேவர் வணங்கநின் றோன்கொன்றை வார்சடையின்

மேலினும் கீழ்நின்று வேதங்கள் பாடும்மெய்ப் பீடம்ஒரு
நாலினும் சாலநன் றோஅடி யேன்முடை நாய்த்தலையே. 60

நாயே னையும்இங்(கு) ஒருபொரு ளாக நயந்துவந்து
நீயே நினைவின்றி ஆண்டுகொண் டாய்நின்னை உள்ளவண்ணம்
பேயேன் அறியும் அறிவுதந் தாய்என்ன பேறுபெற்றேன்
தாயே மலைமக ளேசெங்கண் மால்திருத் தங்கச்சியே. 61

தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரம் சாய்த்துமத
வெங்கண் கரியுரி போர்த்தசெஞ் சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி கோகனகச்
செங்கைக் கரும்பும் அலரும்எப் போதும்என் சிந்தையதே. 62

தேறும் படிசில ஏதுவும் காட்டிமுன் செல்கதிக்குக்
கூறும் பொருள்குன் றில்கொட்டும் தறிக்குறிக் கும்சமயம்
ஆறும் தலைவி இவளாய் இருப்ப(து) அறிந்திருந்தும்
வேறும் சமயம் உண் டென்றுகொண் டாடிய வீணருக்கே. 63

வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்கஅன்பு
பூணேன் உனக்(கு) அன்பு பூண்டுகொண் டேன்நின் புகழ்ச்சியன்றிப்
பேணேன் ஒரு பொழு தும்திரு மேனிப்ர காசமன்றிக்
காணேன் இருநில மும்திசை நான்கும் ககனமுமே. 64

ககனமும் வானும் புவனமும் காணவிற் காமன்அங்கம்
தகனமுன் செய்த தவப்பெரு மாற்குத் தடக்கையும்செம்
முகனுமுந் நான்கிரு மூன்றெனத் தோன்றிய மூதறிவின்
மகனுமுண் டாதன் றோவல்லி நீசெய்த வல்லபமே. 65

வல்லபம் ஒன்றறி யேன்சிறி யேன்நின் மலரடிசெம்
பல்லவம் அல்லது பற்றொன்றி லேன்பசும் பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப் பாய்வினை யேன்தொடுத்த
சொல்அவ மாயினும் நின்திரு நாமங்கள் தோத்திரமே. 66

தோத்திரம் செய்து தொழுதுமின் போலும்நின் தோற்றம்ஒரு
மாத்திரைப் போதும் மனத்தில்வை யாதவர் வண்மைகுலம்
கோத்திரம் கல்வி குணம்குன்றி நாளும் குடில்கள் தொறும்
பாத்திரம் கொண்டு பலிக்குழ லாநிற்பர் பாரெங்குமே. 67

பாரும் புனலும் கனலும்வெங் காலும் படர்விசும்பும்
ஊரும் முருகு சுவையொளி யூறொலி ஒன்றுபடச்
சேரும் தலைவி சிவகாம சுந்தரி சீரடிக்கே
சாரும் தவமுடை யார்படை யாத தனமில்லையே. 68

தனந்தரும் கல்வி தரும்ஒரு நாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாள்அபி ராமி கடைக்கண்களே. 69

கண்களிக் கும்படி கண்டுகொண் டேன்கடம் பாடவியில்
பண்களிக் குங்குரல் வீணையும் கையும் பயோதரமும்
மண்களிக் கம்பச்சை வண்ணமும் ஆகி மதங்கர்குலப்
பெண்களிற் றோன்றிய எம்பெரு மாட்டிதன் பேரழகே. 70

அழகுக்(கு) ஒருவரும் ஒவ்வாத வல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத் தாள்பனி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
இழவுற்று நின்றநெஞ் சேயிரங் கேலுனக்(கு) என்குறையே. 71

என்குறை தீரநின்று ஏத்துகின் றேன்இனி யான்பிறக்கின்
நின்குறை யேஅன்றி யார்குறை காண்இரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்
தன்குறை தீரஎங்கோன்சடை மேல்வைத்த தாமரையே 72

தாமம் கடம்பு படைபஞ்ச பாணம் தனுக்கரும்பு
யாமம் வயிரவர் ஏத்தும் பொழுதுஎமக் கென்றுவைத்த
சேமம் திருவடி செங்கைகள் நான்(கு)ஒளி செம்மையம்மை
நாமம் திரிபுரை ஒன்றோ டிரண்டு நயனங்களே. 73

நயனங்கள் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணனும்
அயனும் பரவும் அபிராம வல்லி அடியிணையைப்
பயன்என்று கொண்டவர் பாவையர் ஆடவும் பாடவும்பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே. 74

தங்குவர் கற்பகத் தருவின் நீழலில் தாயரின்றி
மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்குவர் ஆழியும் ஈரேழ் புவனமும் பூத்தஉந்திக்
கொங்கிவர் பூங்குழ லாள்திரு மேனி குறித்தவரே. 75

குறித்தேன் மனத்தில்நின் கோலம்எல் லாம்நின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டுகிண்டி
வெறித்தேன் அவிழ்கொன்றை வேணிப் பிரா(ன்) ஒரு கூற்றைமெய்யில்
பறித்தே குடிபுகு தும்பஞ்ச பாண பயிரவியே. 76

பயிரவி பஞ்சமி பாசாங் குசபஞ்ச பாணிவஞ்சர்
உயிரவி உண்ணும் உயர்சண்டி காளி ஒளிரும்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகியென்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே. 77

செப்பும் கனக கலசமும் போலும் திருமுலைமேல்
அப்பும் களப அபிராம வல்லி அணிதரளக்
கொப்பும் வயிரக் குழையும் விழியின் கொழுங்கடையும்
துப்பும் நிலவும் எழுதிவைத் தே(ன்)என் துணைவிழிக்கே. 78

விழிக்கே அருளுண்(டு)அபிராம வல்லிக்கு வேதம்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்(டு) எமக்(கு)அவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்க ளேசெய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர்தம் மோடென்ன கூட்டினியே. 79

கூட்டிய வாஎன்னைத் தன்னடி யாரில் கொடிய வினை
ஓட்டிய வாஎன்கண் ஓடிய வாதன்னை உள்ளவண்ணம்
காட்டிய வாகண்ட கண்ணும் மனமும் களிக்கின்றதா
ஆட்டிய வாநடம் ஆடகத் தாமரை ஆரணங்கே. 80

அணங்கே அணங்குகள் நின்பரி வாரங்கள் ஆகையினால்
வணங்கேன் ஒருவரை வாழ்த்துகி லேன்நெஞ்சில் வஞ்சகரோ(டு)
இணங்கேன் என(து)உன(து) என்றிருப் பார்சிலர் யாவரொடும்
பிணங்கேன் அறிவொன் றிலேன்என்கண் நீவைத்த பேரளியே. 81

அளியார் கமலத்தில் ஆரணங் கேஅகி லாண்டமும்நின்
ஒளியா நின்ற ஒளிர்திரு மேனியை உள்ளுந்தொறும்
களியாகி அந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடின்எங்ங னேமறப் பேன்நின் விரகினையே. 82

விரவும் புதுமலர் இட்டுநின் பாத விரைக்கமலம்
இரவும் பகலும் இறைஞ்சவல் லார்இமை யோர்எவரும்
பரவும் பதமும் அயிரா வதமும் பகீரதியும்
உரவும் குலிசமும் கற்பகக் காவும் உடையவரே. 83

உடையாளை ஒல்கு செம்பட்(டு) உடையாளை ஒளிர்மதிசெஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சடை யாளைத் தயங்குநுண்ணூல்,
இடையாளை எங்கள்பெம் மானிடை யாளைஇங்(கு)என்னைஇனிப்
படையாளை உங்களை யும்படை யாவண்ணம் பார்த்திருமே. 84

பார்க்கும் திசை தொறும் பாசாங் குசமும் பனிச்சிறை வண்(டு)
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும் கரும்புமென் அல்லல்எல்லாம்
தீர்க்கும் திரிபுரை யாள்திரு மேனியும் சிற்றிடையும்
வார்க்குங் குமமுலை யும்முலை மேல்முத்து மாலையுமே. 85

மாலயன் தேட மறைதேட வானவர் தேடநின்ற
காலையும் சூடகக் கையையும் கொண்டு கதித்தகப்பு
வேலை வெங் காலன்என் மேல்விடும் போது வெளிநில்கண்டாய்
பாலையும் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே. 86

மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத நின்திரு மூர்த்திஎன்றன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்ற தால்விழி யால்மதனை
அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை அண்டமெல்லாம்
பழிக்கும் படியொரு பாகம்கொண் டாளும் பராபரையே. 87

பரமென்று உனையடைந் தேன்தமி யேனும்உன் பத்தருக்குள்
தரமென்று இவன்என்று தள்ளத் தகாது தரியலர்தம்
புரம்அன்று எரியப் பொருப்புவில் வாங்கிய போதில்அயன்
சிரம்ஒன்று செற்றகை யான்இடப் பாகம் சிறந்தவளே. 88

சிறக்கும் கமலத் திருவேநின் சேவடி சென்னிவைக்கத்
துறக்கம் தரும்நின் துணைவரும் நீயும் துரியம்அற்ற
உறக்கம் தரவந்(து) உடம்போ(டு) உயர்வுற வற்றறிவு
மறக்கும் பொழுதென்முன் னேவரல் வேண்டும் வருந்தியுமே. 89

வருந்தா வகைஎன் மனத்தாம் ரையினில் வந்துபுகுந்(து)
இருந்தாள் பழைய இருப்பிட மாக இனிஎனக்குப்
பொருந்தா தொருபொருள் இல்லைவிண் மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தா னதைநல்கும் மெல்லியளே. 90

மெல்லிய நுண்ணிடை மின்அனை யாளை விரிசடையோன்
புல்லிய மென்முலை பொன்அனை யாளைப் புகழ்ந்துமறை
சொல்லிய வண்ணம் தொழும்அடி யாரைத் தொழுமவர்க்குப்
பல்லியம் ஆர்த்தெழ வெண்பக(டு) ஊரும் பதம்தருமே. 91
பதத்தே உருகிநின் பாதத்தி லேமனம் பற்றிஉன்றன்

இதத்தே ஒழுக் அடிமைகொண் டாய்இனி யான்ஒருவர்
மதத்தே மதிமயங் கேன்அவர் போன வழியும்செல்லேன்
முதத்தேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ்நகையே. 92

நகையே இஃதிந்த ஞாலமெல் லாம்பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலை மானே முதுகண் முடிவில்அந்த
வகையே பிறவியும் வம்பே மலைமகள் என்பதுநாம்
மிகையே இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே. 93

விரும்பித் தொழும்அடி யார்விழி நீர்மல்கி மெய்புளகம்
அரும்பித் ததும்பிய ஆனந்த மாகி அறிவிழந்து
சுரும்பிற் களித்து மொழிதடு மாறிமுன் சொன்னதெல்லாம்
தரும்பித்தர் ஆவரென் றால்அபி ராமி சமயம்நன்றே. 94

நன்றே வருகினும் தீதே விளைகினும் நான்அறிவ(து)
ஒன்றேயு மில்லை உனக்கே பரம்எனக்(கு) உள்ளம்எல்லாம்
அன்றே உனதென்(று) அளித்துவிட் டேன்அழி யாதகுணக்
குன்றே அருட்கட லேஇம வான்பெற்ற கோமளமே. 95

கோமள வல்லியை அல்லியந் தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை ஏதும் இலாளை எழுதரிய
சாமள மேனிச சகலக ஈமயில் தன்னைத்தம்மால்
ஆமள வும்தொழு வார்எழு பாருக்கும் ஆதிபரே. 96

ஆதித்தன் அம்புலி அங்கி குபேரன் அமரர்தங்கோன்
போதிற் பிரம்மன் புராரி முராரி பொதியமுனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன்முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே. 97

தைவந்த நின்னடித் தாமரை சூடிய சங்கரர்க்குக்
கைவந்த தீயும் தலைவந்த ஆறும் கரந்ததெங்கே
மெய்வந்த நெஞ்சின்அல் லால்ஒரு காலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புகஅறி யாமடப் பூங்குயிலே. 98

குயிலாய் இருக்கும் கடம்பா டவியிடைக் கோலஇயல்
மயிலாய் இருக்கும் இமயா சலத்திடை வந்துதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில் கமலத்தின் மீதன்னமாம்
கயிலா யருக்(கு) அன்(று) இமவான் அளித்த கனங்குழையே. 99

குழையைத் தழுவிய கொன்றையந் தார்கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந் தோளும் கருப்புவில்லும்
விழையப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண்ணகையும்
உழையைப் பொருகண்ணும் நெஞ்சில்எப் போதும் உதிக்கின்றதே. 100

## நூல் பயன்

ஆத்தாளை எங்கள் அபிராம
வல்லியை அண்டம்எல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத்
தாளைப் புவிஅடங்கக்
காத்தாளை ஐங்கணை பாசாங்
குசமும் கரும்பும்அங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழு
வார்க்கொரு தீங்கில்லையே

# சுவாமி சிவானந்தரின் இருபத்தொரு இன்றியமையாத போதனைகள்

1. காலை நான்கு மணிக்கு விழித்தெழு ஜபமும் தியானமும் செய்
2. ஜபம், தியானம் செய்வதற்கு சித்த ஆசனம் அல்லது பத்மாசனத்தில் உட்கார்
3. சாத்தவிகமான உணவைப் புசி, வயிற்றை வரம்பின்றி நிரப்பாதே
4. சாதுக்கள், துறவிகள், ஏழைகள், நோயாளிகள், கஷ்டப்படுகிறவர்களுக்குச் சேவை செய்.
5. உன் வருமானத்தில் பத்தில் ஒரு பங்கைத் தருமஞ்செய்
6. தினந்தோறும் பகவத்கீதை ஓர் அத்தியாயம் படி
7. வீர்யத்தைக் காப்பாற்று, தனியாகப் படுத்துறங்கு
8. ராஜஸ உணவு, மதுபானம், புகை பிடித்தல் ஆகியவைகளை விட்டுவிடு
9. ஏகாதசி அன்று உபவாசம் இரு அல்லது பால், பழம் மட்டும் உட்கொள்
10. தினந்தோறும் இரண்டு மணிநேரம் மௌனத்தைக் கடைப்பிடி உணவருந்தும் போது பேசாதே.
11. எவ்விதத்திலும் உண்மையே பேசு. குறைவாகவும் இனிமையாகவும் பேசு
12. உன்னுடைய தேவைகளைக் குறைத்துக் கொள். திருப்தியாக சந்தோஷமாக வாழ்க்கை நடத்து.
13. மற்றவர் உணர்ச்சிகளை எப்பொழுதும் புண்படுத்தாதே. எல்லோரிடத்திலும் அன்பாக இரு.
14. நீ செய்திருக்கும் தவறுகளைப்பற்றிச் சிந்தனை செய். தன்னைத் தானே விசாரணை செய்துபார்.
15. வேலையாட்களை எதிர்பார்த்திருக்காதே. உன் வேலையை நீயே செய்துகொள்.
16. காலை விழித்தெழுந்த உடனும், இரவு உறங்கும் முன்பும் ஆண்டவனை நினை.
17. உயர்ந்த நோக்கம், எளிய வாழ்க்கை என்ற சித்தாந்தத்தைக் கடைப்பிடி
18. ஒரு ஜபமாலையை எப்பொழுதும் கழுத்தில் அணிந்திரு.
19. தியானம் செய்வதற்கு தனியாக ஓர் அறையை வைத்திரு.
20. ஆன்மீக தினசரிக் குறிப்பு எழுதிவா. தினசரி வாழ்க்கை முறையை வகுத்து அதை ஒழுங்காகக் கடைப்பிடி.
21. தினசரி யோகாசனப் பயிற்சி செய்.

# இலக்குமி துதி

சித்தம் தெளிந்திடும், செய்வினை யாவும் திருத்தமுறும்
நித்தம் மறந்தெழு செல்வமும் தங்கி நிலைபெறும் நல்
முத்தர்க்குரிய பெரும்பதம் வாய்க்கும், இம்மூதுலகில்
பக்தர்க் கருளும் திருமகள் பாதம் பணிபவர்க்கே

-தேசிகவிநாயகம்பிள்ளை

நித்தமுனை வேண்டி மனம்
நினைப்பதெல்லாம் நீயாய்ப்
பித்தனைப் போல் வாழ்வதிலே
பெருமையுண்டோ? திருவே!
சித்தவுறுதி கொண்டிருந்தார்
செய்கையெல்லாம் வெற்றி கொண்டே
உத்தமநிலை சேர்வரென்றே
உயர்ந்த வேதமுரைப்ப தெல்லாம்
சுத்த வெறும் பொய் யோடி?
சுடர் மணியே! திருவே!
மெத்தமயல் கொண்டுவட்டேன்
மேவிடுவாய் திருவே! - பாரதியார்.

பொன்னரசி நாரணனார் தேவி, புகழரசி
மின்னு நவ ரத்தினம் போல் மேனியழகுடையாள்
அன்னையவள் வையமெல்லாம் ஆதரிப்பாள் ஸ்ரீ தேவி
தன்னிரு பொற்றாளே சரண்புகுந்து வாழ்வோமே - பாரதியார்.

# மங்கையர்க்கு ஏற்ற குங்குமக்கவசம்

இல்லத்தில் மாலைப்பொழுதில் விளக்கு ஏற்றி வைத்துக் குங்குமத் திலகம் இட்டுக் கொண்டு படிக்க ஏற்ற கவசம்.

குங்குமமாவது குறைகளைத் தீர்ப்பது
குங்குமமாவது குடியினைக் காப்பது
குங்குமமாவது குணமது அளிப்பது
குங்குமமாவது கொல்வினை தீர்ப்பதே

விதிதனை வெல்வது விமலையின் குங்குமம்
நதிகளை ஈவது நிமலையின் குங்குமம்
பதிதனைக் காப்பது பதிவிரதை குங்குமம்
கதிகளை ஆள்வதும் கருத்தான குங்குமம்

தஞ்சமென் றோரைத் தடுத்தாட் கொள்வது
பஞ்சமா பாதகம் பரிந்துமே தீர்ப்பதும்
அஞ்சின பேருக்கு அபய மளிப்பதும்
காஞ்சி காமாஷி கருணைக் குங்குமம்

நற்பத மீவது நாரணிக் குங்குமம்
பொற்பிணை ஈவது பூரணிக் குங்குமம்
சிற்பர மாவது ஸ்ரீசக்ர குங்குமம்
கற்பினைக் காப்பதும் காரிகைக் குங்குமம்

செஞ்சுடர் போன்றது சீரான குங்குமம்
கொஞ்சும் அழகைக் கொடுப்பதும் குங்குமம்
ஐந்து புலன்கள் அடக்கி யருள்வதும்
காசி விசாலாஷி கனிவாம் குங்குமம்

நோயினைத் தீர்ப்பதும் நுண்ணறி யீவதும்
பேயினைத் தீர்ப்பதும் பெரும் புகழீவதும்
சேயினைக் காப்பதும் செல்வம் தருவதும்
தாயினை அருச்சித்தம் தன்னொளிக் குங்குமம்

சக்தி கொடுப்பதும் சத்தியம் காப்பதும்
பக்தி அளிப்பதும் பரகதி யீவதும்
முக்தி கொடுப்பதும் மும்மலம் தீர்ப்பதும்
சித்தி தருவதும் சிறந்த குங்குமம்

நெஞ்சிற் கவலைகள் நீக்கி யருள்வதும்
செஞ்சொற் கவிபாடும் சீரினை யீவதும்
வஞ்சப் பகைவரை வாட்டி யருள்வதும்
மதுரை மீனாஷி மங்கலக் குங்குமம்

சிவசிவ என்றுமே திருநீறணிந்த பின்
தவமான மேலோருந் தரித்துக் களிப்பதும்
சிவகாமி யேஎன சிந்தித் தணிவதும்
பவவினை தீர்ப்பதும் பராசக்தி குங்குமம்
எவையெவை கருதிடின் அவையவை யீவதும்
நவவகை சக்தியின் நலனைக் கொடுப்பதும்
குவிசெய் கரத்துடன் கும்பிட்ட பேருக்கு
குவிநிதி யீவதும் குலநலக் குங்குமம்

அஷ்டலெஷ்மி அருள் தந்தளிப்பதும்
இஷ்டங்களீவதும் ஈடற்ற குங்குமம்
கஷ்டம் தவிர்த்தென்னை காத்தருள்வதும்
அஷ்டஸ்ரீசக்ர ஆனந்தக் குங்குமம்

குஷ்ட முதலான மகாரோகந் தீர்ப்பதும்
நஷ்டம் வராதொரு நலனைக் கொடுப்பதும்
எட்டிரண்டோர் அறிவித்தோர் வீடினைக்
கிட்டவே செய்வதும் கேண்மைக் குங்குமம்

பட்ட காலிலே படுமெனக் கஷ்டங்கள்
விட்டி டாமலே வந்து வாட்டினும்
பட்டான பார்வதி பாதம் பணிந்தே
இட்டார் .இடர்தவிர்க்கும் இனிய குங்குமம்

சித்தந்தனைச் சுத்தி செய்வதர்க் கெளியதோர்
எத்துத் தெரியாதே ஏமாந்த மாந்தரே!
நித்தம் தொழும்அன்னை குங்குமம் தன்னை
நித்தியம் தரித்துமே மேன்மை அடைவோம்

மிஞ்சும் அழகுடன் குங்கும ஆடைகள்
செஞ்சுடர் ஆகுமோர் ஸ்ரீசக்கரம் ஈஸ்வரியின்
கஞ்சமலர் முகம் தன்னில் திகழ்வதும்
பஞ்ச நிதிதரும் பண்புக் குங்குமம்

## தன விருத்தி மாலை

### 1. தனலெக்ஷ்மி

பொங்கு தனக்கரத்தாள் பொற்புடைய சக்கரத்தாள்
எங்குநலம் தருகின்ற எழிற்கரத்துத் தாமரையாள்
தங்குகின்ற கமலத்தில் தளிரடிகள் தாம்வைத்தாள்
தங்கரத்தால் தண்மைதரு தனமகளே போற்றியம்மா

### 2. ஆதிலெக்ஷ்மி

சோதிமிக வுடையாள் சோம்பற்ற மனமுடையாள்
தாதியரின் புடைசூழத் தாவிவரும் தார்மிகத்தாள்
பூதிமிகு மலரபய பூரணநல் வரதத்தாள்
ஆதியிலும் ஆதியளே ஆதித்திரு போற்றியம்மா!

### 3. தான்யலெக்ஷ்மி

எண்கரத்தில் ஏற்புடைய எழிற்படைகள் ஏற்றவளே
பண்புடைய பகவதியே பலகதையும் பெற்றவளே
கண்படைத்த பயனாகக் களிப்படைய வந்தவளே
மண்செழிக்கத் தானியநல் மணிதந்தாய் போற்றியம்மா!

### 4. வீரலெக்ஷ்மி

சூலமொடு அபயத்தாள் சூழ்ச்சியற்ற வரதத்தாள்
காலனவன் கால்நடுங்கு கதிர்ஒளியின் சக்கரத்தாள்
நீலத்திரை யமுதத்தாள் நீற்காநற் புகழுடையாள்
மாலவனார் மனமகிழும் வீரத்திரு பொற்றியம்மா!

### 5. கஜலெக்ஷ்மி

தடாகத் தாமரையாள் தண்மைமிகு தவவடிவாள்
அடாஅத் துயரமதை அழிக்கின்ற அருளடியாள்
விடாநற் றனமழையாள் விளங்கானைத் துதியடியாள்
படாகக் கரியிலர்வாள் பண்ணடிகள் போற்றியம்மா!

### 6. சந்தானலெஷ்மி

அன்புடையாள் அறுகரத்தாள் அன்னையிலும் அன்னை யவள்
இன்புடையாள் கேடகத்தாள் இடர்நீக்கு வாளுடையாள்
மன்புகழின் மலர்க்கரத்தே மகவுடனே யாதுடையாள்
சந்தனத்தாய் சந்தானப் பெருக்குடையாய் போற்றியம்மா

### 7. விஜயலெக்ஷ்மி

வாளுடனே சாரங்கம் வார்புகழின் சுதர்சனமும்
ஆளுடைய கேடயமும் ஆண்டருளும் எண்கரத்தி
நாளுடனே நாற்புகழும் நாரணர்க்குத் தாமளித்த
தாள்மலரும் தனிவெற்றித் தாயேநீ போற்றியம்மா

### 8. ஐஸ்வர்யலெக்ஷ்மி

நாற்கரத்து நாயகியாள் நாற்றிசையின் நல்வினையாள்
கார்மேகம் போல் தனத்தைக் காத்திடவே செய்திடுவாள்
நூற்புலவர் தம்முகத்தாள் நூதனத்தின் ஒருவடிவாள்
பாற்பணியும் அயிசுவரியப் பாவையளே போற்றியம்மா!

### பலன் மொழி

அட்டத்திரு மகளாய் அருள்வீசும் அன்னைபுகழ்
இட்டவெள்ளிமங்களத்தில் இருந்தபடி இரந்துரைப்பார்
துட்டத்துயர் தொலைவேகும் துணிவுபுகழ் அருகாகும்
முட்டமுட்டப் பொருள்குவித்து முன்னின்று வாழ்ந்திடுவார்!

# அஷ்டலெட்சுமி வணக்கம்

எந்தத் தேவியானவள் சகல உயிர்களிலும் சக்தி உருவில் நிற்கிறாளோ அந்தத் தன லெட்சுமியை நான் வணங்குகிறேன்.

எந்தத் தேவியானவள் எல்லா உயிரினங்களிலும் புத்தி உருவில் விளங்குகிறாளோ அந்த வித்யா லெட்சுமியை நான் வணங்குகிறேன்.

எந்தத் தேவியானவள் எல்லா உயிரினங்களிலும் பசியைத் தீர்க்கும் தான்ய உருவில் உள்ளனளோ அந்தத் தான்ய லெட்சுமியை நான் வணங்குகிறேன்.

எந்தத் தேவியானவள் எல்லா உயிரினங்களிலும் மகிழ்ச்சி உருவில் உள்ளனளோ அந்த வீரலெட்சுமியை நான் வணங்குகிறேன்.

எந்தத் தேவியானவள் எல்லா உயிர்களுக்கும் தாயாக விளங்குகிறாளோ அந்தச் சந்தான லெட்சுமியை நான் வணங்குகிறேன்.

எந்தத் தேவியானவள் எல்லா உயிர்களுக்கும் கருணை உருவில் காட்சி தருகிறாளோ அந்தக் காருண்ய லெட்சுமியை நான் வணங்குகிறேன்.

எந்தத் தேவியானவள் எல்லா உயிரினங்களிலும் மங்கள நாயகியாய் விளங்குகிறாளோ அந்த மகாலெட்சுமியை நான் வணங்குகிறேன்.

# சரஸ்வதி துதி

வெள்ளைக்கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பாள் - வெள்ளை
அரியா சனத்தி லரசரோ டென்னைச்
சரியா சனம்வைத்த தாய்

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாளென் உள்ளத் தினுள்ளே
இருப்ப ளிங்கு வராதிடர்

படிக நிறமும் பவளச் செவ்வாயும்
கடிகமழ் பூந்தாமரை போற்கையும் - துடியிடையும்
அல்லும் பகலும் அனவரதமுந் துதித்தாற்
கல்லுஞ் சொல்லாதோ கவி.

ஸ்ரீ குமரகுரபர சுவாமிகள் அருளிய

# சகல கலாவல்லி மாலை

## உள்ளக் கமலத்தில் உறைய வேண்டுதல்

வெண்டா மரைக்கன்றி நின் பதந் தாங்கவென் வெள்ளையுள்ளத்
தாண்டா மரைக்குத் தகாது கொ லோசக மேழு மளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித் தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே கசல கலாவல்லியே. 1

## நற்கவி பாட நல்லருள் தருவாய்

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே சகல கலாவல்லியே. 2

## கலைமகள் அருளிற் குளிக்க விரும்புதல்

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே சகல கலாவல்லியே. 3

## கல்வியும் வாக்கும் பெருகிடச் செய்வாய்

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே சகல கலாவல்லியே. 4

## நெஞ்சத் தடத்தினில் நிலவ வேண்டும்

பஞ்சப் பிதந்தரு செய்யபொற் பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென் னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந் நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலாவல்லியே. 5

## பண்ணும் பரதமும் நல்கிட வேண்டுதல்

பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும் வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய் சகல கலாவல்லியே. 6

## பாட்டும் பொருளும் பயனும் கூட்டுவாய்

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல் காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும்வெள் ளோதிமப் பேடே சகல கலாவல்லியே. 7

## சொல்லின் வன்மை பெருகிட வேண்டுதல்

சொல்விற் பனமு மவதான முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள் வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகல கலாவல்லியே. 8

## சொற்கும் பொருட்கும் உயிராய் இருப்பவள்

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ் ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோ டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே சகல கலாவல்லியே. 9

## மன்னர் தன்னையும் பணியச் செய்வாய்

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வமுளதோ சகல கலாவல்லியே. 10

# அம்மன் பஜனை பாடல்

## சமயபுரத்தாளே மாரியம்மா

சமயபுரத்தாளே மாரியம்மா - அம்மா
சங்கரியே எங்கள் முன்னே வாருமம்மா (சமயபுரத்தாளே)
மல்லிகைச் சரம் தொடுத்து மாலையிட்டோம்
அரிசி மாவிளக்கு ஏற்றி வைத்து
பொங்கலும் வைத்தோம்
துள்ளியே எங்கள் முன்னே வாருமம்மா
அம்மா தூயவளே என் தாயே மாரியம்மா (சமயபுரத்தாளே)
பட்டு பீதாம்பரத்தில் தாவணியும் - உனக்கு
பாவாடை சேலைகளும் கொண்டு வந்தோம்
எட்டு திசைகளையும் ஆள்பவளே
அம்மா ஈஸ்வரியே என் தாயே மாரியம்மா (சமயபுரத்தாளே)
கத்தி கதறுகிறோம் கேட்கலையோ
தாயே கல்லோதான் உன் மனமும் கரையலையோ
உலகமே ஆடுதம்மா உன் சிரிப்பிலே
எங்கள் உமையவளே தாயே மாரியம்மா (சமயபுரத்தாளே)
காலிற் சலங்கை ஒலி காதைத் துளைக்குதம்மா
பாவாடை தாவணியும் தானாக ஆடுதம்மா
பூவாடை வீசுதம்மா பூமகளே உனக்கு
பாமாலை கொண்டு வந்தோம் பாரம்மா (சமயபுரத்தாளே)

## உலகத்து நாயகியே

உலகத்து நாயகியே எங்கள் முத்து மாரியம்மா
எங்கள் முத்துமாரியம்மா - எங்கள் முத்து மாரியம்மா
உன் பாதம் சரண் அடைந்தோம்
எங்கள் முத்துமாரியம்மா - எங்கள் முத்துமாரி
கலகத்தரக்கர் பலர்
எங்கள் முத்துமாரியம்மா - எங்கள் முத்துமாரி
கருத்தினுள்ளே புகுந்துவிட்டாள்
எங்கள் முத்துமாரியம்மா - எங்கள் முத்துமாரி
பலகற்கும் பலகேட்கும்
எங்கள் முத்துமாரியம்மா - எங்கள் முத்துமாரி
பயனொன்றும் இல்லையடி
எங்கள் முத்துமாரியம்மா - எங்கள் முத்துமாரி
நிலையெங்கும் காணவில்லை
எங்கள் முத்துமாரியம்மா - எங்கள் முத்துமாரி
நின்பாதம் சரணடைந்தோம்
எங்கள் முத்துமாரியம்மா - எங்கள் முத்துமாரி

சந்ரமௌலீஸ்வரி சங்கரி சங்கரி//
மங்களப்ரதாயின் மதனகோடி சுந்தரி//
மாதவஹரி சோதரி தேவி ஜெகன் மோகினி// (சந்ரமௌளி)

## அஞ்சாத செஞ்டசடைச்சி மாகாளி

அஞ்சாத செஞ்சடைச்சி மாகாளி
ஆதிசிவன் பத்தினியே திரிசூலி (அஞ்சாத)
கொஞ்சும் சதங்கை ஒலி கேட்குதம்மா - உன்
கெண்டை கூத்துக்கண்டு மனம் குளிருதம்மா (அஞ்சாத)
செஞ்சடையை அலங்கரிக்கும் நாகம்மா - உன்
தேகமெல்லாம் விளையாடும் நாகம்மா (அஞ்சாத)
பாலாபிஷேகம் செய்து மாகாளி - உந்தன்
பாதம் தனை தொழுதிடுவோம் திரிசூலி (அஞ்சாத)
தேனாபிஷேகம் செய்து மாகாளி - உன்
சேவடியை சேவித்திடுவோம் திரிசூலி (அஞ்சாத)
செவ்வரளி மாலை போட்டு மாகாளி - உனக்கு
செய்திடுவோம் பூஜைகளும் திரிசூலி (அஞ்சாத)
மல்லிகைப்பூ சரம் தொடுத்து மாகாளி - உந்தன்
மலரடியை தொழுதிடுவோம் திரிசூலி (அஞ்சாத)
சமயபுர மாரியம்மா மாகாளி எங்கள்
சஞ்சலங்கள் தீர்த்திடுவாய் திரிசூலி (அஞ்சாத)
வேற்காட்டு கருமாரி மாகாளி - அம்மா
எங்களை நீ காத்திடுவாய் திரிசூலி (அஞ்சாத)

## ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்

ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்
ஷுந்தரவதனி ஸுகுண மனோஹரி
மந்தஹாஸ முக மதிவதனி
சந்தன் குங்கும அலங்காரமுடனே
தந்திடுவா யுந்தன்தரிசனே
நந்தி தேவருடன் முனிவரும் பணிய
ஆனந்த முடனே வந்திடுவாய்
வந்தனை செய்து மாயனயனுடன்
வகையாயுன் புகழ்பாடிடுதே
தங்கச் சிலம்பு சலசலவென்றிட
தாண்டவமாடித் தனயன் மகிழ்ந்திட
பொங்கு மானந்தமுடன் புலிமேல் விளங்கும்
மங்கள நாயகி மகிழ்வாய் வருவாய்
வேதங்கள் உன்னை வேண்டிப்பாடிட
விரும்பி சரஸ்வதி வீணை வாசித்திட
ஸதானந்த மான ஜோதிஸ்வரூபி
ராஜ ராஜேஸ்வரி சரணம் சரணம்

## அம்மா முத்துமாரி எங்கள் அழகு முத்துமாரி

அம்மா முத்துமாரி எங்கள் அழகு முத்துமாரி
ஆனந்தமாய் வீற்றிருப்பாள் அன்னை முத்துமாரி
எங்கும் நிறைந்திருப்பாள் எங்கள் முத்துமாரி
எங்கள் குலம் காக்க வந்திடுவாள் அன்னை முத்துமாரி (அம்மா)

மஞ்சள் முகத்தழகி எங்கள் முத்துமாரி
மங்காத ஜோதி அவள் எங்கள் முத்துமாரி
உலகனைத்தும் காப்பவளே அம்மா முத்துமாரி
உன்பாதம் சரணடைந்தோம் அம்மா முத்துமாரி (அம்மா)

அம்மா மஞ்சமாதா எங்கள் அழகு மஞ்சமாதா
ஆனந்தமாய் வீற்றிருப்பாள் அன்னை மஞ்சமாதா
எங்கும் நிறைந்திருப்பாள் எங்கள் மஞ்சமாதா
எங்கள் குலம் காக்க வந்திடுவாள் அன்னை மஞ்சமாதா (அம்மா)

மஞ்சள் முகத்தழகி எங்கள் மஞ்சமாதா
மங்காத ஜோதி அவள் எங்கள் மஞ்சமாதா
உலகனைத்தும் காப்பவளே அம்மா மஞ்சமாதா
உன்பாதம் சரணடைந்தோம் அம்மா மஞ்சமாதா (அம்மா)

சபரியிலே கோயில் கொண்ட எங்கள் மஞ்சமாதா
மங்கயரை காத்தருளும் அன்னை மஞ்சமாதா
மாங்கல்யம் தந்திடுவாய் எங்கள் மஞ்சமாதா
மாளிகை புரத்தழகி அன்னை மஞ்சமாதா

## யாதுமாகி நின்றாய்

யாதுமாகி நின்றாய் - தாயே
எங்கும் நீ நிறைந்தாய்
தீது நன்மை யெல்லாம் - நின்றன்
செயல் களன்றி யில்லை
போதுமிங்கு மாந்தர் - வாழும்
பொய்மை வாழ்க்கை யெல்லாம்
ஆதிசக்தி தாயே என் மீ
தருள்புரிந்து காப்பாய்

எந்த நாளும் நின்மேல் - தாயே
இசைகள் பாடி வாழ்வேன்
கந்த னைப்ப யந்தாய் - தாயே
கருணை வெள்ள மானாய்
மந்த மாரு தத்தில் - வானில்
மலையினுச்சி மீதில்
சிந்தை யெங்கு செல்லும் - அங்குன்
செம்மை தோன்றுமன்றே (யாது)

## காளியம்மா ஓடி வாம்மா

ஓசை மணிக் காளியம்மா ஓடிவாம்மா
ஓடி வந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா
சலங்கையொலி சலசலக்க ஓடிவாம்மா
ஓடி வந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா
பட்டாடை பளபளக்க ஓடிவாம்மா
ஓடி வந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா
மஞ்சள் முகம் மினுமினுக்க ஓடிவாம்மா
ஓடி வந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா
தங்க முகம் தளதளக்க ஓடிவாம்மா
ஓடி வந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா
செங்கை நீரும் கிலுகிலுக்க ஓடிவாம்மா
ஓடி வந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா
வேதங்கள் முழங்கிடவே ஓடிவாம்மா
வேதனைகள் தீர்த்திடவே ஆடிவாம்மா
செம்பவளப் பேரழகி ஓடிவாம்மா
செல்வ மழை பொழிந்திடவே ஆடிவாம்மா
உன் குழந்தை குரல் கேட்டு ஓடிவாம்மா
குறைகளெல்லாம் தீர்த்திடவே ஆடிவாம்மா
அருளமுது பருகுதற்கு ஓடிவாம்மா
ஆசிகளைத் தந்திடவே ஆடிவாம்மா
ஓசை மணிக் காளியம்மா ஓடிவாம்மா
ஓடி வந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா

# நாராயணன் துதிகள்

## பச்சைமா மலைபோல் மேனி

பச்சைமா மலைபோல் மேனி பவளவாய்க் கமலச்செங்கண்
அச்சுதா அமர ரேறே ஆயர்தம் கொழுந்தே இன்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே

கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்
உண்ட வாயன் என் உள்ளம் கவர்ந்தானை
அண்டர் கோனணி அரங்கன்என் அமுதினைக்
கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே.
கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ
மருப்பொசித்த மாதவன்தன் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே


परित्राणाय साधूनां विनाशायच
दुष्कृताम॥
धर्मसंस्थापनार्थाय संभवामि
युगे युगे॥

# கிருஷ்ணன் பஜனை பாடல்

## ஹே கிரதர கோபாலா ஹேகிரிதர கோபாலா

ஹே கிரதர கோபாலா ஹேகிரிதர கோபாலா
ஹே கிரிதர கோபாலா
மாதவ முரஹர மதுர மனோகர கிரிதர கோபாலா
நந்த குமார சுந்தர காரா
பிருந்தாவன சஞ்சாரா முரளீ லோலா
முனி ஜன பாலா கிரிதரகோபாலா (ஹேகிரி)

கோபரி பாலா கோபி லோலா
ராதா ஹ்ருதய விஹாரா
பக்தோத்தாரா பால கோபாலா (ஹேகிரி)

கௌஸ்துப ஹாரா மௌக்திகா தாரா
வேணு கான லோலா
நல்லனி பாலா நவநீத சோரா (ஹேகிரி)

கோவிந்த கிருஸ்ண விட்டலே - வேணு//
கோபால கிருஸ்ண விட்டலே - ஸ்ரீ //
ரங்க ரங்க விட்டலே - ஸ்ரீ //
பாண்டு ரங்க விட்டலே//

## ராதே ராதே ராதே கோவிந்தர்

ராதே ராதே ராதே ராதே ராதே கோவிந்தர்
ப்ருந்தாவன ச்சந்தா அநாத நாத தீனபந்தோ ராதே கோவிந்தா

பண்டரிநாதா பாண்டுரங்கா ராதே கோவிந்தா
ப்ருந்தாவன ச்சந்தா அநாத நாத தீனபந்தே ராதே கோவிந்தா

நந்தகுமார நவதீத சோரா ராதே கோவிந்தா
ப்ருந்தாவன ச்சந்தா அநாத நாத தீனபந்தோ ராதே கோவிந்தா

விட்டல விட்டல ஜெய்ஹரி விட்டல
ராதே கோவிந்தா பிருந்தாவன சந்தா அநாத
நாத தின பந்தோ ராதே கோவிந்தா

ஆனந்த ஸாகரா முருளீ தரா
மீரா பிரபு ராதே ஸயாம வேணு கோபாலா
நந்த யசோதா ஆனந்த கிசோரா
ஜெய் ஜெய் கோகுல பாலா ஜெய் ராஜ கோபாலா

# ஸ்ரீ வெங்கடேச சுப்ரபாதம் (தமிழ்)

ஓம் கோசலை குமாரா ஸ்ரீ ராமா பொழுது புலர்கின்றதே
தெய்விக திருச்சடங்குகள் செய்ய எழுந்தருள் புருசோர்த்தமா
கோசலை குமரா ஸ்ரீ ராமா பொழுது புலர்கின்றதே
தெய்வீக திருச்சடங்குகள் செய்ய எழுந்தருள் புருசோத்தமா
எழுந்தருள் எழுந்தருள் கருடகொடியேந்தும் கோவிந்தனே
திருமகள் கணவா கண்மலர்க மூன்றுலகமும்
செழித்தோங்கவே
சுழலும் உலகம் முழுவதும் சுமக்கும் தாயே
திருமால் மார்பில் சிங்காரச் செல்வி நீயே
சரணியானின் சகலமும் தரும் தயாசாகரி
மதுகையிட வதை வதைத்தாய் எழுமகாலட்சுமி
கலைவாணி கௌரி இந்திராணி போற்றுவார்
முருகிலாயன குளிர்முகம் காட்டுவாய்
பிருகவாத்ரி நாதனின் நாயகி
விழித்தாமரைகள் காட்டியே அருள்புரி
அத்தை முதல் சத்தரிசிகள் நித்தியகர்மா முடித்தார்
ஆகாய கங்கை வளர்த்தாமரையால் பூசை செய்வார்
தேவானின் பாதங்கள் ஆராதனைக்கு நின்றார்
சேஷாத்திரி வாழ்வோனே திருப்பள்ளியெழுக
அரன் அயன் இந்திரன் கந்தனும் உனை புகழ்ந்தார்
திரிலோகம் அளந்த பாதம் போற்றுகின்றார்
ரகஸ்பதி கங்கே பஞ்சாங்கம் சொல்லுகின்றார்
ஷேசாத்திரி வாசா உன் செவி கேட்கவில்லையோ
மலர்ந்து கொண்டிருக்கும் தாமரைமணம் வீசுதே
விருந்து கொண்டிருக்கும் பாளைகள்ளும் கமழுதே
அடிமேல் அடி வைத்து தென்றலும் நடைபோடுதே
திருவெங்கடத்தானே உடன் எழுந்து வாநீ
அழகான கூண்டில் வளர்கிளிகளும் உனைத் தேடுதே
விழிமலர்ந்து வாழைப்பழம் பாயசம் உண்ணுதே
பழகிய திருநாமம் முரளி கோவிந்தா என்றதே
திருவெங்கடம் உடையாய் கிளிமொழி கேட்கவா
நிலையாக நிற்காத நாரதர் வந்து விட்டார்
கலையாத சுகவீணையை மீட்டுகின்றார்
அழியாத தமிழில் ஆழ்வார்கள் அருள் மொழிகள்
சுவையாக பாடுவார் திருமுகம் காட்டுக
நேற்றிரவு தாமரைப் பூக்களில் புகுந்த வண்டு
பார்க்காத குறைநீங்கி பறந்தோடி வந்தனபார்
தேனூறும் மகரந்த போதை புது ரீங்காரமே
கேளாமல் தூங்குகின்றாய் இசை கேட்க வாராய்
இடைச்சேரி நாச்சியர் தயிர்கடை மத்தின் ஓசை

திசையெல்லாம் கடந்து உன் அரண்மனையில் எதிரொலிக்கும்
எதிரெதிர் நின்றே புகழ்பாடி தயிர் இழுப்பார்
திருவெங்கடக் கண்ணா உடன் எழுக நீயே
கண்போல் குவளைமலர் கருநிறம் கண்டு வந்து
எங்களின் வண்ணமே வெங்கடேசன் மேனி என்று
வண்டுகள் குரலோங்கி சண்டையிட்டு கொள்வதோ
மங்கள விழிதிறப்பாய் அன்பு சீனிவாசா
எல்லா உலகிலும் எல்லோருக்கும் உறவு நீயே
எல்லையில்லாததோர் கருணையின் வெள்ளமும் நீயே
தோளே வீடாக சீதேவி குடிபுகந்தாள்
வேண்டுவதெல்லாம் தரும் திருவழி திரு
யாராயினும் புஷ்கரணி நீராடி வரவேண்டும்.
அரன் அயன் சனந்தனர் பிரம்படிபட்டு வந்தார்.
வாசலில் புனிதமாய் வரவெண்ணி காத்திருப்பார்
ஸ்ரீ வெங்கட நாதனே நீ விரைந்து வாராய்.
ஷேசாத்திரி கருடாத்திரி வெங்கடாத்திரி
நாராயணாத்திரி விருசபாத்தரி விருசாத்திரி என்றே
தேவரும் முனிவரும் சின்மலைதனை தொழுது நிற்பார்
ஸ்ரீ வெங்கடலாசபதி நின் வருகை தாராய்
இந்திரன் யமன் சிவன் அக்னியுடன் நிருதியவனும்
குபேரன் வர்ணன் வாயுவும் கூடிவந்தே
தம்கரம் தலை மேல் தூக்கியே தொண்டு செய்ய
உன்மொழி நோக்குகின்றார் உன் ஆணையெங்கே
உன்னடை வண்ண ஒயில் அழகுக்கு நிகரே தென்று
தன்னடை நாணியது சிங்கமும் ஷேசங்கருடனும்
ஐராவதும் அஸ்வம் அவைகளுக்கும் சேர்ந்து கொண்டு
பயிலவே வந்தனபார் நீ வந்து பாரே
சூரியன் சந்திரன் புதன் செவ்வாய் வியாழனுடனே
ராகு கேது சனி பகவானும் சுக்கிரனும் வந்தே
யாருந்தன் அடியார்க்கும் அடியாரோ அன்னவர்க்கு
தீ தேதுமின்றியே தொழும் காட்சி காணாய்.
நவக்கிரக நாயகர் உன் திருப்பாத துளிபட்டு
சுவர்க்கமும் மோட்சமும் இதற்கீடு இல்லையென்று
திருப்பதி தரிசனம் நிலைக்கவே கலக்கமுற்று
மருகல்பம் வேண்டார் வந்து அபயம் சொல்லு
யாகமும் தர்மமும் செய்து மேலுலகம் செல்வார்
போகின்ற வழியில் உன் கோபுர கவசம் கண்டே
ஆனந்த சுவர்க்கமும் மோட்சமும் விட்டு விட்டே
வெங்கடம் போதுமென்பார் இந்த விந்தைபாராய்
நிலைமகள் திருமகள் இருவரும் இருமருங்கும்
உலவிட அருளுடன் நலம்தரும் குணங்கள் கொண்டார்
நிரந்தரம் கருடனும் ஷேசனும் துதிக்கும் பாதம்

உலகெலாம் புகலிடம் உடனுறக்கம் நீங்கு
வாசுதேவ புருஷோத்தம பத்ம நாப
வைகுண்ட மாதவ ஜனார்த்தன சக்ரபாணி
ஸ்ரீ வஸ்ஸ மார்பை காண்போர்க்கு பாரியார்த்தம்
திருவடி சரணம் என்பார் பார் எழுக நீயே.
மன்மதன் தலைகுனிவான் உன் திருமேனி கண்டு
அன்னை ஸ்ரீதேவியும் அகலாய் பள்ளிவிட்டே
பொன்முலை தாமரை மொட்டில் மயங்கிவிட்டாள்
என்னாவதோ உலகம் உடன் எழுந்துவாராய்
மச்சமாய் கூர்மமாய் கூர்வ வராகமாகி
மானிட சிங்கமாய் வாகன வடிவெடுத்து
பரசுராமன் ராமன் பலராமன் கிருஷ்ணன் என்று
பத்தவதாரங்களோ இனிகைக்கு தானோ
ஏலம் லபங்கம் கமழ்கின்ற பசுங்கற்பூரம்
ஆகாய கங்கையின் தீர்த்தத்திலே கலந்து
வேத சிரேஷ்டர் தலை மேல் குடம் சுமந்து
ஓடோடிவந்தனரே பொய்யுறக்கம் ஏனோ
கதிரோன் பொன்னிற கிரணங்கள் காட்டுகின்றான்
இதழ்கள் திறந்தே தாமரைமலர்கள் விரிகின்றன
பறவைகள் நாதம் ஸ்ரீ வைஷ்ணவர் பல்லாண்டு பாடும்
குரல் கேட்டிலையோ ஸ்ரீ ஏழுமலை நாதனே
திருக்கண்மலர் திறந்தும் பார்க்க வேண்டி
நிலைக்கண்ணாடி காட்டி நிற்கும் பிரம்மனோடு
சனந்தனர் ரிஷிகள் யோகிகள் வந்து சேர்ந்தார்
இனியேனும் எழுந்து வாராய் கருமணி வண்ணனே
குறையேதும் இல்லைகுணமே நிறைந்த கடலே
பிறவிக் கடல்தாண்ட அணையாகின்ற துணையை
உபநிடதம் சொல்லும் ஒப்பற்ற உண்மைப் பொருளே
திருத்தொண்டர்கள் மகிழவே வந்து சேவை சாத்தும்
நாளும் திருவெங்கட நாதனின் பாதம்நாடி
சூரியன் உதிக்கும் அதிகாலை சுப்ரபாதம்பாடி
பாராணம் செய்வார் பரமஞானமடைவார்
வாழ்க திருமலை வள்ளல் அவன் திருப்பாதமே
ஸ்ரீ தேவியின் மார்பினில் குங்குமமே
கருமேனியில் சேர்ந்து சிவந்திடுமே
திரு வெங்கடவன் வீழி தாமரையால்
எங்கள் ஏழுலகமும் வெற்றி சேரட்டுமே
அந்த அயன் அரன் சண்முகன் அனைவருமே
வந்து சரணெண நின்றனர் உன்னிடமே
ஒரு பெருநிதி என்பதும் சந்தியே
திருவருள் தரும் பதியது திருப்பதியே

இங்கு ஒரு தவராணி பொறுத்திடவே
மிக பல பல பாவங்கள் புரிந்து விட்டோம்
உன் திருவடியே இனி அடைக்கலமே
பெரும் கருணையினால் எனை காத்தருளே
நான் கேட்டதைக் காட்டிலும் கூடுதலாய்
அருள் காட்டியே வாழ்ந்திடும் உத்தமனே
மறைவேதமும் உணர்த்திடும் பரம்பொருளே
ஸ்ரீ தேவியும் உன்னிடம் பொருந்தினளே
சுக வேங்குழல் ஓதிய கோபியரின்
மனம் வேண்டிய யாவையும் ஈந்தவனே
வசுதேவ குமாரனே மன்மதர்கள்
ஒரு கோடியும் ஈடில்லை சுந்தரனே
எல்லோரும் புகழ் ஜெய ராமனெனும்
வில்லாளியே தசரனின் புதல்வா
எக்காலமும் மாறா மனத்தவனே
எங்கேயும் நிறைந்த தயாநிதியே
ஸ்ரீ ஜானகி தேவி கரம்பற்றும்
ரகு ராமனே தாமரை மதிமுகத்தோன்
பெரும்காரிருள் போல் வந்த இராவணனை
வதம் ஆக்கிய சூரியனே சரணம்
எழில் எண்ணி எங்களின் முகவதனன்
இளையர் புடைசூழ் வரும் ரமணன்
ஜெயமே தரும் வில்லினை ஏந்தியவன்
அவனே தலைவன் நினையேன் பிறரை
சதா உந்தன் ஞானம் கரிவெங்கடேசா
அருள் வேண்டி வந்தோம் தயை செய் தயை செய்
உனையன்றி வேறே துணையாரும் இல்லை
பிறதெய்வம் வேண்டாம் அருள்க அருள்க
வெகுதூரம் தாண்டி உனை தேடி வந்தோம்
திருப்பாதம் வேண்டி தினம் தொண்டு செய்வோம்
ஒரே பூஜை போது, மறு ஜென்மம் ஏது
திருவெங்கடத்தான் அருள் தரும் போது
அறியாது செய்திட்ட பாவம் திருமாலே பொறுத்தருள்
மன்னித்திடு மன்னித்திடு ஏழு மலை மாணிக்கமே
ஸ்ரீ தேவி சகலலோகமும் சேவை செய்யும் தாயே தயா நிதியே
திருமாலின் மனம் குளிர அவன் மார்பிலேயே குடிகொண்ட குலவிளக்கே
செந்தாமரை அமர்ந்த பத்மாசன கோலம் என்றென்றும் வாழ்வளிக்கும்
செந்தாமரை கரம் வரம் அபயம் தரும் திருப்பாதம் வணங்குகின்றேன்.
எங்கும் நிறைந்த பொருளே எல்லாம் அறிந்த முதலே
பொங்கும் கருணைக் கடலே அன்பருக்கும் புகலிடமே
தங்கமாய் பயம்தரும் தலாவா ஏழைத்துணைவா
பங்கயப்பாதம் பாரியாதமாகும் சரணங்களே

பாதச்சிலம்பொலி கேட்கவோ மலர்கள் கூடும
நாதன் திருமேனி நறுமணம் அவற்றில் சேரும்
பூக்களும் புனிதமாகும் வாடாத புதுமையாகும்
காக்க வேண்டும் கண்ணா திருவடி சரணங்களே
புதிதாக பூத்த செந்தாமரைப் பூவின் சிவந்த வண்ணம்
இனிதான நறுமணம் இவற்றை உவமை சொல்வார்
திருவடிக்கு ஈடாககூறும் போலி வார்த்தையெல்லாம்
கவிநயமே ஒப்பில்லாத திருப்பாதம் சரணங்களெ
நீயே பரம்பொருள் என்றதற்கு அடையாளமோ
நின்தாமரை திருவடி காட்டும் தனி ரேகைகள்
அமிர்த கலசம் அங்குசம் கொடி கற்பகம் வச்சிராயுதம்
சங்கு சக்கரம் குடைதாமரை அலங்காரப் பாதம் சரணங்களே
பத்மராஹ ஒளியும் தோற்கும் உள்ளங்கால்களே
இந்திர நீல வண்ணமும் நாணும் புறங்கைகளே
சந்திர காந்தத்தினும் வெண்மையாம் நகக் கண்களே
இந்த வண்ணம் எங்குண்டு பரம்பொருள் பாதம் சரணங்களே
வாமரனாய் ஓங்கி உலகளந்த திருப்பாதங்கள்
ராமனாய் காடும் மலையும் நடந்த காலடிகள்
ஸ்ரீதேவி அஞ்சி அஞ்சி மெல்ல வருடும்போது மட்டும் வாடுவதேன்
வாக்கு மனம் காணா மென்மைபாதம் சரணங்களே
புவிமகள் திருமகள் நப்பின்னை பிராட்டியெனும்
புனிதமாதர் தளிர்கரம் கொண்டுநின் திருவடிபற்றி வருடியதால்
இயல்பான செந்நிறம் மேலும் சிவந்ததுவோ செப்புகவே
திருவெங்கடநாதா திருமாலே நின்தாள் சரணங்களே
நித்தமும் வணங்கிடும் அயன் அரன் முதலான தேவர்களின்
முத்துரத்தின் கிரீடங்கள் சிந்தும் ஒளிக்கதிர்கள்
பட்டுத் தெறிப்பதும் பாத கமலங்கள் போற்றும்
கற்பூர ஆரார்த்தி போய் சேரும் களலடி சரணங்களே
வேதங்கள் சுட்டிக் காட்டுவதும் தாமரைத் திருவடி
மாதவம் செய்வோர் அடையும் பரமபதத்திலும் நின்திருவடி
தோய்தலும் தொண்டு செய்தலுமே பேரின்பமே எனையுணர்ந்தே
ஆதலில் ஏழையேன் எனக்கும் அருள்க நின்திருவடி சரணங்களே
பாரதப் போரிலே பார்த்தனுக்கு கீதை பகர்ந்தபோது
சாரதியென்னை சரணம் அடைக என சொன்னாய்கூறிய
அச்சொல் யாவர்க்கும் பொதுவாய் ஆனதன்றோ
வெங்கடத்தில் வலம்கரம் காட்டும் திருப்பாதம் சரணங்களே
காளிங்க நாகத்தின் தலைமேல் கால் வைத்து ஆடியதோடு
ஆரண்யத்திலும் பிருந்தாவனத்திலும் திருவெங்கடத்தும்
வேதங்கள் மொழியிலும் உனைதவிர வேறெதும் எண்ணார் உள்ளத்திலும்
ஏழையன் தலையிலும் கால்வைத்தாய் ஏழுமலையானே சரணங்களே
ஆராதனைக்கென நின்னடிமலர் வந்து சேர்ந்த மணமலர்கள்

வாடாதனவாய் பூமியெங்கும் இறைந்து கிடைப்பனவா
வேங்கடமலைக்கும் என சூட்டிய ஆபரணமென விளங்கினவே
காண்பார்கள் கண்ணும் மனமும் லயிக்கும் கதிரடி சரணங்களே
அடைக்கலமென வந்தபேர்க்கு அருள்புரியும் திருப்பாதங்களே
தமக்குள் இணையன்றி வேறு உவமை சொல்லும் தரமுண்டோ
மகவுக்கு தாயின் மார்பகம் போல முதல் பிரவாகமாகி
நினைக்கும் போதெலாம் இனிக்கும் நிர்மலன் பொன்னடி சரணங்களே
மணவா மாமுனிகள் வாய்மலர்ந்த வழிகாட்டும் திருப்பாதங்கள்
குணமுடையோர் கரம் குவித்து கொண்டாடி மகிழ்கின்ற திருப்பாதங்கள்
பிறவியெனும் கடல்தாண்ட கடைக்கண்கள் காட்டுவான் பொற்பாதங்கள்
சரணடைந்தேன் சரண்டைந்தேன் கோவிந்தன் மலர்பாதம் சரணங்களே
என்னை உன்னிடம் இணைத்து வைப்பதற்கென்றே இருக்கின்றாள்
அன்னை ஸ்ரீதேவி அவளல்லால் நீயில்லை அறிந்து கொண்டேன்
வண்ண மலரடிக்கு வாசமலர் தூவி வழிபடுவேன்
கண்ணா உன் அடிமை நான் இம்மை மறுமைக்கு நின்தாள் சரணங்க
வேண்டிய யெல்லாம் தருகின்ற புதையல் திருவளர்மலர்மார்பன்
வேங்கடம் ஆள்வான் அந்த சீனிவாசனுக்கு மங்களம்
திருமகளும் மருளும் மலர்விழி கொண்டான் இந்த ஜெகத்திற்கே விழியானான்
திருவெங்கடகத்திற் கதிபன் அந்த சீனிவாசனுக்கு மங்களம்
மங்களம் தங்கும் திருமலைக்கு ஆபரணம் மாயவன் திருவடிகள்
சங்கு சக்கரதாரி அந்த சீனிவாசனுக்கும் மங்களம்
அவன் மேனி அங்கங்கள் அழகில் மயங்கார் யாருளர்
திருவேங்கடம் உடையான் அந்த சீனிவாசனுக்கு மங்களம்
நிறைகுணம் நிலைத்தவன் நிர்மலன் ஆனந்தன் ஞானஸ்வரூபன்
உயிருக்குயிராய் உறைபவள் அந்த சீனிவாசனுக்கு மங்களம்
எல்லாம் அறிந்த எல்லரம் வல்ல எளியன் நற்குணன்
ஏழுமலை வாசன் அந்த சீனிவாசனுக்கு மங்களம்
அகிலமும் அவன் விருப்பமும் செயலாணை பரப்பிரம்மம் அவனே
திருவேங்கடம் மெய்யும் அந்த சீனிவாசனுக்கு மங்களம்
மெய்யழகும் மெய்யுள் விளங்கும் திவ்விய குண அன்ம அழகும்
ஐயமின்றி இனிக்குமந்த சீனிவாசனுக்கு மங்களம்
வலக்கையால் திருவடிகாட்டி அன்புடன் வரம் தரும் வள்ளல்
திருமலை தெய்வம் அந்த சீனிவாசனுக்கு மங்களம்
கடைக்கண்ணால் உலகை குளிர்விக்கும் கருடாமிருத சாகரம்
இருக்கின்றது ஏழுமலையில் அந்த சீனிவாசனுக்கு மங்களம்
அணியுடைய மாலை ஆயுதம் அவனால் அழகுபெறும்
தணிப்பான் துயர் அந்த சீனிவாசனுக்கு மங்களம்
வைகுந்தம் விட்டு சுவாமி புஷ்கரணி கரைவந்து நின்றார்
உய்வுதருவான் அந்த சீனிவாசனுக்கு மங்களம்
மணவாள மாமுனிகள் மனமலரில் எப்போதும் கோயில் கொண்டான்
அனைத்திலும் அவனே அந்த சீனிவாசனுக்கு மங்களம்
வழிவழி ஆசாயர்கள் பாராட்டு பெற்றார் என்னையும் ஆட்கொண்டான்
திருவெங்கடநாதன் அந்த சீனிவாசனுக்கு மங்களம்.

# பகவத்கீதையில் சிலதுளிகள்

* பரிசுத்தமான உள்ளம் உடையவர்களே பாக்கியசாலிகள் அவர்களிற்கே தெய்வீக ஞானம் அளிக்கப்படும்.

* மண்ணுலக வாழ்வினையோ, விண்ணுலக வாழ்வினையோ விரும்பாதே வாழ விரும்புவதே மயக்கத்தை விரும்புவது ஆகும். வாழ்வு நிலையற்றது. என்பதை உணர்ந்து அஞ்ஞானக் கனவினின்றும் விழித்தெழு மரணம் உன்னை விழுங்குவதற்குள் ஞானத்தையும் விடுதலையையும் அடைய முயல்வாயாக!

* ஆமை தன் அவயங்களை வேண்டும்போது உள்ளிழுத்துக் கொள்வது போல் எப்பொழுது ஒருவன் தன் புலன்களை விடயங்களிடம் செலுத்தாது அடக்கிக் கொள்கிறானோ அப்பொழுது அவனுடைய ஞானம் நிலைபெற்றதாகும்.

* பொருட்களைப்பற்றி ஆழ்ந்து சிந்திப்பவனுக்கு அவற்றின்மேல் பற்றுண்டாகிறது பற்று ஆசையைத் தூண்டுகிறது. ஆசையினின்றும் கோபம் பிறக்கின்றது. கோபத்தின்றும் பெருமயக்கம் உண்டாகிறது. பெருமயக்கத்தினின்று நினைவின் கேடு விளைகின்றது. நினைவுக்கேடால் பகுத்தறிவு அழியப்பெற்ற மனிதன் முற்றும் அழிந்து போகிறான்.

* பெரும் சிறப்பை அடைவதற்கு அன்பு, கடமையைச் செய்தல், தன்னடக்கம், சத்தியம், வேள்வி, கொடை, தவம், அறம், விரதம், ஒழுக்க நெறியை ஒப்புதல் முதலிய பல வழிகள் உள்ளன.

* அன்போடு ஒருவர் இலையோ, பூவோ, பழமோ, நீரோ, எதைக்கொடுத்தலும் பக்தியுடன் அளிக்கப்படும். அக்காணிக்கையை நான் ஏற்று இன்புறுகிறேன்.

* சிந்தையடக்கிச் சும்மாயிருப்பதே மிகச்சிறந்த யோகம் இந்நிலை அடங்காத முரட்டுக் குதிரையை அடக்கிப் பாகனுக்குப் பணிந்து நடக்கச் செய்வது போன்றதாகும்.

* ஆசைகள் அனைத்தையும் விட்டு "நான்", "எனது" என்பவற்றை அறவே அகற்றிப் பற்று அறத்திரிபவனே அமைதியை அடைவான்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்

- நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய். நீ உன்னை வலிமை உடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவனாகவே ஆகிவிடுவாய்
- நீ வரம்பிவல்லா வலிமை பெற்றவன். உன்னுடைய உண்மை இயல்போடு ஒப்பிடும் போது, காலமும் இடமும் கூட ஒரு பொருட்டல்ல.
- "நான் எதையும் சாதிக்க வல்லவன்" என்று சொல். நீ உறுதியுடன் இருந்தால், பாம்பின் விஷம் கூடச் சக்தியற்றதாகி விடும்.
- நீ எல்லையற்றவன், மரணமற்றவன், பிறப்பற்வன். எல்லையற்ற ஆத்மா ஆதலால் நீ அடிமையாக இருப்பது உனக்கு பொருந்தாது. எழுந்திரு! விழித்துக்கொள்! எழுந்து நின்று போராடு. தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவையாகும். அத்துடன் இவை அனைத்திற்கும் மேலாக அன்பு இருந்தாக வேண்டும்.
- "எழுந்திருங்கள், விழித்துக் கொள்ளுங்கள், இனியும் தூங்க வேண்டாம். எல்லாத் தேவைகளையும், எல்லாத் துன்பங்களையும் நீக்குவதற்கான போராற்றல் உங்கள் ஒவ்வொருவருக்குள்ளேயும் இருக்கிறது."
- நம்மிடமுள்ள தெய்வீக் இயல்பை வெளிப்படுத்துவதற்கான ஒரே வழி மற்றவர்கள் தாங்கள் தெய்வீக இயல்பை வெளிபடுத்தும்படி செய்து கொள்ளும் வகையில் அவற்றிற்கு உதவி செய்வது தான்.
- நீ உற்சாகத்துடன் இருக்கத் தொடங்குவது தான், நீ சமய வாழ்க்கை வாழ ஆரம்பதற்கான முதல் அறிகுறி.
- ஆன்மீக இலட்சியத்தைப் புறக்கணித்து விட்டு மேலை நாட்டு நாகரிகத்தின் பின்னால் நீ செல்வாயானால் அதன் விளைவாக மூன்றே தலை முறைகளில் உனது இனம் அழிந்து போய் விடும்.
- என் குழந்தைகளே! இரக்கங்கொள்ளுங்கள். ஏழைகள் அறியாமையில் இருப்பவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் ஆகியவர்களுக்காக இரக்கங்கொள்ளுங்கள். இதயமே நின்று போகும் வரையிலும், மூளை கொதித்துப்போகும் வரையிலும் இரக்கங்கொள்ளுங்கள்.
- சுயநலம் அற்றவர்களாக இருங்கள். ஒரு நண்பன் மற்றொருவனைத் தனிமையில் தூற்றுவதை ஒருபோதும் கேட்டுக் கொண்டிருக்காதீர்கள்.
- இன்று உலகத்தில் காணப்படும் எல்லா விதமான துன்பங்களுக்கும் காரணம் மனிதன் முட்டாள்தனமாக தம் வாழ்வின் இலட்சியம் இன்பம் என்று நினைத்து, அதைத் தேடி அலைவதுதான். இறுதியில் அவனுக்கு வாழ்வின் இலட்சியம் இன்பம் அல்ல, ஞானம்தான் என்று புரிகிறது.
- உண்மை, தூய்மை, சுயநலமின்மை ஆகிய இந்த மூன்றும் எங்கெல்லாம் காணமுடிகின்றனவே, அவற்றைப் பெற்றிருப்பவர்களை நசுக்கக் கூடிய ஆற்றல் விண்ணுலகிலோ, மண்ணுலகிலோ, எங்குமே கிடையாது; இந்த மூன்றையும் பெற்றுள்ள ஒருவனைப் பிரபஞ்சம் முழுவதுமே எதிர்த்து நின்றாலும் அதை எதிர்த்து நிற்கக்கூடிய ஆற்றல் அவனுக்கு உண்டு.

# அன்னை ஸ்ரீ சாரதாதேவி அம்மையாரின்
# அன்பு முரசு

* ஒருவருக்கு வேண்டுவதெல்லாம்இறைவனது அருளே ஒருவா் அதற்காகவே பிரார்த்தனை செய்ய வேண்டும்.
* கீழ் நோக்கி ஓடுதே தண்ணீரின் இயற்கை.ஆனால் கதிரவனின் கிரணங்கள் அதனை ஆவியாக்கிவானில் உயர்த்துகின்றன. அது போன்ற மனமும் இழிந்த பொரட்களான விஷய சுகங்களை நாடிப்போவது இயற்கையே அனால் கடவுளின் அருள் உயர்ந்த அருளை நாடிச்செல்லும்படி மனத்தை தூக்கி விடும்.
* ஞான ,சாதனை என்பது ஆண்டவனுடைய தாமரைப்பாதங்களில் மனத்தை நிறுத்தி அவன் நினைவிலேயே மூள்கிக் கிடப்பதாகும். ஞான சாதனங்களைத் தனிமையான இடத்திற்பழகுவது அவசியமாகும். செடி சிறியதாக இருக்கும் போது வேலி மிக அவசியம். அது பெரிதாகிவிட்டால கால்நடைகள் அதற்கு எவ்வித தீங்கும் செய்ய முடியாது. அதுபோல் சிலகாலம் தியானத்தில் ஆழ்ந்து மனம் நிலைத்த பிறகு நீ எங்கு வேண்டுமானாலும் தங்கி யாருடன் வேண்டுமானாலும் பழகலாம். உன்மனம் அதனால் பாதிக்கப்படாது.
* எதனையேனும் பற்றி அறிந்துக்கொள்ள வேண்டும் என்ற விருப்பம் எழுமானால், தனியான இடத்தில் தங்கி கண்ணீர் மல்க ஆண்டவனையே வேண்டுக. அவன் உன் மனத்திலுள்ள அழுக்கையும் துயரத்தையும் போக்குவான். பின்பு உனக்கு எல்லாவற்றையும் விளங்கும்படி செய்வான்.
* இந்த மனிதப்பிறவி பெற்றதால் நீ பாக்கியவான். உன்னால் முடியுமளவிற்கு ஆண்டவனை துதி செய். நீ கஷ்டப்பட்டு உழைக்க வேண்டும். உழைக்காமல் எதையும் அடைவது முடியாது. உலகச் செயல்களில் ஈடுபட்டு இருந்தாலும் தினந்தோறும் பிராத்தனைக்கும் ஞான சாதனைகட்கும் சிறிது நேரத்தையாவது ஒதுக்க வேண்டும்.
* ஒருமைபாட்டுடன் இரண்டு நிமிடநேரம் கடவுளை பிராத்திப்பதும் தியானிப்பதும்; மன ஒருமைப்பாடின்றி இவற்றை பலமணி நேரம் செய்வதைக் காட்டிலும் சிறந்தது.
* எல்லோருமே கடமை என்று கருதுவதால் ஏதாவது ஒருவகை பயிற்சியை மேற்கொள்கின்றனர். ஆனால் எத்தனை பேர் ஆண்டவனை நாடுகின்றனர்? கடமையை செய்யதான் வேண்டும் என்பதில் சந்தேகம் இல்லை. அது மனத்தை நன்னிலையில் வைக்கிறது. ஆனால் ஜெபம் செய்தல், தியானித்தல், பிராத்தனை தல் ஆகியவை மிக அவசியம். இவைகளை காலையிலும் மாலையிலுமாவது கைக்கொள்ள வேண்டும். அச்சாதனம் படகிற்குள்ள சுக்கான் போன்றது. மாலையில் பிராத்தனையில் அமரும் போது அன்று அதுவரை செய்தவை நல்லனவா, கெட்டனவா என்பதை விவேகத்தால் உணரலாம். அதன்பின் அன்றைய மனநிலையை முதல்நாள் நிலையோடு ஒப்பிட்டு பார்க்க வேண்டும். பிறகு ஜெபம் செய்யும் போது தங்களது இஷ்டதெய்வத்தை பற்றி தியானம் செய்ய வேண்டும். தியானத்தின் போது இஷ்ட தேவதையின் முகமே முதலில் தோன்றும். ஆனால் பாதம் முதல் தலை வரையுள்ள வடிவம் முழுவதையும் தியானிக்கப் பழகவேண்டும். உன் வேலைகளைச் செய்வதோடு தியானமும் பழகாது இருப்பின் செய்வது விரும்பத் தகாததா இல்லையா என்பதை பிரித்தறிவது எப்படி?
* "நான்" என்னு ம் எண்ணம் இருக்கும் வரை ஆசைகளும் இருந்தே தீரும். சோம்பலினால் உடல் மட்டுமல்ல மனமும் கெட்டுவிடுகிறது.
உனக்கு மன அமைதி வேண்டுமானால் பிறர்குற்றம் காணாதே; மாறாக உனது குறைகளையே பார். உலகம் முழுவதையுமே அன்பினால் உனக்குச் சொந்தமாக்கிக்கொள். இவ்வுலகில் யாரும் உனக்கு அந்நியரல்ல. உலகம் உனதே.

# பத்து கட்டளைகள்

மேல் நாட்டாருக்கு அதிலும் குறிப்பாக அமெரிக்கர்களுக்கு ஹிந்து மதம் என்றால் என்ன என்பதை விளக்குவதற்கு, தமிழகத்தில் டாக்டர் வி. கிருஷ்ணமூர்த்தி ஒரு புது யுத்திகையாளுகிறார். மோசஸ் சொன்ன பத்துகட்டளைகளைப்போல் இவர் ஹிந்து மதத்ததைப் பத்து கட்டளைகள் என்ற தலைப்பில் விவரிக்கிறார். அந்த பத்து கட்டளைகள் என்ன என்பதை வேத, வேதாந்த, ஆகம, கலா, வித்வத் சபையில் எடுத்துச் சொன்னார்.

1. எல்லா பிரம்மம், என்று உணரவேண்டும். அதனால்தான் பகவான் கீதையில் சொன்னார் "எவன் என்னை எங்கும் பார்க்கிறானோ, என்னிடத்தில் எல்லாவற்றையும் பார்க்கிறானோ, அவனுக்கு நான் காணமாற் போவதில்லை: அவனும் எனக்கு காணாமற் போவதில்லை" என்று அதன் காரணமாக, எல்லோரும் நாமாக இருப்பதால், நாம் யாவருக்கும் தீங்கு இழைக்கமாட்டோம்.

2. மறுபிறவி உண்டு என்று நம்ப வேண்டும். நல்லவனாக வாழந்தால் நல்ல பிறவி கெட்டவனாக வாழ்ந்தால் கெட்ட பிறவி கிடைக்கும்.

3. நம்முடைய உணர்வுக்கும் தாழ்வுக்கும் மனந்தான் காரணம் அதனால் மனதைக் கட்டுப்படுத்த வேண்டும்.

4. நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்தின் காரணமாகவும் அதன் வாசனை நம்மிடம் ஒட்டிக்கொள்கிறது. பிறகு அந்த வாசனைகளின் ஏவுதல்களின்படி நாம் காரியம் செய்ய வேண்டியிருக்கின்றது. ஆகவே வாசனைகள் சேராமல் இருக்க வேண்டுமானால் நாம் பற்றற்று காரியங்கள் செய்யவேண்டும். பலனை எதிர்பார்க்காமல் செய்ய வேண்டும்.

5. எல்லா தெய்வங்களும் பகவான் ஒருவன்தான் அதனால் உங்களுக்கு எந்த தேவதை பிடிக்கிறதோ அந்த தேவதையை வணங்கலாம்.

6. தர்மத்தைக் காப்பதற்காகவும், அதர்மத்தை அழிப்பதற்காகவும், பகவான் பல அவதாரங்கள் எடுத்தார். இன்று அவர் எல்லா கோயில்களிலும் அர்ச்சாவதாரமாக இருக்கிறார். வியாசரும், வான்மீகியும் இந்த அவதாரங்களைப் பற்றி எழுதிய நூல்களை நாம் படிக்க வேண்டும்.

7. நாம் எப்பொழுதும் கடவுள் ஞாபகமாகவே இருக்க வேண்டும். அதற்கு ஒரு எளிய வழி அவன் நாமத்தைச் சொல்லுவதுதான். நாமம் நாமியை விட உயர்ந்தது.

8. கிடைத்தது போதும் என்று மனத்திருப்தியுடன் இருக்க வேண்டும். ஏதாவது ஒன்று வேண்டும் என்று ஆசைப்பட ஆரம்பித்ததுமே நம்மிடம் உள்ள ஆனந்தம் போய்விடுகின்றது.

9. எதிலும் நம்முடைய பாவனைதான் முக்கியம்.

10. "நீ எந்த உருவில் என்னை வணங்குகிறாயோ, அந்த உருவில் நான் காட்சி அளிப்பேன்" என்கிறார் பகவான் அதனால் எல்லா மதமும் சம்மதம் என்று இருக்க வேண்டும். பிற மதங்களைத் தூஷிக்கக்கூடாது.

திருஞானசம்பந்தர் அருளிய

# கோளறு திருப்பதிகம்

## (நவக்கிரகத் தோத்திரம்)

(திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் திருமறைக் காட்டில் (வேதாரண்யம்) எழுந்தருளி இருந்தனர். பாண்டி நாட்டில் சைவம் இளைத்துச் சமணம் தழைத்திருந்த காலம். மங்கையர்க்க அரசியார் மனம் வருந்தி ஞானசம்பந்தப் பெருமானை பாண்டி நாட்டுக்கு எழுந்தருளும்படி அழைப்பு அனுப்பினார். சம்பந்தரும் பாண்டி நாடு புறப்பட்ட போது நாளும் கோளும் நன்றாக இல்லை என்றார். திருநாவுக்கரசர். சிவனையே சிந்தனை செய்யும் நம்மை நாளும் கோளும் என்ன செய்யும்? யாவும் அவன் பாரமன்றோ? அடியார்களை நவக்கிரக தோஷங்கள் அணுகாது என்று கூறி இக்கோளறு திருப்பதிகத்தைப் பாடினார் சம்பந்தர்.

நவக்கிரகத்தால் பீடிக்கப்பட்டோர் இப்பதிகத்தைப் பக்தியுடன் பாராயணம் செய்தால் கிரகதோஷம் நீங்கும் நன்மை பெருகும். பண் :- பியந்தைக் காந்தாரம்

வேய்உறு தோளிபங்கன் விடம்உண்ட கண்டன், மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமேல் அணிந்து, என் உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனிபாம்பு இரண்டும் உடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்லநல்ல: அடியார் அவர்க்கு மிகவே.

என்பொடு கொம்பொடு ஆமை இவைமார்பி லங்க எருதேறி ஏழையுடனே
பொன்பொதி மத்தமாலை புனங்கூடிவந்து, என் உள்மே புகுந்த அதனால்
ஒன்பதொடு ஒன்றொடுஏழு பதினெட்டொடு ஆறும் உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவைநல்லநல்ல: அடியார் அவர்க்கு மிகவே.

உருவளர் பவளமேனி ஒளிநீறு அணிந்து உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகு அலர்கொன்றைதிங்கள் முடிவேல் அணிந்து என் உள்மே புகுந்த அதனால்
திருமகள் கலைதூர்தி செயமாது பூமி திசைதெய்வ மான பலவும்
அருநெறி நல்லநல்ல அவைநல்லநல்ல: அடியார் அவர்க்கு மிகவே.

மதிநுதன் மங்கையோடு வடபால் இருந்து மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமேல் அணிந்து : என் உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலன் அங்கி நமனோடு தூதர் கொடுநோய்கள் ஆன பலவும்
அதிகுண நல்லநல்ல அவைநல்லநல்ல: அடியார் அவர்க்கு மிகவே.

நஞ்சுஅணி கண்டன் எந்தை மடவாள் னோடும் விடையேறும் நங்கள் பரமன்
துஞ்சுஇருள் வன்னிகொன்றை முடிவேல் அணிந்து, என் உளமே புகுந்த அதனால்,
வெஞ்சின அவுணரோடும் உருமுஇடியும் மின்னும் மிகையான பூதம் அவையும்
அஞ்சிடும் நல்லநல்ல அவைநல்லநல்ல: அடியார் அவர்க்கு மிகவே.

வாள்வரி அதளதாடை வரிகோவ ணத்தர் மடவாள்த னொடும் உடனாய்
நாள்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்து, என் உளமே புகுந்த அதனால்
கோள்அரி உழுவையொடு கொலையானை கேழல் கொடுநாக மோடுகரடி
ஆளரி நல்லநல்ல அவைநல்லநல்ல: அடியார் அவர்க்கு மிகவே.

செப்பிள முலை நன்மங்கை ஒரு பாகம் ஆக விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமேல் அணிந்து, என் உளமே புகுந்த அதனால்

வெப்பொடு குளிரும் வாதம் மிகையான பித்தும் வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல அவைநல்லநல்ல: அடியார் அவர்க்கு மிகவே.
வேள்பட விழிசெய்து அன்று விடைமேல் இருந்து மடவாள்த னோடும் உடனாய்
வாள்மதி வன்னிகொன்றை மலர்சூடிவந்து என் உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழ்இலங்கை அரையன்ற னோடும் இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவைநல்லநல்ல: அடியார் அவர்க்கு மிகவே.

பலபல வேடமாகும் பரன்நாரி பாகன் பசுஏறும் எங்கள் பரமன்
சலமக ளோடு எருக்கு மடிமேல் அணிந்து, என் உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனும்மாலும் மறையோடு தேவர் வருகாலம் ஆன பலவும்
அலைகடல் மேருநல்ல: அவைநல்லநல்ல: அடியார் அவர்க்கு மிகவே.

கொத்து அலர் குழலியோடு விசையற்கு நல்கு குணமாய வேட விகிர்தன்
மத்தமும் மதியும்நாகம் முடிமேல் அணிந்து என் உளமே புகுந்த அதனால்
புத்தரோடு அமணைவாதில் அழிவிக்கும் அண்ணல் திருநீறு செம்மை திடமே:
அத்தகு நல்லநல்ல அவைநல்லநல்ல: அடியார் அவர்க்கு மிகவே.

தேன் அமர்பொழில் கொள் ஆலைவிளைசெந்நெல் துன்னி வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான் முகன் ஆதியாய பிரமா புரத்து மறைஞான ஞான முனிவன்
தான் உறு கோளும் நாளும் அடியாரை வந்து நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலைஓதும் அடியார்கள் வானில் அரசாள்வர்: ஆணைநமதே.

# நவக்கிரகம்

## சூரியன்

அஸ்வத்வஜாய வித்மஹே
பத்மகஸ்த்தாய தீமஹி
தன்னோ சூர்ய ப்ரசோதயாத்!

## சந்திரன்

நிஸாகராய வித்மஹே
கலாநாதாய தீமஹி
தன்னோ சந்ர ப்ரசோதயாத்!

## அங்காரகன்

அங்காரகன் வித்மஹே
பூமிபாலாய தீமஹி
தன்னோ குஜ ப்ரசோதயாத்!

## புதன்

புதக்ரகாய வித்மஹே
இந்துபுத்ராய தீமஹி
தன்னோ பௌம்ய ப்ரசோதயாத்!

## குரு

சுராச்சார்யாய வித்மஹே
சுரஸ்ரேஸ்டாய தீமஹி
தன்னோ குரு ப்ரசோதயாத்!

## சுக்கிரன்

ரஜதாபாய வித்மஹே
ப்ருகுசுதாய தீமஹி
தன்னோ சுக்ர ப்ரசோதயாத்!

## சனீஸ்வரன்

சனீஸ்வராய வித்மஹே
சூரியபுத்ராய தீமஹி
தன்னோ சனீஸ் ப்ரசோதயாத்!

## ராகு

ஸுகதந்தாய வித்மஹே
உக்ரரூபாய தீமஹி
தன்னோ ராகு ப்ரசோதயாத்!

## கேது

சித்ரவர்னாய வித்மஹே
சர்கரூபாய தீமஹி
தன்னோ கேது ப்ரசோதயாத்!

# சனிபகவான் கவசம்

(நவக்கிரக மண்டலத்தின் தலைவன் சூரியபகவானே. சூரியனின் புத்திரன் சனிபகவான் எல்லாக் கிரகங்களும் சக்தியும் வலுவும் உள்ளனவே. அதிலும் பாவ கிரகமான சனி பார்த்தாலும், கொடுத்தாலும், அதிகப்பலனைச் செய்பவன். சனி மகா திசை நடப்பவர்கள் ஏழரை நாட்டுச் சனியால் இன்னலுறுவோர், அஷ்டமத்துச் சனி, கண்டச்சனியால் அவதியுறுவோர், இன்னும் கோசார ரீதியாகச் சனிக் கிரகத்தால் பாதிக்கப்படுவோர் சனிகவசத்தை பாராயணம் செய்து வழிபடுதல் நல்லது. சனிப் பெயர்ச்சிக் காலங்களிலும், சனிவக்கிர காலங்களிலும் நிவர்த்திக்காகவும் இக்கவச தோத்திரங்களைப் படித்துக் கோவிலில் சென்று எள் பொட்டலம் போட்டு எண்ணை ஊற்றிச் சனிபகவானை வழிபடலாம்.

**காப்பு**

தேவரெண்டிசைக்கதிபர் சித்தரொடு கிம்புருடர்
மூவர் முனிவர் முதலோரை - மேவியுறுந்

தாரணிந்த மார்பன் சனிபகவான் கதை புகலக்
காரணிந்த யானை முகன் காப்பு.

ஆதிவேதாந்தமுதல் அரியஞானம்
ஐந்தெழுத்தினுட்பொருளை அயன்மாலோடும்

சோதிசிற்றம் பலத்திலாடி நின்ற
சுடரொளியை நீ பிடித்த தோஷத்தாலே

பாதிமதி சடைக்கணிய அரவம் பூணப்
பதியிழக்கச் சுடலைதனிற் பாடியாடச்

சாதியிலா வேடனெச்சிற் தின்னவைத்தாய்
சனியனே காகமேறுந் தம்பிரானே

வேலவனை வேங்கைமர மாக்கிவைத்தாய்
விறகுகட்டுச் சொக்கர்தமை விற்கவைத்தாய்

மாலினியை யுரலோடு கட்டு வித்தாய்
வள்ளிதனைக் குறவரது வனத்தில் வைத்தாய்

காலனைமார்க் கண்டனுக்கா அரனுதைத்த
காரணமும் நீ பிடித்த கருமத்தாலே

சாலவுனை யான்றொழுதே னெனைத்தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே

மஞ்சுதவ ழயோத்தியில்வாழ் தசரதன்றன்
மக்களையும் வனவாசமாக்கிவைத்தாய்

பஞ்சவர்கள் சூதினால் பதியிழந்து
பஞ்சுபடும் பாடைவர் படச்செய்வித்தாய்

எஞ்சலிலா அரிச்சந்திரன் பெண்டை விற்றே
இழிகுலத்தி யடிமையுற இசையவைத்தாய்

தஞ்சமென வுனைப்பணிந்தே னெனைத்தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே

அண்டமாயி ரத்தெட்டு மரசுசெய்த
அடல்சூர பத்மனையு மடக்கிவைத்தாய்

மண்டலத்தை யாண்டநளச் சக்ரவர்த்தி
மனைவியொடு வனமதனி வலையச்செய்தாய்

விண்டலத்தை யாண்டநளச சக்ரவர்த்தி
மனைவியொடு வனமதனி லலையச்செய்தாய்

விண்டலத்தை பானுகோ பன்றனனாலே
வெந்தணலாய்ச் சூரரை வெருவச் செய்தாய்

தெண்டனிட்டே னெந்நாளு மெனைத்தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே

அண்டர்கோன் மேனியிற்கண் ணாக்கிவித்தாய்
அயன்சிரத்தை வயிரவனா லறுக்கவைத்தாய்

திண்டிறகொள் கௌதமனா லகலிகைதான்
சிலையாகவேசாப முறவேசெய்தாய்

தண்டரள நகையிரதி மாரன்றன்னைச்
சங்கரனார் நுதலலத்விழியிற் றணலல்செய்வவித்தாய்

சண்டமிலாதுணைத் தொழுதே னெனைத்தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே

பாருலவு ப்ரிதியைப்பல் லுதிரவைத்தாய்
பஞ்சவாக்குத் தூதுபீதாம் பரனைவைத்தாய்

தாருலவும் வாலிசுக் ரீவன்றம்மைத்
தாரையினாற் றீராத சமர்செய்வித்தாய்

சூரனெனு மிலங்கைரா வணன்றன்தங்கை
சூர்ப்பனகி மூக்குமுலை துணிசெய்வித்தாய்

தாரணியு மணிமார்பாவெனைத் தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே

சுக்ரன்றன் கண்ணிழந்தான் லங்கையாண்டு
துலங்கும் ராவணன் சிரங்கண் டிக்கவீழ்ந்தான்

மிக்கபுக ழிரணியென்றான் வீறழிந்தான்
விளங்குதிரி புராதிகளும் வெந்துமாண்டர்

சக்கரத்தா லுடலறுந்தான் சலந்தரன்றான்
தாருகாசூரனுமே சமரில் மாண்டான்

தக்கன்மிகச் சிரமிழந்தா னின்தோஷத்தால்
சனியனே காகமேறுந் தம்பிரானே

அந்தன ஐங்கரன் கொம் பறவேசெய்தாய்
அறுமுனிவர் மனைவிகள்கற் பழியச்செய்தாய்

சந்திரன்றன் கலையழிந்து தழைக்கச் செய்தாய்
சங்கரனைப் பிச்சைதா னெடுக்கச் செய்தாய்

தந்திமுகச் சூரனுணிர் தளரச் செய்தாய்
சாரங்க தரன் கரத்தை தறிக்கச் செய்தாய்

சந்ததமு முனைப்பணிவே னெனைத்தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே

சீதைதனை இராவணனாற் சிறைசெய்வித்தாய்
தேவர்களைச் சூரனாற் சிறைசெய்வித்தாய்

மாதுதுரோ பதைதுயிலை வாங்குவித்தாயட
மகேச்சுரனே யுமைபிரியும் வகைசெய்வித்தாய்

போதிலயன் றாளிற்றனைப் பூட்டிவித்தாய்
பொதிகையினிலகத்தியனை பொருந்தச் செய்தாய்

தாதுசேர் மலர்மார்பா வெனைத்தொடாதே

சனியனே காகமேறுந் தம்பிரானே

அப்பர்தமை கருங்கல்லோ டலையிற்சேர்த்தாய்
அரனடியிள் முயலகனை யடங்கச்செய்தாய்

செப்புமாணிக்கர் தமைச் சிறையிலிட்டாய்
ஒலிகடலி னஞ்சையரன் உண்ணவைத்தாய்

தப்பிலா துணைதொழுதே னெனைத்தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே

நிரிணையுண்ட டெழுமேக வண்ணா போற்றி
நெடுத்தபத்தி ரறுகமலக் கண்ணா போற்றி

சூரியன்றன் றவத்திலடவநடத பாலா போற்றி
துலங்குநவ கிரகத்துண் மேலா போற்றி

காரியென் பெயர்களுப பாரா போற்றி
காசினியிற் கீர்த்திபெற்ற தீரா போற்றி

மூரிகொளு நோய்முகமா முடவா போற்றி
முதுமகளின் முண்டகநாள் போற்றி போற்றி

சூரியன்சோ மன்செவ்வாய் சொற்புதன் வியாழன் வெள்ளி
காரிய இராகு கேது கடவுள் ரொன்பா னாமத்

தாரியல் சக்கரத்தை தரித்திரர் பூசித்தாலும்
பாரினிற்புதிதிர ருண்டாம் பாக்கியம் நல்குந்தானே.

# ஸ்ரீ ஆஞ்சநேய வழிபாடு

## மலையளவு கடுகாகும் - கடலளவு கால்வாயாகும்

ஸ்ரீ ஆஞ்சநேய ஸ்வாமிகளைத் தியானித் தொழுதோமேயானால் சகல காரியங்களும் எளிதில் கை கூடும் கஷ்டங்களெல்லாம் விலகி சகல சௌபாக்கியங்க்ளும் நம்மை வந்தடையும்.

ஸ்ரீ ஆஞ்சநேய மஹாபிரபுவின் அநுக்ரஹ சக்தி அசாத்தியமானது. ஆஞ்சநேய ஸ்வாமிகளின் துணை நமக்கு கிடைத்து விட்டால் மலையைக் கூடக் கடுகாக்கித் தூக்கி விடலாம். கடலைக் கூட கால்வாயைப் போலத் தாண்டி விடலாம். உடலைக்கூட லேசாக்கிக் கொண்டு ஆகாயத்திலே பறக்கலாம்.

இதெல்லாம் படிப்பதற்கு நன்றாக இருக்கின்றது நடைமுறையில் சாத்தியப்படுமா என்கிறீர்களா? ஏன் சாத்தியமாகாது. நமக்கு வரும் பிரச்சனைகளெல்லாம் மலையைப் போல் கடலைப் போன்ற பூதாகாரமாகத்தானே வருகின்றன. மலை போன்ற கஷ்டங்களைக் கடுகாகவும், கடல் போன்ற சோதனைகளைக் கால்வாயாகவும் ஸ்ரீ ஆஞ்சநேய வழிபாடு மாற்றிவிடும்.

## ஆஞ்சநேய வழிபாட்டால் என்னென்ன கிடைக்கும்?

ஸ்ரீ ஆஞ்சநேயரைத் தொடர்ந்து வழிபட்டு வந்தால் நமக்குக் கிடைக்கும் பலன் இருக்கிறதே அது அளவிட முடியாது அறிவு விருத்தியாகும் வலிமை ஓங்கும் மன உறுதி ஏற்படும். அச்சங்கள் அகலும், நோய் நொடிகள் விலகும், தெளிவு பிறக்கும், நாவன்மை சிறக்கும்.

புத்தி, பலம், உறுதிப்பாடு, அஞ்சா நெஞ்சம், ஆரோக்கியம், விழிப்பு, வாக்குவன்மை ஆகிய இவை அனைத்தும் ஒரே இடத்தில் அமைவது மிகவும் கடினம் ஆனால், ஆஞ்சநேயரை வழிப்பட்டால் இவை அனைத்தும் ஒருங்கே நமக்கு சித்திக்கும்.

## தக்க தருணத்தில் காத்தருள்வார்

நமக்கு எது கிடைக்கிறதோ இல்லையோ! ஸ்ரீ ஆஞ்சநேய அனுக்ரஹத்தால் துன்பங்கள் மறைந் தொழியும்.

## வழிபடும் நாட்களும் முறைகளும்

ஸ்ரீ ஆஞ்சநேய ஸ்வாமிகளை எல்லா நாட்களிலும் வழிபடலாம் அதற்கு வசதிப்படாதவர்கள் புதன், வியாழன், சனி ஆகிய இம் மூன்று கிழமைகளில் வழிபடலாம்.

ஸ்ரீ ஆஞ்சநேயரின் திருவுருப் படத்தையோ அல்லது பட்டாபிஷேகத்தையோ பூஜையில் வைத்து அவருக்கு நைவேத்தியமாக அவரவர் வசதிக்கேற்ப பழங்களையும் வடை போன்ற இன்ன பிறவற்றையும் சமர்ப்பிக்கலாம்.

துளசி மாலையும், வெற்றிலைச் சுருள் மாலையும் ஆஞ்சநேயருக்கு விஷேமானவை. துளசிக்கு அநேக மருத்துவ குணங்கள் உண்டு. அதேபோல் அசோக வனத்தில் சீதாப்பிராட்டி, வெற்றிலையைக் கிள்ளி ஆஞ்சநேயரின் சிரசின்மேல் போட்டு அனுமா! நீ இவ்வுலகில் என்றென்றும் சிரஞ்சீவியாக வாழ்வாயாக என்று அருள்பாலித்தார் அதனால் ஆஞ்சநேருக்கு வெற்றிலைச் சுருள் மாலையும் விசேஷமானது.

பூஜையை ஆரம்பிக்கும் போது 'ஸ்ரீ ராம ஜெயம்' அல்லது ஸ்ரீ ராம ஜெயராம் ஜய ராம்' என்ற மந்திரத்தை 54 அல்லது 108 முறை தியானிக்க வேண்டும். அதன் பிறகு தமது பிரார்த்தனையைச் சொல்லி, இந்நூலிலுள்ள நாமாவளி மற்றும் மலர் வழிபாட்டினால் அர்ச்சனை செய்யவேண்டும். கவசம் மற்றும் ஸ்தோத்திரங்களைப் பாராயணம் செய்ய வேண்டும்.

**கீழ்க்கண்ட தினங்களில் பூஜையைத் தொடங்குவது மிகவும் சிறப்பானதாகும்.**

1. மார்கழி மாதத்தில் மூலநட்சத்திரத்தோடு கூடிய அமாவாசை (இது தான் ஆஞ்சநேயர் அவதரித்த திருநாள்)
2. நட்சத்திரமும் அமாவாசையும் சேர்ந்து வராவிட்டால் அமாவாசையில்
3. சித்திரையில் ஸ்ரீ ராமநவமி தினத்தில் (4) மாதம் தோறும் கேட்டை நட்சத்திரத்தில்
4. இவை எதுவும் இல்லாவிட்டால் புதன் வியாழன் சனிக்கிழமைகளில் பூஜைகளைத் தொடங்கலாம்.

## வெண்ணெய் சாற்றுதல் பொட்டு வைத்தால்

ஆஞ்சநேயர்ச் சந்நிதிகளிளல் வெண்ணெய் சாற்றியிருப்பதைப் பார்க்கிறோம். நமது வேண்டுதல்களுக்கு வெண்ணெய்யைப் போல் உருகி நற்பலனைத் தருவார் ஆஞ்சநேயர். அவரது அருளால் நம் மனத்திலுள்ள துன்பங்களெல்லாம் வெண்ணெய் போல் கரைந்து விடும்.

ஸ்ரீ ஆஞ்சநேயர் வாலிலே நவக்ரஹங்கள் இருப்பதாக ஐதீகம். அதனால்தான் ஆஞ்சநேயரின் வால் தொடங்குமிடத்திலிருந்து வாலின் நுனி வரை 48 நாள்கள் சந்தனம் குங்குமம் பொட்டு வைத்து வந்தால் தடைப்படும் காரியங்கள் சீராகும். நினைத்தது கைகூடும் என்பர் வடைமாலை சாற்றுதல் ஆஞ்சநேயருக்கு மிகவும் பிடித்தமானது.

## ஸ்ரீ ராம நாமமே உயிர் மூச்சு

ஸ்ரீ ஆஞ்சநேயர் விடும் மூச்சுக்காற்றுகூட 'ராம ராம' என்றுதான் ஒலிக்கும் அப்படிப்பட்ட ராம தியானம் ஆஞ்சநேயருடையது ஸ்ரீ ராம நாமம் எங்கு ஒலித்தாலும்

அங்கே ஆஞ்சநேயர் வந்து விடுவார்.

ஸ்ரீ ராம நாமம் ஆஞ்சநேயரின் உயிர் மூச்சு நாமம் மட்டுமல்ல எப்பெருமான் பரமேஸ்வரனுக்கும் மிகவும் விருப்பமானதாகும்.

மகாபாரத யுத்த முடிவின் பின்பு தருமரின் பட்டாபிஷேகத்தின் பின்பு பீஷ்மரிடம் வந்து ஆசிவேண்டி நிற்கும் போது பீஷ்மரினால் அருளடப்பட்ட விஷ்ணு ஸஹஸ்ர நாம தோத்திரத்தின் போது பரமேஸ்வரனால் அசரீரியாகக் கூறப்பட்ட ஸ்லோகம்.

## நாமாவளி

ஜெய அநுமான் ஜெய அநுமான்
மாருதி ராய ஜெய அநுமான்
அஞ்சலி புத்ர ஜெய அநுமான்
அதிபலவந்தா ஜெய அநுமான்
ராமதூதா ஜெய அநுமான்
வாயு குமாரா ஜெய அநுமான்
வானர வீரா ஜெய அநுமான்
மகாநுபாவா ஜெய அநுமான்.

## நாமாளி

ராம லட்சுமண ஜானகி ஜெய்போலோ அனுமானுகி
ன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
ர்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
ர்மமும் மரணமும் இன்றித் தீருமே
மயே ராம வென்றிரண்டெழுத்தினால்!

ாலை உச்சிமூன்றும், ஆடுகின்ற தீர்த்தமும்
தர்ப்பணங்களும் தபங்களும், செபங்களும்
மேவு ஞானமும் தினம் செபிக்கும் மந்திரம்
ந ராம ராம ராம வெனும் நாமமே!

ர கார கார காவல் ஒழி காவலன்
ார போர போர போரில் நின்றபுண்ணியன்
ர மார மார மார மரங்கஏழ மும் எயதஸ்ரீ
ம ராம ராம ராம என்னும் நாமமே.

## ஹநுமந்த்யான மந்திரம்

ா ஹரி ராம தூத ஆஞ்சநேய
பராக் கிரமா? சூரா அண்டரண்ட பகிரண்ட
ரசண்ட உத்தண்ட கோராகிலா

த்ரு சம்ஹாரா வரமருள் க்ருபாகரா!
வசிவ யோக ஜனப்பிரியா!
சீதாலெக்ஷ்மிஸீத ஸு்தா! சாயப்
ஸ்வரூபா!

ஓம் கால ஆங்கார ஹரிம்காரா, சஞ்சீவிராயா! சர்வ மோட்சா!
கரணா, ஸஹஸ்ர நாம அலங்கிருத பூஷணா
ப்ரும்ம வரப்பிரகாச நீகூலா பிருண்டகால ருத்ரா
பத்தி விச்வாச சுத்த சசிகரா அக்ருதகுண சீலா!
அம்ருத் கலைஞான, பரமாதமா பாப விமோசனா
பம் பம் பம் ரரர ரிரிரி நமசி வாய ஹனுமந்த
மம வசி வசி ஸ்வாஹா!
ஓம் பூர் புவஸ் ஸ்வாஹா ஓம் தத்ஸ விதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ஸ தீமஹிதீ யோ யோன பிரசோதயாத்

## காயத்ரி

ஓம் தத் புருஷாய வித்மஹே
வாயு புத்ராய தீமஹி
தன்னோ மாருதிப் ப்ரசோதயாத் !

## அஞ்சநேய மூர்த்தி

ஸ்ரீ ஆஞ்சநேய மூர்த்திக்கு - ஜெய்
ஓம் வீர பராக்கிரம ஆஞ்சநேய ஸ்வாமிகி - ஜெய்
ஜானகி காந்தஸ்மரணம் ஜெய் ஜெய் ராம ராம்
ஸ்ரீ ராஜா ராமச் சத்திர மூர்த்திக்கு - ஜெய்
ஓம் சீதா லக்ஷ்மண பரத சத்ருக்ன ஹனுமத்
சமேத ஸ்ரீ ராம சந்தர மூர்த்திக்கு - ஜெய்

## ஆஞ்ஜநேய நாமாவளி

ஜய ஹனுமான் ஜய ஹனுமான்
மாருதி ராயா ஜய ஹனுமான்
ஜய ஹனுமான் ஜய ஹனுமான்
வாயு குமாரா ஜய ஹனுமான்
ஜய ஹனுமான் ஜய ஹனுமான்
அஞ்ஜனை பத்ரா ஜய ஹனுமான்
ஜய ஹனுமான் ஜய ஹனுமான்
ஜய ஹனுமான் ஜய ஹனுமான்
ஸ்ரீராம தூதா ஜய ஹனுமான்
ஜய ஹனுமான் ஜய ஹனுமான்
மஹானு பாவா ஜய ஹனுமான்

# வாழ்க்கையின் இலட்சியம்

இறைவனின் ஒரு பெருந்திட்டம் உள்ளது. நாம் ஆற்றவேண்டிய கடமைகள் உள்ளன. நீங்கள் உங்கள் கடமைகளைச் சிறப்பாக ஆற்றுங்கள். பரம்பொருளின் தாமரைப் பாதங்களில் மனம் மாறாத பக்தி வைத்திருக்கும் படிப்பார்த்துக் கொள்ளுங்கள். புனிதமான பேரின்பக் கடலில் நீந்துங்கள்.

பிறப்பும் இறப்பும், கட்டுப்பாடும், சுதந்திரமும், இன்பமும் துன்பமும், இலாபமும் நஷ்டமும், மனத்தால் உண்டாக்கப்படுபவை. மாறுபட்ட பிடிகளிலிருந்து மீண்டு வாருங்கள். உங்களுக்குப் பிறப்பில்லை, இறப்பில்லை, அழிவற்ற இறை நிலையைப் பெறுவீர்கள்.

உடல் மேல் பற்றுக்கொள்ள வேண்டாம். பாம்பு சட்டை உரிப்பதுபோல பற்றைத் தூக்கி எறியுங்கள். எப்பொழுதும் கவலையின்றி இருக்கமுடியும். இந்த பூத உடம்பு அழியும் மறுபடியும் வரும் "நான் இருப்பேன் அல்லது இறைவனை உணர்வேன்" என்று உறுதி எடுத்துக் கொள்ளுங்கள். தளரா உறுதியையும், துணிவையும், ஆண்மையையும் காட்டுங்கள்.

ஓ அன்புக்குரியவரே! ஒளிக்கெல்லாம் ஒளியான பிரம்மத்தோடு உங்களைப் பிரிக்க முடியாதபடி ஐக்கியப்படுத்திக் கொள்ளுங்கள். அப்போது உங்களை எதுவும் தொல்லைப்படுத்த முடியாது. அழிக்க முடியாதவராகி விடுகிறீர்கள்.

மாயையைப்பற்றி பயம் இப்போது உங்களுக்கு தேவையில்லை மாயை உங்களுடைய முழுமையான கட்டுப்பாட்டில் இருக்கிறாள். சற்று தொலைவில் உள்ள பாறையைப்போல் உறுதியாக நில்லுங்கள். பிடிவாதமாக இருங்கள் சீறிய சிங்கம்போல இவ்வுலகில் நடமாடுங்கள்.

-சுவாமி சிவானந்தர்.

## பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா

ஆழ்ந்த தவயோக சித்தியினால் – பல
ஆற்புதங்கள் பாரில் செய்தமகான்
தாழ்ந்தோர் உயர்ந்தோர் எனும்
பேதமில்லான் – என்றும்
தஞ்சம் என்போர்க்கருளும்
கருணையுள்ளான் சத்ய சாயி

## அந்த மூன்று பொருட்கள்

**பேண வேண்டியவை**

தீமை செய்யாமை, உண்மை, தூய்மை

**பெற்றிருக்க வேண்டியவை**

நம்பிக்கை, பொறுமை, இனிய பண்பு

**இருக்க வேண்டியவை**

நாணயம், நேர்மை, ஒழுக்கம்

**கொள்ள வேண்டியவை**

அமைதி, இரக்கம், தோழமை

**அடைய வேண்டியவை**

உண்மை, ஒழுங்கு, ஊக்கம்

**வெற்றி கொள்ள வேண்டியவை**

காமம், சினம், பேராசை

**விட்டுவிட வேண்டியவை**

தன்னலம், ஆசை, கபடம்

**கட்டுப்படுத்த வேண்டியவை**

மனம், புலன்கள், மூச்சு

**விசாரணை செய்ய வேண்டியவை**

நான் யார்? உண்மை எது? மாயை எது?

**வளர்க்க வேண்டியவை**

தர்மம், சமாதானம், நலம்.

**ஆதரிக்க வேண்டியவை**

ஒற்றுமையுணர்வு, அறிவாற்றல், நட்பு

**செய்ய வேண்டியவை**

மறைநூல்களை ஓதுதல், கேட்டதை சிந்தித்தல், ஆழ்ந்த தியானம.

**பின்பற்ற வேண்டியவை**

குருவின் அறிவுரைகள், மறைகளின் கட்டளைகள், மனச்சாட்சியின் ஆணைகள்.

# சமரஸப் பிரார்த்தனை

ஓம் கருணையும் அன்பும் நிறைந்த இறைவா!
உனைத் தொழுது வணங்குகிறோம்;
நீ எங்கும் உள்ளாய், எல்லாம் வல்லாய் எல்லாம் அறிவாய்;
நீ ஸச்சிதானந்தப் பொருள்-
மெய்ப் பொருளும், மெய்யறிவும், பேரின்பமும் நீயே;
எல்லா உயிர்களிலும் உறைபவன் நீயே

## ஓம் தயாபரத் தெய்வமே!

உணரும் உள்ளமும் சமநோக்கும், தூய அன்பும், மெய்யறிவும், எமக்கு தந்தருள்க. மயக்கத்தை எதிர்க்கவும், மனதை வெல்லவும், உள்ளத்தில் ஒளிரும் தெய்வீகத் தன்மையை எமக்குத் தந்தருள்க;
ஆணவம், துராசை, வெறுப்பு, பேராசை, காமம், வெகுளி, இவை பற்றாது எம்மைக் காத்தருள்க;
ஆன்மீக உணர்ச்சிகளை எமது உள்ளத்தில் நிரப்பி அருள்க;

## ஓம் - உலகாளும் ஜெகதீசா!

எல்லாப் பெயரிலும் உருவிலும், உனையே யாம் காண்போமாக;
எல்லாப் பெயரிலும் உருவிலும், உனையே யாம் வழிபடுவோமாக;
எப்பொழுதும் உனையே யாம் சிந்தித்து வருவோமாக;
எப்பொழுதும் உன்னுடைய மகிமைகளையே பாடுவோமாக;
உன்னுடைய திருநாமம் எப்பொழுதும் எங்கள் நாவில் இருக்கட்டும்.

# வாழ்த்து

1. வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருஞானசம்பந்தர் சுவாமிகள்

2. வான்முகில் வளாது பெய்க! மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க; குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க. நற்றவம் வேள்வி மல்க,
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

ஸ்ரீ தெய்வச் சேக்கிழார் சுவாமிகள்

3. ஆறிரு தடந்தோள் வாழ்க! அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க; குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க, யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க, வாழ்க சீரடியாரெல்லாம்.

ஸ்ரீ கச்சியப்ப சிவாச்சாரியார்

4. பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு பலகோடி நூறாயிரம்
மல்லாண்டதிண்தோள் மணிவண்ணா நின்சேவடி செவ்வி திருக்காப்பு
அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு
படைபோர்ப்புக்கு முழங்கும் அப்பாஞ்ச சன்னியமும் பல்லாண்டே.

# வழிநடைப் பாடல்

| | |
|---|---|
| சுவாமியே | ஐயப்போ |
| ஐயப்போ | சுவாமியே |
| பகவானே | பகவதியே |
| பகவதியே | பகவானே |
| தேவனே | தேவியே |
| தேவியே | தேவனே |
| ஈஸ்வரனே | ஈஸ்வரியே |
| ஈஸ்வரியே | ஈஸ்வரனே |
| சுவாமி சரணம் | ஐயப்ப சரணம் |
| ஐயப்ப சரணம் | சுவாமி சரணம் |
| பகவான் சரணம் | பகவதி சரணம் |
| பகவதி சரணம் | பகவான் சரணம் |
| தேவன் சரணம் | தேவி சரணம் |
| தேவி சரணம் | தேவன் சரணம் |
| ஈஸ்வரன் சரணம் | ஈஸ்வரி சரணம் |
| ஈஸ்வரி சரணம் | ஈஸ்வரன் சரணம் |
| பள்ளிக்கட்டு | சபரிமலைக்கு |
| சபரிமலைக்கு | பள்ளிக்கட்டு |
| இருமுடிகட்டு | சபரிமலைக்கு |
| சபரிமலைக்கு | இருமுடிகட்டு |
| நெய் அபிஷேகம் | சுவாமிக்கே |
| சுவாமிக்கே | நெய் அபிஷேகம் |

கற்பூர தீபம்
சுவாமிக்கு
திருவாபரணம்
சுவாமிக்கே
காணிப் பொன்னும்
சுவாமிக்கே
கல்லும் முள்ளும்
காலுக்கு மெத்தை
குன்றும் குழியும்
கண்ணுக்கு வெளிச்சம்
தேகபலம்தா
பாதபலம்தா
தூக்கி விடப்பா
ஏந்திவிடப்பா
வில்லாளி வீரனே
பூலோக நாதனே
சுவாமியைக் கண்டால்
நம்முடைய யாத்ரா
சபரிமலைக்கு
சுவாமியே
ஐயப்போ

சுவாமிக்கு
கற்பூர தீபம்
சுவாமிக்கே
திருவாபரணம்
சுவாமிக்கே
காணிப் பொன்னு
காலுக்கு மெத்தை
கல்லும் முள்ளும்
கண்ணுக்கு வெளிச்சம்
குன்றும் குழியும்
பாதபலம்தா
தேகபலம்தா
ஏந்திவிடப்பா
தூக்கி விடப்பா
வீரமணி கண்டனே
பூமிப்பிரபஞ்சனே
மோக்ஷம் கிட்டும்
சபரிமலைக்கு
நம்முடைய யாத்ரா
ஐயப்போ
சுவாமியே

## தீப மங்களம்

தீப மங்களம் ஜோதி நமோ நம:
தூய சபரிகிரீசா நமோ நம:
பூரண புஸ்களை நாதா நமோ நம:
அருள் தாராய்.

## மங்களம்

மாமலை தன்னில் வாழும்சாஸ்தாவுக்கு மங்களம்
தவமுனிவர் போற்றும் அந்த சந்நிதிக்கு மங்களம்.

இபமுகவன் முருகனுக்கு இளையனுக்கு மங்களம்
இன்பமெல்லாம் தந்தருளும் இறைவனுக்கு மங்களம்

புலிமிசை பவனி வரும் புனிதனுக்கு மங்களம்
புவிமயங்கும் மோகினியாள் புதல்வனுக்கு மங்களம்

அன்புடனே அருள்புரியும் ஐயப்பனுக்கு மங்களம்
அழகேவுருவான எங்கள் மெய்யனுக்கு மங்களம்

வெற்றி தரும் வில்லெடுத்த வேந்தனுக்கு மங்களம்
வித்தகனாம் வீரமணிகண்டனுக்கு மங்களம்

பம்பை நதி சேருகின்ற பக்தருக்கு மங்களம்
பந்தளம் போர் பாடுகின்ற அனைவருக்கும் மங்களம்

ஜெய மங்களம் நித்திய சுபமங்களம்
ஜெய மங்களம் நித்திய சுபமங்களம்

# காயத்ரீ ஸ்லோகங்கள்

## அம்பாள்

கணாம்பிகாய வித்மஹே
மகாதபாய தீமஹி
தன்னோ கௌரி ப்ரசோதயாத்!

## சுப்ரமணியர்

சடாணனாய வித்மஹே
சக்திகஸ்தாய தீமஹி
தன்னோ கந்த ப்ரசோதயாத்!

## மகா விஷ்ணு

நாராயணனாய வித்மஹே
வாசுதேவாய தீமஹி
தன்னோ விஸ்ணு ப்ரசோதயாத்!

## மகா லக்ஷ்மி

மகாலக்ஷ்மீய வித்மஹே
விஸ்ணுபத்னீய தீமஹி
தன்னோ லக்ஷ்மி ப்ரசோதயாத்!

## துர்க்கை

கார்த்யாயநாய வித்மஹே
கன்யாகுமாரிய தீமஹி
தன்னோ துர்க்கி ப்ரசோதயாத்!

## சரஸ்வதி

வீணாவாதின்யேய வித்மஹே
புஸ்த்தககஸ்த்தாய தீமஹி
தன்னோ வாணி ப்ரசோதயாத்!

## பைரவர்

சுனவாகனாய வித்மஹே
சூலகஸ்த்தாய தீமஹி
தன்னோ படுக ப்ரசோதயாத்!

## ஆஞ்சனேயா

ஆஞ்சனேயாய வித்மஹே
விஷ்னு பக்தாய தீமஹி
தன்னோ அனுமந்த ப்ரசோதயாத்!

### ஸ்ரீ தர்ம சாஸ்தா மூல மந்திரம்

ஓம் ஸ்ரீ ஹரிஹர புத்ராய
புத்ர லாபாய
மஹா சாஸ்த்ரே
சத்ரு நாசனாய
மதஜ வாகனாய
பிரத்யட்ச சூலாயுதாய
வரவரத் சர்வஜனமே
வசமானயஸ் வாவஹா



அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே ஒன்றைத்தாவி அஞ்சிலே ஒன்று ஆறாக ஆரியற்காக ஏகி அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கு கண்டு அயலார் ஊரில் அஞ்சிலே ஒன்றை வைத்தான் அவன் எம்மை அளித்துக்காப்பான்.




நாளென் செயும் வினைதானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங் கொடுங்கூற்றென் செயுங் குமரேசரிரு
தாளும் சிலம்பும் சலங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன்னே வந்து தோன்றிடினே.